ஸ்ரீ:

நம்மாழ்வார் திருவாய் மலர்ந்து அருளிய

திருவாய் மொழி

மூலமும் உரையும்

இரண்டாம் பாகம்

(மூன்று பத்துகள்)

எஸ். எம். நாராயணசாமி

பாப்பநாயக்கன்பாளையம் கோவை 641018.

திருவாய் மொழி

மூலமும் உரையும்

இரண்டாம் பாகம்


(மூன்று பத்துகள்)

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
மேனாள் துணைவேந்தர்
16, பாரதி தெரு,
திருமலை நகர் இணைப்பு,
பெருங்குடி, சென்னை–600 096.

எஸ். எம். நாராயணசாமி
2/24 பாலாஜி நகர், பாப்பநாயக்கன்பாளையம்,
கோயமுத்தூர் 641 018.

1976

முதல் பதிப்பு: டிசம்பர் 1976



விலை ரூ. 10

34/2

முன்னுரை

திராவிட வேத சாரம் என்றும் அருமறைகள் என்றும் ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரம் என்றும் யாழின் இசை வேதத்தியல் என்றும் திருவாய்மொழியை நன்குகற்றறிந்த ஞானசிரோன்மணிகள் உரைத்துச் சென்றனர்.

ஆனால் சாதாரண அறிவுகொண்டு பாசுரங்களுக்குப் பொருள் அறிவது சிரமமாதலால் அவற்றினால் பயனுறாது செல்ல நேரிடுகிறது. விரும்பிப் படிக்கும் பக்தர்களுக்கும் இத் திணரல் ஏற்படுகிறது. இதை பக்தியுள்ள எல்லோரும் படித்துப் பயனுறவேண்டுமென்ற சீரிய நோக்கத்துடனேயே இதற்கு உரை எழுதப்பெற்றது. இதை எம்பெருமான் திருவருள் கூட்டி வைக்கவே நிகழ்ந்தது.

அடியேன் கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்று இரண்டரையாண்டுக்காலம் என்னுடைய இல்லில் தங்கியிருக்கும் பொழுது எனக்கு இரண்டு மூன்று மாதம் தாமிரவர்ணியாறு நினைவு வந்தவண்ணம் இருந்தது. அந்த நினைவு நாளுக்குநாள் அதிக உருக்கமாகி என் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. அதன்பின் அடுத்து திடீரென்று ஒருநாள் தென் திருநெல்வேலியிலிருந்து ஒரு பணி மேற்கொள்ளுமாறு உத்தரவு பெற்றேன். என்னைப் போன்றோர் எத்தனையோபேர் இருக்க கோவையிலுள்ள எனக்கு வரவேண்டுமென்பதில்லை. ஆனால் இது நடைபெற்றது.

ஆங்கு பொருநை நதிக்கரையில் அழகான சூழ்நிலையில் சிலநாட்கள் தங்கியிருக்கும் வாய்ப்புப் பெறவும் அங்குதெளிந்த அவ்வகத்திய தீர்த்தத்தில் தீர்த்தாடனம் செய்யவும் வாய்க்கப் பெற்றேன். அப்பொழுது ஒருநாள் என்னுடன் படித்த கல்வி இயக்குநர் ஒருவரைப் பார்ப்பதற்காகத் தென்திருப்பேரையூர் சென்றேன். அங்கு அவர் இல்லாததால் மனம் மகிழ்ந்து திருப்பேரையூர் கோவிலைத் தரிசித்து வழிபடச்சென்றேன். கோவில் மூடியிருக்க அங்கிருந்த ஒரு பெரியார், கோவில் திறப்பதற்கு இன்னும் அரைமணி நேரமாகும் இதோ ஒரு பேருந்துவண்டி இப்பொழுது வரும் அதில் சென்றால் ஆழ்வார் திருநகரில் கோவில் தரிசனம் பெறலாம் என்றார். அவ்வாறே அடியேன் ஆழ்வார் திருநகரி சன்னிதியை அடைய வாத்திய இசைமுழங்க நம் ஆழ்வார் பெருமானின் அர்ச்சாமூர்த்தியை பிரகாரத்திலிருந்து கோவிலுக்குள் எழுந்தருளப் பண்ணிய ஆரோகணத்தைக் காணப்பெற்றேன். அங்கு ஆனி மாதம் முதல்நாள் இந்த வைபவம் நடைபெறுவது வழக்கம். அங்கு ஆதிப்பிரானைக் காண்பதற்குமுன் ஆழ்வார் பெருமானை காணக்கொடுத்து வைத்தது எம்பெருமான் செயலே.

மீண்டும் வைகுண்ட ஏகாதசியன்று அங்கு சென்று இரவு முழுவதும் தங்கி இரவில் நடந்த உற்சவங்களில் கலந்துகொள்

ளும் பேறும் பெற்றேன். அங்குள்ள நவதிருப்பதிகளையும் தரிசிக்கப் பெற்றேன். இவ்வண்ணம் நடந்தவை எம்பெருமானின் திருவருளே.

அதன்பின் சென்ற ஆண்டு இவ்வுரை நூல் எழுதி இதற்கு வேதம் வல்லார் ஒருவரிடம் அணிந்துரை பெறவேண்டும் என்றும் அரங்கேற்றம் செய்யவேண்டும் என்று நினைக்க இராம கிருஷ்ண பக்த சபை நடத்துகிறவரும் அதற்குத் தலைவரும் பக்தருமான உயர்திரு **எஸ். என். ஆர். துரைசாமி நாயுடு** அவர்கள் நினைவு வந்து அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் உடனே **மகாத்மா ஸ்ரீகிருஷ்ணப்பிரேமி** அவர்கள் வரப்போகிறார் அவர் மூலமே வெளியிடலாம் என்றார். எனக்குத் தடுத்தாட்கொண்டது போன்ற இச்சந்திப்பு இந்நூலை வெளியிடுவதற்கும் அதை நன்முறையில் ஆக்கம் செய்யவும் ஊக்கம் பெற்று இது இன்று படைப்புப் பெற்றது.

அவர் உறுதி கூறியவாறே ஆடித்திங்கள் இறுதி வெள்ளிக்கிழமையன்று வேதம் வல்லவரும் பலப்பல தெய்வீகநூல்களை யாத்தவரும் இடைவிடாது விண்ணோர் பாதம் பணிபவருமான **மகாத்மா ஸ்ரீ கிருஷ்ணப்பிரேமி** அவர்கள் இதன் முதல் பாகப் பிரதியை உயர்திரு **எஸ்.என்.ஆர். துரைசாமி நாயுடு** அவர்களுக்கு வழங்கப்பெற்று இது வெளியீடு ஆக்கப்பெற்றது. அவர்கள் இருவருக்கும் என்னுடைய நன்றி என்றும் உரியதாகும்.

இத்திருப்பணிகள் எம்பெருமானின் திருவருட் செயல்களே ஆகும். இதற்குச் சான்று வேண்டியதில்லை. பல வருடங்களுக்கு முன் நாடி சாஸ்திரப்பிரகாரம் எடுக்கப்பெற்ற என் வாழ்க்கைக் குறிப்பில் காணும் பின்வருபவையே போதிய சான்றாகும்.

அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

''கன்றே சொல் இம்மதலைக்கொரு நல்லோனுல் நன்மை என்றுகும் கிருஷ்ணப்பேர் செல்வனுலும்'' என்றும். ''தின கரன் நல்லருள்வதியும் இவன் பதிக்கு ஒது பதத்துடன் எய்தி உபன்யாசங்கள் உற்ற தவநிலையதன் சீர் வரவேற்பொன்றில் இவன் பணியமையப் பெயர் துலங்கும்'' என்றும், ''மன்ற மிகும் ஒரு பெரியோனுல் மேவுமிவன் நூலமைப்பு வெளியீ டாகும்.'' என்றும் குறிக்கப்பெற்றமை முன்னர் புரிந்து கொள்ள முடியாது பின்னர் நிகழ்ந்தனவே நிரூபிக்க வல்ல னவாயின. இது எம்பெருமானின் அமைப்பே ஆகும்.

இந்நூல் உரைசெய்வதற்கு அரிய சில பகுதிகளெல்லாம் எம்பெருமான் அருளிய வகையால் ஆக்கம் பெற்றது. இது தொண்டர்கள் பயனுறவே என்று கூறிமுடிக்கின்றனன். குறைகள் இருப்பின் வல்லார் வாய்கேட்டு நன்மை பெறுவார் களாக.

இப்படிக்கு,

ஆசிரியர்

ஆழ்வார் திருவடிகளே சரணம்!

நன்றி உரை

இந்நூல் வெளியிடுவதற்கு உதவிய
பெரியோர்கள் அனைவருக்கும்
என்னுடைய நன்றி
உரியதாகுக.

இப்படிக்கு

ஆசிரியர்

ஶ்ரீ:

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

திருவாய்மொழி

(இரண்டாம் பாகம்)

நான்காம்பத்து—முதல்திருவாய்மொழி

ஒரு நாயகம்

4—1—1

ஒருநாயகமாய் ஓடவுலகுடனாண்டவர்
கருநாய்கவர்ந்தகாலர் சிதைகியபானையர்
பெருநாடுகாண இம்மையிலேபிச்சைதாம்கொள்வர்
திருநாரணன்தாள் காலம்பெறச்சிந்தித்துய்ம்மினோ. 1

ஒரு நாயகமாய் ஓட—ஏகச்சக்ராதிபதியாக ஒரே தலைமையின் கீழ் இயங்கும்படியாக (நடக்கும்படியாக), உலகுடன் ஆண்டவர்—உலகம் முழுவதையும் ஆண்ட அரசர், கருநாய் கவர்ந்த காலர்—கருமை நிறம் பொருந்திய நாயால் (இருட்டில் தெரியாமல் மிதித்ததால்) கடிக்கப்பட்ட காலையுடையவராய், சிதைகிய பானையர்—(பிச்சை கொள்வதற்காகத் தன் கையிலே வைத்திருந்த) மண்பாண்டம் கீழே வீழ்ந்து உடைந்த நிலையினராய், பெருநாடுகாண—இழக்கப்பட்ட தம்முடைய நாட்டைக்காணும்படியாக, இம்மையிலே பிச்சைதாம் கொள்வார்—அரசனாக இருந்து ஆண்ட இப்பிறப்பிலேயே பிச்சை எடுக்க நேரிடுவர், திருநாரணன்தாள்—(ஆதலால்) ஸ்ரீமன் நாராயணனுடைய திருவடிகளை, காலம்பெற—தகுந்த காலம் கிடைக்கும்பொழுதே, சிந்தித்து—நினைத்து வழிபட்டு, உய்மின்—வாழ்வீர்களாக. ஓ—ஓ—அசை

கருநாய்—சூல்கொண்ட நாய் எனினும் தகும். பெருநாடு—பெரிய நாடு, இழக்கப்பட்டபிறகு அதன் பெருமை தெரியுமாதலால் பெருநாடு.

மிக உச்ச நிலையிலுள்ள ஏகச் சக்ராதிபதியும் நாடிழந்து பிச்சை எடுக்கும்படியான இழிநிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம் பதவியும் பனிசும் நிலையானவை அல்ல. ஸ்ரீமன் நாராயணன் ஒருவனே நித்யமானவன். ஆதலால் காலம் கிடைக்கும் பொழுதே அவனை நினைத்து வழிபட்டு அவன் திருவடிகளை அடைந்து வாழ்வு பெறுவீர்களாக என்று.

இருட்டில் தெரியாமல் நாயின் மீது காலை வைக்க அது வள் என்று காலைக்கவ்வ கையில் பிச்சையெடுப்பதற்கு உடைமையாக இருந்த ஒரே மண்பாண்டம் விழுந்து சிதைய பிச்சை எடுப்பதற்கும் கதியற்ற நிலை ஒரு மன்னர் மன்னனுக்கு ஏற்படுமாயின் உலகத்தைக் கட்டிஆண்டு என்ன பயன் என்றும், நித்தியமான பரம்பொருள் ஸ்ரீமன் நாராயணனின் தாள்பற்றி நிலையான வாழ்வுபெற வேண்டாமா என்றும் சாடுகிறார் ஆழ்வார் பெருமாளுர்.

4—1—2

உய்ம்மின்திறைகொணர்ந்து என்றுலகாண்டவர் இம்மையே
தம்மின்சுவைமடவாரைப் பிறர்கொள்ளத்தாம்விட்டு
வெம்மினொளிவெயில் கானகம்போய்க்குமைதின்பார்கள்
செம்மின்முடித்திருமாலை விரைந்தடிசேர்மினோ. 2

உய்மின் திறை கொணர்ந்து —(தன் ஆளுகைக்குக்கீழ்) கப்பம் கொண்டு வந்து செலுத்தி இருங்கள், என்று உலகு ஆண்டவர்— என்று கட்டளையிட்டு பெரிய நாட்டை ஆண்ட அரசர்க்கு அரசன், தன் இன்சுவை மடவாரைப் பிறர்கொள்ள —தன்னுடைய (அன்புக்குப் பாத்திரமான) பிரிய நாயகிகளைப் பகைவர்கள் கவர்ந்துகொள்ள, தாம் விட்டு—அவர்களைக் (காப்பதற்கு முடியாமல்) கைவிட்டு, வெம்மின் ஒளி வெயில் கானகம் போய்க்குமை தின்பார்கள்—பட்டப்பகலில் கடும் வெய்யிலில் காடுசென்று இறந்தவற்றை த்தின்பார். செம்மின் முடித் திருமாலை விரைந்து அடிசேர்மின்—(ஆதலால்) ஜகஜ்ஜோதியாக விளங்கும் கிரீடம் தரித்த திருமாலை க்ஷணமும் தாமதியாமல் அடைந்து அவன் திருவடிகளைப் பற்றுக.

சேர்மின்—சேருங்கள், குமை—சிதைந்தவை, திறை—கப்பம்,

அரசர்களுக்கு அரசனுக இருந்து கப்பம் வாங்கி ஆண்ட பேரரசன் தன்னுடைய மனைவிமார்களைப் பகைவர்கள் கவர்ந்து கொள்ள அவர்களைக் கைவிட்டு கடும் வெய்யிலில் நாடுவிட்டுக் காடேகி அங்கு உண்ணுதவற்றை உண்ணும் துர்பாக்கிய நிலை ஏற்படினும் ஏற்படும். ஆதலால் உலகங்களுக்கெல்லாம் அதிபதியாக விளங்கும் முடிதரித்த பெருமான் திருமாலை அடைந்து அவன் திருவடிகளைப் பற்றுக.

மாற்று அரசர்கள் கப்பம் கட்டினுல் தான் வாழலாம் என்று ஆணையிட்டாய். உலகத்திற்கே தலைவன் என்ற நிலை நிரந்தரம் என்று கருதினுய். மனைவிமார்களே போகம் என்று நினைத்தாய். ஆனுல் மாற்ருர்கள் இவற்றை எல்லாம் கவர்ந்து கொள்ள காடுசென்று சிதைந்தவைகளை உண்ண நேர்வது என்னே! அறியாமையே. இவை எல்லாம் அளித்த எம்பெருமான் திருமாலின் திருவடிகளைப் பற்ருமையே. ஆகையால் கணமும் தாமதியாமல் அவனிடம் பக்திகொண்டு அவனுக்குச் சேவை செய்க என்றவாறு.

4—1—3

அடிசேர்முடியினராகி அரசர்கள்தாம்தொழ
இடிசேர்முரசங்கள் முற்றத்தியம்பவிருந்தவர்
பொடிசேர்துகளாய்ப்போவர்கள் ஆதலில்நொக்கென
கடிசேர்துழாய்முடிக் கண்ணன்கழல்கள்நினைமினே. 3

அடிசேர் முடியினராகி அரசர்கள் தாம்தொழ—சக்கரவர்த்திகளாகத் தம் கால் அடிகளில் சிற்றரசர்கள் தங்கள் கிரீடம் தாங்கிய தலைகளை வைத்து வணங்கவும், இடிசேர் முரசங்கள் முற்றத்து இயம்ப—இடிபோல கோஷிக்கும் முரசு வாத்தியங்கள் அரண்மனை வாயிலில் ஒலிக்கவும், வீற்றிருந்த பேரரசரும்-அரசு கொலுவில் அமர்ந்திருந்த சக்கரவர்த்திமார்களும், பொடிசேர் துகளாய்ப் போவார்கள்—மண்ணேடு மண்ணுய்ப் போவார்கள், ஆதலின் நொக்குஎன—ஆதலால் சட்என, கடிசேர்த்துழாய் முடிக்கண்ணன் கழல்களை—வாசனைபொருந்திய துழபமுடியுடைய கண்ணபிரானின் திருவடிகளை, நினைமினே—நினையுங்கள்.

சிற்றரசர்கள் தம் அடிகளில் வீழ்ந்து வணங்கவும் அரண்மனை வாயிலில் வெற்றிமுரசுகள் முழங்கவும் அரசாண்ட பேரரசர்களும் மண்ணேடு மண்ணுக மாண்டுபோவது திண்ணம். ஆதலால் உறுதிபயக்கும்படியான திருத்துழாய் முடியுடைய ஸ்ரீ கண்ணபிரானின் திருவடிகளைப் பற்றுங்கள் எ-று.

4—1—4

நினைப்பான்புகில்கடலெக்கலில் நுண்மணலிற்பலர்
எனைத்தோருகங்களும் இவ்வுலகாண்டுகழிந்தவர்
மனைப்பால்மருங்கற மாய்தலல்லால்மற்றுக்கண்டிலம்
பனைத்தாள்மதகளிறட்டவன் பாதம்பணிமினே. 4

நினைப்பான் புகில்—நினைக்கப் புகுந்தால் (நினைத்துப் பார்த்தால்), கடல் எக்கலில்—கடற்கரையிலுள்ள, நுண் மணலிற் பலர்—நுண்ணிய மணலைப்போல் எண்ணமுடியாதபேர்கள், எனைத்தோர் யுகங்களும் இவ்வுலகாண்டு கழிந்தவர்—எத்தனையோ யுகங்களாக இவ்வுலகத்தில் ஆட்சி செலுத்திச் சென்றவர்கள், மனைப்பால்—மனை இடத்துக்(கொண்ட), மருங்கு அற—மனைவிமக்களின் உறவு நீங்க, மாய்தல் அல்லால் மற்றுக் கண்டிலர்—அழிந்துபோவதைத் தவிர வேறு எந்தப்பிரயோசனத்தையும் கண்டிலர். பனைத்தாள் மதகளிறு அட்டான் பாதம் பணிமினே—(ஆதலால்) பனைமரத்தைப் போன்ற கால்களையுடைய மதம்பிடித்த குவலயாபீடம் என்னும் யானையைக் கொன்ற கண்ணனின் திருவடிகளை வணங்குங்கள்.

அட்டான்—கொன்றவன் (வினையால் அணையும்பெயர்) மருங்கு—பக்கம், அற—நீங்க

யுகம் யுகமாக இவ்வுலகை ஆண்ட மன்னர்கள் கடற்கரையிலுள்ள மணலைப்போல் எண்ணிலடங்கார். நினைத்துப் பார்த்தால் அவர்கள் எல்லோரும் மனைவிமக்களை விட்டு மறைந்தவர்களே ஆவர். ஆகையால் அவதார புருஷனாகிய ஸ்ரீ கண்ணனை வழிபடுவீர்களாக எ—று.

4—1—5

பணிமின்திருவருளென்னும் அஞ்சீதப்பைம்பூம்பள்ளி
அணிமென்குழலார் இன்பக்கலவியமுதுண்டார்
துணிமுன்புநாலப் பல்லேழையர்தாமிழிப்பச்செல்வர்
மணிமின்னுமேனி நம்மாயவன்பேர்சொல்லிவாழ்மினே 5

பணிமின் திருவருள் என்னும்—தங்கள் விருப்பம் என்னவோ அதைக் கட்டளையிடுங்கள் என்று கூறும், அம்சீதப் பைம்பூம்பள்ளி அணிமென்குழலார்—அழகிய குளிர்ந்த பசிய மலர்ப்படுக்கையில் அழகிய மென்மையான கூந்தலையுடைய மங்கையருடன், இன்பக்கலவி அமுது உண்டவர்கள் —கூடிக்

குலாவும் இன்பம் கண்டவர்கள், துணிமுன்பு நால—ஆடையின் முன்பக்கம்கிழிந்து தொங்க, பல்ஏழையர்தாம் இழிப்பச் செல்வர்—பல ஏழைகள் பரிகசிக்கும்படியாக (ஏழ்மைநிலைமை எய்தி) செல்லநேரிடினும் நேரும், மணிமின்னுமேனி நம் கண்ணன் பேர் சொல்லி வாழுங்கள்—நீலமணி போல விளங்குகின்ற உடலுடைய நம் கண்ணனின் நாமங்களைச் சொல்லி வாழுங்கள்.

நால—தொங்க, பணிமின்—கட்டளையிடுங்கள், திருவருள்—விருப்பம்.

தங்கள் விருப்பம் எதுவோ அதை நிறைவேற்றவே நாங்கள் இருக்கிறோம் என்று கூறும் மலர்அணை மங்கையருடன் கூடிக்குலவியவர்கள் கந்தல் ஆடையுடன் ஏழைகள் பரிகசிக்கும்படி சென்றவர்கள் அநேகர். ஆகையால் ஸ்ரீ கண்ணனைப் பாடி வழிபடுங்கள் எ—று.

4—1—6

வாழ்ந்தார்கள்வாழ்ந்தது மாமழைமொக்குளின்மாய்ந்துமாய்ந்து
ஆழ்ந்தாரென்றல்லால் அன்றுமுதலின்றறுதியா
வாழ்ந்தார்கள்வாழ்ந்தேநிற்பர் என்பதில்லைநிற்குறில்
ஆழ்ந்தார்கடற்பள்ளி அண்ணலடியவராமினோ. 6

வாழ்ந்தார்கள் வாழ்ந்தது மாமழை மொக்குளின் ஆழ்ந்தார் என்று அல்லால்—நன்றாகச் செல்வம் மிக்கவர்களாக வாழ்ந்தவர்கள் வாழ்ந்த வாழ்வு பெரிய மழைநீரில் தோன்றுகின்ற நீர்க்குமிழிகள்போல் தோன்றுவதும் மறைவதுமானார்கள் என்பது அல்லாமல், அன்றுமுதல் இன்று அறுதியா—மனிதன்தோன்றி அக்காலம் முதல் இதுகாலம்வரை முடிவாக, வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பதில்லை—வாழ்ந்தவர்கள் நிலமிசை புகழுடன் வாழ்ந்து நிற்பார்கள் என்பதுஇல்லை, நிற்குறில்—அப்படித் தவறி புகழ்மறையாமல் இருந்திருப்பார்களாயின், ஆழ்ந்தார் கடல்பள்ளி அண்ணல் அடியவர், திரிப்பாற்கடலில் பள்ளிகொண்ட எம்பெருமானின் தொண்டர்களாக ஆழ்ந்து அமைந்தவர்களே ஆவர், ஆமின்ஓ—நீங்களும் அவ்வாறு அவனுடைய தொண்டர்களாக அமைவீர்களாக. ஓ—அசை.

இவ்வுலகில் நீண்டநாள் புகழுடன் வாழ்கின்றவர்கள் எல்லாம் சர்வேஸ்வரனுடைய அடியார்களாகத் திகழ்கிறவர்

களே ஆவர், மற்ற வெறும் செல்வமுடன் வாழ்ந்தவர்களின் பெயர் நிலைப்பதில்லை. அவனுடன் இணைகின்றவர்களே நிலைத்து நிற்பார்கள். ஆக அவனுடையஅடியார்களாக இருக்க முயலுங்கள் எ—று.

4—1—7

ஆமின்சுவையவை ஆறோடடிசிலுண்டார்ந்தபின்
தூமென்மொழிமடவாரிரக்கப் பின்னும்துற்றுவார்
ஈமினெமக்கொருதுற்றென்று இடறுவராதலின்
கோமின்துழாய்முடி ஆதியம்சோதிகுணங்களே 7

ஆம் இன்சுவை—இனிய சுவையாகிய, அவை ஆறோடு அடிசில்—ஆறுவகைப்பட்ட உணவை, உண்டு ஆர்ந்தபின்—உண்டு வயிறு நிறைந்தபின், தூமென்மொழி மடவார்—மிக்க மென்மையான வாக்கையுடைய மங்கையர், இரக்க—இன்னும் சிறிது கொள்க என்று வேண்ட, பின்னும் துற்றுவார்—மீண்டும் உண்பதற்காக, ஈமின்எமக்கு ஒரு துற்று என்று இடறுவராதலின்—சரி இன்னும் ஒரு கவளம் தருக என்று சொல்ல அப்பேச்சிலே திணறி மூர்ச்சை தவறி இறக்கவும் நேரிடும், ஆதலின் கோமின் துழாய்முடி ஆதியம் சோதி குணங்களே—துழபமுடியுடைய கண்ணனாகிய பரஞ்சோதியின் குணங்களை நினைவில் கொள்ளுங்கள்.

ஈமின்—கொடுங்கள். துற்று—கவளம், அடிசில்—உணவு. கோமின்—கொள்ளுங்கள்.

வயிறு நிறைய உண்டபின் இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கள் என்று மிருதுவான குரலுடைய மங்கையர் வேண்ட அவர்கள் சொல்லுக்காக சரி இன்னும் கொஞ்சம் தா என்று சொல்லச்சொல்ல பொறை ஏறி மூச்சுத்திணறி இறக்க நேரிடுமாதலின் துழபமுடியுடைய பெருமான் ஸ்ரீ கண்ணனின் குணங்களை நினைத்து வழிபடுங்கள்.

எப்பொழுது மரணம் நேரிடும் என்று சொல்ல முடியாது. உண்ண உண்ணத் தொண்டை அடைத்து இறக்கநேரிடுவதே அல்லாமல் இன்னும் கொஞ்சம் தா என்று சொல்லச் சொல்ல மூச்சுத் திணறி இறக்க நேரிடினும் நேரிடும். ஆதலால் இப்பொழுதே அப்பெருமானின் குணப்பெருமைகளில் ஈடுபடுங்கள் எ—று.

4—1—8

குணங்கொள்நிறைபுகழ்மன்னர் கொடைக்கடன்பூண்டிருந்து
இணங்கியுலகுடனாக்கிலும் ஆங்கவனையில்லார்
மணங்கொண்டபோகத்துமன்னியும் மீள்வர்கள்மீள்வில்லை
பணங்கொளரவணையான் திருநாமம்படிமினோ. 8

குணங்கொள் நிறைபுகழ் மன்னர்—நற்குணங்களால் நிறைந்த புகழையுடைய அரசர்கள், கொடைக்கடன் பூண்டிருந்து—ஈதலே தம்முடைய கடமையென தானதர்மங்கள் செய்து, இணங்கி உலகுடன் ஆக்கிலும்—மக்களுடன் ஒத்து உலகம் முழுவதையும் தன்னுடையதாகச் செய்தாலும், ஆங்கு அவனை இல்லார்—அங்கு புருஷோத்தமனாகிய ஸ்ரீமன் நாராயணனை தன்னுடன் இணைத்துக்கொள்ளாதவர்கள், மணங்கொண்ட போகத்து மன்னியும் —புகழ்மிக்க சுவர்க்கலோக இன்பங்களை அனுபவித்தும், மீள்வர்கள்—(அவர்களுடைய புண்யம் தீர்ந்தபிறகு) மீண்டும் பழைய நிலைக்கே (நிலவுலகத்திற்கே) திரும்புவார்கள். மீள்வில்லை—அவர்களுக்கு இப்பிறவியினின்றும் மீட்சி (விடுதலை) இல்லை. கொடிமன்னுபுள்ளுடை அண்ணல் கழல்கள் குறுகுமினோ—கொடியாகப் பொருந்திய கருடப் பறவையையுடைய எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணனின் திருவடிகளைச் சார்வீர்களாக.

ஈதலாகிய அறம்பூண்டு நற்குணம் கொண்டு மக்களோடு இணங்கி உலகம் முழுவதையும் தன்னதாக வெற்றி கொண்டாலும் ஸ்ரீமன் நாராயணனிடம் பக்தி இல்லை எனில் அவர்களுக்கு சுவர்க்கலோக இன்பங்கள்தான் கிட்டும். பிறவியினின்று விடுதலை கிட்டாது எ—று. ஆகையால் எம்பெருமானின் திருவடிகளை அடையுங்கள் எ—று.

4—1—9

படிமன்னுபல்கலன்பற்றோடறுத்து ஐம்புலன்வென்று
செடிமன்னுகாயம்செற்றார்களும் ஆங்கவனையில்லார்
குடிமன்னுமின்சுவர்க்கமெய்தியும் மீள்வர்கள்மீள்வில்லை
கொடிமன்னுபுள்ளுடை அண்ணல்கழல்கள்குறுகுமினோ. 9

படிமன்னு பல்கலன் பற்றோடு அறுத்து—அழகு பொருந்திய பலவித ஆபரணங்கள்மீதுள்ள ஆசைகள் நீங்க ஒழித்து, ஐம்புலன் வென்று—ஐம்புலன்களின் பற்றுக்களை விட்டு, செடி மன்னு காயம் செற்றார்களும்—பாவங்கள் பொருந்தும் உடம்

யை வெறுத்தவர்களும், ஆங்கு அவனை இல்லார் - பக்திகொண்டு எம்பெருமானைப் பற்றாதவர்கள், குடி மன்னும் இன் சுவர்க்கம் எய்தியும்—தங்கி வாழத்தக்க இனிய சுவர்க்கலோகம் பெற்றாலும், மீள்வர்கள்—(அவர்கள் செய்த புண்யம் தீர்ந்த பிறகு இந்த மண்ணுலகத்திற்கே) மீண்டும் திரும்பி வருவார்கள், மீள்வில்லை—பிறவியினின்றும் மீட்சி (விடுதலை) இல்லை. பணம்கொள் அரவு அணையான்—படமுடைய ஆதிசேஷன் மீது பள்ளி கொண்ட திருமாலின், திருநாமம் படிமின்ஓ—திருப்பெயர்களைச் சொல்வதிலும் பாடுவதிலும் ஈடுபடுங்கள். ஓ—அசை.

படி—வடிவம் (அழகு), மன்னு—பொருந்திய, பணம்—படம், அரவு—பாம்பு

ஆசைகளை அறுத்து ஐம்புலன்களை அடக்கி உடலை வாட்டியவர்களும் எம்பெருமானை இணைத்துக்கொள்ளாதவர்கள் இன்ப உலகமே எய்தாலும் மீண்டும் பிறப்பு எடுக்க நேரிடும். அவர்களுக்கு உய்தி இல்லை எ—று.

தே தம் புக்த்வா ஸ்வர்க்கலோகம் விசாலம்
க்ஷீணே புண்யே மர்த்தயலோகம்விசந்தி ...ப. கீ.

அதாவது விசாலமான சுவர்க்கலோகத்தை அனுபவித்து விட்டு புண்யம் தீர்ந்தபிறகு மானிட உலகத்திற்கே திரும்புகின்றனர்.

4—1—10

குறுகமிகவுணர்வத்தொடுநோக்கி எல்லாம்விட்ட
இறுகலிறப்பென்னும் ஞானிக்குமப்பயனில்லையேல்
சிறுகநினைவதோர்பாசமுண்டாம் பின்னும்வீடில்லை
மறுகலிலீசனைப்பற்றி விடாவிடில்வீடஃதே. 10

உணர்வத்தொடு—அறிவுகொண்டு, நோக்கி—ஆராய்ந்து பார்த்து, குறுக மிக—நன்கு நெருங்க, எல்லாம்விட்ட—குடும்ப பந்தபாசங்கள் எல்லாம் விட்டு, இறுகல்—துறவு வைராக்கியத்துடன் கூடிய, இறப்பு என்னும்—உலக வாழ்க்கைக்குச் சம்பந்தமே இல்லாது போனவர்களாக கருதப்படத்தக்க தீவிரமான, ஞானிக்கும்—துறவிக்கும், அப்பயனில்லை—பிறவியினின்றும் கிடைப்பதாகிய விடுதலை இல்லை. சிறுக நினைவதோர் பாசமுண்டாம்—மீண்டும் மனைவி மக்களோடு வாழ்ந்தால் என்ன என்ற பற்று வந்தாலும் வரலாம், பின்னும் வீடில்லை—

அதனுல் துறந்தும் விடுதலே இல்லே, மறுகல் இல்—குற்றம் இல்லாத, ஈசனேப்பற்றி—இறைவனிடம் பக்திகொண்டு, விடா விடில்—விடாமல் இருந்தால், வீடு அஃதே—அதுவே முக்திக்கு வழியாகும் முக்தியும் கிடைக்கும்.

உணர்வத்தோடு—உணர்வு+அத்து+ஒடு, அத்து சாரியை. உணர்வுடன் என்று பொருள்.

வீடுவாசல் மனேவி மக்கள் எல்லாம் துறந்து சன்யாசம் கொண்டு யோகியாய் இறைவனே எளிதில் காணமுடியாது. நிர்குண பிரம்மத்தைக் காண்பது கடினம். உருவுகொண்டு குணங்களே நினேத்துப் பக்தி செய்யும் பக்திமார்க்கமே சிறந்தது. அது எப்படியும் முக்திக்கு அழைத்துச் செல்லும். முக்தியே இல்லேஎனினும் அதில் இன்பமும் அமைதியும் காணலாம். சன்யாசம் பெற்ற பிறகு காலப்போக்கில் குடும்ப வாழ்வே சிறந்தது என்று நினேக்கவும் பாசங்கொள்ளவும் நேரிடும்.

ஆகவே இறைவன் தாளிணே நினேத்துப் பக்திகொள்க என்கிருர் ஆழ்வார் பெருமாஞர். முடி அரசராயினும் அரசர்க்கு அரசராயினும் அதுவே உய்யும் வழி என்கிருர்.

4—1—11

அ:.தேஉய்யப்புகுமாறென்று கண்ணன்கழல்கள்மேல்
கொய்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்குற்றேவல்
செய்கோலத்தாயிரம் சீர்த்தொடைப்பாடலிவைபத்தும்
அ:.காமல்கற்பவர் ஆழ்துயர்போயுய்யற்பாலரே. 11

அஃதே உய்யப்புகும் ஆறு என்று—ஸ்ரீமன் நாராயணனின் திருவடிகளேப் பற்றுதலே வாழ்வுபெறும் வழியென்று, கண்ணன் கழல்கள் மேல்—ஸ்ரீகண்ணபிரானின் திருவடிகளுக்கான, கொய்பூம்பொழில் சூழ் குருகூர்ச்சடகோபன்—கொய்தற்குரிய பூக்களேயுடைய சோலேகளால் சூழப்பெற்ற குருகூர்ச்சடகோபனுடைய, குற்றேவல் செய்கோலத்து—பணிவிடைகள் செய்யத்தகுந்த அழகுடைய, ஆயிரம் சீர் தொடைப்பாடல்—சீரும் தொடையும் கொண்ட ஆயிரம் பாசுரங்களில், இவை பத்தும்—இப்பத்துப் பாசுரங்களேயும், அஃகாமல் கற்பவர்—விடாது கற்பவர்கள், ஆழ்துயர்போய்—கொடிய துன்பங்கள் நீங்கி, உய்யற்பாலரே—வாழ்வு பெறுபவர்களே ஆவர். ஏ—அசை.

பாலனாய்

4—2—1

பாலனாய் ஏழுலகுண்டுபரிவின்றி
ஆலிலை அன்னவசஞ்செய்யுமண்ணலார்
தாளிணைமேலணி தண்ணந்துழாயென்றே
மாலுமால் வல்வினையேன் மடவல்லியே. 1

ஏழுலகுண்டு—ஏழு உலகங்களையும் உண்டு (தன்னுள் ஒடுக்கி), பாலனாய்—சிறுகுழந்தையாய், பரிவு இன்றி—ஆயாசம் ஏதுமில்லாமல், ஆல் இலை—ஓர் ஆலமரத்து இலையில், அன்னவசம் செய்யும் அண்ணலார்—உணவு உண்டபிறகு சற்றே சயனிப்புக்கொள்ளும் எம்பெருமான், தாளிணைமேல் அணிதண் அம்துழாய் என்றே— திருவடிகளின்மேல் அணியப் பெற்றுள்ள திருத்துழாய் என்று என்றே சொல்லி, மாலும் ஆல்—மயங்குகிறாள், வல்வினையேன் மடவல்லி—கொடிய பாவியாகிய என்னுடைய அறியாப்பருவத்தினளாகிய கொடி போன்ற பெண் (மகள்), ஆல்—அசை.

வல்லி—கொடி (கொடிபோன்ற பெண்), மட—அறியாமையை உடைய,

தாய் ஒருவள் தன் மகளைப் பற்றிக் கூறும் பாசுரம் இது. பேதை பெதும்பை என்ற இரு பருவங்களைத் தாண்டி மடந்தைப் பருவம் அடைந்தவள்.

எம்பெருமான் குழந்தையாகத் தன் கால்பெருவிரலை தன் வாயில் வைத்து சுவைக்கின்ற பான்மை அவள் உள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றது. அவன் திருவடிகள்தான் என்ன அழகு! அத்திருவடிகள் சம்பந்தம் நமக்குக் கிடைக்காதா என்ற உணர்வு. அவை கிடைக்குமா! ஆதலால் அவன் திருவடிமேல் அணியப்பெற்ற திருத்துழாயாவது கிடைத்தால் உள்ளம் மகிழலாமே என்று தன்னை அறியாமல் அவள் வாய் முனங்குகிறது. இதைக் கண்ட தாய் அவ்வளுடைய நிலையை அறியாமல் கலங்கத் தொடங்குகிறாள். கொடிய பாவியேன் என்று தன்னையே நொந்தவண்ணம் மகளின் நிலையைக் கூறுகிறாள்.

ஆழ்வார் பெருமானுர் தாயாக மகள் வாயிலாக நமக்கு எம்பெருமான் திவ்யமான பெருமைகளைக் காட்டி அவன்பால் பக்திகொள்ள அவன் திருவடி சம்பந்தம்பெற்ற திருத்துழாய் இருக்கிறது என்று நமக்கு உணர்த்துகிருர்..

எம்பெருமான் உண்டது சாமான்ய உணவா? ஏழு உலகங்கள் அன்றே! அவற்றை உண்டு ஒரு சிறு குழந்தையாக ஓர் ஆல்இலைக்குள் அடங்கும்படி பள்ளிகொண்டான்! என்ன ஆச்சரியம்! இந்த மாயா சக்தியையும் பெருமையையும் மன தில்கொண்ட மகள் அப்பெருமான்பால் காதல்கொள்கிருள்.

4—2—2

வல்லிசேர்நுண்ணிடை ஆய்ச்சியர்தம்மொடும்
கொல்லைமைசெய்து குரவைபிணைந்தவர்
நல்லடிமேலணி நாறுதுழாயென்றே
சொல்லுமால் சூழ்வினையாட்டியேன்பாவையே. **2**

வல்லிசேர் நுண் இடை ஆய்ச்சியர் தம்மொடும்—கொடிபோன்ற நுண்ணிய இடையையுடைய கோபியருடன், கொல்லைமை செய்து—வரம்பு இழிந்து ஒழுகுகின்ற தன்மை புரிந்து, குரவை பிணைந்தவர்—கைகோத்துக் கூத்தாடியவர், நல்லடிமேல் அணிநாறு துழாய் என்றே சொல்லும் ஆல்—திருவடிகள்மேல் அணியப்பெற்ற வாசனைபொருந்திய துழபம் என்று திரும்பத் திரும்ப சொல்கிருள், சூழ்வினையாட்டியேன் பாவையே—பாவத்தால் பீடிக்கப்பட்டவளாகியஎன்னுடைய மகள்.

ஸ்ரீ கண்ணன் குழல் எடுத்து ஊதி இனிய கானம் (இசை) எழுப்பி ஆயர்பாடி ஆய்ச்சிமார்களின் உள்ளங்களைத் துளைத்து பிருந்தாவனத்துக்கு எழுமாறு செய்து அவர்களுடன் குரவைக் கூத்தாடி ரசித்ததை நினைத்து நினைத்து தனக்கும் அந்த அனு பவம் கிடைக்கவில்லையே என்ற தாபம் கொண்டாள். அவன் சதங்கைகள் கலீர்கலீர் என நர்த்தனம் புரிந்த அழகும் சுவை யும் அவள் உள்ளத்தைக் கொள்ளைகொள்ள அவன் திருவடிகள் சம்பந்தம் கிடைக்காதா என்று ஏக்கம் பிடிக்கிறது. அந்த அனுபவம் கிடைக்குமா? கிடைத்தற்கு அரியது ஆயிற்றே! அந்த திவ்யமான திருவடிகள் மேல் அணியப்பெற்ற துழாயா வது போதுமே! ஆக துழாய் துழாய் என வாய் கதறுகிறது. உண்மை நிலையறியாத தாய் வெருண்டு கலக்கம்கொள்கிருள். கெடுவிதியால் கொள்ளப்பட்டேன் என்று தன்னை நொந்து வருந்துகிருள்.

தூய உள்ளமும் தூய அன்பும் கொண்ட ஆய்ச்சியர் களைத் தன் வசமாக்கித் தம்மை அணுகச் செய்து அவர்களுக்கு வேண்டியது எதுவோ அதைத் தந்தருளினன் என்பதை ஆழ்வார்பெருமானுர் தாய்நிலையில் நின்று அப்பேர்ப்பட்ட வனுடைய திருவடி சம்பந்தம்பெற வேண்டுமென்பதையும் அதற்கு உபாயமாக அவன் திருவடி சம்பந்தம் பெற்ற திருத் துழாய் இருக்கிறது என்று நமக்குக் காட்டி அருள்கிருர்.

4—2—3

பாவியல்வேத நன்மாலைபலகொண்டு
தேவர்கள்மாமுனிவர் இறைஞ்சநின்ற
சேவடிமேலணி செம்பொன்துழாயென்றே
கூவுமால் கோள்வினையாட்டியேன்கோதையே. 3

பாஇயல் வேத—சாம வேதத்தின், நன்மாலை பல கொண்டு—இனிய கீர்த்தனங்கள் பலவற்றைக்கொண்டு, தேவர்கள் மாமுனிவர்கள்—தேவர்களும் பெரிய முனிவர் களும், இறைஞ்ச நின்ற—வணங்கித் தொழுகின்ற, சேவடி மேல் அணி—அழகிய திருவடிகளின்மேல் அணியப் பெற்ற, செம்பொன் துழாய் என்றே கூவும் ஆல்—அழகிய உயர்ந்த துழபம் என்றே திரும்பத் திரும்ப இரைச்சல் இடுகிருள், கோள் வினையாட்டியேன்—கொடிய பாவியாகிய என்னுடைய, கோதை ஏ—பெண், ஆல், ஏ—அசை.

கோள்—கொடிய, சேவடி—சே+அடி, செம்மை அடிகள் (அழகிய அடிகள்), பா—பாட்டு, பாடல்கள், இயல்—கலை. பொன் நிறமும் உயர்வும் உடையதால் செம்பொன் துழாய் என்றவாறு.

தேவர்களும் பெரிய முனிவர்களும் சாமவேதத்தின் உயர்ந்த துதிப் பாக்களால் தொழுகின்ற வேத நயாகனை ஸ்ரீமன் நாராயணனின் திருவடிகள்மேல் அணியப் பெற்ற செம்பொன் துழபம் என்றே உரக்கக் கூவுகின்ருள் என் மகள். என்ன கொடுவினையுடையேனே? என்ன செய்வதோ அறி யேன் என்று தாய் கூறுவதாகும்.

தேவர்களாலும் உயர்ந்த முனிவர்களாலும் சிறந்த சாமவேதக் கீர்த்தனங்களால் துதிக்கப் பெறுகிற ஸ்ரீமன் நாராயணனே இப்பெண் காமுற்றவன் என்பதையும் அவன் திருவடிகளில் அணியப்பெற்ற துழாய் வானவர்களால் ஆரா

திக்கப் பெற்ற உயர்ந்த துழாய் என்பதையும் உணர்த்தி அப் பெருமானின் திருவடி சம்பந்தம் பெறவேண்டும் அவன் தாள்களைப் பற்றவேண்டும். அவன் அணிந்த துழாய் அதற்கு உபாயமாகும் பயனுமாகும் என்பதை ஆழ்வார் பெருமாஞர் தாய் நிலையில் நின்று மகள் வாயிலாக நமக்கு அறிவுறுத்திய வாருகும்.

4—2—4

கோதிலவண்புகழ் கொண்டுசமயிகள்
பேதங்கள்சொல்லிப் பிதற்றும்பிரான்பரன்
பாதங்கள்மேலணி பைம்பொன்துழாயென்றே
ஓதுமால் ஊழ்வினையேன்தடந்தோளியே. 4

கோது—குற்றம், இல—இல்லாத, வண்புகழ்கொண்டு—சிறந்த கீர்த்திகளால், சமயிகள்—மத போதகர்கள், பேதங்கள் சொல்லிப் பிதற்றும்—வெவ்வேறு விதமாகப் பாடி வணங்கப் பெறுகின்ற, பிரான்பரன்—உயர்ந்த தேவன் ஸ்ரீமன் நாராயணனின், பாதங்கள்மேல் அணி—திருவடிகளின்மேல் அணியப்பெற்ற, பைம்பொன் துழாய் என்றே—பசிய பொன் போன்ற துழாய் என்றே, ஓதும் ஆல்—சொல்லுவாள், ஊழ் வினையேன் தடம் தோளிஏ—பாவியாகிய என்னுடைய பெரிய தோள்களையுடைய மகள், என்று தாய் வருந்தியதாகும்.

குற்றம் இல்லாத சிறந்த கீர்த்திகளால் தங்கள் தங்கள் தேவன் என்று ஒவ்வொரு விதமாக வணங்கும் உயர்ந்த தேவனுகிய ஸ்ரீமன் நாராயணனின் திருவடிகளில் அணியப் பெற்றுள்ள அழகிய துழபம் என்றே சொல்லிக் கொண்டிருக்கிருள் பெரிய தோள்களையுடைய என் மகள். என்ன காரணமோ அறியேன். என் விதி தானே! என்று தாயானவள் வருந்துகிருள்.

வெவ்வேறு சமயத்தின் பெயர் கொண்டு எவர்எவர் எந்தெந்த தெய்வத்தை ஆழ்ந்த பக்தி கொண்டு வணங்கினுலும் அந்த தெய்வம் பரம்பொருளாகிய ஸ்ரீமன் நாராயணனையே சாரும் என்று அவன் பாதங்களில் அணியப் பெற்ற துழாய் துழாய் என்றே தோள்கள் பருத்த என் மகள் பிதற்றுகிருள் என்று ஆழ்வார் பெருமாஞர் தாய் நிலையில் நின்று நமக்கு அறிவுறுத்துகிருர்.

மகளுக்கு உற்ற நோயைக் கண்டு ஆற்ருதவளாய் ஊழ்வினையேன் என்று தாய் வருந்துகிருள். ஆழ்வார் நம்மை எம்பெருமானின் கழல் அடிகளில் ஈடுபாடுகொள்ளக் கொண்ட தன்மை அதி அற்புதமானதாகும்.

4—2—5

தோளிசேர்பின்னைபொருட்டு எருதேழ்தழீஇக்
கோளியார் கோவலனுர் குடக்கூத்தனுர்
தாளிணைமேலணி தண்ணந்துழாயென்றே
நாளுநாள் நைகின்றதால் என்றன்மாதரே 5

தோளிசேர் பின்னை பொருட்டு—நப்பின்னையின் தோள்களை அடைவதற்காக (மணப்பதற்காக), எருது ஏழ்தழீஇ—ஏழு காளைமாடுகளை அடக்கி, கோளியார்—பிறப்பில்லாத, கோவலனுர்—ஆயர் குலத்தவன், குடக்கூத்தனுர்—குடமெடுத்து ஆடும் கண்ணபிரான், தாள் இணைமேல் அணி—பாதங்களின்மேல் அணியப்பெற்ற, தண் அம்துழாய்—திருத்துழாய், என்றே நாளுநாள் நைகின்றது ஆல்—என்று என்று நாள் தோறும் வருந்துகின்ருள், என்றன் மாதர் ஏ—என்னுடைய மகள், ஆல், ஏ—அசை. தழீஇ—தழுவி, கோளி—பிறப்பில்லாத.

நப்பின்னையை மணப்பதற்காக ஏழு காளைமாடுகளை அடக்கிய பிறப்பில்லாத அவதார புருடனும் கோபாலனும் குடக்கூத்தனுமான கண்ணபிரானின் திருவடிகள் மீது அணியப்பெற்ற திருத்துழாய் என்று என்றே சொல்லி நாள் தோறும் வருந்துகிருள் என் மகள் என்று தாய் அறியாதவளாய் மயங்குகிருள்.

ஸ்ரீகண்ணனிடம் மனம் பறி கொடுத்துவிட்டு அவன் தாளிணை சம்பந்தம் பெற்ற திருத்துழாய் கொண்டு மனம் ஆறுதலடைய ஏங்குகிருள். யாரிடம் சொல்வாள்? அவளால் உணர்ச்சியை அடக்கி வைக்க முடியவில்லை. வாய்கொண்டு அலற்றுகிருள் என்றபடி.

4—2—6

மாதர்மாமண்மடந்தைபொருட்டு ஏனமாய்
ஆதியங்காலத்து அகலிடம்கீண்டவர்
பாதங்கள்மேலணி பைம்பொன்துழாயென்றே
ஓதுமாலெய்தினள் என்தன்மடந்தையே. 6

மாதர் மா மண் மடந்தை பொருட்டு—மாதர்களில் பூமி தேவிக்காக, ஏனமாய்—பன்றியாய் (வராகமாய்), ஆதியம் காலத்து—பூமியைப் படைத்த ஆதி காலத்தில், அகல் இடம்—பெரிய பூமியை, கீண்டவர்—(நீரில் மூழ்கி இருந்ததைப்) பெயர்த் தெடுத்தவராகிய ஸ்ரீமன் நாராயணனின், பாதங்கள் மேல் அணி பைம்பொன் துழாய் என்றே—திருவடிகளின்மேல் அணியப்பெற்ற பசிய பொன் நிறத்துழாய் என்று, ஓதும் மால் எய்தினள்—கதறும் பித்தேறியவளானுள், என்தன் மடந்தை ஏ—மடந்தைப் பருவத்தளாகிய என்னுடைய மகள்.

பூமி தேவிக்காக ஆதிகாலத்தில் நீரில் மூழ்கிய நிலத்தை வராக அவதாரம் கொண்டு பூமியை மீட்ட ஸ்ரீமன் நாராயணனின் திருவடிகளின் மேல் அணியப்பெற்ற அழகிய துழாய் என்று கதறுகின்ற பித்துக் கொண்டவளாய் உள்ளாள் என் மடந்தை (மகள்) என்று தாய் கூறுகிருள். மகள் எம்பெருமானிடத்துக் கொண்ட காதல் முற்றிவிட்டது. அவளை இனி சுய நிலைக்கு மீட்பதும் அரிது. வராக அவதாரம் எடுத்து பூ தேவியை எப்படி கடலில் இருந்து எம்பெருமான் மீட்டானே அஃதே போல் அப்பெருமானே தான் மீட்க வேண்டுமாப் போல அவன் திருவடித் துழாய் வேண்டுமென்று பித்துக் கொண்டாள் என்பதாகும்.

ஆழ்வார் பெருமானுர் இவ்வாருக தாயாக பாவித்து நம்மை பிறவிக்கடலிலிருந்து மீட்க அப்பெருமானிடம் பித்துக் கொள்ளும் அளவிற்கு பக்தி கொள்ளவேண்டும் என்று குறிப்பால் உணர்த்துகிருர்.

4—2—7

மடந்தையை வண்கமலத்திருமாதினை
தடங்கொள்தார்மார்பினில் வைத்தவர்தாளின்மேல்
வடங்கொள்பூந்தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
மடங்குமால் வாணுதலீரென்மடக்கொம்பே. 7

மடந்தையை—தேவியை, வண்கமலத்து திருமாதினை—ஒளி பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியை, தடங்கொள்—விசாலமான, தார்மார்பினில்—மாலை அணிந்த மார்பினில், வைத்தவர்—கொண்டவராகிய ஸ்ரீமன் நாராயணன், தாளின் மேல்—திருவடிகளின் மேலுள்ள வடங்கொள் பூந்தண் அம் துழாய் மலர்க்கே—மாலையிலுள்ள

அழகிய இனிய திருத்துழாய்க்கே, இவள் மடங்கும்ஆல்—மகளாகிய இவள் அடங்குவாள், வாள் நுதலீர்—ஒளி பொருந்திய நெற்றயுடைய தாய்மார்களே! என் மடக் கொம்பே—மடமை பொருந்திய என்பெண்ணே. ஆல்—அசை

மகளின் பித்தேறிய நிலை அறிந்த தாய்மார்கள் ஆங்கு கூட்டமாகக் கூடிட உற்ற தாயானவள் இலக்குமி நாயகனுன ஸ்ரீமன் நாராயணனின் திருவடிகளில் சூட்டப் பெற்றுள்ள துளசி மாலையின் திருத்துழாய் தரித்தால்தான் சாந்தி பெறுவாள். இவள் எனக்கு வாய்த்த மட சன்மந்தான் என்கிருள் தாய்.

பூரண அனுக்கிரகம் பெற ஸ்ரீபதியாகிய ஸ்ரீமன் நாராயணனையே வணங்குதல் வேண்டும் என்பதாகும்.

4—2—8

கொம்புபோல்சீதைபொருட்டு இலங்கைநகர்
அம்பெரியுய்த்தவர் தாளிணைமேலணி
வம்பவிழ்தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
நம்புமால் நானிதற்கென்செய்கேன் நங்கைமீர். 8

கொம்புபோல் சீதை பொருட்டு—கொம்பு போல் மென்மை பொருந்திய சீதைக்காக, இலங்கை நகர் அம்பு எரி உய்த்தவர்—இலங்கா நகரத்தின்மீது தம் அம்புகளால் தீயைப் பொழிந்த ஸ்ரீராமன், தாள் இணைமேல்—திருவடிகளின்மேல், அணி—அணிகின்ற, வம்பு அவிழ்—மணம் கமழும், தண்அம் துழாய் மலர்க்கே—திருத்துழாய் மீதே, இவள் நம்பும் ஆல்—இவள் நம்பிக்கை கொண்டு உள்ளாள், நான் இதற்கு என் செய்கேன்—நான் இதற்கு என்ன பரிகாரம் புரிவதோ அறியேன், நங்கைமீர்—தாய்மார்களே!

சீதா தேவிக்காக இலங்கைப் பட்டணத்தின்மீது அம்பு மழை பெய்த வீரராகவனுன ஸ்ரீராமன் திருவடிகள் ஸ்பர்சம் பெற்ற துளசி மலர்களே தன்னுடைய நோய் தீர்க்கும் என்று, சீதா தேவி எப்படி ஸ்ரீராமன் வருவான் என்று திட சித்தமாக நம்பினுளோ அப்படி நம்பிக்கை உடையவளாய் இருக்கிருள். நான் என்ன செய்வேன் என்றுதாய் கூறுகிருள். மகளின் நிலை தாய் ஒருவளே நன்கு அறிந்தவளாவள். ஈண்டு ஆழ்வார் பெருமானுர் தாய் நிலையில் நின்று பெருமானிடம் பூரணமான நம்பிக்கை கொள்ளவேண்டும்

அவன் எப்படியும் நம்மைக் கைவிடான் என்று பக்தி செய்ய வேண்டும் என்று கூறுமற்கூறி அறிவுறுத்துகிறார்.

அசோக மரத்தடியில் சிறையிருந்த சீதை

வாரா தொழியா னெனும் வண்மையினல்
ஓரா யிரகோ டியிடர்க் குடையேன்
தீரா ஒருநாள் வலி சேவகனே
நாரா யணனே தனி நாயகனே.

என்று கோடிக்கணக்கான இன்னல்களுக்கு இடையேயும் நம்பிக்கையை விடாது இருந்தாள் என்பதை நினைவு கூரத்தகும்.

4—2—9

நங்கைமீர்நீரும் ஓர்பெண்பெற்றுநல்கினீர்
எங்ஙனேசொல்லுகேன் யான்பெற்றஏழையை
சங்கென்னும்சக்கரமென்னும் துழாயென்னும்
இங்ஙனேசொல்லும் இராப்பகலென்செய்கேன் 9

நங்கைமீர் நீரும் ஓர் பெண்பெற்று நல்கினீர்—தாய்மார்களே! நீங்களும் ஓர் மகளைப் பெற்று காத்து வளர்த்தீர்கள், எங்ஙனே சொல்லுகேன் யான்பெற்ற ஏழையை—எப்படிச் சொல்லுவேன் நான் பெற்ற பெண்ணைப்பற்றி, சங்கு என்னும் சக்கரமென்னும் துழாய் என்னும்—சங்குசக்கரம் என்பாள் துழாய் என்பாள், இங்ஙனே சொல்லும் இராப்பகல்—இப்படியே இரவும்பகலும் சொல்லிக் கொண்டிருக்கிறாள், என் செய்கேன்—நான்என்ன செய்வதோ ஒன்றும் அறியாதவளாய் இருக்கிறேன்.

நல்குதல்—காத்தல்,

தாய்மார்களே! நீங்களும் பெண்குழந்தைகளைப்பெற்று காத்து வளர்த்தீர்கள். நானும் ஓர் பெண்ணைப் பெற்றேன். அவளைப்பற்றி நான் என்னசொல்வது! இரவும் பகலும் ஓயாது சங்குசக்கரம் என்கிறாள், துழாய் என்கிறாள். என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை என்று தாய் கூறுகிறாள்.

மற்ற பெண்களைப்போல் அல்லாமல் தன்மகள் சதா எம்பெருமானின் நினைவாகவே இருக்கிறாள், அவனுடைய ரூபலாவண்யத்தை நினைத்து நினைத்து உருகுகிறாள். இவளைக்

கொண்டு என்ன செய்வது என்று நொந்தவளாய் ஆழ்வார் பெருமானார் நமக்கு அவளுடைய பெருமையை மறைமுகமாக உணர்த்தி நாமும் அவ்வாறு பக்திகொள்ளுமாறு வழிப்படுத்து கிறார்.

4—2—10

என்செய்கேனென்னுடைப்பேதை என்கோமளம்
என்சொல்லும் என்வசமுமல்லள்நங்கைமீர்
மின்செய்பூண்மார்பினன் கண்ணன்கழல்துழாய்
பொன்செய்பூண்மென்முலைக்கென்றுமெலியுமே. 10

என்செய்கேன்—என்ன செய்வேன் (ஒன்றும் தெரிய வில்லை), என்பேதை—அறிவுவரப்பெறாதவள் என் மகள், என் கோமளம்—அழகுடைய இவள், என் சொல்லும் என் வசமும் அல்லள்—என் வார்த்தையைக் கேட்பதும் இல்லை எனக்கு அடங்கி நடக்கிறவளாகவும் இல்லை. நங்கைமீர்!—தாய் மார்களே! மின்செய்பூண்மார்பினன்—மின்னுகின்ற ஆபரணங்களை உடைய மார்பினன் ஆகிய, கண்ணன்கழல்—ஸ்ரீகண்ணபிரானுடைய திருவடிகளில், துழாய்—(சாத்தப் பெற்ற) துளசி, பொன்செய் பூண்முலைக்கு என்று—பொன்னா லாகிய ஆபரணங்கள் அணிந்த மார்பிற்கு அணிவீர்களாக என்று, மெலியும் ஏ—வாடுகின்றாள், ஏ—அசை.

பொன்செய்—பசலை பரவுகின்ற எனினும் அமையும்.

மகள் கண்ணனிடம் கொண்ட காதல் முதிர்ந்து அவனை அடைய முடியாமல் ஆற்றாமை மிகுகின்றது. அதனால் அவள் உடல் மெலிவுறுகின்றது. அதற்கு மருந்து கண்ணனின் திரு வடி பட்ட துளசியே என்று அறிந்தவளான அவள் துழாய் கொண்டுதன் மார்பிற்கு அணியுமாறு வருந்துகிறாள்.

இங்ஙனம் துழாய் துழாய் என்றே கண்ணன் சம்பந்தம் பெறுகிறாள். அவளுடைய நோய்க்கு மருந்தும் ஆகிறது.

ஆக திருத்துழாய் சம்பந்தம் திருவடி சம்பந்தம்ஆகும். அதை எம்பெருமானுக்கு அணிவிப்பதும் அர்ச்சிப்பதும் அவன் சம்பந்தம் பெற்றதை நாம் பயன்படுத்துவதும் எம்பெருமா னுக்குக் கைங்கர்யம் புரிவதும் பக்தி செலுத்துவதுமாகும். அதுவே அவனை அடைய உபாயமாகும்.

4—2—11

மெலியுநோய்தீர்க்கும் நம்கண்ணன்கழல்கள்மேல்
மலிபுகழ்வண்குருகூர்ச்சடகோபன்சொல்
ஒலிபுகழாயிரத்து இப்பத்தும்வல்லவர்
மலிபுகழ்வானவர்க்காவர் நற்கோவையே. 11

மெலியும் நோய் தீர்க்கும்—(மனதையும் உடலையும்) வாட்டும் நோயைத் தீர்க்கும் தன்மையான, நம் கண்ணன் கழல்கள் மேல்—நம்முடைய கண்ணபிரானின் திருவடிகளைப் பற்றிய, மலிபுகழ்—நிறைந்த புகழுடைய, வண்குருகூர்—சிறப்பு மிக்க குருகூர், சடகோபன்சொல்—சடகோபன் சொன்ன, ஒலிபுகழ் ஆயிரத்து—புகழப்படுகின்ற ஆயிரம் பாசுரங்களில், இப்பத்தும் வல்லவர்—இந்தப் பத்துப் பாசுரங்களும்உணர்ந்து ஓத வல்லவர்கள், மலிபுகழ் வானவர்க்கு—நிறைபுகழுடைய தேவர்களுக்கு, ஆவர் நற்கோவைஏ—நல்ல மாலைபோல் அழகுடையர் ஆவர்.

கோவைவாயாள்

4—3—1

கோவைவாயாள்பொருட்டு ஏற்றினெருத்தமிறுத்தாய் மதிளிலங்கைக்
கோவைவீயச்சிலைகுனித்தாய் குலநல்யானைமருப்பொசித்தாய்
பூவைவீயாநீர்தூவிப் போதால்வணங்கேனேலும் நின்
பூவைவீயாம்மேனிக்குப் பூசும்சாந்தென்னெஞ்சமே. 1

கோவை வாயாள் பொருட்டு—கொவ்வைப் பழம் போன்று சிவந்த வாயையுடைய நப்பின்னைக்காக, ஏற்றின் எருத்தம் இறுத்தாய்—காளைமாடுகளின் பிடரிகளை(கொட்டத்தை) அடக்கினாய், மதிள் இலங்கை —மதிள் சுவர்களால் சூழப்பெற்ற இலங்கைக்கு, கோவைவீய—அரசனான இராவணனை அழிக்க, சிலைகுனித்தாய்—வில்வளைத்தாய், குலநல் யானை மருப்பு ஒசித்தாய்—நல்ல ஜாதி யானையாகிய குவலயாபீடத்தின் கொம்பை முறித்தாய், பூவை வீயா—மலரால் அர்ச்சிக்காது, நீர்தூவிப்போதால் வணங்கேனேலும்—நீர் தூவி நேரத்திற்கு நேரம் வணங்காவிடினும், பூவை வீயாம் மேனிக்கு—பூவைப்பூப் போன்ற நீலநிறத்திருவுடம்பிற்கு, பூசும் சாந்து என் நெஞ்சமே—பூசப்படுகின்ற சாந்து என் உள்ளமே (என் உள்ளத்தால் அவனுடைய மேனியைக் குளிரப்பண்ணுவேன்)

நப்பின்னை தேவியை மணப்பதற்காக அடக்கமுடியாத ஏழு எருதுகளை அடக்கினாய், அழிக்க முடியாத இலங்கைக் கோனை அழித்தாய், முறிப்பதற்கு அரிய குவலயாபீட யானையின் கொம்பை முறித்தாய். இத்தனை லீலைகள் புரிந்து உனக்கு பூக்களால் ஆராதிக்கவேண்டும், நீர்தூவி வணங்கவேண்டும். நான் அது செய்யவில்லை. இருந்தபோதிலும் பூவைப் பூப் போன்ற உன் நீலத்திருமேனிக்குச் சாந்தாக என்னுடைய உள்ளத்தால் குளிரப்பண்ணுவேன்.

என் உள்ளத்தால் நினைத்து பூஜிப்பேன், உணர்வால் பாடி மகிழ்விப்பன், ஞானக்கலைகளால் மாலைகள் சூட்டுவன். அவை உன் திருவுடம்பை குளிரப்பண்ணுமன்றே! உனக்கு உகப்புடையனவாய் இருக்குமன்றே!

4—3—2

பூசும்சாந்தென்னெஞ்சமே புனையும்கண்ணியெனதுடைய
வாசகம்செய்மாலையே வான்பட்டாடையுமஃதே
தேசமானவணிகலனும் என்கைகூப்புச்செய்கையே
ஈசன்ஞாலமுண்டுமிழ்ந்த எந்தையேகமூர்த்திக்கே. 2

புனையும் கண்ணி—சூட்டும் மாலை, என்னுடைய வாசகம் செய் மாலையே—வாயால் பாடும் பாமாலையே, வான்பட்டாடையும்—உயர்ந்த பட்டுடையும், தேசமான அணிகலனும்—ஒளிபொருந்திய ஆபரணமும், என் கைகூப்புச் செய்கையே—என் கைகள் கூப்பிச்செய்யும் அஞ்சலியே, ஞாலம் உண்டு உமிழ்ந்த—உலகத்தை விழுங்கி வெளிப்படுத்திய, ஈசன் எந்தை ஏகமூர்த்திக்கே—இறைவனும் எம் தந்தையுமாகிய ஒப்பற்ற தேவனாகிய ஸ்ரீமன் நாராயணனுக்கே.

எனக்குத் தந்தையும் இறைவனும் ஒப்பற்ற ஆதிமுதல்வனுமான எம்பெருமானுக்குப் பூமாலையாகச் சாத்தும் மாலை என் பாடல்களால் ஆகிய மாலையே. அவனுக்கு அணிவிக்கும் பட்டு வஸ்திரமும் ஒளிபொருந்திய ஆபரணங்களும் என் கைகளால் கூப்பி வணங்கும் அஞ்சலியே. நான் அவனை வாயாரப் பாடி உளமார வணங்கி மகிழ்விப்பன் எ—று.

எப்படியும் கைகள் கூப்பி வணங்கவேண்டும்.

4—3—3

ஏகமூர்த்தியிருமூர்த்தி மூன்றுமூர்த்திபலமூர்த்தி
யாகி ஐந்துபூதமாய் இரண்டுசுடராயருவாகி
நாகமேறிநடுக்கடலுள்துயின்ற நாராயணனே உன்
ஆகமுற்றுமகத்தடக்கி ஆவியல்லல்மாய்த்ததே. 3

ஏகமூர்த்தி—ஒரே தேவன், இருமூர்த்தி—பிரமனும் சிவனுமாகிய இரண்டு தேவர்கள், மூன்று மூர்த்தி—அரிஅரன் பிரமன் ஆகிய மூன்று மூர்த்திகள், பலமூர்த்தியாகி—பல வடிவங்களாய், ஐந்து பூதமாய்—நிலம், நீர், தீ, காற்று ஆகாசமுமாய், இரண்டு சுடராகி—சூரிய சந்திரர் இருவராய், அருவாகி—உருவமற்ற நிலையாகி, நாகமேறி—ஆதிசேஷனாகிய பாம்பின்மீது அமர்ந்து, நடுக்கடலுள்—பாற்கடலின் நடுவில், துயின்ற—நித்திரைகொண்ட , நாராயணனே—ஸ்ரீமன் நாரா

யனே, உன் ஆகம் முற்றும் அகத்து அடக்கி—உன்னுடைய உருவம் முழுவதையும் என் உள்ளத்தில் நிறுத்தி, ஆவி—என்னுடைய பிராணன், அல்லல் மாய்த்தது—பிறவித்துன்பங்களை ஒழித்தது.

உலகங்களுக்கெல்லாம் ஆதிமூலமாக உள்ளவன் ஸ்ரீமன் நாராயணன் ஒருவனே. ஆதலால் அவன் ஏகமூர்த்தியாவன். பிரமனும் சிவனும் தன்னுடைய இரு அம்சங்களே. ஆதலால் அவனே இருமூர்த்தி ஆவன். அவன் அரியாகக் காத்தல் கடவுளாகவும் சிவன் அழிக்கும் கடவுளாகவும் பிரமன் படைக்கும் கடவுளாகவும் ஆக மூன்று மூர்த்திகளாகத் திகழ்கின்றான். அவனே எல்லா தெய்வ வடிவங்களாய் இருப்பதால் பலமூர்த்தியாக விளங்குகிறான். அவனே நிலம், நீர், தீ, காற்று, வெளி ஆகவும் சூரிய சந்திரர்களாகவும் உருவமில்லாதவனாகவும் இருக்கிறான். அவனே பாற்கடலின் நடுவில் பாம்பணையின்மீது பள்ளிகொண்டு யோகநித்திரை செய்கிறவன். அப்படிப்பட்ட ஸ்ரீமன் நாராயணா உன்னுடைய உருவத்தை என் நெஞ்சில் நிறுத்தி என்னுடைய தொல்லைகளை எல்லாம் தீர்த்துக்கொண்டேன்.

நம் எல்லோருக்கும் அவ்வாறே அருள்புரிவான் அவன். நாமும் அவனைச் சிந்தையில் கொள்ளவேண்டும் என்றவாறு, பாசுரம் பாடிப்பாடி அவனை மனதில் நிறுத்தல் உபாயமாகும்.

4—3—4

மாய்த்தலெண்ணிவாய்முலைதந்த மாயப்பேயுயிர்
மாய்த்த ஆயமாயனே வாமனனேமாதவா
பூத்தண்மாலைகொண்டு
உன்னைப்போதால்வணங்கேனேலும் நின்
பூத்தண்மாலைநெடுமுடிக்குப் புனையும்கண்ணியெனதுயிரே. 4

மாய்த்தல் எண்ணி—கொல்ல நினைத்து, வாய்முலை தந்த—பால் உண்ணும்படி முலையை வாயில் வைத்த, மாயப் பேய் உயிர் மாய்த்த—மாய உருவம்கொண்ட பேயாகிய பூதகியின் உயிரைத் தொலைத்த, ஆயமாயனே!—ஆயர்குலத்து மாயனான கண்ணபிரானே! வாமனனே! மாதவா! பூத்தண் மாலைகொண்டு உன்னை—பூக்களால் குளிர்ந்த மாலைகொண்டு உன்னை, போதால் வணங்கேனேலும்—அந்திகாலைப்பொழுதில் வணங்காதுபோனாலும், நின்பூந்தண்மாலை நெடுமுடிக்கு—

அழகிய மாலையுடைய உன்னுடைய உயர்ந்த முடிக்கு, புனையும் கண்ணி எனது உயிரே—சூட்டும் மாலை என்னுடைய பிராணனே.

வஞ்சகமாக உன்னைக்கொல்லவந்த பூதகியை வஞ்சகமாகவே கொன்ற ஆயர்குலத்துக் கண்ணபிரானே! வாமனனே! மாதவா! நேரத்துக்கு நேரம் இனிய பூமாலைகளைக்கொண்டு உன்னை வணங்காது போனாலும் பூக்களால் ஆகிய மாலையையுடைய உன் சென்னிக்கு என் உயிராகிய மாலையையே அணிவிக்கின்றேன். மாலை மாத்திரம் என்ன? என் உயிரையே உனக்கு அளிக்கிறேன் எ—று.

4—3—5

கண்ணியெனதுயிர் காதல்கனகச்சோதிமுடிமுதலா
எண்ணில்பல்கலன்களும் ஏலுமாடையும்அஃதே
நண்ணிமூவுலகும் நவிற்றும்கீர்த்தியும்அஃதே
கண்ணனெம்பிரானெம்மான் காலசக்கரத்தானுக்கே. 5

கண்ணன், எம்பிரான் எம்மான் காலச்சக்கரத்தானுக்கு ஏ—ஸ்ரீகண்ணபிரானும் எம் தேவனும் எம்பெருமானுமான காலச்சக்கரமாக உள்ளவனுக்கு, கண்ணி எனது உயிர்—மாலை என்னுடைய பிராணனே, காதல் கனகச்சோதி—என்னுடைய அன்பு (இலக்குமியின்) பொன் ஒளியாகும், முடிமுதலா எண்ணில் பல்கலன்களும்—கிரீடம் முதலாகவுள்ள கணக்கற்ற பலவாகிய ஆபரணங்களும், ஏலும்—பொருந்திய, ஆடையும்—உடுத்திருக்கும் உடையும், அஃதே—அந்த அன்பே, நண்ணி மூவுலகும் நவிற்றும் கீர்த்தியும் அஃதே—விரும்பி மூன்று உலகத்தவர்களும் பாடும் புகழும் அந்த அன்பே.

எம்பெருமானுக்கு மாலையாக என் உயிரையே அளிப்பன். என்னுடைய அன்பையே அவனுக்குக் கிரீடமாகச் சூட்டி ஆபரணங்களும் ஆடையுமாக அணிவித்து இலக்குமியின் பொன் ஒளியாகவும் திகழச் செய்வன். மூவுலகங்களும் எம்பெருமானின் பெருமைகளைப் பாடித்துதித்து அலங்கரிப்பது அன்பினுல்தான். எ—று.

ஆடை ஆபரணங்கள் அணிவிப்பதே அவனுக்குப் பெருமையன்று. அன்பைக்கொண்டு அவனை அலங்கரிக்க வேண்டும் எ—று.

4—3—6

காலசக்கரத்தொடு வெண்சங்கம்கையேந்தினாய்
ஞாலமுற்றுமுண்டுமிழ்ந்த நாராயணனேயென்றென்று
ஓலமிட்டுநானழைத்தால் ஒன்றும்வாராயாகிலும்
கோலமாமென்சென்னிக்கு உன்கமலமன்னகுரைகழலே. 6

காலச்சக்கரத்தொடு வெண்சங்கம் கைஏந்தினாய்—காலமாகிய சக்கரத்தையும் வெண்ணிறச் சங்கையும் இரு கைகளில் ஏந்திநின்றாய், ஞாலம் முற்றும் உண்டுஉமிழ்ந்த நாராயணனே என்று என்று—உலகங்கள் யாவற்றையும் விழுங்கி வெளிப்படுத்திய நாராயணாஎன்று என்றே, ஓலமிட்டு நான் அழைத்தால்—ஓ! என்று உரக்க நான் கூப்பிட்டால், ஒன்றும் வாராயாகிலும்—சற்றும் வரமாட்டாய் ஆகிலும், கோலம் ஆம் என் சென்னிக்கு—என் சிரசிற்கு அழகாவது, உன் கமலம் அன்ன குரைகழலே—தாமரை போன்றனவும் ஒலிக்கின்ற கழல்களை உடையவனுமான உன் திருவடிகளே.

சங்குசக்கரங்களைக் கைகளில் ஏந்தி நின்றவனே! உலகங்கள் யாவற்றையும் உண்டு வெளிப்படுத்திய ஏ நாராயணா என்று நான் உரக்கக் கூப்பிட்டால் நீ ஒன்றும் வரமாட்டாய். ஆனாலும் என் சென்னிக்கு (தலைக்கு) அழகாவது வீரக்கழல்களோடு கூடிய தாமரைபோன்ற உன் திருவடிகளே.

4—3—7

குரைகழல்கள்நீட்டி மண்கொண்டகோலவாமனா
குரைகழல்கைகூப்புவார்கள் கூடநின்றமாயனே
விரைகொள்பூவும்நீரும்கொண்டு ஏத்தமாட்டேனேலும் உன்
உரைகொள்சோதித்திருவுருவம் என்னதாவிமேலதே. 7

குரைகழல்கள் நீட்டி—ஒலிக்கும் கழல்களையுடைய திருவடிகளைப் பெரியவையாகப் பரப்பி, மண்கொண்ட கோல வாமனா—பூமியையும் விண்ணையும் அளந்துகொண்ட அழகிய வாமன மூர்த்தியே! குரைகழல்கள் கைகூப்புவார் கூடநின்ற மாயனே—கைகளால் அஞ்சலி செய்வார்க்கு ஒலிக்கின்ற கழல்களையுடைய திருவடிகளை அடையுமாறு பொருந்திய மாயவனே! விரைகொள் பூவும் நீரும் கொண்டு— மணமுள்ள மலர்களையும் தீர்த்தமும் கொண்டு, ஏத்தமாட்டேனேலும்—தொழ முடியாதவனாயினும், உன் உரைகொள் சோதித்திரு உருவம்

—பக்தர்களால் ஏத்தப்பெறும் புகழ்மாலைகள் கொள்ளத்தக்க அழகிய ஒளி உருவம், என்னது ஆவி மேலது ஏ—என்னுடைய ஆவிக்கு ஆவியாக உள்ளது. ஏ—அசை.

அழகுமிக்க வாமன மூர்த்தியே! உன் திருவடிகளைப் பெரியவையாக்கி மூவுலகங்களையும் அளந்துகொண்டாய். கைகூப்பி உன்னை வணங்குகிறவர்கள் அத்திருவடிகளைச்சேரும் படியான தன்மையையும் கொண்டவனாய் இருக்கின்றாய். இது உன் மாயமே. வாசனையுள்ள பூவும் நீரும் கொண்டு உன்னை நான் துதிக்க முடியாதவனாயினும் உன் புகழ்மிக்க அழகிய சோதிவுருவம் என்னுடைய ஆவிக்கு ஆவியாகவுள்ளது.

வாமனப்பெருமானே! உன் திருவடிகளால் மூவுலகை யும் அளக்கும்படியாக அவ்வளவு பெரியவை ஆக்கினாய். ஆனால் ஒரு அஞ்சலி மாத்திரத்தான் உன்னை வணங்குவார்க்கு அத்திருவடிகளையே தருகின்ற மாயம் உடையவனாய் இருக் கின்றாய். இது உன் மகிமையே. அவ்வாறுள்ள உன்னை நான் பூவும் நீரும் கொண்டு ஏத்த முடியாதவனாய் இருக்கின்றேன். இருந்தாலும் புகழ்மிக்க உன் சோதி உருவம் என்னுடைய அகத்ததாய் ஆவிக்கு ஆவியாக உள்ளது.

நான் வெளிப்புறமாகக் கைங்கரியம் செய்யவில்லை யாயினும் நான் உன்னை பிராணனுக்குப் பிராணனாக உள்ளே வைத்து சிந்தித்தவண்ணமாய் இருக்கிறேன் என்றவாறு.

எம்பெருமானை உயிரினும் உயிராகக் கருதி வணங்க வேண்டும். எ—று.

4—3—8

என்னதாவிமேலையாய் ஏர்கொளேழுலகமும்
துன்னிமுற்றுமாகிநின்ற சோதிஞானமூர்த்தியாய்
உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும்
இன்னவண்ணமேநின்றாய் என்னுரைக்கவல்லேனே. 8

என்னது ஆவிமேலையாய்—என்னுடைய ஆவிக்கும் ஆவியாக இருக்கின்ற பெருமானே! ஏர்கொள் ஏழு உலகமும் —அழகுடைய ஏழுலகங்களையும், துன்னி முற்றுமாகி நின்ற —நெருங்கி எல்லாமாகி நின்ற, சோதி ஞானமூர்த்தியாய்— ஞானஒளிவடிவினனே!! உன்னது என்னது ஆவியும்—உன் னுடையது என்னுடைய ஆவி, என்னது உன்னது ஆவியும்—

என்னுடையது உன்னுடைய ஆவி, இன்ன வண்ணமே நின்றாய் —இவ்விதம் வித்தியாசம் இல்லாமல் ஆய்விட்டாய், என்னுரைக்கவல்லேனே—நான் என்ன சொல்வேன், சொல்ல எனக்கு என்ன வல்லமை இருக்கிறது?

என்னுடைய உயிருக்கு உயிரானவனே! அழகுமிக்க ஏழு உலகங்களையும் நெருங்கப் புகுந்து முழுவதுமாக வியாபித்து நின்ற ஞானஒளிவடிவினனே! என்னுடைய ஆத்மா உன்னுடையது உன்னுடைய ஆத்மா என்னுடையது. இவ்வாறே அமைந்து விட்டாய். நான் இதைப்பற்றி என்ன சொல்வேன். அது எனக்கு எட்டாது என்றபடி.

எம்பெருமானே! ஞானவடிவினனாய் எங்கும் பிரகாசமாய் ஏழுலகங்களிலும் வியாபித்து நின்றவனாய் இருக்கின்றாய். ஆக நீ என்னுடைய ஆத்மாவாகவும் இருக்கின்றாய். ஆதலால் என்னுடைய ஆத்மா உன்னுடையது உன்னுடைய ஆத்மா என்னுடையது. இம்மாதிரியே எல்லாருடைய ஆத்மாவாகவும் நின்றாய். அவர்களுக்கு எல்லாம் நீ பரமாத்மாவாகவும் அமைந்து நின்றாய். இதைப்பற்றி நான் என்ன சொல்வேன். சொல்ல எனக்கு வல்லமை ஏது? இது உன்னுடைய மாயா லீலையன்றோ! என்று ஆழ்வார் பெருமானார் ஆத்மா பரமாத்மா சம்பந்தத்தை ஈண்டு உரைத்தவாறு காண்க.

4—3—9

உரைக்கவல்லேனல்லேன் உன்னுலப்பில்கீர்த்திவெள்ளத்தின்
கரைக்கணென்றுசெல்வன்நான் காதல்மையலேறினேன்
புரைப்பிலாதபரம்பரனே பொய்யிலாதபரஞ்சுடரே
இரைத்துநல்லமேன்மக்களேத்த யானுமேத்தினேன். 9

உரைக்கவல்லேன் அல்லேன்—சொல்லமுடியாதவனாய் இருக்கிறேன், உன் உலப்பில்—உன்னுடைய அளவில்லாத, கீர்த்தி வெள்ளத்தின் கரைக்கண்—புகழாகிய வெள்ளப் பெருக்கின் கரைகளின் எல்லைகளை, என்று செல்வன் நான்,—என்று அகல்வன் நான், காதல்மையல் ஏறினேன்—பக்தி மயக்கம் கொண்டேன், புரைப்பு இலாத பரம்பரனே—ஒப்பு இல்லாத உயர்ந்த தேவனே, பொய் இலாத பரஞ்சுடரே—அழியாத பரஞ்சோதியே, இரைத்து—உரக்க, நல்ல மேன்மக்கள் ஏத்த—உயர்ந்தோர் துதிக்க, யானும் ஏத்தினேன்—நானும் துதிக்கின்றேன்.

நல்ல மேன்மக்கள்—நன்மையால் மிக்க நான் மறை யாளர்கள், ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள், பக்தர்கள்.

ஒப்பில்லாத தேவனே! அழிவில்லாத பரஞ்சோதியே உன்பால் காதல் மயக்கம் கொண்டேன். காதல்கொண்டு உன்னுடைய முடிவில்லாத புகழாகிய வெள்ளத்தின் கரைகளின் எல்லேகளை உரைக்க முடியாதவனாய் விலகிச் செல்வேன். நல்லோர்களும் பெரியோர்களும் உன்னை இரைந்து துதிக்கிறார்கள். அதைக்கண்டு நானும் துதிக்கிறேன். எ—று.

நல்ல மேன்மக்கள் என்போர் எம்பெருமானின் அருளுக்குப் பாத்திரமானவர்களே. முக்கியமாக ஆழ்வார்களே எம்பெருமானை உரக்கப்பாடிப் பறையடித்தவர்கள். அன்னை ஆண்டாள் வையத்து வாழ்வீர்காள் என்று உரக்கக்கூவி நாராயணனே நமக்கே பறைதருவான் என்று இரைந்து கூறுகிறார்.

ஆக ஆழ்வார் பெருமானார் அவ்வாறு செய்கின்றார் என்றால் நாமும் அந்த தேவதேவனை பரஞ்சோதியை உரக்கக் கூவவே.

4—3—10

யானுமேத்தி ஏழுலகும்முற்றுமேத்தி பின்னையும்
தானுமேத்திலும் தன்னையேத்தவேத்தவெங்கெய்தும்
தேனும்பாலும்கன்னலும் அமுதுமாகித்தித்திப்ப
யானுமெம்பிரானையேயேத்தினேன் யானுய்வானே. 10

யானும் ஏத்தி—அடியேன் புகழ, ஏழுலகும் முற்றும் ஏத்தி—உலகங்கள் எல்லாம் புகழ, பின்னையும்—தவிர, தானும் ஏத்திலும்—எம்பெருமான் தானே தன்னைப் புகழிலும், தன்னை ஏத்த ஏத்த—எம்பெருமானைப் புகழப் புகழ, எங்கு எய்தும்— எங்குபோய் முடியும், புகழ்ந்து முடியாது என்றபடி. தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்திப்ப—தேனும் பாலும் கரும்பும் அமிர்தமும்போல் இனிப்பதால், யானும் எம்பிரானையே துதித்தேன். யான் உய்வான்—அடியேன் வாழும் பொருட்டு.

எம்பெருமானை யார்தான் ஏத்தினாலும் உலகங்கள் எல்லாம் சேர்ந்து ஏத்தினாலும் எம்பெருமானே தன்னைத்தான் ஏத்திக்கொண்டாலும் தன்னை ஏத்த ஏத்த ஏத்தி முடியுமா? முடியாது என்றபடி.

ஏத்த ஏத்த அவன் தேனும் பாலும் கரும்பும் அமிர் தமும்போல் தித்திப்பதாலும் நான் வாழ்வு பெறுவதற்காகவும் அவனையே ஏத்தினேன்.

அவன் எல்லையில்லாத கீர்த்தியுடையவன்—வாக்கா லும் மனத்தாலும் எட்ட முடியாதவன். எனினும் அவன் கீர்த்திகள் கீர்த்தனம் செய்யச் செய்ய பேரின்பம் அளிப்பன. நமக்குப் பிறவித்துயர் அறுத்து வாழ்வும் அளிக்கும் என்ற வாறு.

4—3—11

உய்வுபாயம்மற்றின்மைதேறிக் கண்ணனொண்கழல்கள்மேல்
செய்யதாமரைப்பழனத் தென்னன்குருகூர்ச்சடகோபன்
பொய்யில்பாடலாயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள்
வையம்மன்னிவீற்றிருந்து விண்ணுமாள்வர்மண்ணூடே 11

உய் உபாயம்—பிழைக்கும் வழி, மற்று இன்மை தேறி —வேறு இல்லை என்பது தெளிந்து, கண்ணன் ஒண் கழல்கள் மேல் —ஸ்ரீ கண்ணபிரானின் ஒளிபொருந்திய கழல்களை யுடைய திருவடிகளின் மேல், செய்ய தாமரை பழனத்தென் னன்—அழகிய தாமரைகள் வளரும் நீர்நிலைகளையுடைய பாண் டிய நாட்டு, குருகூர்ச்சடகோபன், பொய்யில் பாடல் ஆயிரத் துள்—பொய்மை கலவாத பாசுரங்கள் ஆயிரத்துள், இவையும் பத்தும் வல்லார்கள்—இப்பத்துப் பாசுரங்களையும் பயின்று நன்மை பயக்கும்படி பயன்படுத்தக்கூடியவர்கள், வையம் மன்னி வீற்றிருந்து—இந்நிலவுலகில் புகழுடன் நிலைத்துநின்று, விண்ணும் ஆள்வர் மண் ஊடே—இந்த மண்ணுலகத்திலேயே வானுலகையும் ஆள்வர்.

இந்தப் பத்துப்பாசுரங்களும் படித்து பக்தியுடனும் சிரத்தையுடனும் பாட இந்நிலவுலகில் புகழுடன் நிலைத்து நின்று தேவர்களைப்போல சிறப்புப் பெறுவர் எ—று.

மண்ணையிருந்துதுழாவி

4—4—1

மண்ணையிருந்துதுழாவி வாமனன்மண்ணிதுவென்னும்
விண்ணைத்தொழுதவன்மேவு வைகுந்தமென்றுகைகாட்டும்
கண்ணையுண்ணீர்மல்கநின்று கடல்வண்ணனென்னுமன்னேஎன்
பெண்ணைப்பெருமயல்செய்தாற்கு
என்செய்கேன்பெய்வளையீரே 1

மண்ணை—பூமியை, இருந்து—அமர்ந்து, துழாவி—(கைகளால் தடவிப்பார்த்துத்) தேடி, வாமனன் மண் இது என்னும்—வாமனமூர்த்தி (அளந்த) பூமி இது என்று சொல்லும், விண்ணைத்தொழுது—ஆகாசத்தைப் (பார்த்து)வணங்கி, அவன்—எம்பெருமான், மேவுவைகுந்தம் என்னும்—விரும்பும் வைகுந்தம் என்று, கைகாட்டும்—கைநீட்டிக் காட்டுவாள், கண்ணை உண் நீர்மல்க நின்று—கண்களை மூடும்படியாக நீர் பெருக நின்று, கடல்வண்ணன் என்னும்—கடல் நிறத்தவன் என்றுகூறும், என் பெண்ணைப் பெருமயல் செய்தாற்கு—என் மகளுக்கு மயக்கம் உண்டாகும்படி செய்தவனை, என்செய் கேன்—என்ன தூற்றுவதா? ஆற்றுவதா? பெய்வளையீரே—தொடுக்கப்பட்ட வளையல்களையுடைய தாய்மார்களே! மன்னே—அசைச்சொல்.

எம்பெருமானிடம் காதல் மயக்கம் கொண்ட மங்கை நல்லாளின் உள் உணர்வு பொங்கி மெய்ப்பாடாக வெளியாகிறது. பூமியைத் தொட்டுக்காட்டி இது வாமனன் மண் என்கிருள். ஆகாசத்தைப் பார்த்துத் தொழுது கைகாட்டி பெருமான் உறையும் வைகுந்தம் என்கிருள். கண்களில் நீர் பெருக்கிக் கடல் வண்ணன் என்கிருள். உருக்கமான காட்சி. உருகாதாரையும் உருக வைக்கின்றது, இதனுல் எம்பெருமானின் மாயா லீலையும் உறையும் இடமும் அவன் வண்ணமும் காட்டி நமக்கு ஞானதீபம் ஏற்றி அவளோடு எம் பெருமான் பால் அன்பும் சுரக்கச் செய்கிருர் தாயாக நின்ற ஆழ்வார் பெருமானுர்.

4—4—2

பெய்வளைக்கைகளைக்கூப்பிப் பிரான்கிடக்கும்கடலென்னும்
செய்யதோர்ஞாயிற்றைக்காட்டிச் சிரீதரன்மூர்த்தியீதென்னும்
நையும்கண்ணீர்மல்கநின்று நாரணனென்னுமன்னே என்
தெய்வவுருவிற்சிறுமான் செய்கின்றதொன்றறியேனே 2

பெய்வளைக் கைகளைக் கூப்பி—நீர் கொள்வதற்குச் சேர்ப்பதுபோல் வளையல்களை அணிந்த கைகளைக் கூப்பி பிரான் கிடக்கும் கடல் என்னும்—எம்பெருமான் பள்ளி கொள்ளும் திருப்பாற்கடல் என்பாள், செய்யதோர் ஞாயிற் றைக்காட்டி—அழகியதோர் சூரியனைக்காட்டி, சிரீதரன் மூர்த்தி ஈது என்னும்—இதுதான் இலட்சுமி நாயகனுன ஸ்ரீமன் நாராயணனின் வடிவம் என்பாள், நையும்—கலங்கும், கண்ணீர் மல்க நின்று—கண்களில் நீர் பெருக நின்று, நாரா யணன் என்னும்—நாராயணு என்பாள், என் தெய்வம் உரு வில் சிறுமான்—தெய்வ வடிவம் கொண்டவளும் மான்குட்டி போல் அழகுடையவளுமான என் மகள், செய்கின்றது—செய் கின்ற செய்கைகளைப் பற்றி, ஒன்று அறியேன்—ஒன்றும் அறி யாதவளாய் இருக்கிறேனே என்று கலங்குகிருள் தாயானவள்.

செய்யதுஓர்—செந்நிறமான ஒரு என்றும் பொருள் கொள்ளலாம்.

இளமையும் அழகும் மிக்க தன் செல்வமகள் எம்பெரு மான் நினைவே மிக்கு எம்பெருமான் பரந்தாமனுகத் துயில் கொள்ளும் பாற்கடல் இது என்று கைகள் கூப்பிக் காட்டு கிருள், பிரகாசிக்கின்ற சூரியனைக் காட்டி இதுஇலட்சுமீ நாய கனுன ஸ்ரீமன் நாராயணனின் வடிவமே என்று காட்டுகிருள். பின்னர் கலங்குகிருள் கண்கள் நீர் பெருக்கெடுக்க நாராயணு என்பாள் என்று பெற்றதாயானவள் கலங்குகிருள்.

எம்பெருமான் வியூகமாகப் பாற்கடலில் பள்ளி கொண்ட நினைவும் பிரகாசிக்கின்ற சூரியனில் ஸ்ரீமன் நாரா யணனைக் காண்பதும் கண்ணீர் விட்டுக் கலங்கி நாராயணு என்று கூவுவதுமான தெய்வ நிலையை ஆழ்வார் பெருமானுர் தாயாக நமக்குக் காட்டுகிருர்.

4—4—3

அறியும்செந்தீயைத்தழுவி அச்சுதனென்னும்மெய்வேவாள்
எறியும்தண்காற்றைத்தழுவி என்னுடைக்கோவிந்தனென்னும்
வெறிகொள்துழாய்மலர்நாறும் வினையுடையாட்டியேன்பெற்ற
செறிவளைமுன்கைச்சிறுமான்
செய்கின்றதென்கண்ணுக்கொன்றே. 3

அறியும் செந்தீயைத் தழுவி அச்சுதன் என்னும் மெய் வேவாள்—எரிகின்ற நெருப்பு எனத்தெரிந்தும் கட்டி அணைத்து

அச்சுதா! என்பாள் உடல் எரியப்பெருள், எறியும் தண்காற்றைத் தழுவி என்னுடைக்கோவிந்தன் என்னும்——வீசுகின்ற குளிர்ந்த காற்றை கட்டித்தழுவி என்னுடைய கோவிந்தா! என்பாள், வெறிகொள்துழாய் மலர் நாறும்—உடனே அக்காற்று சிறந்த திருத்துழாயின் மணம்வீசும், வினையுடையாட்டியேன் பெற்ற—பாவம்செய்தவளாகிய நான்பெற்ற, செறிவளை முன்கைச்சிறுமான்—முன்கை நிறைய வளையல்களை அணிந்த மான் போன்றவளாகிய மகள். செய்கின்றது என் கண்ணுக்கு ஒன்றுஏ—செய்வது என்கண்களுக்கு ஒப்பற்றதே.

பக்தி முற்றிய பாவை நெருப்பைத் தழுவி அச்சுதா என்று சொல்ல நெருப்பு சுடவில்லை. காற்றைத் தழுவி கோவிந்தா என்று சொல்ல காற்று துழாயின் நறுமணம்கொள்கிறது. இதனுல் ஆழ்வார் பெருமானுர் பக்தி முற்றியவர்களின் மகிமையும் அவர்கள் நவிலும் நாமங்களின் சக்தி மகிமையையும் தாய் நிலையில் நின்று மகள் வாயிலாக உணர்த்துகிருர். அதே நாமங்களை பக்தி இல்லாதவர்கள் சொன்னுலும் பலன் உண்டு பாவங்களை நாசம் செய்யும் முக்திக்கு வழி செய்யும். மேற்கூரியசக்தியும் வாய்க்கும்.

துவாரகாபுரிவாசனுன ஸ்ரீ கண்ணனின் நாமம் நவில திரௌபதிக்கு புடவை சுரக்கவில்லையா? குருவாயூரில் பிராப்த கர்மம் என்று கைவிடப்பட்டு பல ஆண்டுகள் உணவு உட்கொள்ளாது ஏங்கிய ஓர் பாவிக்கு குரூரம்மா என்பவள் கோவிந்தா கோவிந்தா என்று உணவு அளிக்க உணவு இறங்கிற்றே!

4—4—4

ஒன்றியதிங்களைக்காட்டி ஒளிமணிவண்ணனேயென்னும்
நின்றகுன்றத்தினைநோக்கி நெடுமாலேவாவென்றுகூவும்
நன்றுபெய்யும்மழைகாணில் நாரணன்வந்தானென்றுலும்
என்றினமையல்கள்செய்தான் என்னுடைக்கோமளத்தையே. 4

ஒன்றிய திங்களைக் காட்டி—பூரண சந்திரனைக் காட்டி, ஒளி மணிவண்ணனே என்னும்—ஒளியையுடைய மணிவண்ணப் பெருமானே என்பாள், நின்ற குன்றத்தினை நோக்கி—நிற்கின்ற மலையைப் பார்த்து, நெடுமாலே! வா என்று கூவும்—திருமாலே வா என்று அழைப்பாள், நன்று பெய்யும் மழை காணில்—நன்ருகப் பெய்கின்ற மழையைப்பார்த்தால், நாரணன் வந்தான், என்று ஆலும்—என்று கூவுவாள், என்று இனமையல்கள் செய்தான்—என்பனபோன்ற மயக்கங்களைச் செய்தான், என்கோமளத்தைஏ—என் மகளை ஏ—அசை.

எம்பெருமானிடம் கொண்ட பக்தி மேலோங்கி காண்கின்ற காட்சிகளில் எல்லாம் எம்பெருமானைக் காணும் நிலை கொண்டாள். முழுமதியை ஒளிமயமான எம்பெருமானின் வடிவமாகக் காண்கிறாள். நிற்கின்ற குன்றை நெடுமாலாகக் காண்கிறாள். கொட்டும் மழையை ஸ்ரீமன் நாராயணன் வந்ததாக உணர்கிறாள் பக்தி முற்றிய மகள்.

இதனால் பிரபஞ்சமே எம்பெருமானின் ஸ்வரூபம் என்பதை ஆழ்வார் மகள் வாயிலாக உணர்த்துகிறார்.

4—4—5

கோமளவான்கன்றைப்புல்கிக் கோவிந்தன்மேய்த்தனவென்னும்
போமிளநாகத்தின்பின்போய் அவன்கிடக்கையீதென்னும்
ஆமளவொன்றுமறியேன் அருவினையாட்டியேன்பெற்ற
கோமளவல்லியைமாயோன் மால்செய்துசெய்கின்றகூத்தே 5

கோமள—அழகிய, ஆன்கன்றைப் புல்கி—பசுவின் கன்றை அணைத்து, கோவிந்தன் மேய்த்தன இவை என்னும்—ஆயர்பாடி கோபாலன் மேய்த்த கன்றுகள் இவை என்பாள், போம் இளநாகத்தின் பின்போய்—போய்க்கொண்டிருக்கிற சிறுபாம்பின் பின்போய், அவன் கிடக்கை ஈது என்னும்—எம்பெருமானின் ஆதிசேஷனாகிய படுக்கை இது என்பாள், ஆம் அளவு ஒன்றும் அறியேன்—இவ்வளதுவுதான் இவளுடைய செயல்கள் என்று ஒன்றும் அறியேன், அருவினையாட்டியேன்—கொடிய பாவியாகிய நான், பெற்ற—பெற்றெடுத்த, கோமளவல்லியை—அழகிய கொடிபோன்ற பெண்ணை, மாயோன்—மாயவனாகிய திருமால், மால் செய்து—மயக்கம் செய்து, செய்கின்ற கூத்தே—விளையாடுகின்ற விளையாட்டை என்னென்பது!

கோமளவல்லியான மகள் கிருஷ்ணப்பிரேமை கொண்டவளாய் அழகிய பசுவின் கன்றை ஸ்ரீ கண்ணன் மேய்த்த கன்று என்று அணைக்கின்றவளானாள், போகின்ற சிறுபாம்பைக்கண்டு அவனுடைய படுக்கை என்று அதன்பின்னே போகலுற்றாள். இவ்விதமாக அவளுடைய செயல்கள் கிருஷ்ணப்பிரேமை கொண்டவையாயின. இன்னும் எவ்வளவோ செயல்கள். அளவிடமுடியாதன. இது மாயோனாகிய மாலவன் செய்கின்ற மாயக் கூத்துகள் என்று தாய் அறிந்தவளாய் அவற்றைப் பற்றி என்ன சொல்வது என்று மயங்குகிறாள்.

4—4—6

கூத்தர்குடமெடுத்தாடில் கோவிந்தனுமெனுவோடும்
வாய்த்தகுழலோசைகேட்கில் மாயவனென்றுமையாக்கும்
ஆய்ச்சியர்வெண்ணெய்கள்காணில்
அவனுண்டவெண்ணெயீதென்னும்
பேய்ச்சிமுலைசுவைத்தாற்கு என்பெண்கொடியேறியபித்தே 6

கூத்தர் குடமெடுத்து ஆடில் கோவிந்தனும் என ஓடும்—கூத்தாடிகள் தங்கள் தொழிலுக்காக குடமெடுத்து ஆடினுல் ஸ்ரீ கண்ணன்தான் ஆடுகிருன் என்று ஓடுவாள், வாய்த்தகுழல் ஓசை கேட்கில்—நல்ல புல்லாங்குழலின் இசை செவிகளில் பட்டால், மாயவன் என்று மையாக்கும்—ஸ்ரீ கண்ணன்தான் என்று மயங்குவாள். ஆய்ச்சியர் வெண்ணெய்கள் காணில் அவனுண்ட வெண்ணெய் ஈது என்னும்—இடைப்பெண்களின் வெண்ணெயைக் கண்டால் ஸ்ரீகண்ணன் உண்ட வெண்ணெய் இது என்பாள், பேய்ச்சிமுலை சுவைத்தாற்கு—பூதகியின் பாலுண்ட ஸ்ரீ கண்ணன்மேல், என் பெண்கொடி—கொடி போன்ற என் மகள், ஏறிய பித்தே—கொண்ட மயக்கத்தை என்ன சொல்வது!

எல்லாம் கண்ணன் என்ற நிலையுடையவள் என் பெண். இது கண்ணன்பால் கொண்ட மயக்கமே என்கிருள் தாய்.

4—4—7

ஏறியபித்திஞெடு எல்லாவுலகுகண்ணன்படைப்பென்னும்
நீறுசெவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்ருேடும்
நாறுதுழாய்மலர்காணில் நாரணன்கண்ணியீதென்னும்
தேறியும்தேருதும்மாயோன் திறத்தனளேயித்திருவே 7

(மகளுக்கு) உண்டாகிய மயக்கத்தால் எல்லா உலகங்களும் கண்ணன் படைத்தவை என்பாள், சாந்தாயினும் திருமண்ணுயினும் (செங்குத்தாக) செம்மையாக இட்டிருக்கக் கண்டால் திருமாலின் பக்தர்கள் என்று (அவர்களை நோக்கி) ஓடுவாள், மணம்கமழும் திருத்துழாய் கண்டால் ஸ்ரீமன் நாராயணனின் மாலை இது என்பாள், தெளிந்தும் தெளியாதும் திருமாலின் வசமானவளே இந்தச் செல்வமகள்.

தேறியும்—தெளிந்தும், நீறு—குழைக்கப்பட்டது கண்ணி—மாலை, திரு—செல்வம், செல்வமகள்(ஆகுபெயர்), திறத்தனள்—வசமானவள்.

இதனால் இப்பெண் தெளிந்து இவ்வாறு நடந்துகொண்டாள் என்றாலும் தெளிவில்லாது இப்படி நடந்துகொண்டாள் என்றாலும் எவ்வாறாயினும் இவள் திருமாலுடன் இணைந்து விட்டவளே ஆவள் எ—று. இவள் செல்வமகளே.

4—4—8

திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக்கண்டனேயென்னும்
உருவுடைவண்ணங்கள்காணில் உளகளந்தானென்றுதுள்ளும்
கருவுடைத்தேவில்களெல்லாம்
கடல்வண்ணன்கோயிலேயென்னும்
வெருவிலும்வீழ்விலுமோவாக் கண்ணன்கழல்கள்விரும்புமே 8

திருவுடை மன்னரைக் காணில்—இலட்சுமீகரம் உடைய அரசரைக் கண்டால், திருமாலைக் கண்டேனே என்னும்—எம்பெருமான் திருமாலைக் கண்டேன் என்பாள். உருவுடைய வண்ணங்கள் காணில்—எம்பெருமானின் உருவம் போன்ற கோலங்கள் கண்டால், உலகு அளந்தான் என்று துள்ளும்—உலகம் அளந்த வாமன மூர்த்தி என்று குதிப்பாள், கருவுடை—கறுப்பாக உட்புரமுடைய, தே இல்கள்—கோவில்களெல்லாம், கடல்வண்ணன் கோயிலே என்னும்—பெருமாள் கோயில்களே என்பாள், வெருவிலும்—வாய் உளறினாலும், வீழ்விலும்—தூக்கத்திலும், ஓவா—இடைவிடாது, கண்ணன் கழல்கள் விரும்புமே—ஸ்ரீ கண்ணபிரானின் திருவடிகளை விரும்புவாள்.

எம்பெருமானைப்போல தோன்றுவனவெல்லாம் திருமாலே என்றும் எப்பெருமானின் கோயில்கள்போலத் தோன்றும் வீடுகளும் எம்பெருமானின் கோவில்களே என்றும் இவ்வாறாக எல்லாம் கண்ணன் மயமாகக் காண்கின்றவளாய் வாய் தவறி உளறினாலும் தூங்கினாலும் கண்ணனையே விரும்புகிறாள் என்று உரைக்கிறாள் தாய்.

4—4—9

விரும்பிப்பகவரைக்காணில் வியலிடமுண்டானேயென்னும்
கரும்பெருமேகங்கள்காணில் கண்ணனென்றேறப்பறக்கும்
பெரும்புலவாநிரைகாணில் பிரானுளனென்றுபின்செல்லும்
அரும்பெறல்பெண்ணினைமாயோன் அலற்றியயர்ப்பிக்கின்றானே 9

விரும்பிப் பகவரைக் காணில்—பக்தரைக் கண்டால் விருப்பங்கொண்டு, வியல் இடம் உண்டானே என்னும்—அகன்ற இடமாகிய பூமியை உண்டபெருமானே என்பாள், கரும்பெரும் மேகங்கள் காணில்—கறுத்த பெரிய மேகங்கள் கண்டால், கண்ணன் என்று ஏறப் பறக்கும்—கண்ணபிரான் என்று குதித்துத் துள்ளுவாள், பெரும் புல ஆநிரை காணில்—பெரிய வெளிகளிலே பசுக்கூட்டங்களைக் கண்டால், பிரான் உளன் என்று பின்செல்லும்—கண்ணபிரான் அங்கே இருக்கிறான் என்று அவற்றின் பின் செல்வாள், அரும்பெறல்—பெறுதற்கரிய, பெண்ணினை—பெண்மகளை, மாயோன்—மாய வனாகிய திருமால், அலற்றி—ஆட்டுவித்து, அயர்ப்பிக்கின்றானே—சலித்துப் போகும்படி செய்கின்றானே.

ஆ—பசு, நிரை—கூட்டம்,

காண்கின்றனவற்றுள் எல்லாம் எம்பெருமானைக்காண லுற்ற பெண் மேலும் பக்திபொங்க தன் வசமின்றி அவை இருக்கும் இடம் நாடிச்செல்லும் துடிப்புக்கொண்டாள். பெறுதற்கரிய அப்படிப்பட்ட பெண்ணை எம்பெருமான் ஏற்றுக்கொள்ளாமல் அலைக்கழிக்கிறானே என்று இரக்கப்படுகிறார் ஆழ்வார் பெருமானார். நம்மையும் மனம் இரங்கும்படி செய்கிறார். இதனால் நாமும் ஆழ்வார் பெருமானுடன் செல்கின்ற வழி எல்லாம் சென்று காண்கின்ற எல்லாம் கண்டு உணர்கின்ற எல்லாம் உணர்ந்து மனம் கசிந்து பக்தியாம் அமிர்தத்தில் முங்கி எழும்படி செய்கிறார்.

அவர் திறம்தான் என்ன? நம்மையும் தெய்வ நிலைக்கு உயர்த்துகிறார். வேறு என்ன உடமை வேண்டும் நமக்கு!

4—4—10

அயர்க்கும்சுற்றும்பற்றிநோக்கும் அகலவேநீணோக்குக்கொள்ளும்
வியர்க்கும்மழைக்கண்துளும்ப வெவ்வுயிர்க்கொள்ளும்மெய்சோரும்
பெயர்த்தும்கண்ணாவென்றுபேசும் பெருமானேவாவென்றுகூவும்
மயல்பெருங்காதலென்பேதைக்கு என்செய்கேன்வல்வினையேனே 10

அயர்க்கும்—சலிப்பு(சோர்வு)க்கொள்வாள், சுற்றும்—அங்கும் இங்கும் திரிவாள், பற்றி நோக்கும்—ஏதாவது (தூணோ கல்லோ ஒன்றைப்) பார்த்தபடி இருப்பாள், அகலவே நீள் நோக்குக்கொள்ளும்—அதை விட்டவுடன் தூரத்தில் ஏதோ ஒன்றைப் பார்த்தபடி சிந்தித்தபடி நிற்பாள், வியர்க்கும்மழைக்கண் துளும்ப—கண்களில் நீர் துளித்து நிற்க வியர்த்தபடி இருப்பாள், வெவ்வுயிர்க்கொள்ளும்—பின்

பெருமூச்சுவிடுவாள், மெய்சோரும்—உடம்பு தளர்வுடையளாவாள், பெயர்த்தும்—மீண்டும், கண்ணா என்று பேசும்—கண்ணா என்று கண்ணனுடன் நேருக்குநேர் பேசுவதுபோல் பேசுவாள், பெருமானே வா என்று, கூவும்—அழைப்பாள், மயல்பெருங்காதல் என் பேதைக்கு—அறியாதவளான என் மகளுக்கு எம்பெருமானிடம் மயக்கும் தரும்படியான அளவு கடந்த பெரிய காதல், என்செய்கேன்—நான் என்ன செய்வது ஒன்றும்புரியவில்லை, வல்வினையேனே—நான் கொடியபாவியே ஆவள். இப்படிப்பட்ட ஒரு பெண்ணை வைத்துக்கொண்டு என்ன செய்வது! நான் என்ன பாவம் செய்தேனோ என்று தாயானவள் உள்ளம் குமுறுகிறாள்.

இவ்வாறு ஆழ்வார் பெருமானார் பக்தி மயக்கத்தில் ஆழ்ந்த பெரியதோர் காதலில் மாள்கும் ஓர் பெண்மணியை நமக்குத் தாய்நிலையில் நின்று காட்டி அங்கலாய்க்கும்படி செய்கிறார். அவளிடத்து எம்பெருமானைக் காணும்படி செய்கிறார். அவள் தன் மேனி நிலை அறியாள், தாயை அறியாள், சுற்றும் முற்றும் பாராள், எம்பெருமான் நிலையாகவே மாறி விட்டாள். அவளைக் காண்க என்று நம்மையும் எம்பெருமானையே நினைத்து மயங்கும்படி செய்கிறார். நம் வல்வினையையும் கரைக்கின்றார். அவர்தம் தாள்களில் நம் தலைகளை வைத்து வணங்கவேண்டும்.

4—4—11

வல்வினைதீர்க்கும்கண்ணனை வண்குருகூர்ச்சடகோபன்
சொல்வினையால்சொன்னபாடல் ஆயிரத்துள்ளிவைபத்தும்
நல்வினையென்றுகற்பார்கள் நலனிடைவைகுந்தம்நண்ணி
தொல்வினைதீரவெல்லாரும் தொழுதெழவிற்றிருப்பாரே 11

ஸ்ரீ கண்ணபிரானைப்பற்றி, வண்குருகூர்—சிறப்பு மிக்க குருகூரைச்சேர்ந்த, சடகோபன், சொல்வினையால்-சொற் செயலால், சொன்ன பாடல் ஆயிரத்துள் இவைபத்தும்—இந்தப் பத்துப் பாசுரங்களும் நல்வினை என்று கற்பார்கள்—நல்ல புண்ணியம் என்று படிக்கிறவர்கள், நலன் இடை வைகுந்தம் நண்ணி—நன்மைகளை உடைய திருமாலின் பரமபதம் சென்று, தொல்வினை தீர—பழைய வினைகளெல்லாம் தீர்ந்து, எல்லோரும் தொழுது எழ—மக்களும் தேவர்களும் எல்லாரும் வணங்கித் துதிக்கும்படியாக, வீற்றிருப்பாரே—அமர்ந்திருப்பார்கள் ஏ—அசைச்சொல்.

வீற்றிருந்தேழுலகும்

5—5—1

வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல்செல்ல, வீவில்சீர்
ஆற்றல்மிக்காளுமம்மானை வெம்மாபிளந்தான்தன்னை
போற்றியென்றேகைகளாரத் தொழுதுசொல்மாலைகள்
ஏற்றநோற்றேற்கு இனியென்னகுறையெழுமையுமே 1

வீற்று இருந்து—வைகுந்தத்தில் அமர்ந்து, ஏழுலகும் தனிக்கோல் செல்ல—ஏழு உலகங்களிலும் ஒப்பற்ற ஆணை நடக்க, வீவு இல் சீர்—அழியாத சிறப்புப் பொருந்திய, ஆற்றல் மிக்கு—வல்லமை கொண்டு, ஆளும் அம்மானை—ஆட்சிபுரிகின்ற தந்தையாகிய எம்பெருமானை, வெம்மா பிளந்தான் தன்னை—கொடிய குதிரையின் வாயைப் பிளந்தவனாகிய ஸ்ரீ கண்ணனை, போற்றி என்றே—வாழ்க வாழ்க என்றே, கைகள் ஆரத்தொழுது—கைகளால் பொருந்தத் தொழுது, சொல்மாலை ஏற்ற—பொருந்திய பாடல்களாகிய மாலைகளை, நோற்றேற்கு—புனைந்த எனக்கு, இனி என்னகுறை எழுமையும் ஏ—இனிமேல் ஏழு தலைமுறைக்கும் என்னகுறை இருக்கப்போகிறது. ஒரு குறையும் இல்லை என்றபடி.

நோற்றேற்கு—நோற்ற எனக்கு, கோல்—செங்கோல், ஆணை, அதிகாரம், மா—குதிரை வடிவில்வந்த கேசி என்னும் அசுரன்.

வைகுந்த பீடத்தில் அமர்ந்து ஏழு உலகங்களையும் ஆணை செல்லும்படியாக ஒப்பற்ற வல்லமை கொண்டு ஆட்சி புரிந்த ஸ்ரீமன் நாராயணனும் கொடிய கேசி என்னும் அசுரனைக்கொன்றவனுமாகிய ஸ்ரீ கண்ணனை வாழ்க வாழ்க பல்லாண்டு வாழ்க என்று மனதாரத்தொழுது பொருத்தமான பாமாலைகளைப் பாடி நோன்ற எனக்கு இனி ஏழு பிறப்பிலும் என்ன குறையே என்கின்றார் ஆழ்வார் பெருமானார்.

நாமும் அவ்வாறு செய்யின் நமக்கும் குறையிராது என்பது உள்கிடக்கை. அவர் வணங்குமாறு வணங்கி வாழ்த்தல் வேண்டும் எம்பெருமானை.

4—5—2

மையகண்ணாள்மலர்மேலுறைவாள் உறைமார்பினன்
செய்யகோலத்தடங்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை
மொய்யசொல்லாலிசைமாலைகளேத்தி உள்ளப்பெற்றேன்
வெய்யநோய்கள்முழுதும் வியன்ஞாலத்துவீயவே 2

மையகண்ணாள்—மைபொருந்திய கண்களை உடையவள், மலர்மேல் உறைவாள்—தாமரை மலரில் வீற்றிருப்பவளாகிய இலக்குமி, உறைமார்பினன்—வசிக்கின்ற மார்பையுடையவனும், செய்ய கோலத்தடங்கண்ணன்—மிக்க அழகும் விசாலமும் உள்ள கண்களையுடையவனுமான, விண்ணோர் பெருமான்தன்னை—தேவர்கள் தலைவனான ஸ்ரீமன் நாராயணனை, மொய்ய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி—சிறந்த சொற்களால் கீர்த்தனங்கள் பாடி, உள்ளப்பெற்றேன்—நினைக்கும் வாய்ப்பு கொண்டேன். வெய்ய நோய்கள் முழுதும்—கொடிய நோய்கள் எல்லாம், வியன் ஞாலத்து வீயவே—விசாலமான இப்பூமியில் ஒழிந்துபோகவே,

இலட்சுமியை மார்பில் உடையவனும் அழகுமிக்க விரிந்து பரந்த பெரிய கண்களை உடையவனும் தேவர்கள் தலைவனுமான ஸ்ரீமன் நாராயணனை இனிமை மிக்க பாசுரங்கள்கொண்டு பாடித்துதித்து நினைக்க எனக்கு ஏற்பட்டது. இது எதற்காக என்றால் கொடிய நோய்கள் எல்லாம் இவ்வுலகத்தில் இருந்து அழிந்து ஒழிந்து போகவே எ—று.

சர்வேஸ்வரனான ஸ்ரீமன் நாராயணனை நல்ல இசை பொருந்திய பாசுரங்களைக்கொண்டு பாடித்துதித்தேன். அப்படி நான் அப்பெருமானை நினைக்க ஏற்பட்டது என் விருப்பத்தால் அன்று எம்பெருமான் விருப்பத்தால்தான் என்கிறார் ஆழ்வார் பெருமானார்.

இதன் உட்பொருள் இப்பாசுரங்களைப்பாடி எம்பெருமானை நினைப்பார்க்கு இவ்வுலகத்தொல்லைகள் எவையாயினும் நீங்குமாம் என்றபடி.

கர்ம நோய்க்கு மருத்துவர் மருந்து கொடுக்க முடியாது இவை கர்ம வினைகளுக்கும் மருந்தாகும்.

4—5—3

வீவிலின்பம்மிக எல்லைநிகழ்ந்தநம்மச்சுதன்
வீவில்சீரன்மலர்க்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை
வீவில்காலமிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன்
வீவிலின்பம்மிக எல்லைநிகழ்ந்தனன்மேவியே 3

வீவு இல் இன்பம் மிக—அழிவு இல்லாத இன்பம் பெருக, எல்லை நிகழ்ந்த நம் அச்சுதன்—எல்லையாக (இடமாக)

அமைந்த நம் அச்சுதப்பெருமானும், வீவு இல் சீரன்—அழிவில்லாத சிறப்புடையவன், மலர்க்கண்ணன்—தாமரை மலர் போன்ற கண்களை உடையவனும், விண்ணோர் பெருமான் தன்னை—தேவர்கள் நாயகனுமான ஸ்ரீமன் நாராயணனை, வீவில் காலம் இசைமாலைகள் ஏத்தி—காலம் எல்லாம் இசையோடு கூடிய பாடல்களால் துதித்து, மேவப் பெற்றேன்—அடையப் பெற்றேன் (அடைந்தேன்). வீவில் இன்பம் மிக எல்லை நிகழ்ந்தனன் மேவியே—அழிவில்லாத இன்பம் பெறுவதற்கு ஆதாரமாக அமைந்த எம்பெருமானை அணுகி (அடைந்தேன்).

வீவில்காலம்—எப்பொழுதும்,

விண்ணோர் பெருமானை மேவப்பெற்றேன். எவ்வாறெனில் அவனை இடைவிடாது சுவைமிக்க பாடல்களால் பாடித்துதித்து. அவன் அழியாத இன்பத்திற்கு எல்லையாக அமைந்தவன். இன்பக் கடலுக்குக் கரைகளாக உள்ளவன். அவனைப் பாடல்களால் இன்பம் ஊட்டி அடைந்தேன். அவன் அதற்கு ஆட்படுவான் என்கிறார் ஆழ்வார் பெருமானார்.

ஆகையால் அவனை இசையோடு பாடித்துதித்தல் தகும், அவன் திருநாமங்களில் (பெயர்களில்) இசையும் இன்பமும் இருக்கிறது. அவன் நாமங்கள் சொன்னாலும் போதும்.

4—5—4

மேவிநின்றுதொழுவார் வினைபோகமேவும்பிரான்
தூவியம்புள்ளுடையான் அடலாழியம்மான்தன்னை
நாவியலாலிசைமாலைகளேத்தி நண்ணப்பெற்றேன்
ஆவியென்னாவியை யானறியேன்செய்தவாற்றையே 4

மேவிநின்று—விரும்பி நின்று, தொழுவார்வினைபோக—வணங்குகிறவர்களின் பாவங்கள் நீங்கும்படியாக, மேவும் பிரான்—பொருந்துகின்ற தேவன், தூவி—இறக்கைகளையுடைய, அம்புள்—அழகிய பட்சியாகிய கருடனை, உடையான்—உடையவனாகிய, அடல் ஆழி அம்மான் தன்னை—கொல்லும் தன்மையுடைய சக்ராயுதத்தையுடைய பிதாவை, நா இயலால்—நாவின்கலைகளால், இசைமாலைகள் ஏத்தி—பாடல்களால் துதித்து, நண்ணப்பெற்றேன்—அடையப்பெற்றேன், ஆவி—பிராணன், என் ஆவியை—என் உயிராகிய எம்பெருமானை. யான் அறியேன் செய்த ஆற்றை—நான் எப்படிச்செய்தேன் என்பதை அறியாதவனாய் இருக்கிறேன்.

ஆற்றை—வழியை, தொழுவார்—தொழுகின்றவர்கள் (வினையால் அணையும்பெயர்)

அன்புடன் விரும்பித் துதிக்கிறவர்களின் பாவங்கள் நீங்கும்படியாக அருள்கின்ற தேவன். வாயினால் பாடக்கூடிய இசைப்பாடல்களைப் பாடித்துதித்து நான் ஆவியாகிய அவனை அடைந்தேன். அப்பாக்களை எப்படிச் செய்தேன்(பாடினேன்) என்று நானே அறியாதவனாய் இருக்கிறேன் என்று ஆழ்வார் பெருமானார் கூறுகிறார்.

நாம் அவனை சிரத்தையுடன் தொழுதாலே போதும். நம்முடைய வினைகளை நீக்குவான். பாடித்துதித்தால் சொல்லவும் வேண்டுமோ என்றபடி. என்னைப் பொருத்தவரையில் அவன் எனக்கு அருள்புரிந்தான் என்று தான் சொல்வன் எ—று.

4—5—5

ஆற்றநல்லவகைகாட்டுமம்மானை அமரர்தம்
ஏற்றைஎல்லாப்பொருளும் விரித்தானையெம்மான்தன்னை
மாற்றமாலைபுனைந்தேத்தி நாளும்மகிழ்வெய்தினேன்
காற்றின்முன்னம்கடுகி வினைநோய்கள்கரியவே 5

ஆற்ற நல்ல வகைகாட்டும் அம்மானை—(அவனை) அடைவதற்கு நல்ல வழிகாட்டும் தந்தையாகிய பெருமானை, அமரர்தம் ஏற்றை—தேவர்களின் தலைவனை, எல்லாப்பொருளும் விரித்தானை—எல்லா ஞானங்களையும் அளித்தவனை, எம்மான் தன்னை—எம்பெருமானை, மாற்றமாலை புனைந்து ஏத்தி—வார்த்தைகளால் மாலைகள் கட்டித்துதித்து, நாளும் மகிழ்வு எய்தினேன்—எல்லா நாளும் இன்பம் எய்தினேன், காற்றின் முன்னம் கடுகி—காற்றைக் காட்டிலும் வேகமாக விரைந்து, வினைநோய்கள்—பூர்வகர்மத்தாலாகிய நோய்கள், கரியவே—சாம்பலாய்ப்போகும்படியே.

மாற்றம்—வார்த்தை,

எம்பெருமானை நான் பாசுரங்கள் பாடித்துதித்து நாள் தவறாது மகிழ்ச்சிகொண்டேன். பூர்வகர்ம வினைகள் காற்றைக் காட்டிலும் வேகமாக ஓடிப் பொசுங்கிப்போக நான் இவ்வாறு செய்தேன். அவ்வாறு செய்யின் நமக்கும் பாவவினைகள் ஓடி ஒழிந்து போகும் என்றவாறு. தவிர அவை பாடப்பாட நமக்கு மகிழ்ச்சியளிப்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

4—5—6

கரியமேனிமிசை வெளியநீறுசிறிதேயிடும்
பெரியகோலத்தடங்கண்ணன் விண்ணோர்பெருமான் தன்னை
உரியசொல்லாலிசைமாலைகளேத்தி உள்ளப்பெற்றேற்கு
அரியதுண்டோவெனக்கு இன்றுதொட்டுமினியென்றுமே 6

கரியமேனிமிசை—கருமை நிறம் பொருந்திய திருவுடம்பின்மீது (நெற்றியில்), வெளிய—வெண்மை நிறமான, நீறு—திருமண்(அணிந்த), சிறிதே ஈடும்—சிறிய சின்னமும் (அடையாளமும்), பெரிய கோலந்தடங்கண்ணன்—உயர்ந்த அழகிய விசாலமான கண்களையுமுடையவனுன, விண்ணோர் பெருமானை—தேவர்களின் நாயகனுன ஸ்ரீமன் நாராயணனை, உரிய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி—பொருத்தமான நல்ல சொற்கள் கொண்ட இனிமையான பாசுரங்களால் துதித்து, உள்ளப்பெற்றேற்கு—நினைக்கப்பெற்ற எனக்கு, அரியது உண்டோ—முடியாதது ஏதாவது இருக்கிறதோ? எனக்கு இன்று தொட்டும் இனி என்றும்—இன்று முதல் கொண்டு இனிமேல் எப்பொழுதுமே. எனக்கு முடியாதது எதுவுமே இல்லை.

ஈடும்—இடுகையும்.

ஆழ்வார் பெருமாளுர் தாம் இசைப்பாக்களைப்பாடி எம்பெருமானை ஏத்தி வணங்கி நினைக்கப்பெற்றதால் அடைந்த பேறு (பாக்கியம்) இவ்வளவுதான் என்று சொல்ல முடியாது என்கிறுர். எனக்கு முடியாதது என்று அருமைபாராட்டிச் சொல்லும் காரியம் எதுவுமே கிடையாது. அதுவும் இன்று இப்பொழுது முதல்கொண்டே இனிமேலும் என்றைக்குமே என்கிறுர். என்னைப்போல் நீங்களும் அப்பெருமானைப் பாடித் துதித்தால் ஏன் அந்தப் பெருமையை அடையக்கூடாது. நிச்சயமாகப் பெறக்கூடும் என்பதைநமக்குச் சொல்லாமல் சொல்லுகிறுர்.

4—5—7

என்றுமொன்ருகி ஒத்தாரும்மிக்கார்களும் தன்தனக்கு
இன்றிநின்ருனை எல்லாவுலகுமுடையான்தன்னை
குன்றமொன்ருல்மழைகாத்தபிரானைச் சொல்மாலைகள்
நன்றுசூட்டும்விதியெய்தினம் என்னகுறைநமக்கே 7

என்றும் ஒன்ருகி—எக்காலத்தும் ஒருவன் ஆகி, ஒத்தாரும் மிக்கார்களும்—சமமானவர்களோ உயர்ந்தவர்களோ, தன்தனக்குஇன்றி நின்ருனே—எம்பெருமான் தனக்கு இல்லாமல் இருக்கின்றவனே, எல்லா உலகும் உடையான் தன்னே——எல்லா உலகங்களேயும் உடையவனே, குன்றம் ஒன்ருல் மழைகாத்த பிரானே—கோவர்த்தன மலேயால் (பசுக்கூட்டங்களுக்காக) மழைதடுத்த ஸ்ரீ கண்ணனே, சொல்மாலேகள் நன்றுசூட்டும் விதி எய்தினம்—சொற்களாலாகிய பாடல்களே நன்ருக (திருப்திகரமாக) சூட்டப்பெறும் விதி பெற்ருேம், என்ன குறை நமக்கே,—அதனுல் நமக்கு எந்தக்குறையும் இல்லேயாயிற்று.

தனக்கு நிகரில்லாதவனும்ஏழுலகங்களேஉடையவனும் கோவர்த்தனகிரியை எடுத்து மழை தடுத்து பசுக்கூட்டங்களேக் காத்தவனுமான ஸ்ரீகண்ணபிரானேப் பாசுரங்களால் மனதாரப் பாடிப்புகழும் நல்ல விதி அமையப்பெற்ருேம். இதைவிட நமக்கு என்ன வேண்டும். நமக்கு வேண்டியது ஒன்றுமே இல்லே. இதுவே போதும் என்றபடி.

4—5—8

நமக்கும்பூவின்மிசைநங்கைக்கும் இன்பனே ஞாலத்தார்
தமக்கும் வானத்தவர்க்கும்பெருமானே தண்டாமரை
சுமக்கும்பாதப்பெருமானேச் சொல்மாலேகள் சொல்லுமா
றமைக்கவல்லேற்கு இனியாவர்நிகரகல்வானத்தே 8

நமக்கும்—பக்தர்களாகிய நமக்கும், பூவின்மிசை நங்கைக்கும்—தாமரை மலரில் விற்றிருக்கும் இலக்குமிக்கும், இன்பனே—இன்பந்தரும் பெருமானே, ஞாலத்தார்தமக்கும்—மண்ணுலகத்தில் உள்ளவர்களுக்கும், வானத்தவர்க்கும்—விண்ணுலகில் உள்ள தேவர்களுக்கும், பெருமானே—எம்பெருமானே, தண்தாமரை சுமக்கும் பாதப்பெருமானே—இனிமை மிக்க அண்டத்தாமரை சுமக்கும் திருவடிகளேயுடைய ஸ்ரீமன் நாராயணனே, சொல்மாலேகள்—பாடல்கள், சொல்லுமாறு அமைக்கவல்லேற்கு—பாடுமாறு செய்யவல்ல எனக்கு, இனி யாவர் நிகர் அகல்வானத்தே—ஒப்பாவார் யார் பரந்த மண்லகிலும் விண்ணுலகிலும்.

வானம் என்றதால் மண்ணும் உபலக்ஷணமாக் கொள்ளப்பட்டது.

இலட்சுமி நாயகனும் மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் நாயகனுன ஸ்ரீமன் நாராயணனைப் பாக்களால் பாடும்படி செய்யவல்ல எனக்கு ஒப்பு ஒருவரும் இல்லை என்கிறுர் ஆழ்வார் பெருமானுர்.

எம்பெருமானைப் பாடித்துதிப்பார்க்கே அன்றி பாடும்படி செய்வார்க்கும் குறையில்லையாம்படி உணர்த்தப்படுகிறது.

4—5—9

வானத்துமவானத்துள்ளும்பரும் மண்ணுள்ளும்மண்ணின்கீழ்த்
தானத்தும் எண்டிசையும்தவிராது நின்றுன்தன்னை
கூனற்சங்கத்தடக்கையவனைத் குடமாடியை
வானக்கோனை கவிசொல்லவல்லேற்கு இனிமாறுண்டே 9

வானத்தும்—விண்ணுலகிலும், வானத்துள் உம்பரும்—விண்ணுலகில் உள்ள தேவர்களும், மண்ணுள்ளும்—பூமண்டலத்திலும், மண்ணின் கிழ்த்தானத்தும்—மண்ணுலகத்திற்குக்கீழ் உள்ள பாதாள லோகத்திலும், எண்திசையும் தவிராது—எட்டுத்திக்குகளிலும் தவருமல், நின்றுன்தன்னை—நின்றவனும், கூனற்சங்கத்தடக்கை அவனை—வளைவுபொருந்திய பாஞ்சன்ய சங்கத்தையுடைய பெரிய கையுடைய திருமாலும், குடமாடியை—குடக்கூத்தனும், வானக்கோன்—விண்ணுலக நாயகனும் ஆன பெருமானை, கவி சொல்ல வல்லேற்கு—பாக்களால் பாடவல்லவனுகிய எனக்கு, இனிமாறுண்டே—இனி எதிரானது ஏதாவது உண்டோ (இல்லை என்றபடி)

இத்தன்மைகளையுடைய எம்பெருமானைக் கவிபுனைந்து பாட வல்லவர்களுக்கு பகைமையோ வேற்றுமையோ இராது என்றபடி.

4—5—10

உண்டுமுமிழ்ந்தும்கடந்துமிடந்தும் கிடந்தும்நின்றும்
கொண்டகோலத்தொடுவீற்றிருந்தும் மணங்கூடியும்
கண்டவாற்றுல்தனதே உலகெனநின்றுன்தன்னை
வண்டமிழ்நூற்கநோற்றேன் அடியார்க்கின்பமாரியே 10

உண்டும்—உலகங்களையெல்லாம் விழுங்கி தன் அகத்தடக்கியும், உமிழ்ந்தும்—அவற்றைப்படைத்தும், கடந்தும்—வாமனனுகத் தாவியும், இடந்தும்—வராகமாக பூமியைப் பெயர்த்தும், கிடந்தும்—திருப்பாற்கடலில் கிடக்கைகொண்டும், நின்றும்—ஸ்ரீனிவாசனுகத் திருவேங்கடத்தில் நின்றும் அல்லது வாலியை வதம் செய்து வீரராகவனுக நின்றும்,

கொண்ட கோலத்தோடு—இவ்வாறுக அவதாரங்கொண்ட வடிவங்களில், வீற்றிருந்தும்—அமர்ந்திருந்தும், மணம்கூடியும்—வைபவங்கள் (விழாக்கள் கொண்டு) கொண்டாடப் பெற்றும், கண்டவாற்றுல்—கண்டவகையில், தனதேஉலகு எனநின்றுன் தன்னை—உலகம் தன்னுடையது என்ற தன்மையோடு இருக்கின்றவனை, வண்தமிழ்நூற்க நோற்றேன்—இனிய தமிழ்ப்பாக்களைப் பாடும்படியாக தவமிருந்தேன். அடியார்க்கு இன்பமாரியே—அத்தமிழ்ப்பாசுரங்கள் பக்தர்களுக்கு இன்பமே வடிவாக உடைய மழை ஆகும்.

எம்பெருமான் அவதாரங்களாகக்கொண்ட கோலங்களும் மற்ற கிடந்தும் இருந்து நின்ற கோலங்களும் கொண்டு வீற்றிருந்தும் சிறப்பிக்கப்பெற்றும் இருக்கின்ற தன்மையைக் கண்டால் உலகம் தன்னுடையதே என்று இருக்கிறுன் என்பது தெரிகிறது. அத்தகைய பெருமையுடையவனை உயர்ந்த தமிழ்ப்பாக்களால் பாடுவதற்கு நான் தவம் கிடந்தேன். அவைகள் பக்தர்களுக்கு இன்பமே வடிவான மழைபோன்று இனிமையுடையனவாகும். எ—று.

அவ்வாறு நோன்புகொண்டு பாடப்பெற்ற பாசுரங்களை அடியார்களாகிய நாம் அன்புகொண்டு பாடினுல் நம் உள்ளத்தில் இன்பமே பொழியும். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாப்போல பக்தியில்லாதவர்களும் செவிமடுக்க இன்பம் பெறுவர்.

4—5—11

மாரிமாறுததண்ணம்மலை வேங்கடத்தண்ணலை
வாரிமாறுதபைம்பூம்பொழில்சூழ் குருகூர்நகர்
காரிமாறன்சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால்
வேரிமாறுதபூமேலிருப்பாள் வினைதீர்க்குமே 11

மாரி மாறுத—மழைதவறுத, தண்அம்மலை—திருமலை, வேங்கடத்து அண்ணலை—வேங்கடத்தில் நிற்கின்ற ஸ்ரீனிவாசப் பெருமானை, வாரி மாறுத—நீர்தவறுத, பைம்பூம் பொழில்—பசிய அழகிய சோலைகளால் சூழப்பெற்ற, குருகூர் நகர்—ஆழ்வார்திருநகர், காரிமாறன் சடகோபன்—காரி என்னும் நாமமுடைய தந்தையையும் மாறன் என்ற குடிப்பெயரும் உடைய சடகோபன், சொல் ஆயிரத்து இப்பத்தால், சொன்ன ஆயிரம் பாடல்களில் இந்தப்பத்துப் பாசுரங்கள், வல்லவர்களுக்கு, வேரிமாறுத பூமேல் இருப்பாள்—வாசனை நீங்காத தாமரை மலர்மேல் இருக்கும் இலட்சுமிதேவி, வினைதீர்க்கும்—பாவங்களைப்போக்குவாள்.

தீர்ப்பாரையாமினி

4—6—1

தீர்ப்பாரையாமினி எங்ஙனம்நாடுதுமன்னைமீர்
ஓர்பாலிவ்வொண்ணுதல் உற்றநல்நோயிதுதேறினோம்
போர்ப்பாகுதான்செய்து அன்றைவரைவெல்வித்த மாயப்போர்த்
தேர்ப்பாகனார்க்கு இவள்சிந்தைதுழாய்த்திசைக்கின்றதே. 1

அன்னைமீர்!—தாய்மார்களே! தீர்ப்பாரை—(எங்கள்மகளுக்கு ஏற்பட்டுள்ள நோயை) குணப்படுத்துவாரை, யாம்—பெற்றோர்களாகிய நாங்கள், இனி—(பித்தேறியவள்போல் என்னென்னமோ செய்கிறாளே இப்படிப்பட்டவளுக்கு) இனி, எங்ஙனம் நாடுதும்—எங்கு எப்படி தேடிக்கண்டுபிடிப்போம். அங்கு கூடியுள்ள மற்ற தாய்மார்கள் சொல்லுகிறார்கள்:—இவ்வொள்நுதல்—ஒளிபொருந்திய நெற்றியையுடைய இவள் ஓர்பால் உற்றநல் நோய் இது—ஒருவரிடத்தில் மனம் பறிகொடுத்த நல்ல நோய் இது, தேறினோம்—நன்றாக அறிந்தோம். போர்ப்பாகுதான் செய்து—யுத்தம் நடப்பதற்குத் தகுந்த நிலையை உண்டாக்கி, அன்று ஐவரை வெல்வித்த—பாரதப்போரில் பஞ்சபாண்டவர்களை வெல்லும்படி செய்த, மாயப்போர்த் தேர்ப்பாகனார்க்கு—அர்ச்சுனனுக்குச் சாரதியாக மாயங்கள் கொண்டு போர் செய்த ஸ்ரீ கண்ணனுக்கு, இவள் சிந்தை—இவளுடைய உள்ளம் துழாய்த்திசைக்கின்றதுஏ—தேடி அலைகின்றது.

திசைத்தல்—மயங்குதல்

ஓர்பால்—எதுகை நோக்கி ஓர்ப்பால் என்று ஆயிற்று.

ஓர்ப்பால்—ஆராய்ந்து உணர்கையால்,

தாய் மகளின் மனமாறுதலைக் கண்டுகலங்கி இவளுடைய நோயை குணப்படுத்துவதற்கு யாரைப்போய் எங்கே தேடுவது என்று அங்கு கூடியிருந்த தாய்மார்களைப்பார்த்துச் சொல்கிறாள். அவர்கள் மறுமொழியாக உற்றது நல்லநோய் தான் இது, ஒருவரிடத்தில் உள்ளம் பறிகொடுத்திருக்கிறாள். அது நன்றாகத் தெரிகிறது. பாரதப்போர் நடக்கும்படியான ஓர் நிலையை ஏற்படுத்தி பஞ்சபாண்டவர்கள் போரில் வெல்லும்படியாக அர்ச்சுனனுக்கு இரதத்தைச் செலுத்தும் சாரதியாக இருந்து ஆச்சர்யமாகப் போர் செய்தானே அந்த ஸ்ரீ கண்ணனை நாடி இவள் மனம் செல்கின்றது, என்று ஆறுதல் கூறினார்கள் என்றவாறு.

4—6—2

திசைக்கின்றதேயிவள்நோய் இதுமிக்கபெருந்தெய்வம்
இசைப்பின்றிநீரணங்காடும் இளந்தெய்வமன்றிது
திசைப்பின்றியே சங்குசக்கரமென்றிவள்கேட்க நீர்
இசைக்கிற்றிராகில் நன்றேயில்பெறுமிதுகாண்மினே 2

திசைக்கின்றதே இவள் நோய்—இவளுடைய நோய் மயங்கும்படி செய்கின்றது. இது மிக்க பெருந்தெய்வம்—இது மிகப்பெரிய தெய்வ சம்பந்தமானது. இசைப்பின்றி—பொருத்தமில்லாமல், நீர்அணங்காடும் இளம் தெய்வம் அன்று இது—நீங்கள் வெறி ஆடும் குட்டித்தேவதை அன்று இது. திசைப்பு இன்றியே—மயங்காமலே சங்குசக்கரம் என்று இவள் கேட்க, நீர்—நீங்கள், இசைக்கிற்றிராகில்—விரும்புவதைச் செய்வீர்களானால், நன்றே—குணமாகிவிடும். இல்பெறும் இதுகாண்—இல்லாமற் செய்யும், காண்—அசை.

திசைத்தல்—திகைத்தல், மயங்குதல், இசைக்கிற்றிராகில்—இசைக்கின்றீர் ஆனல், விருப்பத்தை நிறைவேற்றுவீராகில்.

இவள் நோய் கலங்கும்படி செய்கிறது. ஆகையால் இது மிகப்பெரிய தெய்வ சம்பந்தமானது. வெறி ஆடும் குட்டித்தேவதை சம்பந்தமானது அன்று. இவள் திகைப்பு இல்லாமல் சங்குசக்கரம் எங்கே என்று கேட்கிறாள். அவ் விருப்பத்திற்குத் தக்கது செய்தால் குணமாய்விடும். அதுவே அவளுக்கு பிறவிபெறும் பயனாகிய முக்தியும் கிடைக்கச் செய்யும் என்றவாறு.

4—6—3

இதுகாண்மினன்னைமீர் இக்கட்டுவிச்சிசொற்கொண்டு நீர்
எதுவானும்செய்து அங்கோர்கள்ளுமிறைச்சியும்தூவேன்மின்
மதுவார்துழாய்முடி மாய்ப்பிரான்கழல்வாழ்த்தினல்
அதுவேயிவளுற்றநோய்க்கும் அருமருந்தாகுமே 3

இதுகாண்மின் அன்னிமீர்! —இதோ பாருங்கள் (மனதில் கொள்ளுங்கள்) தாய்மார்களே!, இக்கட்டுவிச்சி, சொல் கொண்டு—வார்த்தையைக்கேட்டு, நீர்—எதுவானும் செய்து —நீங்கள் ஏதாவது செய்தால், அங்கு ஓர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின்—ஏதாவது ஆடோ கோழியோ பலிகொடுத்தல்ளைத்தூவாதீர்கள். மதுவார்துழாய்முடி மாயப்பிரான் கழல் வாழ்த்தினல்—வாசனை நிரம்பிய துழபத்தை முடியில்

அணிந்துள்ள ஸ்ரீ கண்ணபிரானின் திருவடிகளைத் தொழுதால், அதுவே இவள் உற்ற நோய்க்கு அருமருந்தாகும்—அதுவே ஸ்ரீ கண்ணனை பூஜித்ததும் ஆகும். இவளுடைய நோயை நீக்கும் மருந்தும் ஆகும்.

குறிசொல்வோள் பேச்சைக்கேட்டு வெறியாடுதலுக்கு வேண்டியன ஏதும் செய்யவேண்டாம், ஸ்ரீ கண்ணபிரானை வணங்கி வாழ்த்தினுல் அதுவே இவள் உற்ற நோய்க்கும் மருந் தாகும். வீட்டுப்பேறு அளிக்கும்படியான அரிய மருந்துமாகும் என்கிறுர் ஆழ்வார் பெருமானுர்.

4—6—4

மருந்தாகுமென்று அங்கோர்மாயவலவைசொற்கொண்டு நீர்
கருஞ்சோறும்மற்றைச்செஞ்சோறும் களனிழைத்தென்பயன்
ஒருங்காகவேயுலகேழும விழுங்கியுமிழ்ந்திட்ட
பெருந்தேவன்பேர்சொல்லகிற்கில் இவளைப்பெறுதிரே 4

மருந்து ஆகும் என்று—இவளுடைய நோய்க்கு மருந்து ஆகும் என்று, அங்கு ஓர்—முன்பின் தெரியாத ஒரு, மாய அலவை சொற்கொண்டு—நம்பமுடியாத ஓர் பொய்யளின் பேச்சைக்கேட்டு, நீர் கருஞ்சோறும்—நீங்கள் கள், இறைச்சி முதலானவையும், மற்றைச் செஞ்சோறும்—திருஷ்டி கழிப் பதற்கான சோறும், களன் இழைத்து என்பயன்—பூமியில் இட்டு என்ன பிரயோசனம்? ஒருங்காகவே—ஒன்றுகவே.

உலகேழையும் விழுங்கி—ஏழுலகங்களையும் (தன் வயிற் றுள்ளே) ஒடுக்கி, உமிழ்ந்திட்ட—படைத்திட்ட, பெருந்தேவன் பேர் சொல்ல நிற்கில்—எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணனின் நாமங்களைச் சொன்னுல், இவளைப் பெறுதிரே—இவளை குணம் பெற்றவளாக அடைவீர்களே.

குட்டி தேவதைகளுக்குச் சாந்தி செய்வதுபோல் இவ ளுக்கு பலியிடுதலும் சாந்தி செய்வதும் வேண்டாம். திருமாலின் நாமங்கள் சொல்லி வணங்குவீர்களாக. இவள் சுய நிலை அடைந்துவிடுவாள் எ—று.

4—6—5

இவளைப்பெறும்பரிசு இவ்வணங்காடுதலன்றந்தோ
குவளைத்தடங்கண்ணும் கோவைச்செவ்வாயும்பயந்தனள்
கவளக்கடாக்களிறட்டபிரான் திருநாமத்தால்
தவளப்பொடிக்கொண்டு நீரிட்டிடுமின்தணியுமே 5

இவளைப்பெறும் பரிசு—இவளுடைய நோயை நீக்குவதற்கான வழி, இவ்வணங்கு ஆடுதல் அன்று—இவளைக்கொண்டு வெறியாடுதல் அன்று. அந்தோ!—ஐயோ! இது மூடத்தனம் ஆயிற்றே! குவளைத்தடங்கண்ணும்—குவளை மலர் போன்றவையும் விசாலமானவையுமான கண்களையும், கோவைச் செவ்வாயும்—கொவ்வைப் பழம் போன்று சிவந்த வாயையும் உடைய யசோதை, பயந்தனள்—மகனாகப்பெற்ற, கவளக்கடா போர்த்தன்மையுடைய, களிறு அட்டபிரான்—குவலயாபீடம் என்னும் யானையைக் கொன்ற கண்ணபிரானின், திருநாமத்தால் தவளப்பொடிக்கொண்டு—பெயர் சொல்லி மந்திரித்து திருநீற்றுப்பொடியை, நீரிட்டு—தண்ணீரில் கலக்கி, இடுமின் கொடுங்கள், தணியும் நோய் நீங்கிவிடும்.

கவளம்—போர், பரிசு—தன்மை, களிறு—யானை,

4—6—6

தணியும்பொழுதில்லை நீரணங்காடுதிரன்னைமீர்
பிணியுமொழிகின்றதில்லை பெருகுமிதுவல்லால்
மணியினணிநிறமாயன் தமரடிநீறுகொண்டு
அணியமுயலில் மற்றில்லைகண்டீரிவ்வணங்குக்கே 6

தணியும் பொழுதில்லை—இந்த நோய் தணியவே தணியாது, நீர் அணங்காடுதிர்—நீங்கள் பேயோட்டுகிறீர்கள், அன்னைமீர்—தாய்மார்களே! பிணியும்—நோயும், ஒழிகின்றதில்லை—நீங்காது, பெருகும் இது அல்லால்—பெரியதாகும் அல்லாமல், மணியின் அணிநிற மாயன்—நீல இரத்தினம்போல் அழகிய நிறமுடைய ஸ்ரீ கண்ணனின் தமர்அடி நீறுகொண்டு—அடியார்களின் பாத தூளியைக்கொண்டு, அணியமுயலில்—அணியமுயற்சி எடுத்துக்கொண்டால் (நன்றாகும்), மற்றில்லை கண்டீர்—இல்லாவிட்டால் நோய் தீராது, இவ்வணங்குக்கு—இப் பெண்ணுக்கு.

4—6—7

அணங்குக்கருமருந்தென்று அங்கோராடும்கள்ளும்பராய்
சுணங்கையெறிந்து நும்தோள்குலைக்கப்படுமன்னைமீர்
உணங்கல்கெடக் கழுதையுதடாட்டம்கண்டென்பயன்
வணங்கீர்கள்மாயப்பிரான்தமர் வேதம்வல்லாரையே 7

அணங்குக்கு—வருத்தத்திற்கு, அருமருந்து என்று, அங்கு ஓர் ஆடும் கள்ளும்—அங்கே பலிகொடுக்க ஓர் ஆட்டையும் கள்ளையும் வைத்து, பராய் சுணங்கை எறிந்து—பராய் மரத்துப்பூந்தாது வீசி,

நும் தோள் குலைக்கப்படும்—உங்கள் தோள்கள் நடுங்கும்படியாகச் செய்யப்படும், தாய்மார்களே! உணங்கல் கெட—உலர்ந்த சருகு கெடும்படியாக, கழுதை உதடு ஆட்டம் கண்டு என் பயன்—கழுதை மெல்லுவதைப் பார்த்து என்ன நன்மை விளையப்போகிறது? வணங்கீர்கள்—வணங்குங்கள். மாயப்பிரான்—ஸ்ரீகண்ணபிரானின், தமர் வேதம் வல்லாரையே — அடிசார்ந்தவர்களான வேதம் வல்லவர்களையே.

திருமாலிடம் மையல்கொண்ட பெண்ணுக்கு ஆட்டு இரைச்சியும் கள்ளும் கொண்டு வணங்கி உங்களுடைய தோள்கள் குலையுமாறு செய்துகொள்ளும் தாய்மார்களே! உலர்ந்துபோன சருகு கெடும்படியாக அதை மெல்லுகின்ற கழுதையின் உதட்டைப் பார்ப்பதால் ஏதாவது பயன் உண்டோ! அதுபோல வெறியாட்டம்ஆடி உடுக்கடித்துப்பாடும் அவன் வாயைப் பார்த்து ஒரு பயனும் இல்லையே. மாயப்பிரானின் பக்தர்களை வேதம் அறிந்தவர்களைக் கொண்டு வணங்குங்கள் எ—று.

4—6—8

வேதம்வல்லார்களைக்கொண்டு விண்ணோர்பெருமான்திருப்
பாதம்பணிந்து இவள்நோயிது தீர்த்துக்கொள்ளாதுபோய்
ஏதம்பறைந்தல்லசெய்து கள்ளூடுகலாய்த்தூய்
கீதமுழவிட்டு நீரணங்காடுதல்கீழ்மையே 8

வேதம் வல்லார்களைக்கொண்டு—வேதம் மந்திரங்கள் நன்கு அறிந்து அனுஷ்டிக்கிறவர்களைக்கொண்டு, விண்ணோர் பெருமான் பாதம் பணிந்து—தேவர்கள் தலைவனான் ஸ்ரீமன் நாராயணனின் திருவடிகளை வணங்கி, இவள் நோய் இது தீர்த்துக்கொள்ளாதுபோய், ஏதம் பறைந்து அல்லசெய்து—குற்றமுடையன சொல்லி செய்யத்தகாதனசெய்து, கள்ளூடு கலாய்த்தூய்—கள்ளில் சில பொருள்களைக் கலந்து தூவி, கீதம் முழவிட்டு—உடுக்கையோ பறையோ அடித்து உரக்கப்பாடி, நீர் அணங்கு ஆடுதல் கீழ்மையே—நீங்கள் வெறி ஆடுதல் மிகவும் கீழ்த்தரமானது.

வேத மந்திரங்கள் அறிந்தவர்களைக்கொண்டு எம் பெருமானுக்குப் பூசை முதலானவைசெய்து மந்திரங்கள் கொண்டு ஜபித்து அவனை வணங்கித் தீர்த்துக்கொள்ளவேண்டும். அதுதான் இவளுடைய நோய். அதைவிட்டுவிட்டு கள்ளும் கலவியும்கொண்டு தூவி உடுக்கை அடித்து உரக்கப்பாடி வெறி ஆடுதல் மிகவும் இழிவானது.

4—6—9

கீழ்மையினாலங்கோர் கீழ்மகனிட்டமுழவின்கீழ்
நாழ்மைபலசொல்லி நீரணங்காடும்பொய்காண்கிலேன்
ஏழ்மைப்பிறப்புக்கும்சேமம் இந்நோய்க்குமீதேமருந்து
ஊழ்மையில்கண்ணபிரான் கழல்வாழ்த்துமினுன்னித்தே 9

கீழ்மையினால் அங்கோர் கீழ்மகனிட்ட முழவின்கீழ்—கீழான தன்மையினால் முன்பின் தெரியாத ஓர் மட்டரகமான பேர்வழி முழங்குகின்ற ஆர்ப்பாட்டத்தில், நாழ்மை பல சொல்லி—இழிவான விஷயங்களைச் சொல்லி, நீர் அணங்காடுதல்—நீங்கள் வெறியாடுதல், கீழ்மையே—இழிவானதே, ஏழ்மைப் பிறப்புக்கும் சேமம்—ஏழேழு பிறப்பிலும் நன்மையுடையது, இந்நோய்க்கும் ஈதே மருந்து—எம்பெருமானிடம் மையல்கொண்ட இந்த நோய்க்கு இதுவே மருந்து, (எதுவெனில்) ஊழ்மையில்—முறையாக, கண்ணபிரான் கழல் வாழ்த்துமின்—ஸ்ரீ கண்ணபெருமானின் திருவடிகளை ஏத்தி வணங்குங்கள், உன்னித்து—நினைத்து.

4—6—10

உன்னித்துமற்றொருதெய்வம்தொழாள் அவனையல்லால்
நும்மிச்சைசொல்லி நும்தோள்குலைக்கப்படுமன்னைமீர்
மன்னப்படுமறைவாணனை வண்துவராபதி
மன்னனை ஏத்துமின் ஏத்துதலும்தொழுதாடுமே 10

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால்—(இந்தப்பெண்) நினைத்து வேறோர் தெய்வத்தை வணங்காள் ஸ்ரீ கண்ணபிரானைத் தவிர, நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்—உங்களுடைய உடல் நடுக்கமுறும்படி செய்யப்படுகின்ற தாய்மார்களே! மன்னப்படும்—நிலை நாட்டப்பட வேண்டிய, மறைவாணனை—வேதநாயகனை, வண்துவராபதி மன்னனை—புகழ்மிக்க துவாரகாபுரி மன்னனான ஸ்ரீ கிருஷ்ண

பகவானை, ஏத்துமின்—புகழ்ந்து பரவுங்கள், ஏத்துதலும் தொழுது ஆடுமே—துதித்தலும் வணங்கி ஆடுவீர்களாக.

தாய்மார்களே! ஸ்ரீ கண்ணனை அல்லாமல் வேறோர் தெய்வத்தை தொழமாட்டாள். அப்படியிருக்க நீங்கள் ஓர் குட்டித் தெய்வத்தால் வந்ததென்று தோள்கள் குலைத்துக் கொண்டு கலங்குகிறீர்கள். நினைக்கப்படவேண்டிய வேத நாயகனும் துவாரகாபுரி மன்னனுமான ஸ்ரீ கிருஷ்ண பகவானை ஏத்தி வணங்குகள். ஏத்துவதுடன் குதித்து ஆடிப்பாடுங்கள் எ—று.

4—6—11

தொழுதாடித்தூமணிவண்ணனுக்கு ஆட்செய்துநோய்தீர்ந்த
வழுவாததொல்புகழ் வண்குருகூர்ச்சடகோபன் சொல்
வழுவாதவாயிரத்துள் இவைபத்துவெறிகளும்
தொழுதாடிப்பாடவல்லார் துக்கசீலமிலர்களே 11

தொழுது ஆடித்தூமணி வண்ணனுக்கு ஆட்செய்து—வழிபாடுசெய்து பக்திகொண்டு ஆடி தூய்மையான நீலமணி நிறம் போன்றவனுக்கு அடிமை செய்து, நோய் தீர்ந்த—நோய் நீங்கிய, வழுவாத—குற்றமில்லாத, தொல்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்—நீண்ட புகழுமிக்க சிறப்புடைய குருகூர்ச் சடகோபன், சொல்—சொன்ன, வழுவாத ஆயிரத்துள்—குற்றமற்ற ஆயிரம் பாசுரங்களில், இவைபத்து வெறிகளும்—இந்தப்பத்து வெறியாட்டப் பாசுரங்களும், கொண்டு தொழுது ஆடிப்பாட வல்லார்—வணங்கி ஆடிப்பாட வல்லவர்கள், துக்கசீலம்—வருந்தும்தன்மை, இலர்ஏ—இல்லாதவர்கள் ஆவர், ஏ—அசை.

இந்த பத்துப் பாசுரங்களிலும் அருமருந்து எனக்கூறப் பெற்றிருக்கும் பெருமானை ஏத்தி ஆடிப்பாடினால் துக்கத்தின் சாயலும் இல்லாதவர்கள் ஆவர்.

சீலமில்லாச்சிறியன்

4—7—1

சீலமில்லாச்சிறியனேலும் செய்வினையோபெரிதால்
ஞாலமுண்டாய்ஞானமூர்த்தி நாராயணாவென்றென்று
காலந்தோறும்யானிருந்து கைதலைபூசலிட்டால்
கோலமேனிகாணவாராய் கூவியும்கொள்ளாயே 1

சீலம் இலாச்சிறியனேலும்—நல்லொழுக்கம் இல்லாத சிறியவன் நான் என்றாலும், *செய்வினையோ பெரிதால்*—என்னால் செய்யப்பெறுகின்ற தீய செயல்களோ மிகவும் பெரியவையாதலால், *ஞாலமுண்டாய்*—உலகமுண்டவனே! *ஞானமூர்த்தி*—ஞானத்தின் வடிவமே! *நாராயணா!* என்று என்று, *காலம் தோறும்*—காலம் எல்லாம், *யான்இருந்து*—நான் பிறவிகொண்டு இருந்து, *கைதலை*—தலைமேல் கைகளைத்தூக்கி, *பூசல் இட்டால்*—அலறி அழைத்தால், *கோலமேனி காணவாராய்*—உன்னுடைய அழகிய திருவுடம்பு காணுமாறு தோன்றமாட்டாய், *கூவியும் கொள்ளாயே*—உரக்க அழைத்தும் நீ உன் செவிகளில் கொள்ளமாட்டாய்.

4—7—2

கொள்ளமாளாவின்பவெள்ளம் கோதிலதந்திடும் என்
வள்ளலேயோவையம்கொண்ட வாமனாவோவென்றென்று
நள்ளிராவும்நன்பகலும் நானிருந்தோலமிட்டால்
கள்ளமாயாவுன்னை என்கண்காணவந்தீயாயே 2

கொள்ளமாளா இன்பம்—பெறப்பெறக் குறையாத இன்பம், *கோதில தந்திடும்*—குற்றமில்லாததாகத் தந்திடும் *என் வள்ளலேயோ*—என் உதார குணமுடையவனே, *வாமனாவோ*—என் வாமனனே, *என்று என்று*—என்று கூவிக்கூவி, *நள்ளிராவும் நன்பகலும்*,—நடுஇரவிலும் பகல் முழுவதும், *நான் இருந்து ஓலம் இட்டால்*—நான் உன் நினைவாக கண் துயிலாது ஓ என்று அழைத்தால், *கள்ளமாயா*—சூதுகொண்ட மாயவனே! *உன்னை என் கண் காண வந்து ஈயாயே*—உன்னை (உன்னுடைய சுந்தர ரூபத்துடன்) என் கண்ணால் காண வந்து எனக்கு அருள் புரியாமல் இருக்கின்றாயே.

இன்பம் கொள்ளக்கொள்ளக் குறையாத இன்பம் அளிக்கிறவனே! குற்றமில்லாததாகத் தருகின்றவனே! வரையாது அளிக்கும் என் பெருமானே! அதி ஆச்சரியமான குள்ளமான உருவம் கொண்டு உலகம் அளந்து கொண்டவனே! இரவும் பகலும் உன்னை நான் ஓயாது ஓ என்று உரக்கக் கூச்சலிட்டு அழைக்கின்றேன். அப்பொழுதும் நான் என் கண்ணால் காணுமாறு வராது இருக்கின்றாய்! நீ மாயவனாய் இருப்பதோடு கள்ளத்தனமும் உடையவனாய் இருக்கின்றாயே! உனக்கு இரக்கம் என்பதே இல்லையா! என்று ஆழ்வார் பெருமானார் ஆழ் துயர்கொண்டு அங்கலாய்க்கிறார்.

தாய்ப்பறவை தான் உண்பதற்கு முன் தன் குஞ்சுக்கு அலகில் உணவு இடுமாறு போல மனித உடலெடுத்துள்ள நமக்கு நம் ஆன்மாவுக்கு அரிய உணவாக ஆழ்வார் பெருமானார் உள்ளம் குழைய நைந்து உருகிப்பாடி அருள்கிறார். பாடினார்க்குப் பாவம் தேய்ந்து எம்பெருமான் நெருங்குவாரன்றே! இதில் ஐயமும் உண்டோ!

4—7—3

ஈவிலாததீவினைகள் எத்தனைசெய்தனன்கொல்
தாவிவையம்கொண்டவெந்தாய் தாமோதராவென்றென்று
கூவிக்கூவிநெஞ்சுருகிக் கண்பனிசோரநின்றால்
பாவிநீயென்றொன்றுசொல்லாய் பாவியேன்காணவந்தே 3

ஈவு இலாத—முடிவு இல்லாத, தீவினைகள் எத்தனை செய்தனன்கொல்—கொடிய பாவங்கள் எத்தனை செய்தேனோ, தாவி வையம் கொண்ட எந்தாய்—மூவுலகங்களையும் உன் திருவடிகளால் எட்டி அளந்துகொண்ட என் தந்தையே! தாமோதரா என்று என்று—தாமோதரா என்று சொல்லிச் சொல்லி, கூவிக் கூவி—கூப்பிட்டுக் கூப்பிட்டு, நெஞ்சுருகிக் கண் பனிசோர நின்றால்—உள்ளம் உருகி கண்களில் நீர் சிந்த நின்றால், பாவி நீ என்று ஒன்று சொல்லாய்—நீ பாவம் செய்தவன் என்றாகிலும் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லமாட்டாய், பாவியேன் காண வந்து—பாவியாகிய நான் பார்க்குமாறு என் முன்னால் தோன்றி, கொல் அசைச் சொல்.

அளவில்லாத பாவங்கள் நான் எத்தனை செய்தேனோ எனக்கே தெரியாது. உன் திருவடிகளால் மூன்று லோகங்களையும் எட்டி அளந்துகொண்ட என் தந்தை நீ, கண்ணினுட்சிறுத் தாம்பினால் இடுப்பில் அடையாளம் கொண்ட தாமோதரன் நீ என்று கூவிக்கூவி உள்ளம் உருக அழைத்துக் கண்ணீர் சிந்த

நிற்கின்றேன். அடே நீ மகா பாவம் செய்தவன் என்றுகிலும் என் முன்னால்வந்து ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா? அப்படியாகிலும் நான் உன்னைப் பார்த்துக்கொள்வேனே! என்கிறார் ஆழ்வார் பெருமானார்.

[இப்படி எல்லாம் நமக்குச் சொல்லத் தெரியுமா கரைந்து உருகத் தெரியுமா? நமக்கு இவ்வாறு செய் என்று குழைத்துக் குழைத்து அருமருந்து ஊட்டுகிறார்.]

4—7—4

காணவந்தென்கண்முகப்பே தாமரைக்கண்பிறழ
ஆணிசெம்பொன்மேனியெந்தாய் நின்றருளாயென்றென்று
நாணமில்லாச்சிறுதகையேன் நானிங்கலற்றுவதென்
பேணிவானோர்காணமாட்டாப் பீடுடையப்பனையே 4

ஆணிசெம்பொன் மேனி எந்தாய்—உயர்ந்த பத்தரை மாற்றுத் தங்கம் போன்ற மேனியுடைய என் தந்தையே, காண வந்து என் கண்முகப்பே—நான் பார்க்குமாறு என் முன்னே வந்து, உன் தாமரைக் கண் பிறழ—உன் செந்தாமரை மலர் போன்ற கண்கள் திரளத்திரள முழிக்க, நின்று அருளாய்—நின்று அருள் புரிவாயாக என்று என்று, நாணமில்லாத—வெட்கம் இல்லாத, சிறுதகையேன்—தகுதி என்பது சிறிதும் இல்லாத நான், இங்கு அலற்றுவது என்—இங்கு ஏன் கதற வேண்டும். பேணி—விரும்பி, வானோர் காணமாட்டாப் பீடுடை அப்பனை ஏ—தேவர்களும் காணமுடியாத பெருமையையுடைய பெருமானை ஏ.

எம்பெருமானை நான் என் முன்னே தன் திவ்யமான ரூபத்துடன் வந்து எனக்குக் காட்சி அளிக்குமாறு வேண்டினேன். இது என்ன மதியீனம்! எனக்கு வெட்கம் என்பதில்லை. நான் மிகச் சிறியவன் அப்பெருமானை அழைக்க எனக்கு எந்தத் தகுதியும் கிடையாது. எனக்கு அவரை எந்தையே என்றும் தாமரைக்கண்ணன் என்றும் அழைக்கிற ஒருசிறு தகுதிதான் உண்டு. தேவர்களும் காணமுடியாத பெருமையுடையவன் அப்பெருமான் என்பதை நான் உணரவில்லை என்று தனக்குத் தானே தன் சிறுமையைக் கூறி நொந்துகொள்கிறார் ஆழ்வார் பெருமானார்.

கார்பண்ய தோஷமுடையவனாக தன் சிறுதகைமையை எம்பெருமானிடம் சொல்லி முறையிட்டு அவன் அருள் வேண்டுகிறார். நாமும் எம்பெருமானிடம் நம் குறையைக் கூறி வருந்தி அவன் அருள் பெறல்வேண்டும் என்பது தாத்பர்யம்.

4—7—5

அப்பனேயடலாழியானே ஆழ்கடலேக்கடைந்த
துப்பனே உன்தோள்கள்நான்கும் கண்டிடக்கூடுங்கொலென்று
எப்பொழுதும்கண்ணநீர்கொண்டு ஆவிதுவர்ந்துதுவர்ந்து
இப்பொழுதேவந்திடாயென்று ஏழையேன்நோக்குவனே 5

அப்பனே!—என் தந்தையே! அடல் ஆழியானே!—பகைவர்களை தகைக்கும் வலிமையுடைய சக்ராயுதத்தை உடையவனே! ஆழ்கடலேக் கடந்த துப்பனே!—அமிர்தம் பெறுவதற்காகத் திருப்பாற்கடலேக் கடைந்த வல்லமைகொண்டவனே! உன் தோள்கள் நான்கும் கண்டிடக்கூடுங் கொல் என்று—உன்னுடைய நான்கு தோள் உருவை காணமுடியும் என்று, எப்பொழுதும் கண்ண நீர்கொண்டு—எப்பொழுதும் ஏங்கிய கண்ணனாய், ஆவி துவர்ந்துதுவர்ந்து—பிராணன் காய்ந்து காய்ந்து, இப்பொழுதே வந்திடாய் என்று—நினைக்கின்ற இந்த க்ஷணமே வருக வந்திடுவாயாக என்று, ஏழையேன் நோக்குவன் ஏ—உன்னையில்லாத வறுமையுடையவனாகிய நான் எதிர்பார்க்கிறவனாக இருக்கிறேன்.

எம்பெருமானே! உன்னுடைய நால்தோள் உருவத்தை நான் காணக்கூடும் என்று அழுதவண்ணமாக ஏங்கி என் பிராணன்வாட இப்பொழுதே வந்திடுவாயாக என்று எதிர்பார்த்தவனாக இருக்கிறேன். உன்னை இல்லாததால் ஏழ்மையுள்ளவனாக இருக்கிறேன் எ—று.

இதனால் இறைவனைக் காணவேண்டும் என்ற ஆர்த்தியின் அளவுதான் என்னே! இத்தகையவர்களுக்கு இறைவன் வாராதிருக்க முடியுமோ! இறைவனையே கட்டிப்பிடித்திடுவார்களன்றோ!

4—6—7

நோக்கிநோக்கியுன்னைக்காண்பான் யானெனதாவியுள்ளே
நாக்குநீள்வன்ஞானமில்லை நாள்தோறுமென்னுடைய
ஆக்கையுள்ளுமாவியுள்ளும் அல்லபுறத்தினுள்ளும்
நீக்கமின்றியெங்குநின்றாய் நின்னையறிந்தறிந்தே 6

நோக்கிநோக்கி—உண்மையில் வருவாய் என்றே ஏக்கத்தோடு பார்த்துப்பார்த்து, உன்னைக் காண்பான்—உன்னைப் பார்ப்பதற்காக, யான் எனது ஆவியுள்ளே நாக்கு நீள்வன்

—நான் பெருமூச்சுவிட்டு ஆசையால் நாக்கு நீட்டுவன், ஞானமில்லை—உன்னுடைய அருமை பெருமை தெரியாதவன், நாள் தோறும்—தினந்தோறும், இப்படியாக ஏங்கினேன், என்னுடைய ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும்—என் உடம்பினுள்ளும் என் பிராணன் முழுவதும், அல்லபுறத்தின் உள்ளும்—இவை அல்லாத மற்ற இடங்களிலும், நீக்கம் இன்றி எங்கும் நின்றாய், —இடம் தவறாது எல்லா இடங்களிலும் வியாபித்து நின்றாய், நின்னை அறிந்து அறிந்து ஏ—உன்னைத் விடாது உணர்ந்து காண முயன்றேன்.

எம்பெருமானே! நீ என் ஆவியுள்ளும் உடம்பினுள்ளும் மற்ற எல்லா இடங்களிலும் இடம் தவறாது வியாபித்திருக்கின்றாய் என்பதை உணர்ந்துதான் நான் உன்னைப் பார்க்கமுடியும் என்று பெரியதோர் ஆசைகொண்டு ஏங்கித் தவித்தேன் எனக்கு ஞானமில்லை. நீ வரக்கூடாதா எ—று.

4—7—7

அறிந்தறிந்துதேறித்தேறி யானெனதாவியுள்ளே
நிறைந்தஞானமூர்த்தியாயை நின்மலமாகவைத்து
பிறந்தும்செத்தும்நின்றிடரும் பேதைமைதீர்ந்தொழிந்தேன்
நறுந்துழாயின்கண்ணியம்மா நானுன்னைக்கண்டுகொண்டே 7

அறிந்து அறிந்து தேறித்தேறி—உணர்ந்து உணர்ந்து தெளிந்து தெளிந்து, யான் எனது ஆவியுள்ளே நிறைந்த ஞான மூர்த்தியாயை—என்னுடைய பிராணன் முழுவதும் பரவி நிற்கின்ற ஞான ஸ்வரூபனாகிய உன்னை, நான் நின்மலமாக வைத்து—களங்கம் (குற்றம்) இல்லாதவனாக நான் நினைத்து, பிறந்தும் செத்தும் நின்று இடரும் பேதமை தீர்ந்து ஒழிந்தேன் —பிறப்பும் இறப்பும்கொண்டு தடுமாறும் அஞ்ஞானம் நீங்கப் பெற்றேன், நறுந்துழாயின் கண்ணி அம்மா—மணங்கமழும் துளவமாலை அணியப்பெற்ற அம்மனே, நான் உன்னைக்கண்டு கொண்டே—நான் உன்னை ஞானஸ்வரூபனாகக் கண்டுகொண்டு

நல்ல மணங்கமழும் துழபக்கொத்துகளை அணியப்பெற்ற என் கண்ணனே! உன்னை நான் அறிந்து அறிந்து தெளிந்து தெளிந்து என்னுடைய பிராணன் முழுவதும் நிறைந்த ஞான மூர்த்தியாகிய உன்னை களங்கமில்லாது தூய்மையாக நினைப்பால் நிறுத்திவைத்து பிறப்பும் இறப்பும்கொண்டு தடுமாறும் அஞ்ஞானத்தை நீக்கி ஒழித்தேன் இதை நான் கண்டுகொண்டு இவ்வாறு செய்தேன் எ—று.

4—7—8

கண்டுகொண்டென்கைகளார நின்திருப்பாதங்கள்மேல்
எண்டிசையுமுள்ளபூக்கொண்டு ஏத்தியுகந்துகந்து
தொண்டரோங்கள்பாடியாடச் சூழ்கடல்ஞாலத்துள்ளே
வண்டுழாயின்கண்ணிவேந்தே வந்திடகில்லாயே 8

கண்டுகொண்டு—உன்னை நான் இத்தன்மையன் என்று கண்டுகொண்டு, என் கைகள் ஆர—என் கைகள் பொருந்த, நின் திருப்பாதங்கள்மேல்—உன் திருவடிகள்மேல், எண்திசையு முள்ள பூக்கொண்டு—எட்டுத் திக்குகளிலும் (எல்லா திசை களிலிருந்தும்) உள்ள மலர்களைக் கொண்டுவந்து இட்டு, ஏத்தி —துதித்து, உகந்து உகந்து—மகிழ்ச்சிபொங்க, தொண்ட ரோம்கள்—அடியார்களாகிய நாங்கள், பாடி ஆடச் சூழ்கடல் ஞாலத்துள்ளே—கடலால் சூழப்பெற்ற இவ்வுலகத்தில் பக்தி யால் பாடவும் ஆடவும், வண்துழாயின் கண்ணிவேந்தே! இனிய துழபக்கொத்துக்களை அணிந்த என்பெருமானே! வந்திடகில் லாயே—வந்திட மாட்டாயே. (வராதவனாய் இருக்கின்றாய்)

துழாய்க்கண்ணிப் பெருமானே! நான் எல்லாத் திக்கு களிலும் எங்கெங்கோ இருந்து மலர்களைக்கொண்டுவந்து என் கைகளார பூரணமாக உன் திருவடிகளில் இட்டு உன்னைத் துதித்து மகிழ்ச்சிபொங்க தொண்டர்களாகிய நாங்கள் பாடி ஆட கடலால் சூழப்பெற்ற இந்த பூமியில் நீ வராதவனாய் இருக்கின்றாய். இது என்ன காரணமோ உன்னுடைய எண்ணம் தான் என்னவோ என்று வருந்தியவாறு.

இதனால் எம்பெருமான் நேருக்குநேர் வராவிடினும் நீ செய்யவேண்டிய கடமையாக மலர்கள் கொண்டு அவன் திருவடிகளில் ஆராதனை புரிவதும் துதிப்பதுமாய் இருக்க வேண்டும் எ—று.

4—7—9

இடகிலேனொன்றட்டகில்லேன் ஐம்புலன்வெல்லகில்லேன்
கடவனாகிக்காலந்தோறும் பூப்பறித்தேத்தகில்லேன்
மடவன்னெஞ்சம்காதல்கூர வல்வினையேன்யர்ப்பாய்
தடவுகின்றேனெங்குக்காண்பன் சக்கரத்தண்ணலையே 9

இடகிலேன்—எம்பெருமானுக்கு ஒன்றும் இடாத வன், ஒன்று அட்டகிலேன்—அமுது எதுவும் படைக்க இயலாத வன், ஐம்புலன் வெல்லகில்லேன்—மெய்வாய், கண்,

மூக்கு செவிகளின் இன்பங்களை அடக்கச் சக்தி அற்றவன், கூடவனுகிக் காலந்தோறும்—கடமையுடையவனுகக் காலம் தோறும், பூப்பறித்து ஏத்தகிலேன்—மலர்கள் கொய்து ஆராதித்து வணங்கச் சக்தியற்றவன், மடவன் நெஞ்சம் காதல் கூர—இவ்விதம் மடமையும் கொடுமையும் உடைய உள்ளத்தில் அன்பு உண்டாக, வல்வினையேன்—கொடிய பாவியாகிய நான், அயர்ப்பாய்—மனம் தளர்ந்து, தடவுகின்றேன்—நிரவிப் பார்க்கிறேன், எங்குக் காண்பன்—எங்கே காண்பேன், சக்கரத்து அண்ணலை—சுதர்சன சக்கரம் ஏந்திய திருமாலை.

எம்பெருமானுக்குத் தீர்த்தமோ பழமோ இடாதவன் அமுது எதுவும் படைத்து நிவேதனம் செய்ய இயலாதவன். பூக்கள் கொண்டுவந்து ஆராதிக்கவும் சக்தியற்றவன் ஐம்புலன் களை அடக்கவும் முடியாதவன். ஞானமும் இல்லாது இரக்கமும் இல்லாத எனக்கு எம்பெருமானிடம் சற்றே அன்பு உண்டாக அச்சக்கரத்தண்ணலை எங்குக் காணலாம் என்று சோர்ந்து என் கைகள் நிரவிப்பார்க்கின்றன.

காலமெல்லாம் எம்பெருமானை நினைக்காதவனுயினும் எந்தவிதமான ஆராதனையும் செய்யாதவனுயினும் புலன்களை அடக்கச்சக்தி அற்றவனுயினும் அஞ்ஞானியாயினும் இரக்கமில்லாதவனுயினும் மனம் தளர்ந்துவிட்டாலும் அவன் எங்கே என்று மனதால் தேடும் எண்ணம் உதித்தாலே போதும் அல்லது கைகளால் தடவிப்பார்த்தாலும் போதும் அவனுக்கு எம்பெருமான் அருள்புரிவான் என்றவாறு.

4—7—10

சக்கரத்தண்ணலேயென்று தாழ்ந்துகண்ணீர்ததும்ப
பக்கம்நோக்கிநிற்றலந்தேன் பாவியேன்காண்கின்றிலே
மிக்கஞானமூர்த்தியாய் வேதவிளக்கினை என்
தக்கஞானக்கண்களாலே கண்டுதழுவுவனே 10

சக்கரத்து அண்ணலே என்று—திருமாலே என்று, தாழ்ந்து கண்ணீர் ததும்ப—வருத்தத்தால் மனம் குன்றி கண்களில் நீர்வர, பக்கம் நோக்கி—இடப்புறமும் வலப்புறமுமாக பக்கங்களில் (எம்பெருமானைக் காணலாம்படி) பார்த்து, நின்று அலந்தேன்—நின்று மயங்கினேன், பாவியேன் காண்கின்றிலேன்—பாவியாகிய நான் காணப்பெற்றேன் இல்லை, மிக்க ஞான மூர்த்தியாய வேத விளக்கினை—உயர்ந்த ஞான ஸ்வரூப

ஞன வேதத்தின் விளக்காக உள்ளவனை, என் தக்கஞானக் கண்களாலே கண்டு தழுவுவனே—தகுந்தவையான என்னுடைய ஞானக் கண்களாலே அணைப்பன்.

மனம் குன்றி சக்கரப் பெருமானே! என்று அழுத கண்ணணய் எம்பெருமான் எங்கேயாவது வருவானு என்று பக்கங்களில் பார்த்து மயங்கி நின்றேன். எம்பெருமானைக் காணவில்லை. வேதங்களுக்கு விளக்காக உள்ள ஞான ஸ்வரூபனை நான் தகுந்த ஞானக்கண்கள் கொண்டு அணைப்பேன் எ—று.

ஸ்தூல வடிவமாக எம்பெருமானைக் காணலாம் என்று பார்த்தேன். பார்க்கமுடியவில்லை. அவன் ஞான வடிவினன் வேத விளக்கு. ஆகையால் அவனைத் தகுந்த ஞானக்கண் கொண்டு பார்ப்பன் நான்.

4—7—11

தழுவிநின்றகாதல்தன்னுல் தாமரைக்கண்ணன்தன்னை
குழுவுமாடத்தென்குருகூர் மாறன்சடகோபன் சொல்
வழுவிலாதவொண்தமிழ்கள் ஆயிரத்துளிப்பத்தும்
தழுவப்பாடியாடவல்லார் வைகுந்தமேறுவரே 11

தழுவிநின்ற காதல் தன்னுல் தாமரைக் கண்ணன் தன்னை —தாமரைக் கண்ணனுகிய எம்பெருமானைப் பொருந்திய நிலைத்த அன்பினுல், குழுவுமாடத் தென்குருகூர்மாறன் சடகோபன்—நெருங்கிய மாடங்களையுடைய தென்பாண்டி நாட்டுக் குருகூர் மாறன் சடகோபன், சொல்—சொன்ன, வழுவிலாத —குற்றமில்லாத, ஒண்தமிழ்கள்—சிறந்த பாடல்கள், ஆயிரத்துள் இப்பத்தும்—ஆயிரத்துள் இப்பத்துப் பாசுரங்களும், தழுவிப் பாடவல்லார்—பொருந்தப்பாடவல்லவர்கள், வைகுந்தம் ஏறுவரே—திருமால் உலகமாகிய வைகுந்தத்திற்குச் செல்வர்.

ஏருளுமிறையோனும்

4—8—1

ஏருளுமிறையோனும் திசைமுகனும்திருமகளும்
கூறுளும்தனியுடம்பன் குலங்குலமாவசுரர்களை
நீருகும்படியாக நிருமித்துப்படைதொட்ட
மாறுளன்கவராத மணிமாமைகுறைவிலமே 1

ஏறு ஆளும் இறையோனும்—எருதை வாகனமாகக் கொண்ட சிவனும், திசைமுகனும்—பிரமனும், திருமகளும்—இலட்சுமிதேவியும், கூறு ஆளும் தனி உடம்பன்—ஒவ்வொரு பாகத்தை (பகுதியை) இருப்பிடமாகக்கொண்ட ஒப்பற்ற உடம்பை உடையவன், குலம் குலமா அசுரர்களை—கூட்டம் கூட்டமாக அசுரர்களை (இராக்கதர்களை), நீறு ஆகும்படியாக—பொடி (துகள்) ஆகும்படியாக, நிருமித்து—நிலையாக நிறுத்தி, படைதொட்ட—போர் ஆயுதத்தைக் கையாண்ட, மாறுளன்—பகைவெல்லுகின்றவனாகிய ஸ்ரீராமன் கவராத—என்னைக் கவர்ச்சி கொள்ளாத, மணிமாமை—மேனி நிறம், குறைவிலமே—மிகுதியாக உடையோம்.

நிருமித்துப் படைதொட்டவன்—ஸ்ரீராமன், வில்லை யூன்றி ஒருவனாகவே நின்று அநேக ஆயிரம் இராட்சதர்களை ஒன்றரை முகூர்த்த காலத்தில் துவம்சம் செய்தான்.

மணிமாமை—மேனி நிறம்

ஸ்ரீராமனை நாயகனாக பாவித்துக் பக்திசெய்த ஒரு மகளின் கூற்று இது. மாறுளன் கவராத மணிமாமை—அசுரர்களுக்குப் பகைவனான அந்த ஸ்ரீராமனால் வசீகரிக்கப்படாததால் ஏற்பட்ட நிறம்.

காதல்கொண்ட நாயகி நாயகனிடம் இருந்து பிரிந்திருக்க நேர்ந்தால் அப்பிரிவு வருத்தத்தால் மேனியில் பசலை ஊர்தல் இயற்கை. நாயகனான ஸ்ரீராமனை அடைந்தார்க்குக் குறையே இல்லை. அடையாத எனக்கும் குறையே இல்லை என வருந்துகிறாள். அவன் அனுக்கிரகம் கிடைக்காததினால் பசலை ஊரப்பெற்றேன் என்று வருந்துகிறாள்.

பசலை ஊரப் பெற்றாகிலும் அவனை அடையவேண்டும் எ—று.

4—8—2

மணிமாமைகுறைவில்லா மலர்மாதருறைமார்பன்
அணிமானத்தடவரைத்தோள் அடலாழித்தடக்கையன்
பணிமானம் பிழையாமே அடியேனைப்பணிகொண்ட
மணிமாயன்கவராத மணிமாமைகுறைவிலமே 2

மணிமாமை குறைவில்லா—பொன் நிறம் குறைவில்லாத, மலர் மாதர் உறை மார்பன்—இலட்சுமிதேவி வாசம் செய்யும் மார்பையுடைய திருமால், அணிமானத்தடவரைத் தோள்—அழகும் பெருமையும் உடைய பருத்த மலைபோன்ற புஜங்களையும், அடல் ஆழித்தடக்கையன்—பகைவர்களைக் கொல்லும் தன்மையான சக்கரத்தையுடையகையன், பணிமானம் பிழையாமே—கைங்கர்யப் பெருமை குற்றமற, அடியேனைப் பணிகொண்ட—என்னை அடிமைகொண்ட, மணிமாயன்கவராத மடநெஞ்சால் குறைவிலம் ஏ—நீலமணி வண்ணனான மாயன் கண்ணனால் வசீகரிக்கப்படாத அளவு மடமையுடையவர்களாய் இருக்கின்றோம்.

ஸ்ரீபதியும் சக்ராயுதத்தையுடையவனுமான திருமாலின் அவதாரமான ஸ்ரீகண்ணன் என்னைக் குற்றேவல் புரிய அடிமை கொண்டான். ஆனால் எங்களை ஏற்றுக்கொள்ளும்படியான ஞானமில்லாதவர்களாக இருக்கின்றோமே என்றவாறு.

ஸ்ரீபதி நம்மை ஏற்றுக்கொள்ள கைங்கர்யம் செய்வதோடு நல்ல உள்ளமும் ஞானமும் இருக்கவேண்டும் எ—று.

4—8—3

மடநெஞ்சால்குறைவில்லா மகள்தாய்செய்தொருபேய்ச்சி
விடநஞ்சமுலைசுவைத்த மிகுஞானச்சிறுகுழவி
படநாகத்தணைக்கிடந்த பருவரைத்தோள்பரம்புருடன்
நெடுமாயன்கவராத நிறைவினால்குறைவிலமே 3

மடநெஞ்சால் குறைவில்லா—அறியாமையுடைய, மகள்—பூதகி, தாய்செய்து ஒரு பேய்ச்சி—தாய்போலவே மாற்றுருவம்கொண்ட பேய்த் தன்மையுடைய ஒருவள், விட நஞ்ச முலை சுவைத்த—விஷமுடைய பாலை உண்ட, மிகுஞான குழவி—ஞானம்மிக்க குழந்தை கண்ணன், பட நாகத்து அணைக்கிடந்த—படமுடைய ஆதிசேஷனாகிய படுக்கையில் பள்ளிகொண்ட, பருவரைத்தோள்—பருத்தமலைபோன்ற

தோள்களையுடைய, பரம்புருடன்—புருடோத்தமன்; நெடுமாயன் கவராத நிறைவினால் குறைஇலமே—நெடுமால் ஈர்க்கப்படாத நிறைவுடையவர்களாய் இருக்கிறோம்.

கண்ணன் மாயன் என்ற அறிவில்லாத பூதகி தாய்போல வந்து அவனுடைய விஷப்பாலை உண்ணவைத்தாள். அவன் ஞானத்திற்கு இருப்பிடமானவன். அவன் அப்படித் தெரிந்தும் உண்டான். அவன் புருஷோத்தமன். பாற்கடலில் பள்ளி கொண்டவன். அவன் ஒருத்தி விஷப்பால் கொடுத்தும் உண்டான். அவனுக்கு நம்மிடம் கவர்ச்சியே இல்லை. கவர்ச்சி இல்லாமைதான் நிறையப் பெற்றிருக்கிறோம். எங்களுக்கு அவனுடைய கடைக்கண் பார்வையும் இல்லையே என்றவாறு.

4—8—4

நிறைவினால்குறைவில்லா நெடும்பணைத்தோள்மடப்பின்னை
பொறையினால்முலையணைவான் பொருவிடையேழடர்த்துகந்த
கறையினார்துவருடுக்கை கடையாவின்கழிகோல்கை
சறையினார்கவராத தளிர்நிறத்தால்குறைவிலமே 4

நிறைவினால் குறைவில்லா நெடும்பணைத் தோள்—நிறைந்த குணங்களால் நிறைவுடைய நெடிய பருத்த தோள்களையுடைய, மடப்பின்னை—இளமை பொருந்திய நப்பின்னையின், பொறையினால்—பொறுமையின்பொருட்டு, முலை அணைவான்—அவளை மணப்பதற்கு, பொருவிடை ஏழு அடர்த்து உகந்த—போர்த் தன்மையுடைய எருதுகள் ஏழை அடக்கி மகிழ்ந்த, கறையினார், துவர் உடுக்கை—சிவந்த ஆடையும், கடை ஆவின்—கடைசிப் பசுவை, கழிகோல் கை—ஓட்டுகின்ற கோலைக்கொண்ட கையுடையவனுமான, சறையினார்—பேணாதவர், கவராத—கவர்ச்சியைக் கொள்ளாததனாலாகிய, தளிர்நிறத்தால்—மாந்தளிரின் நிறமாகிய பசலையால், குறைவு இலமே—குறைவில்லாதவர்களாக 'இருக்கிறோம்.

கறையினார்—கரியநிறமுடையவர், சறையினார்—பேணாதவர், ஸ்ரீ கண்ணன்.

பசுக்களை மேய்த்துவிட்டு மாலையில் வீடு திரும்பும்போது கடைசிப் பசுவின் பின் இடுப்பில் சிவந்த ஆடை உடுத்தியவனாய் கையில் பசுக்களை ஓட்டுகின்ற கோலுடன் புழுதி படிந்தமேனியுடன் வருகின்ற ஸ்ரீ கண்ணனால் கவர்ச்சிகொள்ளப்படாது இருக்கின்றேன். அதனாலாகிய விரகதாபத்தால் மார்பில் தளிர் நிறம் (பசலை) பரவுகிறது. அதற்குக் குறைவே இல்லை என்றபடி.

இதனுல் ஸ்ரீ கண்ணனிடம் கொண்ட விரகதாபம் மிக்கு இருக்கிறது. அவன் அருள் கிடைக்கவில்லையே என்கிருள் நாயகி நிலைகொண்ட பக்தையாம் மாது.

இவ்வாருக ஸ்ரீ கண்ணனின் லீலைகளையும் அவன் கோலத்தையும் நினைத்துப் பார்க்க அவனை அடைய பக்தி பெருகும்.

4—8—5

தளிர்நிறத்தால்குறைவில்லாத் தனிச்சிறையில்விளப்புற்ற
கிளிமொழியாள்காரணமாக் கிளரரக்கன்நகரெரித்த
களிமலர்த்துழாயலங்கல் கமழ்முடியன்கடல்ஞாலத்து
அளிமிக்கான்கவராத அறிவினுல்குறைவிலமே **5**

தளிர் நிறத்தால்—(நாயகனைப் பிரிந்து வருந்தும் ஆற்ருமையால் ஏற்படும் நிற மாற்றத்தில், குறைவில்லா—குறைவில்லாத, தனிச் சிறையில் விளப்புற்ற—தனிமையாக (இலங்கைச்) சிறையில் வருந்திய, கிளி மொழியாள்—கிளிபோல் இனிமையாகப் பேசும் சீதாபிராட்டியின், காரணமாக, கிளர் அரக்கன்—போருக்கு எழுந்த அரக்கனுகிய இராவணன், நகர் எரித்த—இலங்கையைச் சுட்டு எரித்த, களிமலர்த்துழாய் அலங்கல்—இனிமையான திருத்துழாய் மாலை, கமழ்முடியன்—மணம் வீசும்படியான முடியுடையவனும், கடல்ஞாலத்து—கடலால் சூழப்பெற்ற நிலவுலகத்து, அளிமிக்கான்—கருணை நிறைந்தவனுன ஸ்ரீ ராமனுல், கவராத—விரும்பப்படாத, அறிவினுல் குறைவிலமே—அறிவுக்குக் குறைவே இல்லை.

இராமனிடம் இருந்து பிரிந்து இலங்கையில் தனிமையாக சிறையில் ஏங்கி தன் மேனி நிறம் மாறப்பெற்ருள். அவள் காரணமாக இலங்கையைப் பாழாக்கிய துழபமுடியுடையவனுகிய ஸ்ரீராமனுல் விருப்பங்கொள்ளாதவர்களாக இருக்கிருேம். நம்முடைய அறிவு அஞ்ஞானந்தான். அதற்குக் குறைவில்லை என்றபடி.

சிறை இருந்தவள் தளிர் நிறத்தில் குறைவில்லை என்பதால் அவளுக்கு இராமனுடைய நினைவாகவே இருந்து ஏக்கம் கொண்டாள் என்பது பிரசித்தம். அவ்வாறு உயிர் தரித்திருந்தது அவன் 'வாராதிருக்கான் வன்மையாளன்' என்ற தளராத நம்பிக்கை கொண்டிருந்தாள் என்பதும் காணக்கிடைக்கிறது. அதற்காக 'ஒராயிரம் கோடி இடர்க்குடையேன்' என்று அவள்

பட்ட துன்பம் அவள் வாயால் அறிகிறோம். இதனால் எம்பெரு மான் நம்மை காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையும் அவனைப் பற்றிய ஞானமும் அதற்கான பக்தியும் இருக்கவேண்டும் என்று அறியப்படுகிறது.

4—8—6

அறிவினால்குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய
நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி
குறியமாணுருவாகிக் கொடுங்கோளால்நிலம்கொண்ட
கிறியம்மான்கவராத கிளரொளியால்குறைவிலமே 6

அறிவினால் குறைவில்லா—குறையாத அறிவுடைய, அகல் ஞாலத்தவர் அறிய—அகன்ற இம்மண்ணுலகில் உள்ள வர்கள் அறிந்துகொள்ளுமாறு, நெறி எல்லாம் எடுத்து உரைத்த—கர்ம ஞான பக்தியோக சாதனங்கள் எல்லாம் விவ ரமாக போதித்தருளிய, நிறை ஞானத்து ஒரு மூர்த்தி—ஒப் பற்ற ஞான வடிவினனான எம்பெருமான், குறியமாணுருவாகி —குள்ளமான பிரம்மச்சரிய வடிவங்கொண்டு, கொடுங்கோ ளால்—இரக்கமில்லாத தன்மைகொண்டு தன் பெரிய திருவடி களால், நிலம்கொண்ட—மூவுலகும் அளந்துகொண்ட, கிறி யம்மான்—மாயனாகிய பெருமானால், கவராத—விரும்பப் படாத, கிளர் ஒளியால் குறைவிலமே—அழகு நிறைந்தவர்க ளாக இருக்கிறோம்.

குள்ள வடிவினனான வாமனமூர்த்தியும் விரும்பாத அழகுடையவர்களாக இருக்கிறோம். அவன் ஒப்பற்ற ஞானஸ்வரூபி. அவனுடைய ஞானம் பெறவேண்டும் நாம் என்றபடி. அதற்காக அவன் ஆன்ம நெறி எல்லாம் எடுத்து உரைத்திருக்கின்றான் என்றவாறு.

4—8—7

கிளரொளியால்குறைவில்லா அரியுருவாய்க்கிளர்ந்தெழுந்து
கிளரொளியவிரணியனது அகல்மார்பம்கிழித்துகந்த
வளரொளியகனலாழி வலம்புரியன்மணிநீல
வளரொளியான்கவராத வரிவளையால்குறைவிலமே 7

கிளர் ஒளியால் குறைவில்லா—கிளர்கின்ற மிக்க சோதியுடன், அரி உருவாய்—நரசிங்க வடிவங்கொண்டு, கிளர்ந்து எழுந்து—கோபத்தோடு தோன்றி, கிளர்ஒளி அவ்

இரணியனது—புகழ்மிக்க அந்த இரணியனுடைய, அகல்மார்பம் கிழித்து உகந்த—அகன்ற மார்பைப் பிளந்து மகிழ்ந்த, வளர் ஒளிய கனல் ஆழி—தீயிற்பொலிகின்ற சுடர் ஆழியையும், வலம்புரியன்—வலம்புரிச் சங்கமுடையவனும், மணிநீல வளர் ஒளியான்—மாணிக்கத்தின் நீலநிறத்து சுடர் ஒளி உடையவனுமான பெருமான் திருமாலால், கவராத—விரும்பப்பெருததால், வரிவளையால் குறைவிலமே—வரிவிளையல்கள் கழன்று விழாமல் அப்படியே இருக்கின்றன.

நரசிங்க அவதாரம்கொண்டு இரணியனது மார்பைப் பிளந்து மகிழ்ந்தவனும் சங்குசக்கரம் ஏந்திய நீலமேனியையுடையவனுமான திருமாலால் விரும்பப்பெருதவளாய் உள்ளேன் என்று காதல்கொண்ட மங்கை நல்லாள் வருந்துகிருள்.

பிரகலாதனுடைய பக்திக்காக அப்பெருமான் வந்தான் நமக்கு அவ்வளவு பக்தி இல்லை. இருந்திருந்தால் நம்கையில் வளைகள் தங்கியிருக்குமா அவை கழன்று விழுந்திருக்குமே என்று பக்திகொள்கிருள்.

ஆக எம்பெருமான் வாராமைக்குக் காரணம் காணலும் பக்திகொள்ளுமாறே. வளையல்களின் மீதுள்ள நினைவுவிட்டு அவனிடமே நினைவுகொள்ளவேண்டுமன்றே என்றவாறும்.

4—8—8

வரிவளையால்குறைவில்லாப் பெருமுழக்காலடங்காரை
எரியழலம்புகவூதி இருநிலமுன்துயர்தவிர்த்த
தெரிவரியசிவன்பிரமன் அமரர்கோன்பணிந்தேத்தும்
விரிபுகழான்கவராத மேகலையால்குறைவிலமே 8

வரிவளையால் குறைவில்லா—பாஞ்சஜன்ய சங்கத்தின் குற்றமில்லாத, பெருமுழக்கால்—பேரொலியால், அடங்காரை—சமாதானமாய்ப் போக ஒத்துவராத கௌரவர்களை, எரி அழல் அம்பு உக ஊதி—நெருப்பைக் கக்கும் அம்புகளை ஒழிந்து போகுமாறு எய்து, இருநிலம் முன்துயர் தவிர்த்த—பெரிய பூ பாரம் தீர்த்த, தெரிவரிய—இத்தகையன் என்று தெரிந்துகொள்வதற்கு அரிதான, சிவன்பிரமன் பணிந்து ஏத்தும்—சிவனும் பிரமனும் வணங்கித் துதிக்கும்படியான, விரிபுகழான்—பரந்த புகழுடைய திருமால், கவராத—விரும்பாததினுல், மேகலையால் குறைவிலமே—இடை ஆபரணம் இடையிலேயே இருக்கப் பெற்றிருக்கிறேம்.

பகைவர்களாகிய துரியோதனுதியர்கள் நடுங்கும்படியாக சங்கநாதம் செய்தும் அவர்கள் சமாதானத்திற்கு வராததால் நெருப்பைக் கக்கும் அம்பு மழை பெய்து அவர்களை அழித்து பூ பாரம் தவிர்த்தவனும் சிவன்பிரனும் துதிக்கும் படியான புகழுடையவனுமான திருமாலால் விரும்பப்படாததால் நாம் இளைக்கவில்லை மேகலையும் இடையலிருந்து நழுவவில்லை எ—று.

விரிந்த புகழையுடைய திருமால் மேகலையைக் கவர்வதில்லை. உள்ளத்தைத்தான் கவர்வான். உள்ளத்தில் காதல் இல்லை ஆகையால் அவன் கவரவில்லை: ஆகையால் உள்ளத்தால் சிந்திக்கவேண்டும் என்றவாறு.

இடைக்கு மேகலை அழகு செய்கிறது. ஆனல் அந்த அழகைக்காண ஸ்ரீ கண்ணன் இல்லையே! ஆனல் அவனுடைய அழகில் நாம் ஈடுபட்டிருந்தால் இந்த மேகலை அவனுடைய அழகைக்கண்டு நாணி அப்பொழுதே கீழே விழுந்திருக்குமே நாம் அவனை நினையாது உடல் மெலியாது இருக்கின்றேமே! நம்முடை நிறைவு குறைவே!

4—8—9

மேகலையால்குறைவில்லா மெலிவுற்றவகலல்குல்
போகமகள்புகழ்த்தந்தை விறல்வாணன்புயம்துணித்து
நாகமிசைத்துயில்வான்போல் உலகெல்லாம்நன்கொடுங்க
யோகணைவான்கவராத உடம்பினுல் குறைவிலமே 9

மேகலையால் குறைவில்லா—குறைவில்லாத இடை ஆபரணத்தால், மெலிவுற்ற அகல் அல்குல்—பாரம் தாங்காது மெலிந்துபோன இடையையுடைய, போகமகள்—செல்வமகள் உஷாவின், புகழ்த் தந்தை விறல்வாணன் புயம் துணித்து—புகழ்மிக்க தந்தையும் பலம்பொருந்தியவனுமான வாணுசூரனின்தோள்களை வெட்டி, நாகமிசை துயில்வான்போல்—ஆதிசேஷன்மீது கண்வளர்கின்றவன்போல், உலகு எல்லாம் நன்குஒடுங்க, உலகங்கள் எல்லாம் வயிற்றில் அடங்குமாறு, யோகு அணைவான்—யோகத்தில் ஆழ்ந்தவனுகிய திருமால்லால், கவராத உடம்பினுல் குறைவிலமே—விரும்பப்படாத உடம்பு உடையவர்களானேம். அவனுக்காக இந்த உடம்பு மெலியாதவர்களாக உள்ளோம் என்றவாறு.

வல்லமைமிக்க வாணாசூரனின் செல்வ மகள் உஷாவின் இடையும்கூட மேகலையின் பாரத்தால் இளைத்துப்போயிற்று. ஆனால் நம்முடைய இடை அப்படியும் இளைக்கவில்லை. அந்த வாணாசூரனின் தோள்களைத் துணித்த பெருமையையுடைய பாற்கடல் அண்ணல் ஸ்ரீமன் நாராயணனுக்காக இளைக்கவேண்டிய உடல் இளைக்காததாய் இருக்கிறோம் எ—று.

பாற்கடலில் நித்திரை கொள்கின்றவனைப்போல உலகங்களை உள் ஒடுக்கி யோகத்திலே ஆழ்ந்தவனாக இருக்கிறான் வல்லமை பொருந்திய வாணாசூரனின் தோள்களைத் துணித்த ஸ்ரீமன் நாராயணன், அவனுக்கு இந்த உடலால் பக்தி செய்ய வேண்டாமா? உடலைப் பருக்க வளர்ப்பதால் என்ன பயன்? என்றவாறு.

4—8—10

உடம்பினால்குறைவில்லா உயிர்பிரிந்தமலைத்துண்டம்
கிடந்தனபோல்துணிபலவா அசுரர்குழாம்துணித்துகந்த
தடம்புனலசடைமுடியன் தனியொருகூறமர்ந்துறையும்
உடம்புடையான்கவராத உயிரினால்குறைவிலமே 10

உடம்பினால் குறைவில்லா—நன்கு வளர்க்கப்பெற்று தடித்த உடம்புகளைக்கொண்டு, உயிர் பிரிந்த—இறந்துபோன, மலைத்துண்டம் கிடந்தனபோல்—மலைப்பகுதிகள் சிதறுண்டு கிடந்தனபோல், துணிபலவா—துண்டங்கள் பலப்பலவாக, அசுரர் குழாம் துணித்து உகந்த—இராட்சதர் கூட்டங்களைத் துண்டுதுண்டாக அறுத்து வீழ்த்தி மகிழ்ந்த, தடம்புனலசடை முடியன்—கங்கையைத் தன் சடாபரரத்திலே தாங்கிய சிவபிரான், தனி ஒரு கூறு அமர்ந்து உறையும்உடம்புடையான்—பிரத்தியேகமாக ஒரு பாகத்திலே வீற்றிருக்கப்பெற்றிருக்கும் திருமேனி உடையவனான திருமாலால், கவராத—அருள் பெறாத, உயிரினால்குறைவு இலமே—உயிரையுடையவர்களாய் இருக்கிறோமே.

மலைப்பகுதிகள் சிதறுண்டு கிடப்பனபோல் கிடக்கும்படி அசுரர்களின் உடம்புகளைத் துணித்துத் தகைத்தவனும் கங்கையைச் சடையில் தாங்கியவனான சிவபிரான் தன்மேனியில் ஒரு பாகத்தில் அமரப்பெற்றவனுமான எம்பெருமான் திருமாலின் அருள்பெறாத சீவன்களாய் இருக்கிறோம். அருள்பெறாததில்தான் குறைவில்லாதவர்களாக இருக்கிறோம் எனக் குறையை நினைத்து வருந்தியவாறாகும்.

சிவளை மார்பின் ஒரு கூறாக வைத்திருக்கிற ஸ்ரீமன் நாராயணனின் பக்தியால் கவரப்படாத உயிர் ஒரு உயிரா? அவனால் கவராத உயிரைத் தரித்திருக்கிறோமே. எங்கள் வாழ்வு ஒரு வாழ்வா என்று வருந்துகிறாள் தோழியரோடு சேர்ந்த பெண்ணாள் ஒருவள்.

4—8—11

உயிரினால்குறைவில்லா உலகேழ்தன்னுள்ளொடுக்கி
தயிர்வெண்ணெயுண்டானைத் தடங்குருகூர்ச்சடகோபன்
செயிரில்சொல்லிசைமாலை ஆயிரத்துளிப்பத்தால்
வயிரம்சேர்பிறப்பறுத்து வைகுந்தம்நண்ணுவரே 11

உயிரினால் குறைவில்லா உலகு ஏழ்—அநேக கோடி சீவன்களையுடைய உலகங்கள் ஏழையும், தன்னுள் ஒடுக்கி—தன் வயிற்றுள் அடக்கி, தயிர் வெண்ணெய் உண்டானை—தயிரையும் வெண்ணெயையும் உண்ட ஸ்ரீ கண்ணபிரானைப்பற்றி தடங்குருகூர்ச் சடகோபன்—நீர்நிலைகளையுடைய குருகூர்ச்சட கோபன், செயிரில் சொல்—குற்றம் இல்லாது சொன்ன இசை மாலை—பாசுரங்கள், ஆயிரத்துள் இப்பத்தால்—ஆயிரத்தில் இந்தப் பத்துப் பாசுரங்கள் பயில்வதால், வயிரம்சேர்—வயிரம்போல் அறுக்கமுடியாத, பிறப்பறுத்து வைகுந்தம் நண்ணுவர் ஏ—திருமால் உலகம் அடைவர்.

நண்ணாதார்முறுவலிப்ப

4—9—1

நண்ணாதார்முறுவலிப்ப நல்லுற்றார்கரைந்தேங்க
எண்ணாராத்துயர்விளைக்கும் இவையென்னவுலகியற்கை
கண்ணாளாகடல்கடைந்தாய் உனகழற்கேவரும்பரிசு
தண்ணாவாதடியேனைப் பணிகண்டாய்சாமாறே 1

நண்ணாதார்—வேண்டாதவர்கள், முறுவலிப்ப—ஏளனமாக நகைக்க, நல் உற்றார் கரைந்து ஏங்க—அன்புள்ள உறவினர்கள் உள்ளம் உருகிவருந்த, எண் ஆராத் துயர் விளைக்கும் இவை—எண்ணிமுடியாத துன்பங்களைத் தரும் படியான இப்படிப்பட்டவை, என்ன உலக இயற்கை—உலக இயற்கைகளா? விசித்திரமாக உள்ளனவே! கண்ணாளா கடல் கடைந்தாய்—கண்போன்றவனே! திருப்பாற் கடலைக் கடைந்த வனே! உன்—உன்னுடைய, கழற்கு—திருவடிகளுக்கு, ஏஅரும் பரிசு—உயர்ந்ததும் அரியதுமான பெருமை, தண் ஆவாது—தாழ்வு ஆகாமல், அடியேனை—அடியவனாகிய என்னை, சாமாறு—இறக்கும்வரை, பணி கண்டாய்—தொண்டு புரியும்படி செய்வாய். கண்டாய்—வியப்புச்சொல்.

ஒருபால் வேண்டாதவர்கள் ஏளனமாகச் சிரிப்பதுவும் மற்றொருபால் அன்புடையார் உள்ளம் உருகி வருந்துவதுமான துன்ப நிகழ்ச்சிகள் மனதிற்குச் சகிக்கமுடியாத வருத்தத்தை தருவன. இத்தன்மையான நிகழ்ச்சிகள் உலக இயற்கை என்று எப்படிக் கூறுவது? அன்புடைய பெருமானே! நீ பாற்கடல் கடைந்தவன். உனக்குத் தெரியாதா அதன் மர்மம், உன்னுடைய திருவடிகளுக்கு உயர்ந்த அரிய பெருமை அடியவனாகிய என்னை தாழ்வு இல்லாமல் சாகும்வரையும் பணியுமாறு செய்வாய்.

பெருமானே! உலக இயற்கைகளைக் கண்டால் ஒரே நிகழ்ச்சியைக் கண்டு சிலர் சிரிக்கிறார்கள் சிலர் அழுகிறார்கள். உன்னுடைய பெருமையை அறியாதவர்கள்தான் இப்படிச் செய்வார்கள். எனக்கு உன் பெருமையை அறியுமாறு உனக்கே சாகுமளவும் பணிபுரியுமாறு ஏவல் கொள்க. அது உன் திருவடிகளுக்கே உரியதான பெருமையாகும்.

ஆக மற்றவர்களும் இதை உணர்ந்து நடந்துகொள்வார்களாக என்றவாறு.

4—9—2

சாமாறும்கெடுமாறும் தமருற்றார்தலைத்தலைப்பெய்து
ஏமாறிக்கிடந்தலற்றும் இவையென்னவுலகியற்கை
ஆமாறென்றறியேன்நான் அரவணையாயம்மானே
கூமாறேவிரைகண்டாய் அடியேனைக்குறிக்கொண்டே 2

சாமாறும் கெடுமாறும்—சாகின்றபொழுதும் துன்புறும் பொழுதும், தமர் உற்றார்—தம்மைச் சேர்ந்த உறவினர்கள், தலைத்தலைப்பெய்து—வந்துவந்து, ஏமாறி—இப்படி ஆய்விட்டதே என்று துன்பம் கொண்டவர்களாய், கிடந்து அலற்றும்—போகாது அலட்டிக்கொள்கின்ற, இவை—இத்தன்மைகள், என்ன உலகு இயற்கை—விசித்திரமாக இருக்கின்றனவே, இவை யாருடைய படைப்பும் அல்லாது இயற்கையாக நடைபெறுவனவா? ஆறு ஒன்று அறியேன் நான்—இதைத் தவிர்த்து நிலையான நல்லவழி ஒன்று ஆகும் வகை அறியாதவனாய் இருக்கிறேன் நான், அரவணையாய்—பாம்பைப் படுக்கையாக உடையவனே! அம்மானே—தந்தையே! கூமாறே—உன்னைக் கூவி அழைக்கும்படியே, விரைகண்டாய்—ஆவல் கொண்டாய், அடியேனைக் குறிக்கொண்டே—என்னைக்குறித்து வைத்து, விரை—விரைவு (கடைக்குறை) இங்கு ஆவல் என்று பொருள். ஒருவர் சாகும்பொழுதும் கெடும்பொழுதும் உற்றார் உறவினர்கள் வந்துவந்து இப்படி ஆய்விட்டதே என்று வீடு திரும்பாது அலட்டிக்கொள்வார்கள். இவை எல்லாம் என்ன இயற்கைகள்; உண்மை அன்பினால் அன்று. ஆனால் நடப்பது இதுதான். இது என்ன இயற்கை என்று ஆழ்வார் பெருமானாரே கேட்கிறார். இதை மாற்றுவதற்கான வழி ஒன்றும் காணவில்லை. அதை நான் அறியாதவனாய் இருக்கிறேன். ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டவனே! பெருமானே! என்னைச் சாதனமாக (கருவியாகக்)கொண்டு உன்னைக் கூவி அழைக்குமாறே என்னைப் பணிகொண்டாய்.

உன்னை ஓயாது அழைத்து பக்தி செய்யுமாறே என்னை அமைத்திருக்கிறாய். ஏமாறிக் கிடந்து அலற்றும் இயற்கையை மாற்ற நான் அறியேன்.

4—9—3

கொண்டாட்டும்குலம்புனைவும் தமருற்றார்விழுநிதியும்
வண்டார்பூங்குழலாளும் மனையொழியவுயிர்மாய்தல்
கண்டாற்றேனுலகியற்கை கடல்வண்ணாவடியேனை
பண்டேபோல்கருதாது உன்னடிக்கேகூய்ப்பணிகொள்ளே 3

கொண்டாட்டும் குலம்புனைவும்—குலாவுவதுவும் உறவு கொள்வதுவும், தமர்—தம்மைச் சார்ந்தவர்களின், உற்றார்—உறவினர்கள், விழு நிதியும்—சிறந்த செல்வமும், வண்டு ஆர் பூங்குழலாளும்—வண்டு மொய்க்கும்படியான பூக்களை அணிந்த கூந்தலையுடையவளும், மனைஒழிய உயிர்மாய்தல்—வீடுவாசல் விட்டு இறந்துபோதல், கண்டு ஆற்றேன் உலகு இயற்கை—ஆகிய உலகத்து இயற்கையைக் கண்டு சகிக்கமாட்டேன் நான். கடல் வண்ணா—கடல்போலும் நிறத்தையுடையவனே! அடியேனை, பண்டேபோல் கருதாது—முன்போலவே என்னைக் கருதாமல் உன் அடிக்கே—கூய்ப்பணி கொள்ளே—உன்னுடைய திருவடிகளில் அடையும்படிசெய்து என்னை அடிமை கொள்வாயாக.

கொண்டாட்டங்கள் என்ன! உறவுமுறை கொள்வது என்ன! தம்மைச் சேர்ந்தவர்களின் குபேர செல்வம் என்ன! அழகிய கூந்தல் மனையாளும் வீடுவாசலும் துறக்க உயிர் பிரிந்து போதலாகிய உலக இயற்கையை கண்டு என்னால் சகிக்கமுடியாது. அடியேனை முன்போல அஞ்ஞானியாகக் கருதாது உன் திருவடிகளுகளுக்குப் பணிபுரிய என்னை அழைத்துக் கொள்வாயாக என்றவாறு.

4—9—4

கொள்ளென்றுகிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம்நெருப்பாக
கொள்ளென்றுதமமூடும் இவையென்னவுலகியற்கை
வள்ளலேமணிவண்ணா உனகழற்கேவரும்பரிசு
வள்ளல்செய்தடியேனை உனதருளால்வாங்காயே 4

கொள் என்று கிளர்ந்து எழுந்த பெருஞ் செல்வம்—இந்தா எடுத்துக் கொள்க எவ்வளவு வேண்டுமானாலும் என்று அதாக வந்தடைந்த பெரிய செல்வம், நெருப்பாக—நெருப்பாக மாறி, கொள் என்று தமமூடும்—கொள்க என்று ஈமக்கியையில் தம்மைபற்றி எரிந்து மூடும்படியான இவை என்ன உலகத் தன்மைகள், உனகழற்குஏ அரும் பரிசு—உன்திருவடிகளுக்கே பொருந்திய அரிய தன்மை, வள்ளல் செய்து—தரும குணம் கொண்டு, அடியேனை உனதருளால் வாங்காயே—அடியவனாகிய என்னை உன் கருணையால் அழைத்துக்கொள்வாயாக.

தம்மை மயங்கவைக்கும் செல்வமும் வேண்டாம் அதனால்வரும் கேடும் வேண்டாம் கருணைகொண்டு அவற்றினின்றும் என்னை விலக்கி உன்னை அடையும்படி செய்வாயாக.

4—9—5

வாங்குநீர்மலருகில் நிற்பனவும்திரிவனவும்
ஆங்குயிர்கள்பிறப்பிறப்புப் பிணிமூப்பால்தகர்ப்புண்ணும்
ஈங்கிதன்மேல்வெந்நரகம் இவையென்னவுலகியற்கை
வாங்கெனைநீமணிவண்ணா அடியேனைமறுக்கேலே 5

வாங்கு நீர்—நீரால் சூழப்பெற்ற, மலர் உலகில்—பரந்த இடத்தையுடைய உலகத்தில், நிற்பனவும் திரிவனவும் ஆங்கு உயிர்கள்—இருந்த இடத்திலேயே உள்ளபடி உள்ளனவயாயினும் இடம் விட்டு இடம் செல்லுகின்றவையாயினும் உயிர்கள் எல்லாம், பிறப்பு இறப்பு பிணி மூப்பால் தகர்ப்பு உண்ணும்—பிறத்தலும் இறத்தலும் நோய் நொடி முதுமையால் நசுக்குறுதலும், ஈங்கிதன்மேல் வெந்நரகம்—இதற்கு மேலாக நரகமடைகின்ற கொடிய துன்பமும் ஆகிய இவை என்ன உலகத்தியற்கைகள், வாங்கு எனை நீ மணிவண்ணா—நீல மணிபோன்றவனே! நீ என்னை அழைத்துக்கொள்க. அடியேனை மறுக்கேல்—என்னை வேண்டாம் என்று தள்ள வேண்டாம்.

கடலால் சூழப்பெற்ற உலகத்தில் இருக்கின்ற இடத்திலேயே உள்ளனவாயினும் திரிகின்றவாயினும் எல்லா உயிர்களும் பிறப்பு இறப்பு பிணி முதுமையாகிய இவற்றால் அலைக்கழிக்கப்பெறுதலும், இதற்குமேல் கொடிய நரகமும் உண்டு என்றால் இவ்வுலகத் தன்மைகளைப்பற்றி என்ன சொல்வது! இவற்றிற்கெல்லாம் என்னை ஆளாக்க வேண்டாம், மணிவண்ணனே! என்னை நீ மறுக்காமல் அழைத்துக் கொள்வாயாக எ—று.

யாக்கை நிலையாமையும் உயிர்கள் படுகின்ற அவஸ்தையையும் கண்டால் தரிக்கமுடியாது, பெருமானே உடனே என்னை ஈர்த்துக்கொள் என்கிறார் ஆழ்வார் பெருமானார். வாங்கு எனை நீ மணிவண்ணா என்ற விரைவால் உடனே அவனைச் சரணடைய வேண்டும் எ—று.

4—9—6

மறுக்கிவல்வலைப்படுத்திக் குமைத்திட்டுக்கொன்றுண்பர்
அறப்பொருளையறிந்தோரார் இவையென்னவுலகியற்கை
வெறித்துளபமுடியானே வினையேனையுனக்கடிமை
அறக்கொண்டாய் இனியென்னாரமுதே கூயருளாயே 6

மறுக்கி—ஓடுகின்ற பிராணிகளைத் தடுத்து, வல்வலைப் படுத்தி—கொடிய வலையால் அகப்படுத்திப் பிடித்து, குமைத் திட்டு—துன்பப்படுத்தி, கொன்றுண்பர், அறப்பொருளை அறிந்து ஓரார்—உயிர்வதை கூடாது என்ற தருமநெறியை உணர்ந்து சிந்திக்கமாட்டார்கள். இவை என்ன உலக இயற் கை—இவற்றை உலக இயற்கை என்று கூறுவதா? இது நியாய மற்றது அன்றோ! வெறித்துளபமுடியானே—வாசனைமிக்க துள பத்தை முடியில் கொண்டவனே! வினையேனை—பாவம் செய்த வனாகிய என்னை, உனக்கு அடிமை அறக்கொண்டாய்—உனக்கு எல்லாம் துறந்த பூரணமான தொண்டனாகக்கொண்டாய். என் ஆரமுதே—எனக்கு பூரணமான அமிர்தமானவனே, இனி கூய் அருளாயே—இனி கருணை புரிந்து என்னை நீ அழைத்துக் கொள்வாயாக.

ஓடுகின்ற பிராணிகளை வலைகளைக்கொண்டு தடுத்துப் பிடித்து அவற்றைத் துன்பப்படுத்திக் கொன்றுண்பர். நியா யமா அநியாயமா என்று உணரமாட்டார்கள். இதை உலக இயற்கை என்றால் என்னென்று சொல்வது மனசாட்சிக்கு ஒத்துக்கொள்ளவில்லை எ—று.

4—9—7

ஆயேயிவ்வுலகத்து நிற்பனவும்திரிவனவும்
நீயேமற்றொருபொருளும் இன்றிநீநின்றமையால்
நோயேமூப்பிறப்புப் பிணியேயென்றிவையொழிய
கூயேகொள்ளடியேனைக் கொடுவுலகம்காட்டேலே 7

ஆயே!—என்ன ஆச்சரியம்!

இவ்வுலகத்து நிற்பனவும் திரிவனவும் நீயே—இவ்வுல கத்து அசையாப் பொருள்களும் அசைகின்றனவும் நீயாகவே அமைந்திருக்கிறாய், மற்றொரு பொருளும் இன்றி நீ நின்றமை யால்—வேறு எந்த ஒரு பொருளும் இல்லாது நீயே இருப்பதால் நோயே மூப்பு இறப்புப் பிணியே என்றிவை ஒழிய—பிறவித் துன்பமாகிய முதுமையும் மரணமும் வியாதியும் ஆகிய இவை நீங்குமாறு, கூயே கொள் அடியேனை—அழைத்துக்கொள்க என்னை.

உயிராகிய என் பெருமானே! இப் பிரபஞ்சத்திலுள்ள அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் எல்லாம் நீயே, உன்னைத்தவிர வேறு ஒரு பொருளும் இல்லை. ஆதலால்

பிறவித் துன்பங்களாகிய பிணி மூப்பு இறப்பு ஒழிய நீ என்னை அழைத்துக்கொள்க. கொடிய உலகத்தைக் காட்டாதே எ—று.

எம்பெருமானை அடைவார்க்குக் கொடிய உலகம் இல்லை. இல்லை என்பது துணிவு.

4—9—8

காட்டிநீகரந்துமிழும் நிலநீர்தீவிசும்புகால்
ஈட்டிநீவைத்தமைத்த இமையோர்வாழ்தனிமுட்டை
கோட்டையினில்கழித்து என்னையுன்கொழுஞ்சோதியுயரத்து
கூட்டரியதிருவடிக்கள் எஞ்ஞான்றுகூட்டுதியே 8

காட்டி—(முதலில்) தோற்றுவித்து, நீ—எம்பெருமானாகிய நீ,கரந்து உமிழும்—மறைத்துவைத்து வெளிப்படுத்தும், நிலம் நீர் தீ விசும்பு காற்று—ஐம்பெரும் பூதங்களையும், ஈட்டி நீ வைத்து அமைத்த இமையோர் வாழ் தனி முட்டை கோட்டையினில்—நீ சேர்த்துவைத்து நிருமித்த தேவர்கள் வாழும் படியான ஒப்பற்ற வானுலகமாகிய கோட்டையில், கழித்து—அமர்ந்திருந்து, என்னை—அடியேனை, உன் கொழும் சோதி உயரத்து—உன் பரஞ்சோதி பதத்திற்கு, கூட்டரிய திருவடிக்கள்—சேர்வதற்கு அரிய உன் திருவடிகள் காட்டி, எஞ்ஞான்று கூட்டுதியே—எப்பொழுது அணைத்துக்கொள்வாயோ.

எம்பெருமானே! நீ ஐம்பெரும் பூதங்களாகிய நிலம் நீர் தீ காற்று ஆகாசம் ஆகியவைகளைச் சேர்த்து இமையவர்கள் வாழும்படியாக ஓர் ஒப்பற்ற வானுலகைச் சிருஷ்டித்தாய். அதில் நீ மகிழ்வுகொள்ள என்னை உன் பரஞ்சோதிப்பதமாகிய சேர்வதற்கு அரிய திருவடிகளில் எப்பொழுது சேர்த்துக் கொள்வாயோ! நான் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன் எ—று.

4—9—9

கூட்டுதிநின்குரைகழல்கள் இமையோரும்தொழாவகைசெய்து
ஆட்டுதிநீயரவணையாய் அடியேனுமஃதறிவன்
வேட்கையெல்லாம்விடுத்து என்னையுனதிருவடியேசுமந்துழல
கூட்டரியதிருவடிக்கள் கூட்டினைநான்கண்டேனே 9

அரவணையாய்!—சேஷசயனனே இமையோரும் தொழா வகைசெய்து—தேவர்களும் உன்னை வணங்க முடியாதவாறு, ஆட்டு—ஆட்டி (அலைய) வைக்கின்றாய், அடியேனும் அஃது அறிவன்—உன் தொண்டனாகிய நான் அதை அறிவேன், வேட்கை எல்லாம் விடுத்து—என் உலகப் பற்றுக்களை எல்லாம் விடுத்து, என்னை உன் திருவடியே சுமந்துழல கூட்டுதி நின் குரை கழல்—என்னை என்றும் உன்னோடு இருக்குமாறு உன் ஒலிக்கின்ற வீரக்கழல்களோடு சேர்ப்பாயாக,

பாற்கடலில் ஆதிசேஷனாகிய, படுக்கையில் பள்ளி கொண்ட பெருமானே! இமையவர்களும் உன்னை வணங்கமுடியாதவாறு அலைய வைக்கின்றாய். அதை நான் அறிவேன். என்றாலும் என்னை நீ உன் திருவடிகளில் சேர்த்துக்கொள்வாயாக.

4—9—10

கண்டுகேட்டுற்றுமோந்துண்டுழலும் ஐங்கருவி
கண்டவின்பம் தெரிவரியவளவில்லாச்சிற்றின்பம்
ஒண்டொடியாள்திருமகளும் நீயுமேநிலாநிற்ப
கண்டசதிர்கண்டொழிந்தேன் அடைந்தேனுன்திருவடியே 10

கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங் கருவி கண்ட இன்பம்—மெய்வாய் மூக்கு கண் செவி ஆகிய ஐம்புலன்களால் கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு களிக்கும் இன்பம், தெரிவு அரிய அளவில்லாச் சிற்றின்பம்—இவ்வளவுதான் என்று அளவிட்டு அறியமுடியாத நிலையாத இன்பத்தை, ஒண்தொடியாள் திருமகளும் நீயும்ஏ நிலாநிற்ப—அழகிய வளையல்களை யணிந்த இலக்குமியும் பெருமானாகிய நீயும் ஆகிய இருவர் மாத்திரமே நித்யமாக நிலைத்து நிற்பதை (உணர்ந்து), கண்ட சதிர்—அனுபவித்த நன்மையை, கண்டொழிந்தேன்—அனுபவித்து நீக்கினேன், அடைந்தேன் உன் திருவடியே—உன் திருவடிகளையே பற்றினேன், நிலாநிற்ப—நிலைத்துநிற்க, சதிர்—நன்மை.

ஐம்புலன்களால் அனுபவித்த இன்பம் இவ்வளவுதான் என்று அளவிடமுடியாதவை. அவை கீழான இன்பங்களே. ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த இலட்சுமி தேவியும் எம்பெருமானாகிய நீயும் இருவருமே நித்யமாக நிலைத்து நிற்

கின்றவர்கள் ஆதலால் சிற்றின்பங்கள் கண்ட நன்மையை விட்டு ஒழித்தேன். உன் திருவடிகளையே தஞ்சம் என்று அடைந்தேன்.

என்னை நீ ஏற்றுக்கொள்வாயாக.

4—9—11

திருவடியைநாரணனைக் கேசவனைப்பரஞ்சுடரை
திருவடிசேர்வதுகருதிச் செழுங்குருகூர்ச்சடகோபன்
திருவடிமேலுரைத்ததமிழ் ஆயிரத்துளிப்பத்தும்
திருவடியேயடைவிக்கும் திருவடிசேர்ந்தொன்றுமினே 11

ஸ்ரீமன் நாராயணனும் கேசவனும் பரஞ்சோதியுமான எம்பெருமானின் திருவடிகளைச் சேரவேண்டும் என்று எண்ணி, திருவடிமேல் உரைத்த தமிழ்—திருவடிகளின் பெருமையைப் பற்றி சடகோபன் கூறிய தமிழ்ப் பாசுரங்கள் இப்பத்தும், திருவடியே அடைவிக்கும்—எம்பெருமானின் திருவடிகளையே அடையும்படி செய்யும். திருவடி சேர்ந்து ஒன்றுமின்ஏ—திருவடிகளை அடைந்து ஐக்கியமாவீர்களாக என்றபடி ஏ—அசை.

ஒன்றுந்தேவுமுலகும்

4—10—1

ஒன்றுந்தேவுமுலகுமுயிரும்மற்றும் யாதுமில்லா
வன்று நான்முகன்தன்னொடு தேவருலகோடுயிர்படைத்தான்
குன்றம்போல்மணிமாடநீடு திருக்குருகூரதனுள்
நின்றவாதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்நாடுதிரே 1

ஒன்றும் தேவும்—பொருந்திய தேவனும், உலகும் உயிரும்—பிரபஞ்சமும் உயிர் இனங்களும், மற்றும் யாது மில்லா அன்று—தவிர உயிரில்லாப் பொருள்களும் எதுவுமே இல்லாத (சூன்யமே நிலவிய) காலத்து, நான் முகன் தன்னொடு தேவர் உலகோடு உயிர் படைத்தான்—பிரமனையும் பிரமனைக்கொண்டு தேவர்களையும் உலகையும் உயிரினங்களை யும் படைத்தான், குன்றம்போல் மணிமாட நீடுதிருக்குருகூர் அதனுள் நின்ற ஆதிப்பிரான்—மலைக்குன்றுகள் போல அழகிய மாடமாளிகைகளை உடைய சிறந்த குருகூரில் எழுந்தருளியிருக் கின்ற தேவாதிதேவனான ஆதிப்பிரான், நிற்க—இருக்க, மற்றைத்தெய்வம் நாடுதிரே—இதர தெய்வங்களை நாடுகிறீர் களே! என்னசொல்வது!

மாடமாளிகைகள் சூழ்ந்துள்ள சிறப்புமிக்க குருகூரில் எழுந்தருளியிருக்கின்ற தேவனான ஆதிப்பிரான் யாருமில்லை ஆதி முதலில் இப்பிரபஞ்சத்தைப் படைத்த ஆதிமுதல் தேவனே ஆவன். அப்பெருமானை விட்டு இதர தெய்வங்களை நாடுவது ஏன் என்றவாறு. அவனே பிரமனையும் தேவர்களை யும் தேவலோகத்தையும் எல்லா ஜீவப் பிராணிகளையும் படைத்தவன் என்கிறார் ஆழ்வார் பெருமானார். இதற்கு வேறு சான்று வேண்டியதே இல்லை.

4—10—2

நாடிநீர்வணங்கும்தெய்வமும் உம்மையும்முன்படைத்தான்
வீடில்சீர்ப்புகழாதிப்பிரான் அவன்மேவியுறைகோயில்
மாடமாளிகைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை
பாடியாடிப்பரவிச்சென்மின்கள் பல்லுலகீர்பரந்தே 2

விடில் சீர்ப்புகழ் ஆதிப்பிரான்—அழியாத சிறந்த புகழையுடைய (உலகப் படைப்புக்கே) ஆதியாகிய தேவன், நாடிநீர் வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான்—மானிடர்களாகிய நீங்கள் ஆராய்ந்து தேடி வணங்கும்படியான தேவர்களையும் மானிடர்களாகிய உங்களையும் முதன் முதலில் படைத்தான், அவன் மேவி உறைகோயில்—அப்பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற கோயில் உள்ள, மாட மாளிகை சூழ்ந்தழகாய திருக்குருகூர் அதனை—மாடி வீடுகளையுடைய அழகுமிக்க திருக்குருகூருக்கு பல்உலகீர் பரந்தே—எவ்வூரராயினும் எந்த இடத்தைச் சேர்ந்தவராயினும் எங்கிருப்பினும், பாடி ஆடிபரவிச் சென்மின்கள்—பாடிப் புகழ்ந்து ஆடி அலற்றியும் வணங்கிச் செல்லுங்கள்.

மானிடர்களாகிய நம்மைப் படைத்த ஆதிமுதல் தேவன் குருகூரில் எழுந்தருளியுள்ளான். குருகூர் மாடமாளிகைகள் கொண்ட அழகிய ஊர். அதில் அவன் விரும்பி உறைகின்றான். நாம் தேடி வணங்கும் தேவன் அவனே. தேவர்கள் அனைவரையும் படைத்தவன் அவனே, அவன் அழியாத சிறந்த புகழையுடையவன் ஆதலால் எங்குள்ளவராயினும் எந்தத் தேசத்தவராயினும் உலகத்தில் உள்ள அனைவரும் அப்பெருமானைத் துதித்துத் தொழுது மகிழ்ச்சிபொங்கக் கூத்தாடி சன்மம் கழிப்பீராக என்றவாறு.

4—10—3

பரந்ததெய்வமும்பல்லுலகும்படைத்து அன்றுடனேவிழுங்கி
கரந்துமிழ்ந்துகடந்திடந்தது கண்டும்தெளியகில்லீர்
சிரங்களாலமரர்வணங்கும் திருக்குருகூரதனுள்
பரன்திறமன்றிப்பல்லுலகீர் தெய்வம்மற்றில்லைபேசுமினே 3

பரந்த தெய்வமும்—பலவிதமான எல்லாத் தெய்வங்களையும், பல்லுலகும் படைத்து—பல உலகங்களையும் உண்டாக்கி, அன்று உடனே—படைத்த அதே நாளில் (ஆயிரம் யுகங்கள் பிரமனுக்கு ஒருநாள் என்ற அளவில்), விழுங்கி கரந்து உமிழ்ந்து கடந்து இடந்த—உண்டு ஒடுக்கி பின் வெளிப்படுத்தி அளந்து (வராகமாக அதைப்) பெயர்த்து எடுத்தது, கண்டும்—அறிந்திருந்தும், தெளியகில்லீர்—தெளிவில்லாதவர்களாக இருக்கிறீர்களே! சிரங்களால் அமரர் வணங்கும்—தலைகளைத் தாழ்த்தி தேவர்கள் வணங்கும், திருக்குருகூர் அதனுள்—திருக்குருகூரில், பரன் திறமன்றி—நிச்சயமாக அப்பரம

பெருமானே அல்லாமல், பல்உலகீர்—உலகத்து மக்களே! தெய்வம் மற்று இல்லை பேசுமின்ஏ—வேறு உயர்ந்த தேவன் இல்லை, ஆராய்ந்து பேசிப்பாருங்கள்.

பரன்—ஆதிப்பிரான்,

தெய்வங்களைப் படைத்தும் உலகங்களைப் படைத்ததுவும், படைத்த உலகங்களை உண்டும் கரந்தும் உமிழ்ந்தும் அளந்தும் இடந்ததும் அறிந்தபிறகும் உங்களுக்குத் தெளிவு வரவில்லையா. திருக்குருகூரில் உள்ள உயர்ந்த தேவனே தேவன். அவன் சார்பு அல்லாத வேறு தெய்வம் இல்லை. தேவர்கள் தங்கள் சிரங்களால் வணங்கப்படும் தேவன் அவனே. அவனைப்பன்பற்றிப் பேசுங்கள் எ—று.

பரன் திறமன்றி என்றதனால் பரன் திறமான இராம கிருஷ்ணாதி அவதார மூர்த்திகளைத் தவிர்த்து என்றவாறு.

4—10—4

பேசநின்றசிவனுக்கும்பிரமன்தனக்கும் பிறர்க்கும்
நாயகனவனே கபாலநன்மோக்கத்துக்கண்டுகொண்மின்
தேசமாமதிள்சூழ்ந்தழகாய திருக்குருகூரதனுள்
ஈசன்பாலோரவம்பறைதல் என்னாவதிலிங்கியர்க்கே 4

பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே—சம்ஹாரம் செய்கின்ற ருத்ரமூர்த்தியாவன் சிவபிரான் என்றும் படைப்புக் கடவுள் பிரம தேவன் என்றும் புகழ்ந்து பேசப்படுகிறவர்களுக்கும் மற்ற தேவர்களுக்கும் தலைவன் ஆதிப்பிரானே, கபால நன் மோகத்துக் கண்டுகொண்மின்—பிரமனுடைய மண்டை ஓடு சிவன் கையில் ஒட்டிக் கொள்ள அதை ஸ்ரீ கண்ணனால் விடுவித்ததிலிருந்தே தெரிந்து கொள்ளுங்கள், தேசமாம் மதிள் சூழ்ந்து அழகாய திருக்குருகூர் அதனுள்—மதில் சுவர்களையுடைய அழகுபொருந்திய தலமாம் திருக்குருகூரில் உள்ள, ஈசன்பால்—ஆதிப்பிரனிடத்து, ஓர் அவம் பறைதல்—ஏதுவது பழி சொல்லல், என்னாவது—என்ன கேடு விளைவிக்குமோ, இலிங்கியர்க்கே—அனுமானத்தை முக்கியமாகக்கொண்டு வாதிக்கும் தர்க்க சாஸ்திரிகளுக்கே.

புகழ்ந்து பேசப்படும் சிவனுக்கும் பிரமனுக்கும் மற்ற தேவர்களுக்கும் ஆதிப்பிரானே நாயகன் ஆவன். அப்படியி

ருக்க உலகங்களுக்கு எல்லாம் ஈசனான ஆதிப்பிரான்மேல் ஓர் பழி சொல்லுதல் அனுமானம் கொண்டு வாதிக்கும் தர்க்க சாஸ்திரிகளுக்கு என்ன ஆகுமோ அதனால் சொல்லமுடியாத கேடு வந்தாலும் வரலாம். இது அஞ்சத்தக்கதாகும்.

அதனால் தவறாக வாதம் செய்து ஈசனிடம் அபராதம் கொள்ளக்கூடாது என்றபடி.

4—10—5

இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும்சாக்கியரும்
வலிந்துவாதுசெய்வீர்களும்மற்றுநுந்தெய்வமுமாகிநின்றான்
மலிந்துசெந்நெல்கவரிவீசும் திருக்குருகூரதனுள்
பொலிந்துநின்றபிரான்கண்டீர்
ஒன்றும்பொய்யில்லைபோற்றுமினே 5

இலிங்கித்திட்ட புராணத்தீரும்—இலிங்க புராணத்தைப் பின்பற்றுகிறவர்களும், சமணரும் சாக்கியரும்—சமணமதத்தினரும் சாக்கிய மதத்தினரும், வலிந்து வாது செய்வீர்களும்—பிடிவாதமாக தர்க்கம்செய்கிறவர்களே; நும் தெய்வமும் ஆகி நின்றான்—ஆதிப்பிரானே உங்களுடைய தெய்வமும் ஆக இருக்கிறான், மலிந்து செந்நெல் கவரிவீசும்—செந்நெல் பயிர்கள் செழித்து வளர்ந்து ஆதிப்பிரானுக்கு சாமரை வீசுவது போல் கவரிவீசும், திவ்ய க்ஷேத்திரமாகிய குருகூரில், பொலிந்து நின்ற பிரான்—பெருமைமிக விளங்கும் தேவனே, உங்கள் தேவன், ஒன்றும் பொய்யில்லை, போற்றுமின்—விரும்பி வணங்குங்கள்.

இலிங்க புராணம்—பதினெட்டு புராணங்களில் ஒன்று, இலிங்கத்தைப் பற்றியது.

4—10—6

போற்றிமற்றோர்தெய்வம் பேணப்புறத்திட்டு உம்மையின்னே
தேற்றிவைத்து எல்லீரும்வீடுபெற்றாலுலகில்லையென்றே
சேற்றில்செந்நெல்கமலமோங்கு திருக்குருகூரதனுள்
ஆற்றவல்லவன்மாயம்கண்டீர் அதறிந்தறிந்தோடுமினே 6

மற்றோர் தெய்வம் பேண—வேறோர் தெய்வம் ரட்சிக்கும் படியாக, புறத்திட்டு—ஆதிப்பிரானைப் புறக்கணித்து விட்டுவிட்டு, உம்மை—உங்களை, இன்னே—இவ்வா

ருகத் தேற்றிவைத்தது—சமாதானப்படுத்தி வைத்தது, எல்லாரும் விடுபெற்ருல் உலகில்லை என்றே—நீங்கள் எல்லோரும் மோக்ஷம்பெற்ருல் எல்லோருக்கும் மேலுலகத்தில் இருக்க இடம் போதாது என்ற நியாயம்தான், சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு திருக்குருகூர் அதனுள்—சேற்றில் செந்நெல்லும் தாமரையும் செழித்து வளரும் திருக்குருகூரில், ஆற்ற வல்லவன் மாயம் கண்டீர்—எல்லோரும் மோக்ஷம் பெற்ருல் உலகு அளக்க வல்லவனுன ஆதிப்பிரானின் மாயா சக்தியைக் காணுங்கள், அது அறிந்து ஓடுமின்—அது நன்ருகத் தெரிந்து கொண்டு பிற தெய்வங்கள் பேண ஓடுங்கள். போற்றி—துதிக்கப் படுக.

ஆதிப்பிரானை விட்டுவிட்டு வேறு தெய்வங்களை விரும்பிச் செல்வது எல்லாரும் மோக்ஷம்பெற்ருல் வைகுந்தத்தில் இடம் இருக்காது என்று நினைத்துத்தான், அது தவறு. எல்லோரும் மோக்ஷம் பெற்ருல் தன்னுடைய உலகம் இடம் கொள்ளும் வண்ணம் செய்ய வல்லவன் ஆதிப்பிரான், அவன் மாயா சக்தி உடையவன். அதை நன்ருகத் தெரிந்து கொண்டு வேண்டுமானுல் பிற தெய்வங்களை நாடிச் செல்லுங்கள் என்றவாறு.

4—10—7

ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்து மற்ருேர்தெய்வம்
பாடியாடிப்பணிந்து பல்படிகால் வழியேறிக்கண்டீர்
கூடிவானவரேத்தநின்ற திருக்குருகூரதனுள்
ஆடுபுட்கொடியாதிமூர்த்திக்கு அடிமைபுகுவதுவே 7

ஓடிஓடிப் பல பிறப்பும் பிறந்து—ஆதிப்பிரானை விட்டுவிட்டு பல பிறப்புக்கள்கொண்டு, மற்ருேர் தெய்வம்—வேருேர் தெய்வத்தை, பாடி ஆடிப் பணிந்து—புகழ்ந்து கூத்தாடித் தொழுது, பல்படிக்கால் வழியேறி—பல தலைமுறைகளை அடைந்து கடந்து, கண்டீர்—பார்த்தீர்கள், கூடி வானவர் ஏத்த நின்ற திருக்குருகூர் அதனுள்—தேவர்கள் கூட்டமாகக் கூடித் தொழ நின்ற திருக்குருகூரில், ஆடு புள் கொடி ஆதிமூர்த்திக்கு—ஆடும் கருடக் கொடியுடைய ஆதிப்பிரானுக்கு, அடிமை புகுவதுவே—அடைக்கலம் அடைவதே.

புள்—பறவை, (இங்கு) கருடன்,

இடைவிடாது பல பிறவிகளை எடுத்து ஆதிப்பிரான் அல்லாத வேருேர் தெய்வத்தை வழிபட்டு ஆடியும்

பாடியும் பல தலைமுறைகள் எடுத்துக் கடைசியில் கண்டது என்ன? வானவர்கள் கூட்டமாகக் கூடித் தொழுகின்ற திருக் கூரில் உள்ள கருடக் கொடியுடைய ஆதிப் பிரானுக்கு அடைக் கலம் அடைவரே. அதாவது எத்தனை பிறவிகள் எடுத்தாலும் படைப்புக்கு ஆதிகாரணமான ஆதிப்பிரானை அடைந்தே பிறவி அறுக்கப் பெறலாகும் என்பதாகும்.

4—10—8

புக்கடிமையினால்தன்னைக்கண்ட மார்க்கண்டேயனவனை
நக்கபிரானுமன்றுய்யக்கொண்டது நாராயணனருளே
கொக்கலர் தடந்தாழைவேலித் திருக்குருகூரதனுள்
மிக்கவாதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்விளம்புதிரே 8

புக்கு—புகுந்து, அடிமையினால்—அடைக்கலம்கொண்டு தன்னைக்கண்ட—சிவனைக்கண்ட, மார்க்கண்டேயன் அவனை—மார்க்கண்டேயனாகிய அடியவனை, நக்க பிரானும்—சிவபிரானும், அன்று உய்யக் கொண்டது—அன்று பிழைக்குமாறு செய்தது, நாராயணன் அருளே—ஸ்ரீமன் நாராயணனின் கிருபையே, கொக்கு அலர்தடந் தாழைவேலித் திருக்குருகூரதனுள்—மாமரங்களையும் தென்னை மரங்களையும் உடைய சிறந்த குருகூரதனுள், மிக்க ஆதிப்பிரான் நிற்க—உயர்ந்த ஆதிப் பிரான் எழுந்தருளியிருக்க, மற்றைத் தெய்வம் விளம்புதிரே —மற்ற தெய்வங்களைப் பற்றிப் பேசுகிறீர்களே.

நமன் பாசத்திலிருந்து தவிர்க்க மார்க்கண்டேயன் சிவ பிரானைத் தஞ்சம் அடைந்தான். சிவனும் மார்க்கண்டேயனைக் காப்பாற்றினான். ஆனால் அது ஸ்ரீமன் நாராயணனின் கருணையாலாகும், ஆக ஸ்ரீமன் நாராயணனாகிய ஆதிப்பிரான் இருக்க மற்ற தெய்வங்களைப் பேசுகிறீர்களே! பேசலாமோ எ—று.

மார்கண்டேயனுக்குக் கொடுக்கப்பெற்ற பதினாறு வயது முடிந்ததால் யமதூதர்கள் மார்கண்டேயனைப் பாசக் கயிற்றினால் இழுக்க மார்கண்டேயன் சிவலிங்கத்தைத் தஞ்ச மாக அணைத்துப் பிடித்துக் கொள்ள சிவலிங்கத்தையும் சேர்த்து பாசக்கயிறு இட்டு யமதூதர்கள் இழுக்க சிவபிரானே நேரில் தோன்றி அவர்களை உதைத்து விரட்டினான், ஆனால் வயது தீர்ந்து போன மார்கண்டேயனுக்கு ஆயுள் கொடுப்பார் யார்? ஆயுள் கொடுக்கும் பரத்துவம் உடைய ஸ்ரீமன் நாராயணனே சிவ பிரானுக்காக முன் நியமிக்கப் பெற்ற வயதை மாற்றாமல் ஒரு கல்ப காலம் வரை என்றும் பதினாறாக இருக்க அருள் புரிந்தார்.

4—10—9

விளம்புமாறுசமயமும் அவையாகியுமற்றும்தன்பால்
அளந்துகாண்டற்கரியனாகிய ஆதிப்பிரானமரும்
வளங்கொள்தண்பணைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனுள்
உளங்கொள்ஞானத்துவைம்மின்
உம்மையுய்யக்கொண்டுபோகுறிலே 9

விளம்பும் ஆறு சமயமும்—வகுத்து உரைக்கப்பெற்றுள்ள ஆறு சமயங்களும், அவை ஆகியும்—அவற்றுள் படிந்தவனாயும், அற்றும்—படியாதவனாகியும், தன்பால்—தன்தன்மை, அளந்து காண்டற்கரியனாகிய—அளவிட்டுப் பார்க்கமுடியாதவனாகிய, ஆதிப்பிரான் அமரும்—ஆதிமூர்த்தி உறைகின்ற, வளங்கொள் தண்பணை சூழ்ந்து அழகாய—செழிப்புடைய குளிர்ந்த சோலைகள் சூழப்பெற்று அழகுடைய, திருக்குருகூர் அதனை—திருக்குருகூரை, உளம்கொள் ஞானத்து வைம்மின்—உள்ளத்து உணர்வில் நிறுத்துக. உம்மையும் உய்யக்கொண்டு போகுறில்ஏ—உங்களையும் வாழச்செய்யவேண்டுமானால்.

ஆறு சமயங்கள்:—க்ராணபத்யம் (கணபதியைப்பற்றியது) கௌமாரம் (குமரனைப் பற்றியது), சைவம், வைஷ்ணவம், சாக்தம் (சக்தியைப் பற்றியது), சௌரம்(சூரியனைப் பற்றியது).

சமயங்கள் ஆறு என்று சொல்லப்பட்டவற்றுள் ஆதிப்பெருமான் தோய்ந்தும் தோயாதவனாய் இருக்கிறான். அந்த சமயங்களும் அவன் தன்மை இன்னதென்று அளவிட்டுப் பார்க்க முடியாதவனாய் இருக்கிறான். அந்த ஆதிப்பிரான் அமர்ந்திருக்கிற திருக்குருகூரை உள்ளத்தில் நிறுத்தினால் பிறவித் துன்பத்தினின்றும் விடுதலை பெறலாம் எ—று.

உய்ய—வாழ்வுபெற, கொண்டு போகுறில்—எம்பெருமான் தன்னுடன் அழைத்துச் செல்லவேண்டுமானால் எனவும் கொள்ளத்தகும்.

குருகூரை உள்ளத்துக் கொள்ளின் என்றதனால் ஊரை நினைக்கவும் ஆதிப்பிரானை நினைத்தவாறு ஆகும்.

அழகாய குருகூர்—ஆதிப்பிரானும் ஆழ்வார் பெருமானும் ஒருங்கே எழுந்தருளிய திருத்தலமாதலால் அது அழகிய குருகூரே ஆகும்.

4—10—10

உறுவதாவதெத்தேவும் எவ்வுலகங்களும்மற்றும்தன்பால்
மறுவில்மூர்த்தியோடொத்து
இத்தனையும்நின்றவண்ணம்நிற்கவே
செறுவில்செந்நெல்கரும்பொடோங்கு திருக்குருகூரதனுள்
குறியமாணுருவாகிய நீள்குடக்கூத்தனுக்காட்செய்வதே 10

உறுவதாவது—அமையவேண்டியது எதுவெனில், எத்தேவும்—எந்த தெய்வமாயினும், எவ்வுலகங்களும்—எந்தெந்த உலகங்களாயினும், மற்றும்—தவிர, தன்பால்—எம்பெருமான் தன்னுடைய, மறுவில் மூர்த்தியோடு ஒத்து—குற்றமற்ற அர்ச்சா அவதார வடிவங்களுடன் பொருந்தி, இத்தனையும் நின்றவண்ணம் நிற்க— தெய்வங்களும் உலகங்களும் மூர்த்திகளும் ஆகிய எல்லாம் எப்பொழுதும் நடந்துகொண்டிருக்கிற படியே நடந்துகொண்டிருக்கவே, செறுவில்—வயலில், செந்நெல் கரும்பொடு ஓங்கு—செந்நெல்லும் கரும்பும் செழித்து வளரும், திருக்குருகூர் அதனுள்—திருக்குருகூரில், குறியமாணுருவாகிய—வாமனவடிவினனாகிய, நீள் குடக்கூத்தனுக்கு—நிலைத்து நிற்கின்ற குடமெடுத்தாடிய ஸ்ரீ கண்ணபிரானுக்கு, ஆள் செய்வதே—அடிமைப் பணி புரிவதுவே,

நமக்கு அமையவேண்டியது எதுவெனில், எல்லா தெய்வங்களும் எல்லா உலகங்களும் குற்றமற்ற அர்ச்சா அவதார மூர்த்திகளாகவும் ஆகி எல்லாம் நடக்கவேண்டியவாறு நடந்து (இயங்கிக்) கொண்டிருக்கவே செழுமைமிக்க குருகூரில் சிறிய வடிவில் நிலையாக நிலைத்து நிற்கின்ற ஸ்ரீ கண்ணனுக்கு அடிமை செய்வதே ஆகும்.

உலகங்களை எல்லாம் நடத்துகின்ற ஸ்ரீமன் நாராயணன் ஆதிப்பிரானாக இங்கு அர்ச்சையாக இருக்கின்றான். ஆதலால் நமக்கு ஆகவேண்டியது இந்த கண்ணனுக்கு அடிமை செய்வதே என்றவாறு.

4—10—11

ஆட்செய்தாழிப்பிரானைச்சேர்ந்தவன் வண்குருகூர்நகரான்
நாட்கமழ்மகிழ்மாலைமார்பினன் மாறன்சடகோபன்
வேட்கையால்சொன்னபாடல் ஆயிரத்துளிப்பத்தும்வல்லார்
மீட்சியின்றிவைகுந்தமாநகர் மற்றதுகையதுவே 11

ஆட்செய்து—குற்றேவல்கள் புரிந்து, ஆழிப்பிரானைச் சேர்ந்தவன்—சுதர்சன சக்கரத்தை யுடைய ஸ்ரீமன் நாராயணனின் அருள் பெற்றவன், வண்குருகூர் நகரான்—சிறந்த குருகூர் நகரைத் தன் பிறப்பிடமாகக் கொண்டவன், நாள் கமழ் மகிழ் மாலை மார்பினன்—எப்பொழுதும் புதிய மணம் கமழ்வதும் மகிழ்ச்சி தருவதுமான வகுள மாலையையுடைய மார்பை யுடையவன் மாறன் சடகோபன், வேட்கையால்—ஆசையால் (ஆர்வத்தால்), சொன்ன பாடல் ஆயிரத்துள், இப் பத்துப் பாடல்களும் உணர்வுடன் ஓதி ஆதிப்பிரானைத் துதிக்க வல்லவர்கள், மீட்சி இன்றி—திரும்பவும் இப் பூமிக்குத் திரும்பாது, வைகுந்தமா நகர் மற்றுஅது கையதுவே—வைகுந்த லோகத்துப் பிரதான பட்டணம் தங்கள் கைகளில் அடங்கியதாகப் பெறுவர். நிச்சயமாகப் பெற்றவர் ஆவர் எ—று.

மீட்சி இன்றி—திரும்பவும் பிறப்பு இல்லாதவாறு.

மற்று—அசைச்சொல்.

ஐந்தாம்பத்து—முதல்திருவாய்மொழி

கையார்சக்கரத்து

5—1—1

கையார்சக்கரத்து என்கருமாணிக்கமேயென்றென்று
பொய்யேகைம்மைசொல்லிப் புறமேபுறமேயாடி
மெய்யேபெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்றுகாப்பாரார்
ஐயோகண்ணபிரான் அறையோவினிப்போனாலே 1

கையார் சக்கரத்து—கையில் சக்கரத்தையுடைய, என் கருமாணிக்கமே—கருமை நிறங்கொண்ட என் இரத்தினமே! என்று என்று—என்று விடாது, பொய்யே கைமை சொல்லி—பொய் பொய்யாகக்கூறி, புறமே புறமே ஆடி—(உண்மைக்கு) மாறாகவே நடந்தும், மெய்யே பெற்றொழிந்தேன்—எனக்குப் பொய்யும் வேஷமும் மெய்யே ஆயிற்று, விதி வாய்க்கின்று—(இவ்வாறு) விதி அமைந்திருக்கிறது, காப்பாரார்—என்னைக் காப்பாற்றுகின்றவர்கள் யார்? ஐயோ—அந்தோ! கண்ண பிரான் அறையோ இனிப்போனாலே—கண்ணபிரான் இனி கை விட்டுப் போய்விட்டால்! என்னாவது நான் என்றபடி.

கைமை—கணவனை இழந்தநிலை, பொய்.

அறைபோதல்—வஞ்சித்துச் செல்லுதல், கீழ் அறுக்கப்படுதல்.

சுதர்சன சக்கரம் ஏந்திய கையனே! கரிய மாணிக்கம் போன்றவனே! என்று பொய்யாக ஸ்ரீகண்ணனின் நாமங்களைச் சொன்னேன். இவ்வாறே சொல்லிச் சொல்லி பக்தன் போல போலி வேஷம் போட்டேன். கடைசியில் அது மெய்யே ஆய்விட்டது. அதற்கும் இறைவன் கருணை புரிந்து விட்டான். ஆனால் இவ்வாறு விதி அமைந்தது. காப்பாற்றுகிறவர்கள் யார்? அந்தோ! இனி கண்ணபிரான் என்னைக் வஞ்சித்துச் சென்று விட்டால் என் கதி என்னாவதோ! என்றவாறு.

இவ்வாறு எம்பெருமானை நினைக்காது அவன் நாமங்களை வெறுமையாகச் சொன்னாலும் அதையும் அவன் ஏற்று அதற்கும் கருணை காட்டுகிறார். போலி பக்தனுக்கும் பக்தனுடைய வேஷம் போட்டானே என்று அனுக்கிரகம் பண்ணுகிறார். அருள் புரியப்பட்ட போலிபக்தனும் வள்ளல் தன்

மையை அவன் உணர்ந்து அவன் திருவடிகளை இறுகப் பிடித்து ஐயோ! இனி என்னை விட்டுவிடவேண்டாம் என்று கண்ணனை அணைக்கின்றவாறு காண்க.

அஜாமேளன் இறக்கும் தருவாயில் யமதூதர்கள் வர பயத்தால் அவன் தன் மகனை நாராயணு என்று கூவ விஷ்ணு தூதர்கள் வந்து காப்பாற்றினுர்கள் என்பது நினைவு கூறத் தக்கது.

5—1—2

போஞய்மாமருதின்நடுவே என்பொல்லாமணியே
தேனே இன்னமுதே என்றென்றேசிலகூத்துச்சொல்ல
தானேலெம்பெருமான் அவனென்ஞகியொழிந்தான்
வானேமாநிலமே மற்றுமுற்றுமென்னுள்ளனவே 2

போஞய் மாமருதின் நடுவே—இரண்டு பெரிய மருத மரங்களின் இடையே போஞய், என் பொல்லா மணியே!—குறும்புத்தனமுள்ள என் (நீல) இரத்தினமே! தேனே! இன்னமுதே! என்று என்றுஏ சில கூத்துச்சொல்ல—என்று என்றுமாத்திரமே வேடிக்கையாகச் சில வார்த்தைகள் சொல்ல, தான்ஏல்—அவஞே என்ருல், எம் பெருமான் அவன்—எம்பரமஞகிய அவன், என் ஆகி ஒழிந்தான்—அவன் (என்னேடு கலந்து) என் மயமாகி இருந்த இடம் தெரியாமல் ஆய்விட்டான். வானே மாநிலமே மற்றும் முற்றும் என்னுள்ளனவே—அவஞக நின்ற ஆகாசமும் பரந்த நிலமும் மற்ற நீரும் காற்றும் பிரபஞ்சம் முழுவதுமே எனக்கு உள்ளே இருக்கின்றனவாயின.

இருந்திருந்து போஞயே ஒரு இரட்டை மருதமரத்தின் இடையே என் குறும்புக்கார நீல இரத்தினமே! தேனே! இனிய அமிர்தமே! என்று வேடிக்கையாகச் சில வார்த்தைகள் சொல்ல எம்பெருமான் என்ன செய்தான் தெரியுமா அவன் என்னுள் புகுந்து என் மயமாகி ஒழிந்தான். ஆகாசமும் பூமியும் நீர் தீ காற்று உலகத்தில் என்னென்ன உள்ளனவோ அத்தனையும் என்னுள் உள்ளனவாயின.

இவ்வாறு எம்பெருமான் நாமங்களையோ லீலைகளையோ விளையாட்டாகச் சொன்ஞலும் அவை மெய்யென்றே கொண்டு எம்பெருமான் சொன்னவனேடு ஒன்றிவிடுவான்,

தன் சரீரமாகிய இப்பிரபஞ்சத்தையும் தன்னுடன் கொண்டு உள்ளே புகுந்து இணைந்து விடுவான்.

அவ்வளவு கருணையுள்ளவன் என்று காட்டுகிறார் ஆழ்வார் பெருமானார்.

5—1—3

உள்ளனமற்றுளவாப் புறமேசிலமாயம்சொல்லி
வள்ளல்மணிவண்ணனே என்றென்றேயுன்னையும்வஞ்சிக்கும்
கள்ளமனம்தவிர்ந்தே உன்னைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்
வெள்ளத்தணைக்கிடந்தாய் இனியுன்னைவிட்டென்கொள்வனே 3

உள்ளன—உண்மையானவையும், மற்று, உளவான வாக, புறமே—பொய்யானவையும், சில மாயம் சொல்லி—சில மயங்கும்படியாகச் சொல்லி, வள்ளல் மணிவண்ணனே என்று என்று—உதாரகுணமுள்ள நீலமணி நிறத்தோனே! என்று விடாமல் சொல்லி, உன்னையும் (ஏழுலகுக்கும் நாயகனாகிய) உன்னையும், வஞ்சிக்கும் கள்ள மனம் தவிர்த்து ஏ—ஏமாற்றும் திருட்டுப்புத்தியை விட்டு, உன்னைக் கண்டு கொண்டு உய்ந்தொழிந்தேன்—உன்னை (உன் தன்மையை) அறிந்து பிழைத்துக் தப்பினேன், வெள்ளத்து அணைக்கிடந் தாய்—திருப்பாற்கடலில் பள்ளி கொண்டவனே! இனி உன்னை விட்டு என் கொள்வனே—இனிமேல் பொய்யனாகிய என்னை மெய்யனாக்கிய உன்னைவிட்டு நான் யாரை எதைத் துணையாகக் கொள்ள முடியும். மற்று—அசைச்சொல். ஏ—பிரி நிலை ஏகாரம்

உள்ளனவும் உள்ளனவாக பொய்யானவையும் சில வற்றை மயங்கும்படியாகச் சொல்லி கொடைக்கு பேர் போனவனே நீல இரத்தினம் போன்ற நிறத்தோனே என்று திருப்பித்திருப்பிச் சொல்லி ஏமாற்ற முயன்றேன். உன்னு டைய உதார குணத்தால் என் வஞ்சக புத்தியை விட்டு விட் டேன். அப்படி விட்டதனால் தான் உன்னை இத்தன்மையன் என்று பூரணமாக அறிந்தேன். அறிந்ததனால் பிழைத்தேன்.

திருப்பாற்கடலில் பள்ளி கொண்டவன் நீ. இனி உன்னை விட்டால் எனக்குக்கதி ஏது? உன்னையே நான் சரண டைந்தேன், கொள்க. என்னை ஏற்றுக்கொள்வாயாக என்றவாறு.

வெள்ளத்தணைக்கிடந்தாய் இனி உன்னை விட்டு என் கொள்வன் நானே என்று பன்னிப்பன்னி உருகிச் சொல்வதே இன்பம். இது சரணாகதியாகும்.

மாம் ஏகம் சரணம் விரஜ என்று சரணாகத வாக்கியத்திற்குச் சாதனமாக அமைந்தது இது.

[மாம்—என்னை, ஏகம் ஒருவனையே, சரணம்—திருவடிகளை, விரஜ—பற்றுக]

5—1—4

என்கொள்வனுன்னைவிட்டென்னும் வாசகங்கள்சொல்லியும்
வன்கள்வனேன்மனத்தைவலித்துக் கண்ணநீர்கரந்து
நின்கண்நெருங்கவைத்தே எனதாவியைநீக்ககில்லேன்
என்கண்மலினமறுத்து என்னைக்கூவியருளாய்கண்ணனே 4

என் கொள்வன் உன்னை விட்டு என்னும் வாசகங்கள் சொல்லியும்—எம்பெருமானே எனக்குத் துணையும் உயிருமான உன்னைவிட்டு எதை யாரைத்துணையாகக் கொள்வேன் என்று என் வாயால் திரும்பத்திரும்பச் சொல்லியும், வன்கள்வனேன்—கொடிய வஞ்சகனாகிய நான், மனத்தை வலித்து—என்னுடைய மனதை பலவந்தப்படுத்தி (கட்டாயப்படுத்தி), கண்ண நீர் கரந்து—(வஞ்சகம் புரிந்து விட்டோமே என்று பச்சாதாபப்படுகிற) கண்ணீரை மறைத்து, நின்கண் நெருங்க வைத்து—உன்னிடத்து அணுகச்செய்து, எனது ஆவியை நீக்ககில்லேன்—என்னுடைய உயிரை நீக்கமுடியாதவனாய் இருக்கிறேன். என் கண்—என்னிடத்து, மலினம் அறுத்து—வன்தன்மையை நீக்கி, என்னைக்கூவி அருளாய் கண்ணனே—என்னை ஏற்று அருள்புரிக என் கண்ணா.

எம்பெருமானாகிய உன்னைவிட்டு என்ன செய்வேன் எனக்கு துணை யாருமில்லை என்று என் வாயாரத் திரும்பத் திரும்பச் சொன்னேன். ஆனால் கொடிய வஞ்சகனாகிய நான் என் மனதை வற்புறுத்தி பச்சாதபப்பட்டுக் கண்ணீரை மறைத்து உன்னிடத்து அணுகச்செய்து என்னுடைய ஆவியை விடமுடியாதவனாக இருக்கிறேன். இத்தன்மையான வலிய தன்மையை என்னிடமிருந்து நீக்கி என்னை அணைத்தருள்கவே என் கண்ணனே என்று கண்ணனை மனம் வருந்தி வேண்டுகிறார்.

5—1—5

கண்ணபிரானை விண்ணோர்கருமாணிக்கத்தையமுதை
நண்ணியும்நண்ணகில்லேன் நடுவேயோருடம்பிலிட்டு
திண்ணமழுந்தக்கட்டிப் பலசெய்வினைவன்கயிற்றால்
புண்ணைமறையவரிந்து என்னைப்போரவைத்தாய்புறமே 5

கண்ணபிரானை விண்ணோர் கருமாணிக்கத்தை அமுதை—கண்ணபிரானும் தேவர்களுக்குக் கருமாணிக்கமும் அமிர்தமும் போன்றவனுமான பெருமானை, நண்ணியும் நண்ணகில்லேன்—அணுகியும் அடையமுடியாமல் இருக்கிறேன், நடுவே—தன்னை அடைவதற்கு முன், ஓர் உடம்பில் இட்டு—உடம்புடன் கூடிய ஒரு பிறவி எடுக்கும்படி செய்து, திண்ணம் அழுந்தக்கட்டி—அந்த உடம்பில் உழலும்படி நெருக்கிக்கட்டி, பல செய் வினை வன்கயிற்றால்—கர்ம வினை என்னும் கொடிய பாசக்கயிற்றால், புண்ணை மறைய வரிந்துகட்டி—(கர்ம வினையால் வந்த பாவமாகிய) புண்ணை (இன்ன பாவம் என்று) அறியாமல் இருக்கும்படி இறுக்கிக்கட்டி, என்னைப் போர வைத்தாய் புறமே—உனக்கு அப்பால் வெளியே போகும்படி என்னை விட்டாய்.

எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணனை அடைய முயன்றேன். ஆனால் முயற்சி கைகூடுவதற்குமுன் என்னை உடம்புடன் கூடிய ஓர் பிறவியை எடுக்கும்படியும் கர்ம வினையால் வந்த பாவத்தை அனுபவிக்கும் படியும் அந்த பாவம் என்ன என்பதையும் அறியாமல் இருக்கும்படியும் தூரமாகப் போகும்படி செய்துவிட்டான் என்றவாறு.

இந்த சரீரமாகிய கட்டைகளின் மேல் ஏற்றப்பட்ட உடம்புகள் தம்தம் வினையால் உழல்கின்றன என்பது (ப. கீ. சூக்தி) ஸ்ரீ கண்ணனின் அருள் உரை, அதை ஈண்டு ஆழ்வார் பெருமானார் வாய்விட்டுக் கதறி உருகுமாறு என் சொல்வது! அந்தோ!

5—1—6

புறமறக்கட்டிக்கொண்டு இருவல்வினையார்குமைக்கும்
முறைமுறையாக்கைபுகலொழியக் கண்டுகொண்டொழிந்தேன்
நிறமுடைநால்தடந்தோள் செய்யவாய்செய்யதாமரைக்கண்
அறமுயலாழியங்கைக் கருமேனியம்மான்தன்னையே 6

நிறமுடை நால் தடந்தோள்—அழகுமிக்க நான்கு பெரிய கைகளையும், செய்யவாய் செய்யதாமரைக்கண்—சிவந்த வாயையும் செந்தாமரை மலர்போன்ற கண்களும், அறமுயல் ஆழி அம் கை—அழகிய கையில் தர்மத்தை நிலை நாட்டும் சக்கரத்தையும் உடைய, கருமேனி அம்மான் தன்னை ஏ—கருமை நிறம் பொருந்திய திருஉடம்புடைய பெருமானை, புறம் அறக்கட்டிக் கொண்டு—வெளிப்புறம் தெரியாமல் மூடிக் கொண்டு, இருவல் வினையார்—நல்வினை தீவினை என்ற இருவராய், குமைக்கும்—வதைக்கும், முறை முறை யாக்கை புகல் ஒழிய—ஊழை ஒட்டி உடம்புடன் பிறப்பது நீங்குமாறு, கண்டு கொண்டு ஒழிந்தேன்— (எம்பெருமானை) அடைந்தவன் ஆனேன்.

நல்வினை தீவினை இரண்டும் வதைக்கும் ஊன் உடம்பிலே இருந்தவாறே பிறவிஒழியுமாறு எம்பெருமானை அடைந்தவன் ஆனேன் எ—று.

5—1—7

அம்மானாழிப்பிரான் அவனெவ்விடத்தான்யானார்
எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்றுவாய்க்கும்கண்டீர்
கைம்மாதுன்பொழித்தாயென்று கைதலைபூசலிட்டே
மெய்மாலாயொழித்தேன் எம்பிரானுமென்மேலானே. 7

அம்மான் ஆழிப்பிரான்—பிதாவும் சக்கரப்பெருமான் திருமாலுமான, அவன் எவ்விடத்தான் யானார்—அவன் எந்த இடத்தைச் சேர்ந்தவன் நான் யார் (இருவருக்கும் உள்ள உறவு என்ன?) எம் மா பாவியர்க்கும்—எங்களைப் போன்ற பெரிய பாவிகளுக்கும், விதி வாய்க்கின்று வாய்க்கும் கண்டீர்—விதிநடக்கின்றது நடக்கும், நீங்கள் அறிவீர்கள், கைம்மா—யானையின், துன்பு ஒழித்தாய் என்று—கஜேந்திர யானையின் துயரைப்போக்கினாய் என்று (நினைத்து), கைதலை மேல்—கைகளைத்தலைக்கு மேலே தூக்கி, பூசல் இட்டு—(என்னைக் காப்பாற்ற வருக என்று) உரக்கக்கூவிக் கதறி, மெய் மால் ஆய் ஒழிந்தேன்—உடம்பு மயக்கம் அடைந்து பிரக்ஞை இழந்தேன், எம்பிரானும் என் மேலானே—என் தேவனும் என் மேல் உற்றவன் (உள்ளவன்) ஆனான்.

எம் தந்தையாகிய சக்கரப் பெருமான் அவன் எந்த இடத்தைச் சேர்ந்தவன் எவ்வளவு உயர்ந்தவன்! அற்பனாகிய நான் எங்கே அவனுக்கும் நமக்கும் எட்டுமா? எட்டாதே.

என்னைப் போன்ற பெரிய பாவிகளுக்கும் விதி நடக்கிறபடி நடக்கத்தான் செய்யும். (அதை நீங்கள் அறிவீர்கள்)

முதலையின்வாய் அகப்பட்டு அவதிப்பட்ட யானை கஜேந்திரனுக்குத் துயர் தீர்த்தாயே என்று என் கைகளை என் தலை மேல் (யானை கஜேந்திரனைப்போல்) தூக்கி ஓ என்று கூவி அலறி என் உடம்பு மயக்கம் அடைந்து நினைவு இழந்தேன்.

எம் தேவனும் என் மேல் ஆவேசித்தவன் ஆனான்.

எம் பெருமான் யானைக்கு அருள் செய்தது பொய் யன்று. எனக்கும் அருள் செய்தான்.

ஆபத்சகாயன் அவன். ஆபத்தில் அவனை நினைப்பார்க்கு அருள் புரியத் தவறவே மாட்டான்.

5—1—8

மேலாத்தேவர்களும் நிலத்தேவரும்மேவித்தொழும்
மாலார்வந்தினநாள் அடியேன்மனத்தேமன்னினர்
சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும்நன்மக்களும்
மேலாத்தாய்தந்தையும் அவரேயினியாவாரே. 8

மேலாத் தேவரும்—(மேலாம் தேவர்களும்) உயர்ந்தவர்களாகிய தேவர்களும், நிலத்தேவரும்—நிலத்தில் தேவர்களைப் போன்ற சீலமும் அனுஷ்டானமும் உள்ள அந்தணர்களும் பக்தர்களும், மேவித்தொழும்—விரும்பித் தொழுகின்ற, மாலார்—திருமால், வந்து இன நாள்—வந்து இந்நாள் (இன்று), அடியேன் மனத்தே மன்னினர்—தொண்டனாகிய என் உள்ளத்தில் நிலை கொண்டார். சேல் ஏய் கண்ணியரும்— கயல் மீனை ஒத்த கண்களையுடைய மகளிரும், பெருஞ்செல்வமும்—உயர்ந்த செல்வமும், மேலாத் தாய் தந்தையும்—உயர்ந்த தாயும் தகப்பனும்; அவரே இனி ஆவாரே—இனி அப்பெருமானே ஆவார்.

விண்ணுலக தேவர்களும் மண்ணுலக பக்தி ஸ்ரேஷ்டர்களும் விரும்பி வணங்குகின்ற பெருமை மிக்க திருமால் இன்று வந்து என்னுள் புகுந்து உறுதியுற நிலைகொண்டார், இனி எனக்குச் சிறந்த மகளிரும் உயர்ந்த செல்வமும் உத்தமத் தாய் தந்தையரும் நல்ல மக்களும் அப்பெருமானே ஆவார்.

5—1—9

ஆவாரார்துணையென்று அலைநீர்க்கடலுளழுந்தும்
நாவாய்போல் பிறவிக்கடலுள் நின்றுநான்துளங்க
தேவார்கோலத்தொடும் திருச்சக்கரம்சங்கினொடும்
ஆவாவென்றருள்செய்து அடியேனொடுமானனே. 9

ஆவார் ஆர் துணை என்று—துணை ஆகின்றவர்கள் யார் என்று, அலைநீர் கடலுள் அழுந்தும் நாவாய் போல்—கொந்தளிக்கின்ற கடலில் மூழ்கும் படகு போல், பிறவிக்கடலில் நின்று நான் துளங்க—சம்சாரமாகிய கடலில் அகப்பட்டு நான் நடுங்க. தேவார் கோலத்தொடும்—பூர்ண அழகுடனும், திருச்சக்கரம் சங்கினொடும், ஆ! ஆ! என்று இரக்கம் கொண்டு, அருள் செய்து—கருணை புரிந்து, அடியேனொடும் ஆனான் ஏ—தொண்டனாகிய என்னோடு கலந்தவன் ஆனான். ஏ—அசை.

அலைகள் பொங்கி கொந்தளிக்கின்ற கடலின் நடுவே படகு அகப்பட்டால் அது எவ்வாறு அலைக்கழிக்கப்படுமோ அது போல துன்பங்கள் நிறைந்த சம்சாரமாகிய பிறவிக் கடலில் அகப்பட்டுத் துணை எவரும் இல்லையா என்றுகலங்கி நடுங்க தேவனாக அழகு மிக்க கோலத்தோடு எம்பெருமான் தன் சங்கும் சக்கரமும் கொண்டு பக்தன் தவிக்கிறானே என்று பரிந்து வந்து என்னோடு பொருந்தினவன் ஆனான்.

ஆக இம்மையில் உலக வாழ்வில் சம்சாரிகளாக உழல் கின்ற நாம் நம்மைச் சூழ்ந்து மோதும் துன்ப அலைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ள உன்னைத்தவிர எனக்குத் துணை யார் என்று எம் பெருமானைப் பற்றினால் அவன் ஓடோடியும் வந்து நம் மனக்கவலை மாற்றி நமக்கு தைரியம் அளிப்பான். நமக்கு உறுதியான துணையும் ஆவான் என்றவாறு.

5—1—10

ஆனானுடையானென்று அஃதேகொண்டுகந்துவந்து
தானேயின்னருள்செய்து என்னைமுற்றவும்தானானான்
மீனாயாமையுமாய் நரசிங்கமுமாய்க்குறளாய்
கானாரேனமுமாய்க் கற்கியாமின்னங்கார்வண்ணனே. 10

அஃதே கொண்டு—'ஆவார் ஆர் துணை' என்று நான் கலங்கிக் கூச்சல் இட்டதைக்கொண்டு, ஆனான் ஆளுடையான் என்று—நமக்குத் தொண்டனானான் என்று, உகந்து வந்து தானே இன்னருள்செய்து—மகிழ்ச்சி கொண்டு எம்பெரு

மானே ஓடி வந்து நமக்கு அன்போடு கருணை புரிந்து, என்னை முற்றவும் தான் ஆனான்—என்னை முற்றிலும் தன் மயம் ஆக்கினான். (என்னை முழுமையாகப் பொருந்தி கலந்து நின்றான்.) மீனாய் ஆமையும் ஆய்—மச்சா அவதாரமும் கூர்ம அவதாரமும் எடுத்தான். நரசிங்க அவதாரமும் எடுத்தான். குறளாய்—வாமன அவதாரம் எடுத்து, கான் ஆர் ஏனமுமாய்—காட்டுப் பன்றியாகவும் அவதாரம் எடுத்து, கற்கியாம் இன்னம்—இன்னும் கல்கி அவதாரம் எடுக்கப் போகிறானும்; எம் கார்வண்ணனே—கரியமேகம் போன்ற நிறத்தையுடைய எம் பெருமான்.

இவ்வளவு அவதாரங்களை எடுத்தவன் இன்னும் கல்கி அவதாரத்தை எடுக்கப் போகிறவனான எம்பெருமான் நம்மொடும் கலந்தானே அவன் கருணையை என்ன என்று சொல்வது! தவிர ஆவார் யார் துணை எனக்கு என்று நான் கலக்கத்தோடு ஓர் கூச்சலிட்டதற்கே என்னோடு வந்து (நான் பயமில்லாதிருக்கவோ என்னவோ) என் உடல் முழுவதும் பரவிக் கலந்து நின்றான்.

அவனுடைய அருளைப்பற்றி என்ன சொல்வது! அவன் அருட்பெருங்கடலே! அவனைப் பற்றுவார்க்குப் பற்று (துணை) ஆவான். பற்றுக என்றவாறு.

5—1—11

கார்வண்ணன்கண்ணபிரான் கமலத்தடங்கண்ணன்தன்னை
ஏர்வளவொண்கழனிக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
சீர்வண்ணவொண்தமிழ்கள் இவையாயிரத்துளிப்பத்தும்
ஆர்வண்ணத்தாலுரைப்பார் அடிக்கீழ்ப்புகுவார்பொலிந்தே 11

கார்வண்ணன்—கரிய மேகம் போன்ற நிறத்தவனும், கண்ணபிரான்—ஸ்ரீ கிருஷ்ண பகவானும், கமலத்தடங்கண்ணன்—தாமரைமலர் போன்று விசாலமான கண்களையுடையவனுமான, தன்னை—பெருமானை, ஏர்வள ஒண் கழனிக் குருகூர்ச் சடகோபன்—அழகிய வளம் பொருந்திய சிறந்த வயல்களையுடைய குருகூரைச் சேர்ந்த சடகோபன், சொன்ன, சீர்வண்ண ஒண் தமிழ்கள்—சிறப்புப் பொருந்திய நல்ல தமிழ் பாசுரங்களாகிய, இவை ஆயிரத்துள் இப்பத்தும்—இந்த திருவாய்மொழி ஆயிரத்துள் இந்தப் பத்துப் பாசுரங்களும், ஆர் வண்ணத்தால் உரைப்பார்—யார் அழகும் உணர்வும் பொருந்தச் சொல்கிறவர்களோ அவர்கள், அடிக்கீழ்ப்புகுவார் பொலிந்து—விளங்கும்படியாக கண்ணபிரானின் திருவடிகளை அடைவார்.

ஐந்தாம்பத்து—இரண்டாந்திருவாய்மொழி

பொலிகபொலிகபொலிக

5—2—1

பொலிகபொலிகபொலிக போயிற்றுவல்லுயிர்ச்சாபம்
நலியும்நரகமும்நைந்த நமனுக்கிங்குயாதொன்றுமில்லை
கலியும்கெடும்கண்டுகொண்மின்
கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல்
மலியப்புகுந்திசைபாடி ஆடியுழிதரக்கண்டோம். 1

மண்மேல்—மண்ணுலகில், கடல்வண்ணன்—மகாவிஷ்ணுவின், பூதங்கள்—ஆவிகள், மலியப் புகுந்து—நிறையப்புகுந்து, இசைபாடி ஆடி, கீர்த்தனங்கள்செய்து நர்த்தனங்கள்புரிந்து உழிதரக் கண்டோம்—நமக்கு இடம் தரக்கண்டோம், பொலிக பொலிக பொலிக—அவை வாழ்வனவாக வாழ்வனவாக செழித்து ஓங்கி வாழ்வனவாக, போயிற்று வல்லுயிர்ச்சாபம்—தொலைந்தன கொடிய சாபத்தீடுகள், நலியும் நரகமும் நைந்த—தண்டிக்கும் நரகமும் வருந்தும்படியாக, நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை—யமனுக்கு இங்கு (மண்ணுலகில்) யாதொரு வேலையும் இல்லை; கலியும் கெடும்—தீய சக்திகள் எல்லாம் அழிந்துபோகும், கண்டுகொண்மின்—நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்.

மண்ணுலகில் மகா விஷ்ணுவின் ஆவிகள் பக்தர்களாக நிறையப் புகுந்து அவன் பெருமைகளைக் கீர்த்தனம்செய்து நடம்புரிந்து எங்கும் இடம்பெறக் கண்டோம். வல்லுயிர் போலப் பிடித்து ஆட்டிய சாபங்கள் தீய சக்திகள் ஓடிப் போயின. பக்தி இல்லாத பாவிகளைத் தண்டிக்கும் நரகமும் வருந்தும் படியாக யமனுக்கு இங்கு வேலை இல்லாமல் போய் விட்டது. பக்தியைப் பரப்ப வந்த மகா விஷ்ணுவின் சக்திகள் எங்கும் செழித்து ஓங்கி விளங்குனவாக.

5—2—2

கண்டோம்கண்டோம்கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம்
தொண்டீர்ஏல்லீரும்வாரீர் தொழுதுதொழுதுநின்றார்த்தும்
வண்டார்தண்ணந்துழாயான் மாதவன்பூதங்கள்மண்மேல்
பண்டான்பாடிநின்றாடிப் பரந்துதிரிகின்றனவே. 2

கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கு இனியன கண்டோம்—மகாவிஷ்ணுவின் பூதங்கள் மண்மேல் திரளாக வந்து நிறைந்து கீர்த்தனங்கள் பாடி ஆடும் காட்சிகள் அவற்றைக் கண்டோம், கண்டோம் கண்ணுக்கு இனிய காட்சிகள், கண்டு மகிழ்ந்தோம், தொண்டீர் எல்லீரும் வாரீர்—தொண்டர்களே எல்லோரும் வாருங்கள், தொழுது தொழுது ஆர்த்தும்—நீங்களும் வணங்குங்கள் வணங்கி ஆரவாரிப்பு செய்து கொண்டாடுங்கள், வண்டு ஆர் தண்அம் துழாயான் மாதவன் பூதங்கள்--வண்டுகள் மொய்க்கின்ற இனிய திருத்துழாயையுடையவனான மாதவன் தன் பூதங்கள், மண்மேல்—மண்ணுலகில், பண் தான்பாடி—இசையோடு கூடிய பாடல்கள்பாடி, நின்று ஆடி—குதித்துக் கூத்தாடி, பரந்து—விசாலமாகப் பரவி சஞ்சாரம் செய்து.

தொண்டர்களே! எல்லோரும் வாருங்கள், நாங்கள் கண்டோம் கண்டோம் இனிமையான காட்சிகளைக் கண்குளிரக் கண்டோம். நீங்கள் வணங்குங்கள் வணங்கி ஆரவாரிப்புச் செய்து கொண்டாடுங்கள். இனிய திருத்துழாய் தரித்த மாதவப் பெருமானின் பூதங்கள் இம்மண்ணுலகில் இனிமையான பாசுரங்களைப் பாடியும் கீர்த்தனங்கள் செய்தும் குதித்துக் கூத்தாடி எல்லா இடங்களிலும் பரவி சஞ்சாரம் செய்கின்றன என்றவாறு.

5—2—3

திரியும்கலியுகம்நீங்கித் தேவர்கள்தாமும்புகுந்து
பெரியகிதயுகம்பற்றிப் பேரின்பவெள்ளம்பெருக
கரியமுகில்வண்ணனெம்மான்
கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல்
இரியப்புகுந்திசைபாடி எங்குமிடங்கொண்டனவே. 3

திரியும் கலியுகம் நீங்கி—எங்கும் சஞ்சாரம் செய்து வருகின்ற தீய சக்திகளின் காலம் முடிந்து, தேவர்கள் தாமும் புகுந்து—அவற்றிற்குப் பதிலாக தேவர்களும் வந்து, பெரிய கிதயுகம்பற்றி—பெரிய கிருத யுகம்போல், பேரின்ப வெள்ளம் பெருக—இறைவன் பக்தியால் ஆகிற இன்பமே நிறைய, கரிய முகில் வண்ணன்—கரியமேகம் போன்ற நிறத்தவனும், எம்மான்—எம்பெருமானும், கடல் வண்ணன்—கடல்போல் கரிய நிறமுடையவன் ஸ்ரீமன் நாராயணனின், பூதங்கள் மண்மேல் இரியப் புகுந்து இசைபாடி எங்கும் இடம் கொண்டனவே—பூதங்கள் பூவுலகில் ஓடிப் புகுந்து கீதங்கள் முழக்கி எல்லா இடங்களிலும் புகுந்து நிலைகொண்டன.

இந்த உலகைப் பிடித்த கலியுக தீய சக்திகள் ஒழிந்து தேவர்கள் வந்து பேரின்பம் பெருக ஸ்ரீமன் நாராயணனின் பூதங்களாக தூய சக்திகள் எங்கும் பரவி கீதங்கள் பாடிக் கூத்தாடி இவ்வுலகத்தில் நிலைகொண்டன.

எம்பெருமானின் பக்தியும் ஆன்மஞானமும் தலைஎடுக்கும் இடத்தில் தீயவை ஒழிந்து ஓடிவிடும்.

5—2—4

இடங்கொள்சமயத்தையெல்லாம் எடுத்துக்களைவனபோலே
தடங்கடல்பள்ளிப்பெருமான் தன்னுடைப்பூதங்களேயாய்
கிடந்துமிருந்துமெழுந்தும் கீதம்பலபலபாடி
நடந்தும்பறந்தும்குனித்தும் நாடகம்செய்கின்றனவே. 4

இடம் கொள் சமயத்தை எல்லாம்—எம்பெருமானால் வகுக்கப்பெற்ற ஆறு சமயங்களை தலை தூக்காதபடி பரவி நின்ற மற்ற சமயங்களை, எடுத்துக் களைவனபோல—களை எடுப்பதுபோல், தடங்கடல் பள்ளிப் பெருமான்—ஸ்ரீமன் நாராயணன், தன்னுடைப் பூதங்களே ஆய்—தானே தன்னுடைய பூதங்களாக, கிடந்தும் இருந்தும் எழுந்தும் கீதம் பலபலபாடி—படுத்த நிலையிலும் அமர்ந்த நிலையிலும் நின்ற நிலையாகவும் இசைப்பாக்கள் அநேகம்பாடி, நடந்தும் பறந்தும் குனிந்தும்—சென்றும் குதித்தும் கூத்து ஆடியும்.

அடுத்த பாசுரத்துடன் முடிகிறது.

5—2—5

செய்கின்றதென்கண்ணுக்கொன்றே ஒக்கின்றதிவ்வுலகத்து
வைகுந்தன்பூதங்களேயாய் மாயத்தினலெங்கும்மன்னி
ஐயமொன்றில்லை அரக்கரசுரர்பிறந்தீருள்ளீரேல்
உய்யும்வகையில்லைதொண்டீர் ஊழிபெயர்த்திடும்கொன்றே. 5

தொண்டீர்!—தொண்டர்களே! கண்ணுக்கு ஒன்றே ஒக்கின்றது—என் கண்ணுக்கு ஒன்றே பொருந்தத் தோன்றுகின்றது. இவ்வுலகத்து—இம் மண்ணுலகில், வைகுந்தன்—வைகுந்தப் பெருமானே, பூதங்களே ஆய்—பூதங்களின் உருவிலே வந்து, மாயத்தினல் எங்கும் மன்னி—தன்மாயா சக்தியால் எல்லா இடங்களிலும் நிலையாக இருந்து, அரக்கர் அசுரர் பிறந்தீர் உள்ளீரேல்—அரக்கர்களாகவும் அசுரர்களாகவும் பிறப்

பெடுத்தவர்கள் இருந்தால், ஊழி பெயர்த்திடும் கொன்றே—கொன்று அழித்து சர்வசங்கார காலத்தையே உண்டாக்கி விடுவான், ஐயம் ஒன்றுமில்லை—இதில் சந்தேகமே இல்லை, உய்யும் வகை இல்லை—பிழைக்கும் வழி இல்லை, செய்கின்றது என்—இனி செய்வதற்கு என்ன இருக்கிறது. அழிந்து போக வேண்டியதுதான்.

வைகுந்தப் பெருமானே தன்மாயா சக்தி கொண்டு பூதங்களாய் எங்கும் நிலைத்து பஜனைகள் மூலமும் காலக்ஷேபங்கள் மூலமாகவும் அரக்கர் அசுரர் இருக்கிற இடம் தெரியாமல் ஒடுங்கிப்போகும்படி செய்துவிட்டார். தவறி இருந்தால் அவர்களையும் ஒழித்து விடுவார். நாஸ்திகமும் அசுரத் தன்மையும் தலைவிரித்து ஆட முடியாது என்றபடி.

5—2—6

கொன்றுயிருண்ணும்விசாதி பகைபசிதீயனவெல்லாம்
நின்றிவ்வுலகில்கடிவான் நேமிப்பிரான்தமர்போந்தார்
நன்றிசைபாடியும்துள்ளியாடியும் ஞாலம்பரந்தார்
சென்றுதொழுதுய்ம்மின்தொண்டீர் சிந்தையைச்செந்நிறுத்தியே

கொன்று உயிர் உண்ணும் விசாதி பகை பசி தீயன எல்லாம்—உயிரைக் கொல்கின்ற நோய் நொடிகளையும் புற ஜாதியினரையும் பகைகொண்டு கொல்லுகிறவர்களையும் பட்டினி போட்டு கொல்கின்றவர்களையும் மற்றும் உயிரை வாங்கும் தீயன எல்லாவற்றையும், நின்று இவ்வுலகில் கடிவான்—உறுதியாக நின்று இவ்வுலகத்தில் ஒழிக்கும்பொருட்டு, நேமிப்பிரான் தமர் போந்தார்—மகாவிஷ்ணுவின் அடியார்கள் வந்திருக்கிறார்கள் நன்று இசை பாடியும் துள்ளி ஆடியும் ஞாலம் பரந்தார்—நன்றாகக் கீதங்கள் பாடியும் குதித்து ஆடியும் உலகத்தில் எல்லா இடங்களிலும் பரவி இருக்கிறார்கள், சென்று தொழுது உய்ம்மின் தொண்டீர்—அந்த நேமிப்பிரானின் அடியார்களை அடைந்து வணங்கி வாழ்வுபெறுங்கள் தொண்டர்களே! சிந்தையைச் செந்நிறுத்தி—உள்ளத்தைச் செம்மைப் படுத்தி, ஏ—அசை.

உயிருள்ள சீவன்களைக்கொன்று உண்ணும் இரக்கமற்றவையும் பகைகொண்டு அழிக்கின்றவற்றையும் பிறருக்கு அளிக்காமல் பட்டினியால் சாகடிக்கின்றவற்றையும் மற்றும் தீயவையாகிய பலவற்றையும் உலகத்திலிருந்து அடியோடு நீக்கவே.

விஷ்ணுவின் தமர்கள் எல்லா இடங்களிலும் சென்று பரவி யிருக்கிறார்கள். அவர்கள் பஜனைகள் புரிந்தும் பக்திப் பரவசம் கொண்டு குதித்து ஆடியும் வருகிறவர்கள். தொண்டர்களே! உங்கள் உள்ளத்தைச் செம்மைப்படுத்தி அவர்களை அடைந்து தொழுது வாழ்வு பெறுங்கள்.

பக்திகொள்ளுங்கள் தீயன எல்லாம் ஒழிந்துபோகும். வைஷ்ண ஆச்சாரியர்கள் அடியார்களை நாடி பக்தி கொள்ளுங்கள் எ—று.

5—2—7

நிறுத்திநும்முள்ளத்துக்கொள்ளும்
தெய்வங்களும்மையுய்யக்கோள்
மறுத்துமவனோடேகண்டீர் மார்க்கண்டேயனும்கரியே
கறுத்தமனமொன்றும்வேண்டா கண்ணனல்லால்தெய்வமில்லை
இறுப்பதெல்லாம் அவன்மூர்த்தியாயவர்க்கேஇறுமினே. 7

நிறுத்தி நம் உள்ளத்துக்கொள்ளும் தெய்வங்களும் உம்மை உய்யக்கோள்—தெய்வங்களை உங்களுடைய உள்ளத்தில் நிறுத்தி வழிபடுங்கள் அத்தெய்வங்கள் உங்களை வாழ்விக்கும்படி செய்துகொள்ளுங்கள். மறுத்தும்—பதினாறு வயதிற்கு மேல் ஆயுள் இல்லை என்று சிவபிரானால் மறுக்கப்பட்டும், அவனோடே கண்டீர்—ஆனால் மார்க்கண்டேயன் அச்சிவபிரானையே மனதில் நிறுத்தி வழிப்பட்டான், பிறகு யமதூதர்கள் உயிர் வாங்க வந்த காலை அந்தச் சிவபிரானே காப்பாற்றவந்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவோ? மார்க்கண்டேயனும் கரியே—மார்க்கண்டேயனும் இதற்குச் சாக்ஷியே, கறுத்த மனம் ஒன்றும் வேண்டாம் கண்ணன் அல்லால் தெய்வமில்லை —கோபிக்கும் மனம் ஒன்றும் வேண்டாம் (கோபிப்பதற்குக் காரணம் இல்லை) கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை—கண்ணனேதான் எம்பெருமானாகிய ஸ்ரீமன் நாராயணன், ஸ்ரீமன் நாராயணனேதான் முதல் தேவன். அவனைத் தவிர்த்த முதல் தேவன் இல்லை (என்றபடி),

இறுப்பது எல்லாம்—கடனாகச் செலுத்துபவை எல்லாம், அவன் மூர்த்தியாய்—அவன் வடிவமாகவே கொண்டு, அவர்க்கே—அந்த தெய்வங்களுக்கே, இறுமின்—செலுத்துங்கள்.

5—2—8

இறுக்குமிறையிறுத்துண்ண எவ்வுலகுக்கும்தன்மூர்த்தியே
நிறுந்தினன்தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே
மறுத்திருமார்வனவன்தன் பூதங்கள்கீதங்கள்பாடி
வெறுப்பின்றிஞாலத்துமிக்கார் மேவித்தொழுதுய்ம்மினீரே 8

இறுக்கும்—தங்கி இருக்கும், இறை—தேவனை, இறுத்து உண்ண—தங்கி இருக்கும்படி செய்து வணங்க, எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி நிறுத்தினன், தெய்வங்களாக—எல்லா உலகங்களுக்கும் தன் வடிவத்தையே தெய்வங்களாக நிறுத்தினன், அத் தெய்வநாயகன்தானே—தேவர்களுக்குத் தலைவனை ஸ்ரீ மகா விஷ்ணுவே, மறுத்திரு மார்வன் அவன்தன் பூதங்கள் கீதங்கள் பாடி,—ஸ்ரீவத்சம் என்னும் மறுவைத் தன் அழகிய மார்பிலே உடைய அப்பெருமானின் ஆவிகள் கீர்த்தனங்கள் செய்து, வெறுப்பின்றி ஞாலத்து மிக்கார்—எவருக்கும் வெறுப்பு இல்லாமல் பூமியில் நிறைந்துள்ளனர், மேவித் தொழுது உய்மின் நீரே—அவர்களைப் பொருந்தித்தொழுது வாழ்வு கொள்ளுங்கள் நீங்கள்.

உலகங்களில் எங்கும் தன் வடிவிலேயே தெய்வங்களை நிருமித்தான் எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணன். அங்கங்கு தங்கியிருக்கிறவர்கள் அங்கங்கு வணங்கும்படி தங்கியிருக்கும் தெய்வங்களாக அர்ச்சைகளை நிருமித்தான். தவிர அவன் தூதர்களாக ஆழ்வார்களும் ஆச்சாரியர்களும் அடியார்களும் எல்லோரும் உவக்கும்படி கீதங்கள் பாடுகிறவர்கள் உலகில் நிறைந்திருக்கிறார்கள். அவர்களை அடைந்து விரும்பித் தொழுது வாழ்வு பெறுங்கள் என்றவாறு.

5—2—9

மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை
நாவில்கொண்டச்சுதன்தன்னை ஞானவிதிபிழையாமே
பூவில்புகையும்விளக்கும் சாந்தமும்நீரும்மலிந்து
மேவித்தொழுமடியாரும் பகவரும்மிக்கதுலகே. 9

மேவித்தொழுது உய்மின் நீங்கள்—நீங்கள் பொருந்தி வணங்கி வாழ்வு பெறுங்கள், வேதப் புனித இருக்கை நாவில் கொண்டு அச்சுதன்தன்னை—வேதமாகிய தெய்வீக இருப்பில் இருக்கும் கைநழுவவிடாத பெருமானை நாவால், ஞானவிதி பிழையாமே—ஓம் என்ற சத் பதத்தையும் நாமங்களின்முன்

இணைத்து வேத விதிமுறை தவருமல், பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து—பூவுடன் தூப தீபமும் சாந்தும் நீரும் மிகுதியாகக்கொண்டு, மேவித் தொழும் அடியாரும் பகவரும் மிக்கது உலகம்ஏ—விரும்பித் தொழுகின்ற தொண்டர்களும் பக்தர்களும் மிகுந்துள்ளது உலகம்ஏ. ஏ—அசை.

வேதமே தன் இருப்பிடமாகக் கொண்டுள்ள அச்சுதப் பெருமானை பொருந்தித் தொழுது வாழ்வு பெருவீர்களாக. நாவினுல் அவனை ஞானவிதி பிழையாமல் நாமங்கள் சொல்லுங்கள். பூவும் தூபதீபமும் சாந்தும் நீரும் குறைவில்லாமல் கொண்டு விரும்பித் தொழும் அடியார்களும் பக்தர்களும் நிறைந்துள்ளது இவ்வுலகம்.

இந்த உலகில் எம்பெருமானைத் தொழுகிறவர்கள் இல்லை என்று நினைக்கவேண்டாம். பூவும் புகையும் விளக்கும் சாந்தும் நீரும்கொண்டு தொழுகின்றவர்கள் மிகுதியாக உள்ளனர். வேதநாயகனுன அந்த அச்சுதனை நாமங்கள் சொல்லித் தொழுது வாழ்வு பெறுங்கள் என்றவாறு.

5—2—10

மிக்கவுலகுகள்தோறும் மேவிக்கண்ணன்திருமூர்த்தி
நக்கபிரானேடு அயனுமிந்திரனும்முதலாக
தொக்கவமரர்குழாங்கள் எங்கும்பரந்தனதொண்டீர்
ஒக்கத்தொழகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லையே 10

மிக்க உலகுகள் தோறும்—அடியார்களும் பக்தர்களும் மிகுந்த உலகங்கள்தோறும், மேவி—பொருந்தி, கண்ணன் திருமூர்த்தி—திவ்ய வடிவோடு ஸ்ரீகண்ணபிரான், நக்கபிரானேடு—சிவபிரானுடன், அயனும் இந்திரனும்—பிரமனும் இந்திரனும், முதலாக—முதல்கொண்டு, தொக்க அமரர் குழாங்கள்—பொருதிய தேவர்கள் பல இனத்தவரும், எங்கும் பரந்தன—எல்லா இடங்களிலும் பரவியுள்ளனர், தொண்டீர்!—தொண்டர்களே! ஒக்கத் தொழகிற்றிராகில்—பொருந்தத் தொழுவீர்களாயின், கலியுகம் ஒன்றுமில்லைஏ—கலியுகக் கொடுமைகள் எவையும் இருக்கா.

நக்கபிரான்—திரிபுரம் எரித்தபோது சிரித்த சிவபிரான், குழாங்கள்—கூட்டங்கள்.

அடியார்களும் பக்தர்களும் நிறைந்துள்ள இடங்களில் எல்லாம் ஸ்ரீகண்ணனும் சிவன் பிரமன் இந்திராதி தேவர்களுடன் எங்கும் பரவி இருப்பான். அப்பெருமானை நன்கு தொழுதால் கலியுகத்தில் நடைபெறுகிற துன்பச் சூழ்நிலை உங்களுக்குச் சிறிதளவும் இருக்காது என்றபடி.

5—2—11

கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள்செய்யும்
மலியும்சுடரொலிமூர்த்தி மாயப்பிரான்கண்ணன்தன்னை
கலிவயல்தென்னன்குருகூர்க் காரிமாறன்சடகோபன்
ஒலிபுகழாயிரத்திப்பத்து உள்ளத்தைமாசறுக்குமே 11

கலியுகம் ஒன்றும் இன்றிக்கே—கலியுகம் ஒன்றும் இல்லாதிருக்கவே, தன் அடியார்க்கு அருள் செய்யும்—தன் பக்தர்களுக்குக் கருணைபுரியும், மலியும் சுடர்ஒளி மூர்த்தி—திகழும் ஒளி வடிவினனாகிய, மாயப்பிரான் கண்ணன்தன்னை—மாயவன் ஸ்ரீகண்ணபிரானை, கலிவயல் தென்னன் குருகூர்க் காரிமாறன் சடகோபன்—மகிழ்ச்சிதரும் வயல்களையுடை பாண்டிய நாட்டுக் குருகூரைச் சேர்ந்த காரிமாறன் சடகோபனின், ஒலி புகழ் ஆயிரத்து இப்பத்து—புகழ்ந்து பேசப்படுகின்ற ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்துப் பாசுரங்களும், உள்ளத்தை மாசு அறுக்குமே—உள்ளத்திலுள்ள குற்றங்களை (தீய எண்ணங்களை) நீக்கும்.

ஐந்தாம்பத்து—மூன்றாம் திருவாய்மொழி

மாசறுசோதி

5—3—1

மாசறுசோதி என்செய்யவாய்மணிக்குன்றத்தை
ஆசறுசீலனை ஆதிமூர்த்தியைநாடியே
பாசறவெய்தி அறிவிழந்தெனைநாளையம்
ஏசறுமூரவர்கவ்வை தோழீயென்செய்யுமே. 1

மாசு அறு சோதி—குற்றமற்ற சோதியாகிய, என் செய்வாய் மணிக்குன்றத்தை—சிவந்த வாயையுடைய நீல மணிக்குன்றம் போன்ற என் பெருமானை, ஆசு அறு சீலனை—குற்றமில்லாத குணப்பண்புடையானை, ஆதிமூர்த்தியை—படைப்புக்கே ஆதி முதல்வனாக உள்ளவனை, நாடியே பாசறவு எய்தி—(ஆசை கொண்டு) தேடித்தளர்ந்து போய், அறி விழந்த எனை—அறிவு கலங்கிய என்னை, நாளையம்—நாள் தோறும், ஏசு அறும்—குற்றத்தை (அறுவடை அறுப்பது போலக்) கொய்து (பேசிக்) கொண்டே இருக்கும், ஊர்—ஊர்மக்கள், அவர்கவ்வை—அவர்களுடைய பழிசொல், தோழியே—தோழீ! என் செய்யுமே—நம்மை என்னை செய்து விடும்?

தோழீ! நான் விரும்பி நாடுவது பரிசுத்தமான ஒளியை யுடையவனும் சிவந்த வாயையுடையவனும் நீலமணிக் குன்று போன்றவனுமான குற்றமற்ற உயர்ந்த குணங்களை உடைய தேவாதிதேவனை. நான் அவனைத்தேடித் தளர்ந்து அறிவு கலங்கி யுள்ளேன். என்னை இந்த ஊர் எப்போதும் பழி தூற்றிக் கொண்டே இருக்கிறது. அவர்களுடைய பழி என்னை என்ன செய்துவிடும்.

எம்பெருமானிடம் காதல்கொண்ட ஒரு பெண் தன் தோழியிடம் இவ்வாறு கூறுகிறாள். இறைவனிடம் பக்தி கொள்ளுகிறவர்களைப்பற்றி ஊர் என்ன சொன்னால் என்ன பழிக்கு அஞ்சவேண்டியதே இல்லை என்றவாறு வெகு அழகாக ஆழ்வார் பெருமானார் நமக்கு உணர்த்தாமல் உணர்த்துகிறார். நாம் அந்த உயர்ந்த தேவனைப் பற்றினால் குறை சொல்வ தற்கு ஒன்றுமே இல்லை என்றவாறு.

5—3—2

என்செய்யுமூரவர்கவ்வை தோழீயினிநம்மை
என்செய்யதாமரைக்கண்ணன் என்னைநிறைகொண்டான்
முன்செய்யமாமையிழந்து மேனிமெலிவெய்தி
என்செய்யவாயும்கருங்கண்ணும் பயப்பூர்ந்தவே. 2

தோழீ—தோழியே! இனிநம்மை—இனிமேல், நம்மை என் செய்யும் ஊரவர் கவ்வை—ஊராார்களின் அலர் தூற்றல் என்ன துன்பம் செய்யும் (ஒன்றும் செய்யாது என்றபடி), என் செய்ய தாமரைக்கண்ணன்—என்னுடைய அழகிய தாமரைக் கண்ணன், என் நிறைகொண்டான்—என் நலம் கொண்டான் (என் மனம் கொள்ளை கொண்டான்), முன் செய்ய மாமை இழந்து—முன்பிருந்த அழகிய மாந்தளிர் போன்ற நிறம் இழந்து, மேனி மெலிவு எய்தி—உடம்பு இளைத்துப் போய், என் செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பு ஊர்ந்தவே—என் அழகியவாயும் (குளிர்ந்திருந்த) கருமை நிறம் பொருந்திய கண்களும் பசலை பரந்தனவாயின.

எம்பெருமானாகிய ஸ்ரீ கண்ணனே என் நலத்தைக் கொள்ளைகொண்டான். ஆதலால் ஊரார் பேசும் ஏச்சுப் பேச்சுகள் நம்மை என்ன செய்ய முடியும், என் மனதைக் கலக்க முடியாது.

5—3—3

ஊர்ந்தசகடம் உதைத்தபாதத்தன் பேய்முலை
சார்ந்துசுவைத்தசெவ்வாயன் என்னைநிறைகொண்டான்
பேர்ந்தும்பெயர்ந்தும் அவனோடன்றியோர்சொல்லிலேன்
தீர்ந்தவென்தோழீ என்செய்யுமூரவர்கவ்வையே. 3

ஊர்ந்த சகடம் உதைத்த பாதன்—ஸ்ரீ கண்ணனைக் கொல்ல ஊர்ந்து வந்த (வண்டிச்) சக்கரத்தைக் கால்களால் உதைத்த பாதங்களையுடையவன், பேய்முலை சார்ந்து சுவைத்த செவ்வாயன்—விஷப்பால் கொடுத்துக் கொல்ல வந்த பேய்த் தன்மை கொண்ட பூதகியிடம் விரும்பியவன்போல் ஆர்வம் காட்டி மகிழ்ந்து உண்ட சிவந்த வாயுடையவன் ஸ்ரீகண்ணன், என்னை நிறைகொண்டான்—என்னுடைய நலம் கவர்ந்தான், பேர்ந்தும் பெயர்ந்தும் அவனோடு அன்றி ஓர் சொல் இலேன்—என்னுடைய நிலையில் மாறினாலும் அக்கண்ணனோடே அல்லாமல் என் மனமும் சொல்லும் அமையுமல்லாது வேறு

பேச்சு இல்லாதவள் நான், தீர்ந்த என் தோழீ! இவை முடிவானவை என்னுடைய தோழியே! என் செய்யும் ஊரவர் கவ்வை—ஊரார்களின் அலர் நம்மை என்ன செய்யும்?

சகடாசூரனையும் பூதகியையும் கொன்றவன் ஸ்ரீ கண்ணபிரான். அவன் நம்முடைய நலம் கவர்ந்தான். ஆகையால் ஊரார்கள் நம்மை இழிவாகப் பேசும் பேச்சு என்ன செய்யும். அவனோடு சென்ற மனம் அவனுடன் தான் இருக்கும். அவனே என்னை விட்டாலும் நான் அவனுடைய பேச்சல்லாது வேறு பேச்சு எடுக்கமாட்டேன்.

இவ்வாறாக எம்பிரானால் உள்ளம் கொள்ளைகொள்ளப் பட்ட காரிகையாள் தன் கற்பின் திண்மையை தோழியிடம் உரைக்கின்றாள். ஊரிலுள்ளவர்கள் என்ன பழிசொல் பேசினால் என்ன எம்பெருமானிடம் பக்திகொண்டபின் யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை என்றவாறு.

எம்பெருமானிடம் உறுதியான பக்தி கொண்டவர்களை எம்பெருமான் கைவிடவேமாட்டான் என்றபடி.

5—3—4

ஊரவர்கவ்வையெருவிட்டு அன்னைசொல்நீர்மடுத்து
ஈரநெல்வித்திமுளைத்த நெஞ்சப்பெருஞ்செயுள்
பேரமர்காதல் கடல்புரையவிளைவித்த
காரமர்மேனி நம்கண்ணன்தோழீ! கடியனே. 4

ஊரவர் கவ்வை—ஊரார்கள் பேசும் பழிசொல்லை (அலர்), எருவிட்டு—எருவாக இட்டு, அன்னை சொல் நீர் மடுத்து—தன்னுடைய விதியை நொந்து மகளைப்பற்றித் தாயார் உரைத்த மதிமயங்கிய பேச்சையே நீராக உட்கொண்டு (பருகி), ஈர நெல்—இரக்கமாகிய நெல்லை, வித்தி முளைத்த—விதைத்துமுளைத்த, நெஞ்சப்பெருஞ் செயுள்—நெஞ்சமாகிய பெரிய வயலில், பேரமர் காதல்—மிகப் பெரியதாகிய காதல், கடல்புரைய—கடலை ஒக்குப்படியாக, விளைவித்த—தோற்றுவித்த (உண்டாக்கிய), காரமர் மேனி—கருமைநிறம் பொருந்தப்பெற்ற உடலையுடைய, நம் கண்ணன்—நம்முடைய ஸ்ரீ கண்ணனாகிய தேவன், தோழீ!—தோழியே! கடியனே—இரக்கமில்லாதவனே.

செயுள்—வயல், கவ்வை—பழிசொல், மடுத்து—பருகி,

கண்ணனிடம் காதல்கொண்ட நாயகியாகிய மகளுக்கு ஊரார் பேசும் பழி சொல்லே அவளுக்கு நெஞ்சமாகிய பெரிய வயலில் எருவாக இருந்தது, அன்னை நொந்து பேசும் பேச்சே அந்நெஞ்சில் எருவுக்கு இட்ட நீராக அமைந்தது. காதலாகிய நெல் அந்த நெஞ்சிலே விதைக்கப்பட்டதால் அந்நெஞ்சில் முளைத்தபெரியதோர் காதல் கடலை ஒத்ததோர் கருமைநிறம் பொருந்திய உடலையுடைய ஸ்ரீ கண்ணனைத் தோற்றுவித்து அவன் இரக்கமில்லாதவனாக இருக்கிறானே! தோழீ!

5—3—5

கடியன்கொடியன்நெடியமால் உலகம்கொண்ட
அடியன் அறிவருமேனிமாயத்தன் ஆகிலும்
கொடியவென்னெஞ்சம் அவனென்றேகிடக்குமெல்லே
துடிகொளிடைமடத்தோழீ அன்னையென்செய்யுமே. 5

கடியன்—இரக்கமில்லாதவன், கொடியன்—கொடுமைகள் செய்கிறவன், நெடியமால்—திருமால், உலகம் கொண்ட அடியன்—உலகத்தைத்தன் பாதங்களால் அளந்து கொண்டவன், ஆகிலும்—ஆனாலும், கொடிய என் நெஞ்சம்—கடூரமான என் உள்ளம், அவன் என்றே கிடக்கும்—அவனிடத்திலேயே ஈடுபட்டதாக இருக்கிறது. எல்லே!—அந்தோ! துடிகொள்இடைமடத்தோழீ!—உடுக்கை போன்ற இடையையுடைய மடமைமிக்க தோழீயே! அன்னை—தாயானவள், என் செய்யும்ஏ—என்ன செய்வாள், ஏ—அசை.

நான் காதல் கொண்ட நெடுமால் இரக்கமில்லாதவன் கொடுமை மிக்கவன் உலகம் அளந்தவன் ஆனாலும் அவனிடமே என் நெஞ்சம் ஊன்றி விட்டது. பாவம்! தாயானவள் என்ன செய்வாள் வருந்தத்தான் செய்வாள், என்று மகள் தோழியிடம் உரைக்கிறாள்.

தாய் வருந்துவதற்காக எம்பெருமானிடம் பக்தியை எப்படி விடமுடியும். அவன் அருளவில்லையே என்று அவனை விடக்கூடாது என்றபடி.

5—3—6

அன்னையென்செய்யிலென் ஊரென்சொல்லிலென்தோழிமீர்
என்னையினியுமக்காசையில்லை அகப்பட்டேன்
முன்னையமரர்முதல்வன் வண்துவராபதி
மன்னன் மணிவண்ணன் வாசுதேவன்வலையுளே. 6

அன்னை என் செய்யில் என்—தாய் நம்மைப்பொருத்து என்ன செய்தால் என்ன கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை ஊர் என் சொல்லில் என்—ஊரார் என்ன பழி தூற்றிறுல் என்ன. தோழிமீர்—தோழிகளே! என்னை இனி உமக்கு ஆசையில்லை—என்னிடம் இனிமேல் உங்களுக்கு பற்று இருக்காது, அகப்பட்டேன் (எங்கே யாரிடம் தெரியுமா), முன்னை அமரர் முதல்வன்—மூத்த தேவர்களான நித்யசூரியர்களுக்கும் சிவன் பிரமாவுக்கும் முதல்வனும், வண்துவராபதி மன்னன் —புகழ்மிக்க துவாரகாபுரிக்கு அரசனும், மணிவண்ணன்—நீலமாணிக்கம் போன்ற நிறமுடையவனுமான, வாசுதேவன் வலையுளே!—எங்கும் நிறைந்த வாசுதேவனின் (அன்பாகிய) வலையில்.

தோழிகளே! இனிமேல் என்னிடம் உங்களுக்கு அன்பு இருக்காது. ஏனென்றால் தேவர்களுக்கும் தேவனுன முதல் தேவன் மகாவிஷ்ணுவிடம் கொண்ட காதல் என்னும் வலையுள் அகப்பட்டுக்கொண்டேன். தாயாரைப்பற்றியும் ஊராரைப் பற்றியும் எனக்குக்கவலை இல்லை, அவர்கள் என்னசொன்னுல் என்ன, நான் அந்த துவாரகாபுரி கண்ணனிடமே மனம் செலுத்துவேன் அவனையே நான் வணங்கியபடி இருப்பேன் இனி என்னை மாற்றமுடியாது என்றபடி.

இவ்வாறு அசையாத பக்தியைப்பற்றிக் கூறியவாறு.

5—3—7

விலையுளகப்படுத்து என்னைநன்னெஞ்சம்கூவிக்கொண்டு
அலைகடல்பள்ளியம்மானை ஆழிப்பிரான்தன்னை
கலைகொளகலல்குல்தோழீ நம்கண்களால்கண்டு
தலையில்வணங்கவுமாங்கொலோ தையலார்முன்பே 7

நன்னெஞ்சம் கூவிக்கொண்டு—என்னுடைய அப்பழுக்கற்ற தூய்மையான நல்ல நெஞ்சை கூவிக்கவர்ந்து கொண்டு, வலையுள் அகப்படுத்து என்னை—தன்னுடைய மையலில் அகப்படுத்துவான் என்னை, அலைகடல் பள்ளி அம்மானை—அலைகள் வீசும் கடலைப்பள்ளி கொள்ளும் இடமாகக்கொண்ட அப்பனை, ஆழிப்பிரான் தன்னை—சுதர்சனசக்கரம் உடைய தேவனை, கலைகொள் அகல் அல்குல் தோழி—மேகலை அணிந்த அகன்ற அல்குலையுடைய தோழியே! நம் கண்களால் கண்டு தலையில்

வணங்கவும் ஆம்கொலோ தையலார் முன்புஏ—அப் பெருமானை பெண்கள் அநேகர் இருப்பரே! நேரில் தரிசித்து அவனைத் தலையால் வணங்கவும் முடியுமோ?

அலைகடலில் பள்ளிகொண்டவனும் சக்கரத்தைக் கையில் ஏந்தியவனுமான பெருமானை மற்ற பெண்களின் முன்னிலையில் எப்படி தரிசிப்பது தலையால் வணங்குவதுதான் எப்படி நமக்கு நாணமாக இருக்கிறதே என்கிருள். ஆண்ட வனைத் தரிசித்து வணங்குவதற்கு நாணம் தடையாக நேரிட வும் நேரிடும் எ—று.

5—3—8

பேய்முலையுண்டுசகடம்பாய்ந்து மருதிடை
போய்முதல்சாய்த்து புள்வாய்பிளந்துகளிறட்ட
தூமுறுவல்தொண்டைவாய்ப்பிரானை எந்நாள்கொலோ
யாமுறுகின்றதுதோழீ அன்னையர்நாணவே. 8

பேய்முலை உண்டு—பேய்த் தன்மையுடைய பூதகி யிடம் விஷப்பாலுண்டு, சகடம் பாய்ந்து—தன்னைக்கொல்ல சக்கரம்போல்வந்த சகடா சூரனைக் காலால் உதைத்து, மருது இடைபோய்—இரட்டுறப் பொருந்திய மருத மரங்களின் இடையே போய், முதல் சாய்த்து—(அவற்றை) அடியோடு சாய்த்து, புள்வாய் பிளந்து—கொக்கின் வாய் பிளந்து, களிறுஅட்ட—கம்சனின் குவலயாபீட யானையைக் கொன்ற, தூமுறுவல் தொண்டைவாய்ப்பிரானை—குற்றமற்ற புன்னகை உடையவனும் தொண்டைப்பழம்போல் சிவந்த வாயையுடை யவனுமான ஸ்ரீ கண்ணபிரானை, எந்நாள் கொலோ யாம் உறுகின்றது தோழீ!—அடைவது எந்நாளோ(தெரியவில்லையே) தோழியே! அன்னையர் நாணவே—தாய்மார்கள் வெட்கப் படும்படியாக,

இவ்வளவு லீலைகள் புரிந்த புன்னகை புரிகின்றவனும் சிவந்த வாயை யுடையவனுமான ஸ்ரீ கண்ணனைக்காண்பது எந்நாளோ என்ற ஆர்வம் மேலிட்டவளாளுள் மகள், தாய் மார்கள் கண்டு மயங்கி வெட்கும்படியாக நான் அவனைக் காணவேண்டும் என்று நினைக்கிருள். இதனல் இவளுடைய தாபம்மற்றவர்கள் ஏச்சுப் பேச்சால் அதிகரிக்கப் பெற்ருள்.

உண்மையான பக்தி இடையூறுகளால் தடைபடாது உந்தம்பெறுமே அல்லாது தணியாது.

5—3—9

நாணும்நிறையும்கவர்ந்து என்னைநன்னெஞ்சம்கூவிக்கொண்டு
சேணுயர்வானத்திருக்கும் தேவபிரான்தன்னை
ஆணையென்தோழீ உலகுதோறலர்தூற்றி ஆம்
கோணைகள்செய்து குதிரியாய்மடலூர்துமே. 9

நாணும் நிறையும் கவர்ந்து—என்னுடைய நாணமாகிய பண்பையும் கற்பாகிய நலத்தையும் என்னிடமிருந்து வசீகரித்து, என்னை நன்நெஞ்சம் கூவிக்கொண்டு—என்னுடைய நல்ல உள்ளத்தையும் கொள்ளைகொண்டு, சேண்உயர் வானத்திருக்கும் தேவபிரான் தன்னை—தூரத்தே உயர்ந்த விண்ணுலகில் இருக்கும் தேவபிரானை, ஆணை என் தோழீ—ஆணை இடுகிறேன் (பிரதிக்ஞை செய்கிறேன்) என் தோழியே! உலகுதோறு அலர் தூற்றி—ஒவ்வொரு உலகமாகச்சென்று எம்பெருமானின் தகாத்தன்மையை பழியாக எடுத்துக்கூறி, ஆம் கோணைகள் செய்து—ஆகக்கூடிய கூத்துக்களைச் செய்து, குதிரியாய் மடல் ஊர்துமே—கயவனாய் மடல் ஊர்வன் நான்.

எம்பெருமான் என்னுடைய தூய்மையான சிந்தையைக் கவர்ந்து சென்றுவிட்டார். என்னுடைய கற்பையும் நாணையும் இழந்து நிற்கிறேன். அவன் வானுலகில் தூரமாக இருக்கிறான். அவன் என்னை ஏற்றுக்கொள்ளான் எனில் நான் உலகந்தோறும் சென்று அவன் இப்படி என்னை வஞ்சித்துக் கைவிட்டு விட்டான் என்று பலரும்அறியும் படியாகப்பிச்சைக்காரன்போல் மடல் ஊர்ந்து தெருக்களில் திரிந்து அவனைப் பற்றி கேவலமாகச் சொல்லி மானம் கெடுப்பேன் என்று நலம் இழந்த பெண் கூறுகின்றாள்.

இது எம்பெருமானைச் சமநிலையில் கொண்டு பக்தி பெறும் உபாயம் ஆகும். ஸ்ரீ கண்ணபிரானுக்கு அர்ச்சுனன் (சகாவாக) நண்பனாக இருந்தான். நண்பன் என்ற முறையில் ஸ்ரீ கண்ணனை உரிமையோடு அதட்டிக் கேட்டான் பல விஷயங்களை. அஃதே போல் ஈண்டு காதலி முற்றிய காதலால் நாணமும் நிறையும் இழந்தவளாக அருள் புரிய வேண்டுகிறாள். அருளாதநிலையாக மடல் ஊர்ந்து உரிமையைப் பெறுவேன் என்கிறாள், பக்தி செய்யும் ஒன்பது படிகளில் இது சக்ய பாவம் ஆகும்.

எம்பெருமானை இவ்வாறு சமமாகப்பாவித்து பக்தி செய்யினும் அவன் அருள்புரிவான் என்றவாறு.

5—3—10

யாமடலூர்ந்தும் எம்மாழியங்கைப்பிரானுடை
தூமடல்தண்ணந்துழாய் மலர்கொண்டுசூடுவோம்
யாமடமின்றித் தெருவுதோறயல்தையலார்
நாமடங்காப்பழிதூற்றி நாடுமிரைக்கவே. 10

யாம் மடம் இன்றி—நாம் அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு என்ற பெண்களுக்குரிய குணங்களை எல்லாம் விட்டுவிட்டு, தெருவு தோறு—வீதிவீதியாக, அயல் தையலார்—அன்னிய (மற்ற) மகளிர், நாமடங்காப் பழிதூற்றி—வாய்கூசாது பேசும்படியாகப் பழி சொல்லி, நாடும் இரைக்கவே—நாடு முழுவதும் பேசும்படியாக, யாம் மடல் ஊர்ந்தும்—நாம் மடல் ஏறி, எம் ஆழிஅம்கைப்பிரானுடைய—சக்கரத்தை அழகியகையில் கொண்டுள்ள நம் தேவ பெருமானின், தூ மடல்—பவித்திரமான தாழையாகிய, தண்அம்துழாய் மலர் கொண்டு சூடுவோம்—இனிய அழகிய திருத்துழாய் மலர்கொண்டு அணிவோம்.

எம்பெருமானிடம் அருள் பெருத ஆற்ருமையால் மடல் ஏறி ஊர்ஊராகத் தெருத்தெருவாகச் சென்று எம்பெருமான் என்னுடைய உள்ளத்தையும் என் பண்பு நலன்களையும் கவர்ந்து சென்று என்னை அபலையாகத் திரியும்படி விட்டு விட்டான். அவன் பெருமான் என்றும் கருணைக்கடல் என்றும் பேசுகிருர்களே. அவன் பெருமை எங்கே என்று அயல் மங்கையரும் பேசும்படியாகப் பேசி நாடும் அறியப் பழி தூற்றி அவனை இணங்கும்படி செய்து அவன் திருத்துழாய் மார்பை அடைவோம் எ—று.

5—3—11

இரைக்குங்கருங்கடல்வண்ணன் கண்ணபிரான்தன்னை
விரைக்கொள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொன்ன
நிரைக்கொளந்தாதி ஓராயிரத்துளிப்பத்தும்
உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும்தம்மூரெல்லாம். 11

இரைக்கும் கருங்கடல் வண்ணன் கண்ணபிரான் தன்னை—ஒலிக்கின்ற கருங்கடல் நிறத்தையுடைய ஸ்ரீ கண்ண பிரானை, விரைக்கொள் பொழில் குருகூர்ச்சடகோபன் சொன்ன—வாசனை வீசும் சோலைகளையுடைய குருகூரைச் சேர்ந்த சடகோபமுனி உரைத்த, நிரைகொள் அந்தாதிப் பாசுரங்கள் ஓராயிரத்துள் இப்பத்துப் பாசுரங்களும், உரைக்க வல்லார்க்கு—சொல்லவல்வர்களுக்கு, தம் ஊர் எல்லாம் வைகுந்தமாகத் திகழும்.

ஊரெல்லாந்துஞ்சி

5—4—1

ஊரெல்லாம்துஞ்சி உலகெல்லாம்நள்ளிருளாய்
நீரெல்லாம்தேறி ஓர்நீளிரவாய்நீண்டதால்
பாரெல்லாமுண்ட நம்பாம்பணையான்வாரானல்
ஆரெல்லேவல்வினையேன் ஆவிகாப்பாரினியே. 1

ஊர் எல்லாம் துஞ்சி—ஊரிலுள்ளார் எல்லோரும் தூங்கி, உலகு எல்லாம் நள் இருளாய்—உலகம் முழுவதும் கரிய இருள் நிறைந்ததாய், நீர்எல்லாம் தேறி—தண்ணீர் எல்லாம் தேங்கி, ஓர் நீள் இரவாய் நீண்டதால்—இரவு நீண்ட இரவாக நெடுநேரம் ஆகியும், பார் எல்லாம் உண்ட நம் பாம் பணையான் வாரானல்—உலகு எல்லாம் உண்டவனும் ஆதி சேஷன் மீது பள்ளி கொண்டவனுமான பெருமான் வர மாட்டான். ஆகையால், ஆர்—யார், எல்லே—அந்தோ! வல்வினையேன் ஆவி காப்பார் இனியே—கொடிய பாவம் செய்தவனுகிய என் பிராணனைக் காப்பார் இனிமேல்.

பாம்பணையானுகிய ஸ்ரீமன் நாராயணன் வருவான் வருவான் என்று இரவுஎல்லாம் எதிர்பார்த்துக் காணுத மகள் இரவு நீண்டு கொண்டு போகின்றதே என்று மயங்கி இனி அவன் வர மாட்டான் போலிருக்கிறது என்று மனம் தளர்ந்து ஐயோ! இனி நம்மைக் காப்பார் யாருளர் என்று ஏங்குகிருள்.

எம்பெருமான் ஒருவனே ரக்ஷகன் அவன் வந்து ரட்சிக்க வில்லை என்ருல் இனி என்ன செய்வது என்று தான் பெரிய பாவம் செய்தவளாய்த் அவள் தனிமையை நினைத்து வருந்துகிருள்.

கார்பண்யம் என்னும் பேதுறு (இரங்கும்) நிலை எய்துகிருள் நாயகி.

அதற்கு எம்பெருமான் இரங்கி அருள் புரிகின்றவன் ஆவன்.

5—4—2

ஆவிகாப்பாரினியார் ஆழ்கடல்மண்விண்மூடி
மாவிகாரமாய் ஓர்வல்லிரவாய்நீண்டதால்
காவிசேர்வண்ணன் என்கண்ணனும்வாரானால்
பாவியேன்நெஞ்சமே நீயும்பாங்கல்லையே. 2

ஆவி காப்பார் இனியார்—இனி பிராணனைக் காக்கின்றவர் யார், ஆழ்கடல் மண் விண் மூடி மா விகாரமாய்—ஆழமான கடலும் பெரிய பூமியும் பரந்த ஆகாசமும் எல்லாம் மூடப்பெற்று பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாய், ஓர் வல் இரவாய் நீண்டதால்—ஒரு கொடிய இரவாக நீண்டுகொண்டே போவதாலும், காவி சேர்வண்ணன்—குவளைப் பூப்போன்று நீல நிறமுடையவனாகிய, என் கண்ணனும் வாரானால்—என்னுடைய அன்புமிக்க ஸ்ரீகண்ணனும் வரவில்லை யாதலால், பாவியேன்—பாவம் செய்தவளாகிய, என் நெஞ்சமே, நீயும் பாங்கல்லையே—நீயும் பொருத்தம் அற்றதாய் இருக்கின்றாய்.

இதனால் எம்பெருமானிடம் காமுற்ற காரிகையானவள் கண்ணன் கண்ணன் என்றே இரவு எல்லாம் தூங்கவில்லை என்பது தெரிகிறது. உலகெல்லாம் பயங்கரமாக இருள் சூழ்ந்து இருந்தது என்பதால் அவனை எதிர்பார்த்தபடி இருந்தாள் என்பதும், அவன் வராததால் அவள் தன்னைப் பாவியாக நொந்து கொள்வதும் நெஞ்சம் பக்குவம் கொள்ள வில்லையே என்பதும் எம்பெருமானிடம் கொண்ட பெருங்காதலே ஆகும்.

இது நெஞ்சொடு கிளத்தது ஆகும்.

5—4—3

நீயும்பாங்கல்லைகாண் நெஞ்சமேநீளிரவும்
ஓடியும்பொழுதின்றி ஊழியாய்நீண்டதால்
காயும்கடுஞ்சிலை என்காகுத்தன்வாரானால்
மாயும்வகையறியேன் வல்வினையேன்பெண்பிறந்தே. 3

நெஞ்சமே—நெஞ்சே! நீயும் பாங்கல்லை காண்—நீயும் பொருத்தமில்லை என்பது தெரிகிறது, நீள் இரவும் ஓயும் பொழுது இன்றி ஊழியாய் நீண்டதால்—நீண்ட இரவும் கழி

யாததாய் ஊழிக்காலம்போல் நீண்டுகொண்டே போகிறதால், காயும் கடுஞ்சிலை—தகிக்கும் கொடிய வில் ஏந்திய, என் காகுத்தன்—என்னுடைய ஸ்ரீராமபிரான், வாராஞல்—வரவில்லையாதலால், மாயும்வகை அறியேன்—உயிரை மாய்த்துக்கொள்ளும் வழி அறியாதவளாய் இருக்கிறேன், வல்வினையேன் பெண் பிறந்தே—பெண்ணுகப் பிறந்த கொடிய பாவியாகிய நான்.

நெஞ்சம் பொருத்தமாய் இருந்திருந்தால் ஸ்ரீராமன் நிச்சயமாக வந்திருப்பான்.

அவன் வராததால் நெஞ்சம் சரியில்லை என்று தெரிகிறது. பொழுது விடிந்தால் அவன் வருவான். இரவும் கழியாததாய் யுகம் போல் நீண்டு கொண்டே இருக்கிறது. மாயும் வகையும் அறியாதவளாய் இருக்கிறேன். பெண்ணுகப் பிறத்த நான் பாவியே ஆவேன் எ—று.

இலங்கையில் அசோக மரத்தின்கீழ் பத்துமாத காலம் சிறை இருந்த சீதைப் பிராட்டி ஏங்கிய ஏக்கம் இது. பகைவர்களை அம்புகளால் தகிக்கும் அந்த கோதண்டபாணியான ஸ்ரீராமன் சர்வலோக நாயகன் எதிர்பார்த்து எதிர்பார்த்து வரவில்லையே. இனி என் செய்வது. உயிரை மாய்த்துக் கொள்ளும் வகையும் அறியேன். பெண்ணுகப் பிறந்தேனே! என்ன பாவம் செய்தேனே அறியேன் என்ற பான்மையில் அவனிடம் பக்தி கொண்ட மாது புலம்புகிருள்.

5—4—4

பெண்பிறந்தாரெய்தும் பெரும்துயர்காண்கிலேனென்று
ஒண்சுடரோன் வாராதொளித்தான் இம்மண்ணளந்த
கண்பெரியசெவ்வாய் எங்காரேறுவாராஞல்
எண்பெரியசிந்தைநோய் தீர்ப்பாராரென்னையே. 4

பெண் பிறந்தார் எய்தும் பெருந்துயர் காண்கிலேன் என்று—பெண்ணுகப் பிறந்தவர்கள் படும் பாட்டை (துன்பத்தைக்) காணச் சகிக்கமாட்டேன் என்று,

ஒண் சுடரோன் வாராது ஒளித்தான்—ஒளிபொருந்திய சூரியன் உதிக்காது ஒளிந்து கொண்டான், இம்மண் அளந்த கண் பெரிய செவ்வாய் எங்கார் ஏறு வாராஞல்—இந்த நிலவுலகையும் விண்ணுலகையும் தம் பாதங்களால் அளந்த பெரிய கண்களையும் சிவந்த வாயையும் உடைய கரியமேனி

யுடைய எம் தலைவன் வரவில்லையால், என் பெரிய சிந்தை நோய்—எண்ணுவதற்கும் அரியதான மனக்கவலையை, தீர்ப்பார் ஆர் என்னையே—நீக்குவார் யார் எனக்கு. ஒருவரும் இல்லையே என்று ஏங்கியவாறு

எண்ணுதற்கும் அரிய மனக் கவலைகளைப் போக்கவல்லவன் உலகமளந்த பெருமான் ஒருவனே. அவனை நாம் பற்ற வேண்டும் எ—று.

5—4—5

ஆரென்னையாராய்வார் அன்னையரும்தோழியரும்
நீரென்னேயென்னாதே நீளிரவும்துஞ்சுவரால்
காரன்னமேனி நம்கண்ணனும்வாரானால்
பேரென்னைமாயாதால் வல்வினையேன்பின்னின்றே 5

ஆர் என்னை ஆராய்வார்—யார் என்னுடைய மன நிலையை ஆராய்ந்து பார்க்கிறவர்கள், அன்னையரும் தோழியரும் நீர் என்னே என்னாதே நீள் இரவும் துஞ்சுவர் ஆல்—தாய்மார்களும் தோழிகளும் உனக்கு என்ன (தூங்காது அலைகிறாயே) என்றும் கேளாது இரவு முழுவதும் தூங்குகிறார்கள், கார் அன்னமேனி நம் கண்ணனும் வாரானால்—கார்மேகம் போன்ற கரிய உடலுடைய நம் கண்ணபிரானும் வரவில்லை, பேர் என்னை மாயாதால்—கண்ணன் என்ற பெயரும் என்னை விட்டு அகலாது, வல்வினையேன்—கொடிய பாவியாகிய என்னைப், பின் நின்றே—பின் தொடர்ந்து

எனக்கு தூக்கம் வாராது அலைகின்றேன், என் மன நிலையைக் கவனித்து அறிவாரும் இல்லை. தாய்மார்களும் தோழிமார்களும் என்னை ஏன் என்றும் கேளாதவராய்த் தூங்குகிறார்கள். ஸ்ரீ கண்ணனும் வந்தபாடில்லை. அவனுடைய பேரும் நினைவும் என்னைவிட்டு அகலமாட்டாதவையாய் இருக்கின்றன. நான் கொடிய பாவியே ஆவேன். அவனுடைய நினைவு தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது.

ஸ்ரீ கண்ணன் அருளில்லாமல் மனக்கவலை மாற்றமுடியாதவளாய் இருக்கிறாள் என்பதும் உற்றார்களை நம்பிப்பயனில்லை என்பதும் இதனால் புலப்படுகிறது. ஆதலால் அவனையே நாடி அவன் நினைவாகவே இருக்கவேண்டும் என்பதும் இதனால் உணரப்படுகிறது,

திரௌபதியின் துகில் உறிக்கப்பட்டபொழுது பஞ்ச பாண்டவர்கள் என்ன செய்தனர். கண்விழித்தவாறும் தலை தாழ்த்தித்தானே இருந்தனர்! ஏன் என்றும் கேளாதவர்களாய் இருந்தனர்.

5—4—6

பின்னின்றகாதல்நோய் நெஞ்சம்பெரிதடுமால்
முன்னின்றிராவூழி கண்புதையமூடிற்றால்
மன்னின்றசக்கரத்து எம்மாயவனும்வாரானால்
இந்நின்றநீளாவி காப்பாராரிவ்விடத்தே. 6

பின் நின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிது அடுமால்—உள்ளே மறைவாக இருக்கிற காதலாகிய தாபம் உள்ளத்தைப் பெரிதும் வாட்டுகிறது. முன்நின்று இரா ஊழி கண் புதைய மூடி நிற்கும்—ஊழிக்காலம் போன்ற நீண்ட இரவு கண்ணுக்கு முன்னால் நின்று கண் தெரியாமல் இருள்சூழ்ந்து மறைக்கிறது. மன் நின்ற சக்கரத்து எம் மாயவனும் வாரானால்—மனதில் நின்ற மாயவனாகிய சக்கரத்து அண்ணலும் வரவில்லை ஆதலால், இந்நின்ற நீள்ஆவி காப்பார் ஆர் இவ்விடத்தே—இம்மாதிரியாக பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிற என்னைக் காப்பாற்றுகின்றவர்கள் இங்கே யார் இருக்கின்றார்கள், ஒருவரும் இல்லை என்றபடி.

மறைந்து நின்ற காதல் நோயாகிய பக்தி ஒருபால் எம்பெருமானை அடையவேண்டுமென்று வருந்தும்படி செய்கிறது. வினையாகிய இரவு கண்தெரியாமல் மூடி மறைத்து இடையூறாக உள்ளது. ஆகையால் சக்கரத்து அண்ணல் அருள் கிட்டாது தவிக்கிறாள். இந்த நிலையில் காப்பாற்றுகின்றவர்கள் யார் என்றவாறு.

5—4—7

காப்பாராரிவ்விடத்துக் கங்கிருளின்நுண்துளியாய்
சேட்பாலதூழியாய்ச் செல்கின்றகங்குல்வாய்
தூப்பாலவெண்சங்கு சக்கரத்தன்தோன்றானால்
தீப்பாலவல்வினையேன் தெய்வங்காளென்செய்கேனோ. 7

இவ்விடத்து—இங்கே, காப்பார் ஆர்—என்னைக் காப்பாற்றுகின்றவர்கள் யார் இருக்கிறார்கள், கங்குஇருளின் நுண் துளியாய்—இரவு இருட்டின் சிறிய துளிகளாய், சேட்பால்

அது ஊழியாய்—தூரத்தில் அது ஊழிக்காலத்து இருள் போல் ஆய், செல்கின்ற கங்குல்வாய்—போகின்ற கங்குல்வாய் (போகின்ற இருளில்) தூ—பரிசுத்தமான, பால—தன்மை யுடைய, வெண்சங்கு சக்கரத்தன்—வெண்மையான சங்கும் சக்கரமும் உடைய பெருமான், தோன்றானல்—தோன்றவில்லை யால், தீப்பால வல்வினையேன்—நெருப்பைப்போன்ற தன்மை யுடைய கொடியபாவியாகிய நான், தெய்வங்காள் என் செய் கேனோ—என்ன செய்வதோ அறியேன் தெய்வங்களே!

இருளாயினும் ஊழிபோல் இருளாயினும் பரிசுத்த மான வெண்சங்கையும் சக்கரத்தையும் உடையவன் பெரு மான் ஆதலால் அவன் வந்தால் தெரியுமே அவன் வரவில்லை என்பது நிச்சயமாகத் தெரிகிறது, தெய்வங்களே! என் செய்வேன் என்று வருந்துகிறாள் மையல் மிகுந்த மாது. எல்லாத் தெய்வங்களுக்கும் அவன் தேவன் என்பதையும் அவனே ரட்சகன் என்பதையும் அவனையே புகல் அடைய வேண்டும் என்பதும் அறிகிறோம்.

5—4—8

தெய்வாங்காளென்செய்கேன் ஓரிரவேழூழியாய்
மெய்வந்துநின்று எனதாவிமெலிவிக்கும்
கைவந்தசக்கரத்து என்கண்ணனும்வாரானல்
தைவந்ததண்தென்றல் வெஞ்சுடரில்தானடுமே. 8

தெய்வங்களே! என் செய்வேன், ஒரு இரவு ஏழு ஊழிக்காலத்து இரவுபோல் நீண்டு, என் உடல் சூழ வந்து என்னுடைய பிராணனை மெலியும்படியாகச் சிறிது சிறிதாக வாங்குகிறது. கையில் சக்கரத்தையுடைய என்னுடைய கண்ண பிரானும் வரவில்லையால், தடவ வந்த குளிர்ச்சிமிக்கதென்றல் காற்று கொடிய நெருப்புப்போல் சுடுகின்றதே,

கண்ணனையே நினைத்துநினைத்து எதிர்பார்ப்பதால் இரவு நீண்டு கழியாததாகத் தோன்றுகிறது. குளிர்ந்த தென் றல் காற்று கொடிய நெருப்புப்போல் சுடுகிறது எ—று.

ஆகையால் அவன் அருள் பெற்றால்தான் மனம் குளி ரும், ஆத்மா சாந்தி அடையும் எ—று.

5—4—9

வெஞ்சுடரில்தானடுமால் வீங்கிருளின்நுண்துளியாய்
அஞ்சுடரவெய்யோன் அணிநெடுந்தேர்தோன்றுதால்
செஞ்சுடர்த்தாமரைக்கண் செல்வனும்வாராஞல்
நெஞ்சிடர்தீர்ப்பாரினியார் நின்றுருகுகின்றேனே. 9

வீங்கு இருளின் நுண்துளியாய்—மிகுகின்ற இருட்டின் நுண்ணிய துளிகள், வெஞ்சுடரில்தான் அடுமால்—கொடிய நெருப்புப்போலவே எரிக்கின்றன. அம்சுடர வெய்யோன்—அழகிய ஒளியுடைய சூரியனின், அணி நெடுந்தேர் தோன்றுதால்—அழகிய பெரிய இரதம் வரவில்லை, செஞ்சுடர்த் தாமரைக் கண் செல்வனும்—சிவந்த ஒளியுடைய தாமரைக் கண்களையுடைய செல்வன் கண்ணபிரானும் வரவில்லை. நெஞ்சு இடர் தீர்ப்பார் இனியார்—உள்ளத் துயரை நீக்குவார் அவனைத்தவிர இனி யார் உள்ளார். நின்று உருகுகின்றேனே—நின்று கலங்குகின்றேன்.

உள்ளத்தில் உள்ள துயரைத் தீர்க்கிறவன் சக்கரத் தண்ணல் ஒருவனே. அவனைத்தவிர வேறொருவரும் இல்லையாக கற்பு நிலையில் நின்று அவனைப்பற்ற வேண்டும் எ—று.

5—4—10

நின்றுருகின்றேனேபோல நெடுவானம்
சென்றுருகிநுண்துளியாய்ச் செல்கின்றகங்குல்வாய்
அன்றொருகால்வையம் அளந்தபிரான்வாரானென்று
ஒன்றொருகால்சொல்லாது உலகோவுவுறங்குமே. 10

நின்று உருகுகின்றேனே போல நெடுவானம் சென்று உருகி நுண்துளியாய்ச் செல்கின்ற கங்குல் வாய்—நான் நின்று உருகுவதுபோல சிறிய துளிகளாய் உயர்ந்த ஆகாசத்தில் சென்று உருகுகின்ற இரவில், அன்று ஒருகால்—ஒருசமயம், வையம் அளந்த பிரான் வாரான் என்று—இவ்வுலகத்தை அளந்த வாமனமூர்த்தி வாரான் என்று, ஒன்று ஒருகால் சொல்லாது—ஒரு சமயமும் ஒரு ஆறுதல் சொல்லாது, உலகு ஓ ஓ உறங்குமே—ஓ! இந்த உலகத்தார் தூங்குகிறார்களே இது என்ன உலகம் என்றபடி.

எல்லையற்ற துன்பத்தில் ஒருவருக்கு இந்த உலகத்தாரால் ஆறுதல் கிட்டும் என்று நம்பமுடியாது. அவர்கள்

தூக்கத்தில் ஆழ்ந்தவர்கள்போல உதவாமல் போய்விடுவார்கள். உலகளந்த வாமனனே உலகத்தாருக்கு இடர்கடிய வல்லவன் அவனையே பற்றவேண்டும் என்றவாறு.

கஜேந்திரன் தன் மத்தகம்வரை நீரில் மூழ்கும்போது யார் இடர் தீர்த்தார்கள்? யானை உலகம் எங்கே போயிற்று? கைவிட்டுவிட்டதன்றே!

5—4—11

உறங்குவான்போல் யோகுசெய்தபெருமானை
சிறந்தபொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொல்
நிறம்கிளர்ந்தவந்தாதி ஆயிரத்திப்பத்தால்
இறந்துபோய்வைகுந்தம் சேராவாறெங்ஙனேயோ. 11

உறங்குவான்போல் யோகு செய்த பெருமானை—பாற்கடலில் அறிதுயில்கொண்ட பெருமானை, சிறந்த பொழில்சூழ் குருகூர்ச் சடகோபன் சொல்—சிறந்த சோலைகளால் சூழப் பெற்ற குருகூரைச் சேர்ந்த சடகோப முனி சொன்ன, நிறம் கிளர்ந்த அந்தாதி ஆயிரத்து இப்பத்தால்—உள்ளத்தைப் பற்றிய அந்தாதிப் பாசுரங்கள் ஆயிரத்துள் இப்பத்தால், இறந்துபோய்—உயிர் துறந்தபிறகு, வைகுந்தம் சேராவாறு—வைகுந்தம் அடையாமல், எங்ஙனேயோ—எப்படிப் போவார்கள் வைகுந்தம் அடைந்தே தீர்வர்.

ஐந்தாம்பத்து—ஐந்தாந்திருவாய்மொழி

எங்ஙனேயோதன்னைமீர்காள்

5—5—1

எங்ஙனேயோவன்னைமீர்காள் என்னைமுனிவதுநீர்
நங்கள்கோலத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
சங்கினோடும்நேமியோடும் தாமரைக்கண்களோடும்
செங்கனிவாயொன்றினோடும் செல்கின்றதென்னெஞ்சமே. 1

அன்னைமீர்காள்!—மாமித்தாயே! எங்ஙனேயோ—எதற்காகவோ, என்னை முனிவது நீர்—என்னை நீங்கள் கோபிப்பது, நங்கள்—நம்முடைய, கோலத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்—அழகிய திருக்குறுங்குடிப் பெருமானை நான் பார்த்தபிறகு, சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செங்கனிவாய் ஒன்றினோடும் செல்கின்றது என் நெஞ்சமே—என்னுடைய உள்ளம் அப்பெருமானின் சங்கொடும் சக்கரத்தொடும் தாமரைக் கண்களொடும் கொவ்வைப்பழம் போன்று ஒப்பற்றதாகிய சிவந்தவாய் ஒன்றினோடும் சென்றதாக இருக்கின்றது.

திருக்குறுங்குடி நம்பிப் பெருமானைக் கண்டவர்களில் மருமகளும் ஒருவள். கண்ட அளவே அவளுடைய உள்ளம் அப்பெருமானின் சங்கொடும் சக்கரத்தொடும் தாமரைக் கண்களொடும் செங்கனிவாயினொடும் கவரப் பெற்றுச்சென்றுவிட்டது. அவள், அந்த நினைவாகவே இருந்தாள். அவளுடைய சுய நினைவு மாறியிருப்பதைக் கண்ட மாமி அவளைக் கோபித்து வினவ அவள் நிலையை உரைத்தும் மாமி திருப்தி கொள்ளவில்லை. அதற்கு நீங்கள் எதற்காக முனிந்துகொள்கிறீர்கள். என் மனம் இவ்வாறு சென்றுவிட்டது என்றுரைக்கின்றாள்.

5—5—2

என்னெஞ்சினால்நோக்கிக்காணீர் என்னைமுனியாதே
தென்னன்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
மின்னுநூலும்குண்டலமும் மார்வில்திருமறுவும்
மன்னுபூணிம்நான்குதோளும் வந்தெங்கும்நின்றிடுமே. 2

என் நெஞ்சினுல் நோக்கிக் காணீர்!—நான் பார்ப்பது போல என் நெஞ்சைக்கொண்டு நீங்கள் பாருங்கள்; என்னை முனியாதே—என்னைக் கோபிக்காதீர்கள். தென்னன் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டேன்—பாண்டிய நாட்டுத் திருக்குறுங்குடிப் பெருமானை நான் பார்த்தேன் (அவ்வளவு தான்), மின்னு நூலும் குண்டலமும் மார்வில் திருமறுவும் மன்னு பூணும் நான்கு தோளும் வந்து எங்கும் நின்றிடும் ஏ— பிரகாசிக்கின்ற பூணூலும் (காதுகளில்) குண்டலங்களும் மார் பில் ஸ்ரீவத்சம் என்னும் மறுவும் பொருந்திய ஆபரணங்களும் நான்கு தோள்களும் (என் கண்முன்) வந்து எங்கும் நின்றவண் ணமாக இருக்கின்றன.

இவ்வளவுதான் நான் செய்தது. நடந்ததும் இவ்வளவு தான். என்னை கோபிக்கக் காரணம் இல்லை எ—று.

5—5—3

நின்றிடும்திசைக்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர்
குன்றமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
வென்றிவில்லும்தண்டும்வாளும் சக்கரமும்சங்கமும்
நின்றுதோன்றிக்கண்ணுள்நீங்கா நெஞ்சுள்ளும்நீங்காவே 3

நின்றிடும் திசைக்கும் நையும் என்று அன்னையரும் முனிதிர்—நின்றபடி நிற்கின்ருள் மயங்குகின்ருள் வருந்துகிருள் என்று தாய்மார்களாகிய நீங்களே கோபம்கொள்ளுகிறீர்களே! குன்றமாடத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்— மலைக் குன்றுகள்போல் உயர்ந்த உப்பரிகைகளை யுடைய திருக்குருங்குடி நம்பியை நான் பார்த்தபின், வென்றிவில்லும் தண்டும் வாளும் சக்கரமும் சங்கமும் நின்று தோன்றிக் கண் ணுள் நீங்கா நெஞ்சுள்ளும் நீங்காவே—வெற்றியைத் தரும் கோதண்டமும் கதையும் (தண்டும்) வாளும் சங்குசக்கரங்களும் நிலைக்கத் தோன்றி என் கண்களினின்றும் நீங்காதவாறு இருக் கின்றன நெஞ்சிலிருந்தும் நீங்காதவையாயின.

திருக்குறுங்குடி நம்பியைக் கண்டபின் அவனுடைய திவ்யமான கோலம் என் கண்களில் பட்டவுடன் அது அப்ப டியே நின்றுவிட்டது என்நெஞ்சிலும் அப்படியே நிலைத்து விட்டது.

அந்த நினைவினுல்தான் நான் நிற்பதும் கலங்குவதும் வருந்துவதும் தாய்மார்களாகிய நீங்கள் கோபித்து என்ன பயன் என்றவாறு.

5—5—4

நீங்கநில்லாகண்ணநீர்களென்று அன்னையரும்முனிதிர்
தேங்கொள்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
பூந்தண்மாலைத்தண்துழாயும் பொன்முடியும்வடிவும்
பாங்குதோன்றும்பட்டும்நாணும் பாவியேன்பக்கத்தவே. 4

நீங்க நில்லா கண்ண நீர்கள் என்று அன்னையரும்முனிதிர்—கண்ணீர் வடித்துக்கொண்டே இருக்கிறாள் என்று தாய்மார்களாகிய நீங்கள் கோபிக்கிறீர்கள், தேம்கொள் சோலைத் திருங்குடி நம்பியை நான் கண்டபின்—அழகிய சோலைகளையுடைய திருக்குறுங்குடிப்பெருமானை நான் கண்டபின், பூந்தண் மாலைத் தண் துழாயும் பொன்முடியும் வடிவும் பாங்கு தோன்றும் பட்டும் நாணும் பாவியேன் பக்கத்தவே—அழகும் தண்மையும் உடைய மாலையிலுள்ள திருத்துழாயும் பொற்கிரீடமும் வடிவும் அழகாகப் பொருந்திய பட்டாடையும் அரைநாணும் பாவியாகிய என்னை விட்டு அகலாதவையாய் இருக்கின்றன.

திருக்குறுங்குடி நம்பியின் மார்பில் அமைந்த மாலைத் திருத்துழாயும் திவ்யமான கிரீடமும் அழகிய கோலமும் நன்கு அமைந்த பட்டுடையும் இடுப்பிலுள்ள நாணும் என்னை மனம் கவர்ந்தனவாய் அகலாதிருக்கின்றன. நான் என்ன செய்வேன். நான் பாவம் செய்ததனால்தானோ என்றவாறு.

5—5—5

பக்கம்நோக்கிநிற்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர்
தக்ககீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
தொக்கசோதித்தொண்டைவாயும் நீண்டபுருவங்களும்
தக்கதாமரைக்கண்ணும் பாவியேனாவியின்மேலனவே. 5

பக்கம் நோக்கி நிற்கும் நையும் என்று அன்னையரும் முனிதிர்—தன் பக்கம் நோக்கிய வண்ணம் நிற்கிறாள் வருந்துகிறாள் என்று தாய்மார்களே நீங்கள் கோபம் கொள்கிறீர்கள். தக்க கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்—தகுந்த புகழையுடைய திருக்குறுங்குடிப்பெருமானை நான் பார்த்தபின், தொக்க சோதித் தொண்டை வாயும் நீண்ட புருவங்களும் தக்க தாமரைக் கண்ணும் பாவியேன் ஆவியின் மேலனவே—மிகுந்த ஒளியையுடையதும் தொண்டைப் பழம்

போன்று சிவந்த நிறமும் உடையவாயும் நீண்ட புருவங்களும் பொருந்திய தாமரைக் கண்களும் பாவியாகிய என்னுடைய பிராணனையே பற்றிக்கொண்டன.

ஒரு பக்கம் பார்த்தால் அப்பக்கமே பார்த்தவண்ண மிருக்கிருள் வருந்துகின்ருள் என்று தாய்மார்களாகிய நீங்களும் கோபிக்கின்றீர்கள். தகுந்த பெருமையுடைய திருக்குறுங்குடி தேவனை நான் பார்த்தபின் அவனுடைய ஒளிமிக்க சிவந்த வாயும் நீண்ட புருவங்களும் பொருந்தியதாமரைக் கண்களும் என் பிராணனைப்பற்றிக் கொண்டனவாயுள்ளன. பாவியேன் நான் என்று மனம் கவரப்பட்டவளாக உரைக்கின்ருள்.

5—5—6

மேலும்வன்பழிநங்குடிக்கிவளென்று அன்னைகாணகொடாள்
சோலைசூழ்தண்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
கோலநீள்கொடிமூக்கும் தாமரைக்கண்ணும்கனிவாயும்
நீலமேனியும்நானகுதோளும் என்னெஞ்சம்நிறைந்தனவே. 6

மேலும்—இவ்வாறு கோபித்ததைத் தவிர, வன்பழி நங்குடிக்கு இவள் என்று அன்னை காண கொடாள்—இவள் நம்முடைய குடும்பத்திற்கு பழியுடையவள் ஆவள் என்று அன்னை மாமி அவளைப் பார்க்கவும் மாட்டாள், சோலைசூழ் தண் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்—சோலைகளால் சூழப்பெற்ற இனிய திருக்குறுங்குடிப் பெருமானை நான் பார்த்தபின், கோலநீள் கொடி மூக்கும் தாமரைக் கண்ணும் கனிவாயும் நீலமேனியும் நான்கு தோளும் என் நெஞ்சம் நிறைந்தனவே—அழகிய நீண்ட கொடிபோன்ற மூக்கும் தாமரைக் கண்களும் சிவந்தவாயும் நீலமேனியும் நான்கு தோள்களும் என் உள்ளத்தில் நிறைந்தன.

திருக்குறுங்குடி நம்பியின் பெருமையை அறியாத மாமி சொல்லியும் அவளால் புரிந்து கொள்ளமுடியவில்லை. மருமகளைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் விரும்பவில்லை. ஆனல் மருமகள் பத்தியும் ஞானமுமுடையவளாய் குறுங்குடி நம்பியைக் கண்டதுமே அவள் மனம் பறிபோய்விட்டது. அப்பெருமானின் நால்தோள் உருவமும் மூக்கும் கண்களும் வாயும் அவள் உள்ளத்தை நிறைத்துக்கொள்ளை கொண்டன. அவ்வளவு அழகுடையவன் நம்பி எ—று.

5—5—7

நிறைந்தவன்பழிநம்குடிக்கிவளென்று அன்னைகாணகொடாள்
சிறந்தகீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
நிறைந்தசோதிவெள்ளம்சூழ்ந்த நீண்டபொன்மேனியொடும்
நிறைந்தென்னுள்ளேநின்றொழிந்தான் நேமியங்கையுளதே. 7

நிறைந்த வன்பழி நம்குடிக்கு இவள் என்று அன்னை காண கொடாள்—நம்முடைய குடும்பத்திற்கு இவள் மிகுந்த கொடிய பழியுடையவள் ஆவாள் என்று மாமியானவள் மருமகளைக் காணவும்மாட்டாள், சிறந்த கீர்த்தித்திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்—பெரும் புகழுடைய திருக்குறுங்குடிப் பெருமானை நான் பார்த்தபிறகு, நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த நீண்ட பொன்மேனியொடும் நிறைந்து—பொன்மேனி முழுவதும் மிக்க சுடர் ஒளியால் சூழப்பெற்றதாய், என்னுள்ளே நின்று ஒழிந்தான் நேமி அம்கையுளதே—என்னுள்ளே நிறைந்து நின்றவாறு மறைந்தான் சக்கரமும் அழகிய கையில் இருந்தது.

மாமியானவள் தன்னுடைய குடும்பத்திற்கு மருமகள் மிகுந்த கொடிய பழியுடையவள் ஆவள் என்று அவளைப் பார்க்கவும் மாட்டாள். புகழ்மிக்க திருக்குறுங்குடி நம்பியைக் கண்டபின் அவன் ஒளி வெள்ளத்தால் சூழப்பெற்றவனாய் என்னுள் நிறைந்து நின்று மறைந்து ஒழிந்தான். அவன் தன்கையில் சக்கரத்தோடே நிறைந்து நின்று ஒழிந்தான் என்று மருமகள் எம்பெருமான் தன்னோடு கலந்ததாகக் கூறுகிறாள்,

5—5—8

கையுள்நன்முகம்வைக்குமையுமென்று அன்னையரும்முனிதிர்
மைகொள்மாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
செய்யதாமரைக்கண்ணுமல்குலும் சிற்றிடையும்வடிவும்
மொய்யநீள்குழல்தாழ்ந்ததோள்களும் பாவியேன்முன்னிற்குமே

கையுள் நன்முகம் வைக்கும் நையும் என்று அன்னையரும் முனிதிர்—கவலை இல்லாத முகத்தை உடையவள் ஏன் உள்ளங்கைகளில் முகத்தை வைக்கவேண்டும் வருந்தவும் செய்கிறாள் இது என்ன என்று கோபங்கொள்கிறீரே தாயாராகிய நீங்கள், மைகொள் மாடத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்—மேகங்கள் தடவும் உயர்ந்த உப்பரிகைகளையுடைய திருக்குறுங்குடிப் பெருமானை நான் பார்த்தபின், செய்ய தாமரைக் கண்ணும் அல்குலும் சிற்றிடையும் வடிவும்

மொய்ய நீள் குழல் தாழ்ந்த தோள்களும் பாவியேன் முன் நிற்குமே—அப்பெருமானின் செந்தாமரைக் கண்ணும் அல்குலும் சிறு இடையும் அழகிய வடிவமும் நெருங்கி நீண்ட குஞ்சியும் நீண்டு தாழ்ந்த கைகளும் பாவியாகிய என் முன்நின்ற வண்ணமாகவே இருக்கின்றன, இதற்கு என் செய்வேன் என்றவாறு.

5—5—9

முன்னின்றுயென்றுதோழிமார்களும் அன்னேயரும்முனிதிர்
மன்னுமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
சென்னிநீண்முடியாதியாய உலப்பிலணிகலத்தன்
கன்னல்பாலமுதாகிவந்து என்நெஞ்சம்கழியானே. 9

முன் நின்றுய் என்று தோழிமார்களும் அன்னேயரும் முனிதிர்—(அப்பெருமானின் திருவுருவம் உன் கண்முன் நிற்கின்றது என்கிருய்) நீ ஏன் அந் நம்பியின் முன் நின்றுய் என்று தோழிகளும் அன்னேயரும் ஆகிய நீங்கள் என்னேக் கோபிக்கிறீர்கள், மன்னு மாடத்திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்—மாடமாளிகைகள் பொருந்திய திருக்குறுங்குடி நம்பியை நான் பார்த்தபின், சென்னி நீண்முடி ஆதியாய உலப்பில் அணிகலத்தன் கன்னல்பால் அமுதாகி வந்து என் நெஞ்சம் கழியானே—சிரசில் அணிந்திருக்கும் நீண்ட கிரீடம் முதலாக கணக்கில்லாத ஆபரணங்களேயுடையவனுய் கரும்பும் பாலும் அமுதும்போல தித்திக்கத் தோன்றி என் மனதிலிருந்து அகலாதவனுனன்.

இதனுல் நம்பியைக் கண்டவள், நம்பிமுன் ஏன் நின்றுய் என்பதற்கு இவ்வாறு மறுமொழி(பதில்) அளிக்கிருள். திருக்குறுங்குடி நம்பி அணிந்துள்ள ஆபரணங்களுக்கு எல்லேயே இல்லே. அவ்வளவு ஆபரணங்கள் அவ்வளவும் அழகுடையன. அவன் கன்னலும் பாலும் அமுதம்போல் இனிக்க என் மனம் உட்கொண்டுவிட்டது. ஆகையால் அவன் வடிவம் கழியாததாய் இருக்கின்றது என்கிருள்.

5—5—10

கழியமிக்கதோர்காதலளிவளென்று அன்னேகாணகொடாள்
வழுவில்கீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
குழுமித்தேவர்குழாங்கள் கைதொழச்சோதிவெள்ளத்தினுள்ளே
எழுவதோருருவென்னெஞ்சுள்ளெழும் ஆர்க்குமறிவரிதே. 10

கழியமிக்கதோர் காதலள் இவள் என்று அன்னை காண கொடாள்—மிகமிகப் பெரியதோர் காதலையுடையவள் இவள் என்று மாமி அன்னை பார்க்கச் சகியாதவள் ஆனாள். வழுவில் கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின் —குற்றமற்ற புகழையுடைய திருக்குறுங்குடி நம்பியை நான் பார்த்தபின், குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோர் உரு—தேவர்களில் பல இனத் தவரும் ஒன்றுகூடி கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுகின்ற ஓர் உருவம், என் நெஞ்சுள் எழும்—என் உள்ளத்தில் எழும். ஆர்க்கும் அறிவு அரிதே—எவராலும் இதை அறிவது அரியது (கடினம்).

கழிய—மிகவும். வழுவில்—குற்றம் இல்லாத, குழுமி—கூடி, குழாம்—கூட்டங்கள்.

திருக்குறுங்குடி நம்பியைக் கண்டு அந்த அழகால் வசீகரிக்கப்பட்டு அப்பெருமானின் அங்க அழகுகள் ஆபரணாதிகள் அவள் மனம்விட்டு அகலவே இல்லை. அன்னையார் இவளுடைய பக்தி அளவு கடந்தது என்று அவள் நடமாடுவதைக் காணாத வள் ஆனாள். தூயமிக்க புகழையுடைய திருக்குறுங்குடி நம்பியைக் கண்டபின், தேவர்கள் இனம் இனமாயக் கூட்டம் கூடி கைகூப்பித் தொழ பெரிய ஒளி வெள்ளத்துள்ளே எழும் ஓர் உருவம் என் உள்ளத்தே எழுந்தது. இந்த அனுபவம் எனக்கு ஏற்பட்டது. இதை யார் அறிவார்? ஒருவரும் அறிவதற்கு இயலாதது என்கிறாள். தேவர்கள் கூட்டம் பெருமான் மயமாக்கிவிட்டது. கூட்டமாகக் கூடித் தொழ சோதி வெள்ளத்தே தோன்றும் ஓர் உரு அவள் உள்ளத்தேயும் தோன்றிற்று. எம்பெருமான் அவள் உள்ளத்தே எழுந்தருளி அவளை ஆட்கொண்டான் இந்த அனுபவம் இல்லாதவர்கள் அதை உணர்வதும் கடினம்.

இதனால் பக்தியும் ஞானமும் இல்லாதவர்களும் அவன் அழகிலே ஈடுபட்டு அவனை அடையலாம் என்பது துணிபு, அன்னை ஆண்டாள் அவன் அழகிலே ஈடுபட்டாள். மதுரக் கொழுஞ்சாறு கடைந்த சுந்தரத் தோளுடையான் என்கிறாள் திருமாலிருஞ்சோலைப் பெருமானை. என் அரங்கத்து இன்னமுதர் குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில் எழுகமலப் பூவழகர் எம்மானார் என்கிறாள். தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழற்கமலம் அன்னதாள் கண்டார் தாளே கண்டார் என்று கம்பர் நயம்பட உரைத்த எம்பெருமானின் அழகு எல்லையற்றது என்பதைக் குறித்து, உருப்பிணி நங்கையும் புவன சுந்தரா என்றாள். ஆகையால் கோவில்களில்

அர்ச்சா மூர்த்திகளைச் சேவித்தும் பக்தி கொள்ளலாம் என்பதும் திருக்குறுங்குடி நம்பியைக் கண்ட பெருமாட்டியை நினைத்து அப் பெருமாட்டியாகப் பாவித்த ஆழ்வார் பெருமானுரை நினைத்து அவர் காட்டிய அழகிலே ஈடுபட்டாலே எம் பெருமானின் உருவம் நம்மிடம் இருந்து நீங்காது அவன் தாள் இணைகளில் சேர்ப்பிக்கும்.

5—5—11

அறிவரியபிரானை ஆழியங்கையனையேயலற்றி
நறியநன்மலர்நாடி நன்குருகூர்ச்சடகோபன்சொன்ன
குறிகொளாயிரத்துள்ளிவைபத்தும் திருக்குறுங்குடியதன்மேல்
அறியக்கற்றுவல்லார்வைட்டணவர் ஆழ்கடல்ஞாலத்துள்ளே 11

அறிவு அரிய பிரானை—அறிவதற்குக் எளிதல்லாத தேவனை, ஆழி அம்கையனையே அலற்றி—சுதர்சன சக்கரத்தைக் கையில் ஏந்திய பெருமானைப்பற்றியே கதறி, நறியநன் மலர் நாடி—வாசனையுள்ள நல்ல பூக்களைத் தேடி, நன்குருகூர்ச் சடகோபன் சொன்ன—நன்மைமிக்க குருகூரைச்சேர்ந்த சடகோபன் சொன்ன, குறிக்கொள் ஆயிரத்துள்—இலட்சியத்தையுடைய ஆயிரம்பாசுரங்களில் இப்பத்தும்—இந்தப்பத்துப் பாசுரங்களும், திருக்குறுங்குடியதன்மேல்—திருக்குறுங்குடியைப்பற்றி, அறியக் கற்று வல்லார்—நன்றாகப் பொருள் தெரியக்கற்று வல்லவர்களானவர்கள், வைட்ணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே—ஆழமான கடல்களால் சூழப்பெற்ற உலகத்தில் வைஷ்ணவர்கள் ஆவர்.

நறிய நன்மலர்—சிறந்த நல்ல பாசுரங்கள். இப்பாசுரங்கள் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் வடிவழகையும் அலங்காரங்களையுமே வர்ணிப்பனவாதலின் இவற்றைக் கற்று அவையே மீண்டும் நன்குணரக் கற்கிறவர்கள் மகாவிஷ்ணுவிடம் பிரேமையுடைவர்கள் ஆவார்கள் ஆதலால் வைஷ்ணவர்கள் ஆவர் என்று குறிப்பிட்டபடி.

கடல்ஞாலஞ்செய்தேனும்

5—6—1

கடல்ஞாலம்செய்தேனும் யானேயென்னும்
கடல்ஞாலமாவேனும்யானேயென்னும்
கடல்ஞாலம்கொண்டேனும்யானேயென்னும்
கடல்ஞாலம்கீண்டேனும்யானேயென்னும்
கடல்ஞாலமுண்டேனும்யானேயென்னும்
கடல்ஞாலத்தீசன்வந்தேறக்கொலோ
கடல்ஞாலத்தீர்க்கிவையென்சொல்லுகேன்
கடல்ஞாலத்தென்மகள்கற்கின்றவே. 1

கடலால் சூழப்பெற்ற உலகத்தை செய்தவளும் நானே என்பாள், உலகமாயிருப்பதும் நானே என்பாள், உலகத்தைக் கொண்டாளும் நானே என்பாள், உலகத்தைப் பெயர்த்து எடுத்தவளும் நானே என்பாள், உலகத்தை உண்டவளும் நானே என்பாள், உலகத்து இறைவன் அவள்மேல் ஆவேசமுறவோ, உலகத்தில் உள்ளவர்களாகிய உங்களுக்கு இவற்றைப்பற்றி என்னசொல்லுவேன், உலகத்தவளாகிய என் மகள் படிக்கின்ற படிப்பு இதுவாகும்.

என்று மகளைப் பெற்ற ஒருதாய் தன் மகள் பேதுற்று (அறிவிழந்து) வாய்கொண்டு தனக்குத்தானே சொல்லிக்கொள்கிருள் என்று கூறுகிருள். இது ஒருவேளை கடவுள் ஆவேசமுற்று இப்படிச் செய்கின்ருளோ என்று சந்தேகப்படுவதாகக் கூறுகின்ருள்.

5—6—2

கற்கும்கல்விக்கெல்லையிலனேயென்னும்
கற்கும்கல்வியாவேனும்யானேயென்னும்
கற்கும்கல்விசெய்வேனும்யானேயென்னும்
கற்கும்கல்விதீர்ப்பேனும்யானேயென்னும்
கற்கும்கல்விச்சாரமும்யானேயென்னும்
கற்கும்கல்விநாதன்வந்தேறக்கொலோ
கற்கும்கல்வியீர்க்கிவையென்சொல்லுகேன்
கற்கும்கல்வியென்மகள்காண்கின்றனவே 2

படிக்கின்ற படிப்பிற்கு (வித்தைக்கு) முடிவு இல்லாத வளாய் இருக்கிறேனே என்பாள், படிக்கின்ற படிப்பு ஆகின்ற வன் நானே என்பாள். படிக்கின்ற படிப்பு ஏற்படுத்துகின்ற வளும் நானே என்பாள், படிக்கின்ற படிப்பை முடிக்கின்ற வளும நானே என்பாள், படிக்கின்ற படிப்பின் சாரமும் நானே என்பாள், படிக்கும் படிப்புக்கு நாதன் எவனோ அவன் வந்து ஆவேசமுறவோ, படிக்கின்ற படிப்பை உடைய உங்களுக்கு இவற்றைப்பற்றி என்ன சொல்வேன், படிக்கின்ற படிப்பு என் மகளுடைய கண்களுக்குத் தெரிகின்றவைதான்.

என்று மகள் உளறுவதாகத் தாய் கூறுகிறாள். இவளுடைய கண்களுக்கு படுவன எல்லாம் இவள் வாய்விட்டுச் சொல்கின்றாள். அவையாகும் இவை.

5—6—3

காண்கின்றநிலமெல்லாம்யானேயென்னும்
காண்கின்றவிசும்பெல்லாம்யானேயென்னும்
காண்கின்றவெந்தீயெல்லாம்யானேயென்னும்
காண்கின்றவிக்காற்றெல்லாம்யானேயென்னும்
காண்கின்றகடலெல்லாம்யானேயென்னும்
காண்கின்றகடல்வண்ணனேறக்கொலோ
காண்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்
காண்கின்றவென்காரிகைசெய்கின்றனவே. 3

கண்ணுக்குத் தெரிகிற பூமி எல்லாம் நானே என்பாள்,

கண்ணுக்குத் தெரிகிற ஆகாசம் எல்லாம் நானே என்பாள்,

கண்ணுக்குத் தெரிகிற கொடிய தீ எல்லாம் நானே என்பாள்,

புலப்படுகின்ற இந்தக் காற்றெல்லாம் நானேஎன்பாள்.

கண்ணுக்குத்தெரிகிற கடல் எல்லாம் நானே என்பாள்,

புலப்படுகிற கடல்போல் நிறமுடையவன் (எம்பெருமான்) ஆவேசமுற்றதாலோ, பார்க்கின்ற உலகத்திலுள்ள உங்களுக்கு என்ன சொல்லுவேன் (நீங்கள்) பார்க்கின்ற என் மகள் செய்கின்றவற்றைப் பற்றி,

5—6—4

செய்கின்றகதியெல்லாம்யானேயென்னும்
செய்வானின்றனகளும்யானேயென்னும்
செய்துமுன்னிறந்தவும்யானேயென்னும்
செய்கைப்பயனுண்பேனும்யானேயென்னும்
செய்வார்களைச்செய்வேனும்யானேயென்னும்
செய்யகமலக்கண்ணனேறக்கொலோ
செய்யவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன்
செய்யகனிவாயிளமான்திறத்தே. **4**

நடத்துகின்ற நடப்புகள் எல்லாம் நானே என்பாள்,

செய்யப்போகின்றவைகளும் நானே என்பாள்,

செய்து முன் கழிந்தனவும் நானே என்பாள்,

செய்கின்ற யக்யயாகங்களின் பலனை அனுபவிப்பவனும் நானே என்பாள்

செய்வதற்குரியவர்களைச் ஏற்படுத்துகிறவனும் நானே என்பாள்,

(இவை எல்லாம்)

அழகிய தாமரைக்கண்ணன் (தேவன்) ஆவேசமுற்றதாலோ,

அழகிய உலகத்தவர்களாகிய உங்களுக்கு இவற்றைப் பற்றி என்ன சொல்லுவேன்,

அழகிய சிவந்தவாயையுடையவளும் இளைய மான் போன்றவளும் ஆகிய என் மகளைப்பற்றி.

செய்வான்—செய்யப்போகும், கனிவாய்—கொவ்வைப்பழம் போன்று சிவந்தவாய்.

5—6—5

திறம்பாமல்மண்காக்கின்றேன்யானேயென்னும்
திறம்பாமல்மலையெடுத்தேனேயென்னும்
திறம்பாமலசுரரைக்கொன்றேனேயென்னும்
திறம்காட்டியன்றைவரைக்காத்தேனேயென்னும்
திறம்பாமல்கடல்கடைந்தேனேயென்னும்
திறம்பாதகடல்வண்ணனேறக்கொலோ
திறம்பாதவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்
திறம்பாதென்திருமகளெய்தினவே. **5**

(இயங்கும்முறை) தவருமல் இப்பூமியைக் காத்துவருகின்றவள் நானே என்பாள்,

பிறழாமல் மலையை எடுத்தவன் நானே என்பாள்,

உறுதிமொழி தவருமல் அசுரர்களைக் கொன்றவன் நானே என்பாள்,

வல்லமையைக்காட்டி அன்று பஞ்சபாண்டவர்களைக் காப்பாற்றினவன் நானே என்பாள்,

பிசகின்றி கடலைக் கடைந்தவன் நானே என்பாள்,

மாருத நிலையையுடைய கடல் நிறத்தவன் ஆவேசமுற்றதாலோ,

இயற்கை நிலைக்கு மாருது நடக்கின்ற உலகத்தவர்களாகிய உங்களுக்கு என்ன சொல்லுவேன்.

சுயநிலைக்கு வராத என் மகள் அடைந்தனவற்றைப் பற்றி.

எம்பெருமான் ஆவேசமுற்றவளாக மகள் அவனுடைய லீலைகளைத்தானே செய்ததாகக் கூறுகிருள்.

5—6—6

இனவேய்மலையேந்தினேன்யானேயென்னும்
இனவேறுகள்செற்றேனும்யானேயென்னும்
இனவான்கன்றுமேய்த்தேனும்யானேயென்னும்
இனவாநிரைகாத்தேனும்யானேயென்னும்
இனவாயர்தலைவனும்யானேயென்னும்
இனத்தேவர்தலைவன்வந்தேறக்கொலோ
இனவேற்கண்ணல்லீர்க்கிவையென்சொல்லுகேன்
இனவேற்கண்ணியென்மகளுற்றனவே. 6

சாதி மூங்கில்களையுடைய மலையை கையிலே தூக்கிப் பிடித்தவன் நானே என்பாள்,

சாதிக்காளைமாடுகளை அடக்கியவனும் நானே என்பாள்

ஒரே இனமான பசுவின்கன்றுகளை மேய்த்தவனும் நானே என்பாள்,

ஒரே இனத்தைச் சேர்ந்த பசுக் கூட்டங்களை காத்தவனும் நானே என்பாள்,

கோவலர் இனத்திற்குத் தலைவனும் நானே என்பாள்,

தேவர் இனத்திற்கு (கூட்டத்திற்கு)த் தலைவனுகிய எம்பெருமான் ஆவேசமுற்றதாலோ,

வேல்போன்ற கண்களையுடைய நல்ல இனத்தவர்களாகிய உங்களுக்கு என்ன சொல்வேன்,

நல்ல வேல்போன்ற கண்ணையுடையவளான என் மகள் அடைந்தனவே.

ஸ்ரீ கண்ணனிடம் மையல்கொண்ட மகள் அவன் ஆவேசமுற்றவளாய் இவ்வாறு வாய்விட்டுச் சொல்லுகின்ருள் என்பதாகத் தாய் மற்ற மங்கையரைப் பார்த்துச் சொல்லுகிருள்.

5—6—7

உற்ருர்களெனக்கில்லையாருமென்னும்
உற்ருர்களெனக்கிங்கெல்லாருமென்னும்
உற்ருர்களைச்செய்வேனும்யானேயென்னும்
உற்ருர்களையழிப்பேனும்யானேயென்னும்
உற்ருர்களுக்குற்றேனும்யானேயென்னும்
உற்ருரிலிமாயன்வந்தேறக்கொலோ
உற்றீர்கட்கென்சொல்லிச்சொல்லுகேன்யான்
உற்றென்னுடைப்பேதையுரைக்கின்றவே. 7

உறவினர்கள் எனக்கு யாரும் இல்லை என்பாள்,

உறவினர்கள் எனக்கு இங்கு எல்லாரும் என்பாள்,

உறவினர்களை உண்டாக்குகின்றவன் நானே என்பாள்,

உறவினர்களை அழிக்கின்றவனும் நானே என்பாள்,

உறவினர்களுக்குத் துணையாகின்றவனும் நானே என்பாள்,

உறவினர்கள் இல்லாதவனாகிய மாயவனான ஸ்ரீகண்ணன் வந்து ஆவேசமுற்றதாலோ,

உறவினர்களாகிய உங்களுக்கு நான் என்ன சொல்லிச் சமாதானப் படுத்துவேன்,

அறியாதவளாகிய என்னுடைய மகள் ஆவேசமுற்று கூறுகின்றனவற்றை.

இவ்வாறு மகள் உரைத்ததைத் தாய் அங்கு கூடியுள்ளவர்களைப் பார்த்துச் சொன்னது.

5—6—8

உரைக்கின்றமுக்கட்பிரான்யானேயென்னும்
உரைக்கின்றதிசைமுகன்யானேயென்னும்
உரைக்கின்றவமரரும்யானேயென்னும்
உரைக்கின்றவமரர்கோன்யானேயென்னும்
உரைக்கின்றமுனிவரும்யானேயென்னும்
உரைக்கின்றமுகில்வண்ணனேறக்கொலோ
உரைக்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்
உரைக்கின்றவென்கோமளவொண்கொடிக்கே. 8

புகழப்படுகின்ற மூன்று கண்களையுடைய சிவபிரான் நானே என்பாள்,

புகழ்ப்படுகின்ற பிரமன் நானே என்பாள்,

தேவர்கள் என்று பேசப்படுகிறவர்களும் நானே என்பாள்,

தேவர்கள் தலைவன் என்று புகழப்படுகிறவனும் நானே எனபாள்,

முனிவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களும் நானே என்பாள்,

முகில்வண்ணன் என்று கூறப்படுகின்ற திருமால் ஆவேசமுற்றதால் போலும்,

உலகத்தவர்கள் என்று சொல்லப்படுகின்ற உங்களுக்கு என்ன சொல்வேன், இவ்வாறு கதறுகின்ற அழகிய கொடி போன்றவளாகிய என் மகளுக்கு என்ன என்று.

5—6—9

கொடியவினையாதுமிலனேயென்னும்
கொடியவினையாவேனும்யானேயென்னும்
கொடியவினைசெய்வேனும்யானேயென்னும்
கொடியவினைதீர்ப்பேனும்யானேயென்னும்
கொடியானிலங்கைசெற்றேனேயென்னும்
கொடியபுள்ளுடையவனேறக்கொலோ
கொடியவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன்
கொடியேன்கொடியென்மகள்கோலங்களே. **9**

கர்மவினை எதுவும் இல்லாதவன் நானே என்பாள்,

கொடிய வினை ஆகிறவனும் நானே என்பாள்,

கொடியவினை செய்கின்றவனும் நானே என்பாள்,

கொடிய பாவங்களைப்போக்குகிறவனும் நானே என்பாள்,

கொடியவனாகிய இராவணனின் இலங்கையைப் பாழாக்கினேனே என்பாள்,

(பகைவர்கள் அஞ்சும்படியான) கொடிய கருடப் பறவையை யுடையவனான மாயவன் ஆவேசமுற்றதாலோ,

கொடிய உலகத்தவர்களாகிய உங்களுக்கு என்ன சொல்வேன் பாவியாகிய என்னுடைய கொடிபோன்ற மகளின் செயல்களைப்பற்றி

இதுவும் மகள் ஆவேசம்கொண்டு கூறப்பட்டவையாகத் தாய் கூறியவை ஆகும்.

5—6—10

கோலங்கொள்சுவர்க்கமும்யானேயென்னும்
கோலமில்நரகமும்யானேயென்னும்
கோலம்திகழ்மோக்கமும்யானேயென்னும்
கோலங்கொளுயிர்களும்யானேயென்னும்
கோலங்கொள்தனிமுதல்யானேயென்னும்
கோலங்கொள்முகில்வண்ணனேறக்கொலோ
கோலங்கொள்ளுலகத்தீர்க்கென்சொல்லுகேன்
கோலம்திகழ்கோதையென்கூந்தலுக்கே. **10**

அழகுமிக்க சுவர்க்கமும் நானே என்பாள்,

அழகற்ற நரகமும் நானே என்பாள்,

சுவர்ச்சிமிக்க மோக்ஷமும் நானே என்பாள்,

சிறந்த உயிர்களும் நானே என்பாள்,

சிறப்புமிக்க தனி நாயகனுன ஸ்ரீமன் நாராயணன் நானே என்பாள்,

அநேக கோலங்கள் கொள்ளும் மேகவண்ணன் ஆவேசமுற்றதால்,

அழகுடைய உலகத்தவர்களாகிய உங்களுக்கு நான் என்னசொல்வேன் அழகிய கூந்தலையுடைய என் மகளைப்பற்றி.

இதுவும் தாய் மகளைப்பற்றிக் கூறியதுவே.

5—6—11

கூந்தல்மலர்மங்கைக்கும்மண்மடந்தைக்கும்
குலவாயர்கொழுந்துக்கும்கேள்வன்தன்னை
வாய்ந்தவழுதிவளநாடன்மன்னுகுருகூர்ச்
சடகோபன்குற்றேவல்செய்து
ஆய்ந்ததமிழ்மாலைஆயிரத்துள்
ளிவையுமோர்பத்தும்வல்லார் உலகில்
ஏந்துபெருஞ்செல்வத்தராய்த்
திருமாலடியார்களைப்பூசிக்கநோற்றார்களே. 11

கூந்தலுக்குப் பேர்போன இலக்குமிக்கும் பூமிதேவிக்கும் ஆயர்குலத்து நப்பின்னைக்கும் மணவாளனை பொருந்திய வழுதிநாடனுன குருகூர்ச் சடகோபன் இறைபணி புரிந்து ஆராய்ந்த ஆயிரம் பாசுரங்களாலாகிய தமிழ் மாலையில் இவையாகிய பத்தும் வல்லவர்கள் உலகத்தில் உயர்ந்த பெரிய செல்வந்தர்களாய் மகாவிஷ்ணுவின் அடியார்களைப் போற்றி வாழ்த்த நோற்றவர்கள் ஆவார்கள்.

ஐந்தாம்பத்து—ஏழாந்திருவாய்மொழி

நோற்றநோன்பு

5—7—1

நோற்றநோன்பிலேன்நுண்ணறிவிலேன்
ஆகிலுமினியுன்னைவிட்டொன்றும்
ஆற்றகிற்கின்றிலேன் அரவினணையம்மானே
சேற்றுத்தாமரைசெந்நெலூடுமலர் சிரீவரமங்கலநகர்
வீற்றிருந்தவெந்தாய் உனக்குமிகையல்லேனங்கே 1

நோற்ற நோன்பு இலேன்—எந்தவிதமான விரதமோ தவமோ இல்லாதவன், நுண் அறிவு இலேன்—கூர்மையான புத்தி இல்லாதவன், ஆகிலும் இனி உன்னைவிட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன்—எனினும் (என்றாலும்) உன்னுடைய துணை இல்லாமல் எந்தக் காரியமும் செய்யச் சக்தி இல்லாதவனாய் இருக்கின்றேன்; அரவின் அணை அம்மானே!—ஆதிசேஷசயனப் பெருமானே! சேற்றுத் தாமரை செந்நாலூடுமலர்—சேற்றில் தாமரை செந்நெற்பயிரின் நடுவே மலரும்படியான, சிரீவர மங்கல நகரில் அமர்ந்திருக்கிற எம் தந்தையே, உனக்கு மிகை அல்லேன் அங்கே—உனக்கு நான் ஏற்றுக்கொள்ளாத அளவு மிகுதிப்பட்டவன் அன்று அங்கு.

ஆதிசேஷன்மீது பள்ளிகொள்ளும் பெருமானே! நான் விரதமிருந்து செய்யக்கூடிய தவம் ஒன்றும் இல்லாதவன். நான் சிறந்த அறிவும் இல்லாதவன். இருந்தபோதிலும் நான் உன்னைத் துணையாகக்கொண்டுள்ளேன். உன்னைவிட்டு எந்தக் காரியமும் செய்யும் சக்தி இல்லாதவன், சிரீவர மங்கலத்தில் நீ அமர்ந்திருக்கிறாய், அங்கு என் ஒருவனை ஏற்றுக் கொள்ளாத அளவு இடம் இல்லாமற் போகாது. ஏற்றருள்க எ—று.

5—7—2

அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லேன்
உன்னைக்காணுமவாவில்வீழ்ந்து நான்
எங்குற்றேனுமல்லேன் இலங்கைசெற்றவம்மானே
திங்கள்சேர்மணிமாடநீடு சிரீவரமங்கலநகருறை
சங்குசக்கரத்தாய் தமியேனுக்கருளாயே. 2

அங்கு உற்றேன் அல்லேன்—நான் இருக்கும் இடத்திலேயே பொருந்தப் பெற்றேன் அல்லேன், இங்கு உற்றேன் அல்லேன்—இங்கே சிரீவரமங்கல நகரில் வீற்றிருக்கிற உன்னையும் அடையப்பெறவில்லை. உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து—உன்னைக் காணவேண்டும் என்ற பெரியதோர் ஆசை கொண்டு, நான் எங்குற்றேனும் அல்லன்—நான் அங்கேயும் இங்கேயும் இல்லாமல் எந்த இடத்தையும் அடையாதவனாய் இருக்கிறேன், இலங்கை செற்ற அம்மானே!—இலங்கையைப் பாழாக்கிய பெருமானே! திங்கள் சேர் மணிமாட நீடு சிரீவரமங்கல நகர் உறை—சந்திரன் தொட்டுச் செல்லும்படியான அழகிய மாடங்கள் நிறைந்த சிரீவரமங்கல நகரத்தில் உறைகின்ற, சங்குசக்கரத்தாய்—சங்கும் சக்கரமும் உடைய பெருமானே, தமியேனுக்கு அருளாயே—எனக்கு நீ அருள்புரிவாயாக.

விபீஷணன் தன் நாடாகிய இலங்கையையும் உற்றார் உறவினரையும் விட்டு ஆகாசமார்க்கமாக சர்வலோக சரண்யனை ஸ்ரீராமனை அடையவந்தான். ஆகாசத்தில் அந்தரத்தில் இருந்தவாறு ஸ்ரீராமனை ஏற்றுக்கொள்ளுபடியாக வானரர்களை தெரிவிக்கும்படியாக வேண்டினான். அப்பொழுது தனக்கென ஓர் இடமில்லாதவனானான். இது விபீடணன் சொன்னவாறு பொருந்துகிறது.

அ—து ஸ்ரீ ராகவப் பெருமானே! நான் இராவணனோடு சேர்ந்தவனும் அல்லன் உன்னையும் அடையாத நிலையில் இருக்கிறேன், எங்கும் இல்லாத கதியற்ற நிலை. ஆகவே எனக்கருள் புரிவாயாக என்று தொழுதவாறு.

என்பதுபோல ஆழ்வார் பெருமானார் சிரீவரமங்கல நகரில் உறைகின்ற சங்குசக்கரத்தோடுடைய பெருமானை அருளும்படி வேண்டுகிறார். சரணாகதி அடைவதற்குப் பூர்வாங்கமாக நான் கதியற்றவனாக இருக்கிறேன் என்கிறார்.

5—7—3

கருளப்புட்கொடிசக்கரப்படை வானநாடவெங்கார்முகில்வண்ணா
பொருளல்லாதவென்னைப்பொருளாக்கி அடிமைகொண்டாய்
தெருள்கொள்நான்மறைவல்லவர்பலர்வாழ் சிரீவரமங்கலநகர்க்கு
அருள்செய்தங்கிருந்தாய் அறியேனொருகைம்மாறே. 3

கருளப்புட்கொடி சக்கரப்படைவான நாட எங்கார் முகில் வண்ணு!—கருடப் பறவையைக் கொடியாகவும் சக்கரத்தை ஆயுதமாகவும் உடைய வானுலகத்து என் நீலமேக வண்ணப் பெருமானே! பொருள் அல்லாத என்னைப் பொருளாக்கி அடிமைகொண்டாய்!—ஒரு பயனும் அற்ற என்னைப் பயனுள்ளவனுகச் செய்து உனக்கு ஏவல் புரியும்படிகொண்டாய். தெருள்கொள் நான்மறை வல்லவர் பலர்வாழ் சிரீவரமங்கல நகர்க்கு அருள்செய்து அங்கிருந்தாய்—தெளிவுபெற்ற வேதம் வல்லவர்கள் அநேகர் வாழுகின்ற சிரீவரமங்கல நகருக்குக் கருணைபுரிந்து அங்கு இருப்புக்கொண்டாய், அறியேன் ஒரு கைம்மாறுஏ—உனக்குநான் என்ன பிரதி உபகாரம் செய்வது என்று அறியாதவனுய் இருக்கிறேன்.

இது நெஞ்சை அள்ளும் பாசுரம். எம்பெருமானுல் தம்மை அடிமை கொண்டமைக்கு அளவு கடந்த நன்மையைப் பெற்றதாக உணர்ந்து தம் உணர்வை உள்ளம் திறந்து கொட்டுகிருர். அதைத்தெரிவிக்க வைகுந்தத்தில் இருக்கிற பெருமானை உரக்கக் கூவி அழைக்கிருர்.

எம்பெருமானுக்கு அடிமை செய்தல் என்னும் பேற்றுக்கு உயர்ந்த பேறு உண்டோ! அதுவும் பொருள் அல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய் என்கிருர். இவ்வளவுபெரிய நன்மைக்கும் நான் என்ன கைம்மாறு செய்வேன் என்று வருந்துகிருர்.

5—7—4

மாறுசேர்படைநூற்றுவர்மங்க ஓரைவர்க்காயன்றுமாயப்
போர்பண்ணி
நீறுசெய்தவெந்தாய் நிலங்கீண்டவம்மானே
தேறுஞானத்தர்வேதவேள்வியருச் சிரீவரமங்கலநகர்
ஏறிவீற்றிருந்தாய் உன்னையெங்கெய்தக்கூவுவனே. 4

மாறுசேர் படை நூற்றுவர் மங்க—பகைமைகொண்டு படையுடன் வந்த துரியோதனனை முதற்கொண்ட நூறுபேர்கள் மாயும்படியாக, ஓர் ஐவர்க்காய் அன்று மாயப்போர் பண்ணி—ஒப்பற்ற பஞ்சபாண்டவர்களுக்காக பாரதப்போரில் மாயங்கள் கொண்டு போர் செய்து, நீறு செய்த எந்தாய்—துகள் துகளாகச்செய்த எம் தந்தையாகிய பெருமானே, நிலம் கீண்ட அம்மானே!—பூமியைக் கடலிலிருந்து பெயர்த்தெடுத்த பிதாவே! தேறு ஞானத்தர்—தெளிந்த ஞானிகள், வேத

வேள்வி அருச் சிரீவர மங்கல நகர் ஏறி வீற்றிருந்தாய்—வேத விதிப்படியான வேள்விகள் தவருமல் நடைபெறும் சிரீவர மங்கல நகரை விரும்பி அமர்ந்தாய், உன்னை எங்கு எய்தக் கூவுவனே—உன்னை எந்த இடத்தில் அடையக் கூவுவதோ நான்.

பாரதப் போர் நடத்தி பாண்டவர்களுக்காக அநேக மாயா லீலைகள் புரிந்து துரியோதனனையும் அவனைச்சேர்ந்த அத்தனை பேரையும் மாய்த்து ஒழித்தாய், ஒருகால் பூமி நீரில் மூழ்கிவிட்டபோது அதைப் பெயர்த்தெடுத்து வந்தாய். இவ்வளவு வல்லமை வாய்ந்தவனே! நீ சிரீவரமங்கலத்தில் விருப்பங்கொண்டு அங்கு அமர்ந்தாய் உன்னை நான் எங்ஙனம் அடைவதோ அதைச் சொல்லி அருள்வாய்.

ஏறி வீற்றிருந்தாய் என்பதால் சிரீவரமங்கலத்தில் என்றும் தவருத வேதவிதிப்படி வேள்விகள் நடக்கின்றன என்று அங்கு வீற்றிருக்க விரும்பினையோ என்றவாறு.

5—7—5

எய்தக்கூவுதலாவதேயெனக்கு எவ்வதெவ்வத்துளாயுமாய்நின்று
கைதவங்கள்செய்யும் கருமேனியம்மானே
செய்தவேள்வியர்வையத்தேவரருச் சிரீவரமங்கலநகர்
கைதொழவிருந்தாய் அதுநானும்கண்டேனே. 5

எய்தக்கூவுதலாவதே எனக்கு—எனக்கு உன்னை அடையுமாறு கூவவேண்டியதே, எவ்வது—எதுவாயிருந்தாலும், எவ்வத்துளாயுமாய்—அவ்வவற்றில் உள்ளவனுய், நின்று—பொருந்தியிருந்து, கைதவங்கள் செய்யும் கருமேனி அம்மா—வஞ்சனைகள் புரியும் கருமேனிப் பெருமானே! செய்த வேள்வியர்—யாகம் செய்தவர்களும், வையத்தேவர்—நிலத்தேவர்களாகிய அந்தணர்களும், அரு—நீங்காத, சிரீவர மங்கலநகர் கைதொழ இருந்தாய்—சிரீவர மங்கல நகரில் கைகூப்பி வணங்குமாறு (உட்கார்ந்த கோலத்தில்) இருந்தாய், அது நானும் கண்டேனே—அதை நானும் ஞானக்கண்ணுல் கண்டேனே.

எல்லாவற்றிலும் வீற்றிருந்து மாயங்கள் செய்கின்ற பெருமானே! எனக்கு உன்னை அடையக் கூப்பிடுவதே கடமையாகும். நீ சிரீவர மங்கலத்தில் வீற்றிருந்தாய். அதை நான் கண்டுதான் உன்னைக் கூப்பிடுகின்றேன் எ—று.

5—7—6

ஏனமாய்நிலம்கீண்டவென்னப்பனேகண்ணு என்று
மென்னையாளுடை

வானநாயகனே மணிமாணிக்கச்சுடரே
தேனமாம்பொழில்தண்சிரீவரமங்கலத்தவர் கைதொழவுறை
வானமாமலையே அடியேன்தொழவந்தருளே. 6

ஏனமாய் நிலம் கீண்ட என் அப்பனே! கண்ணு!—பன்றியாய் பூமியை சமுத்திரத்திலிருந்து வெளியே பெயர்த்துக்கொண்டு வந்த என் தந்தையே! கண்ணனே! என்றும் என்னை ஆளுடை வான நாயகனே! மணி மாணிக்கச் சுடரே!—என்னை அடிமையாகக்கொண்ட தேவர்கள் தலைவனே! அழகிய நீல ரத்தினம் போன்ற ஒளியே! தேனமாம் பொழில்—இனிய மாஞ்சோலைகளை உடைய, தண் சிரீவரமங்கலத்தவர் கைதொழ உறை வானமாமலையே—குளிர்ச்சியுடைய சிரீவர மங்கலத்து மக்கள் தரிசித்து வணங்கும்படியாக அமர்ந்திருக்கிற உயர்ந்த மாமலை போன்றவனே! அடியேன் தொழ வந்து அருளே! நான் உன்னை வணங்கும்படியாக எனக்கு அருள்கவே.

உயர்ந்தபெரிய மலைபோல் தோற்றம்கொண்ட பெருமானே! நீ சிரீவர மங்கலத்தில் வாழ்கின்றவர்கள் தொழும்படியாக அங்கு குடிகொண்டாய். அதனுல் எனக்குப் பயன் என்ன? நான் வணங்கும்படியாக எனக்கு தரிசனம் கொடுக்க வேண்டும் எ—று.

5—7—7

வந்தருளியென்னெஞ்சிடங்கொண்டவானவர்கொழுந்தே
உலகுக்கோர்

முந்தைத்தாய்தந்தையே முழுவேழுலகுமுண்டாய்
செந்தொழிலவர்வேதவேள்வியருச் சிரீவரமங்கலநகர்
அந்தமில்புகழாய் அடியேனையகற்றேலே. 7

வந்து அருளி என் நெஞ்சு இடம்கொண்ட வானவர் கொழுந்தே—நான் விரும்பியவாறு வந்து எனக்கு அருள்செய்து என் உள்ளத்தில் குடிகொண்ட தேவர்களின் கொழுந்தே, உலகுக்கு ஓர் முந்தைத் தாய்தந்தையே—உலகத்திற்கே ஒப்பற்ற ஆதித் தாயும் தந்தையும் ஆனவனே! முழு ஏழுலகும் உண்டாய்—ஏழுலகங்களையும் முழுக்க உண்டவனே, செந்

தொழிலவர்—அந்தணர்களின், வேள்வி அறு—யாக யக்யங்கள் தவறாத, சிரீவர மங்கல நகர்—சிரீவர மங்கல நகரத்து, அந் தமில் புகழாய்—முடிவில்லாத புகழையுடையவனே! அடியேனை அகற்றேலே—அடியவனாகிய என்னை உன்னிடமிருந்து நீக்க வேண்டாம்.

எம்பெருமான் ஆழ்வார் பெருமானார் விரும்பியவாறு வந்து ஆழ்வார் நெஞ்சில் இடங்கொண்டார். இனி என்னை நீக்கவேண்டாம் என்கிறார்.

5—7—8

அகற்றநீவைத்தமாயவல்லைம்புலன்களாமவை நன்கறிந்தனன்
அகற்றியென்னையும்நீ அருஞ்சேற்றில்வீழ்த்திடக்கண்டாய்
பகற்கதிர்மணிமாடநீடு சிரீவரமங்கைவாணனே என்றும்
புகற்கரியவெந்தாய் புள்ளின்வாய்பிளந்தானே. 8

அகற்ற நீ வைத்த மாய வல்ஐம்புலன்களாம் அவை நன்கு அறிந்தனன்—மாயம் நிறைந்த கொடிய ஐம்புலன்களாம் அவை நீ அகற்றுவதற்காக வைத்தவை என்பதை நான் நன்றாகத் தெரிந்துகொண்டேன். அகற்றி என்னையும் நீ அருஞ் சேற்றில் வீழ்த்தி கண்டாய்—என்னையும் உன்னிடமிருந்து அகலச்செய்து நீ சொல்வதற்கு அரிய சேற்றில் விழும்படி செய்துவிட்டாய்காண். சிரீவர மங்கல நகரில் வீற்றிருக்கிற எம் தந்தையாகிய பெருமானே! அங்கே நீ என்னை ஏற்றுக் கொள்ளலாம் அல்லவா? நீ ஏற்றுக்கொள்ளாத அளவு மிகுதிப் பட்டவன் ஆய்விடமாட்டேன் எ—று.

பகல் கதிர் மணிமாட நீடு சிரீவரமங்கை வாணனே—சூரியனைப்போல் ஒளிர்கின்ற மணிகள் பொருந்திய மாடங்கள் நிறைந்த சிரீவரமங்கலநகர் தேவனே! என்றும் புகற்கு அரிய எந்தாய்—எக்காலத்தும் வர்ணிக்க முடியாத அருமைவாய்ந்த எம் தந்தையே! புள்ளின்வாய் பிளந்தானே—கொக்கின் வாய் பிளந்த ஸ்ரீ கண்ணபிரானே!

என்னை உன்னிடமிருந்து பிரிக்கவே நீ ஐம்புலன்களை வைத்தாய். வைத்து என்னை இந்தப் பிறவியாகிய அரிய சேற்றில் வீழ்த்தினாய். நீ எத்தகையன் என்று புகல்வதற்கு (சொல்வதற்கு) அரியவனே எ—று.

5—7—9

புள்ளின்வாய்பிளந்தாய்மருதிடைபோயினாய் எருதேழடர்த்த என்
கள்ளமாயவனே கருமாணிக்கச்சுடரே
தெள்ளியார்திருநான்மறைகள்வல்லார் மலிதண்சிரீவர மங்கை
உள்ளிருந்தவெந்தாய் அருளாயுய்யுமாறெனக்கே. 9

புள்ளின் வாய் பிளந்தாய்—கொக்கின் வாய் பிளந்தாய், மருதிடை போயினாய்—இரட்டையாக நின்ற மருத மரங்கிடையே போனாய், எருது ஏழு அடர்த்த என் கள்ள மாயனே!—ஏழு எருதுகளை அடக்கிய என் வஞ்சகப் பெருமானே! கரு மாணிக்கச் சுடரே—கருமை நிறமுடைய இரத்தினத்தின் ஒளி போன்றவனே! தெள்ளியார் திருநான்மறைகள் வல்லார் மலிதண் சிரீவர மங்கை—தேர்ந்த ஞானமுடையவரும் வேதம் வல்லவர்களும் நிறைந்த குளுமையுடைய சிரீவரமங்கை, உள் இருந்த எந்தாய்—உள் இருந்த எம் தந்தையே, அருளாய் உய்யுமாறு எனக்கு—எனக்குப் பிழைக்கும் வழி அருள் புரிவாயாக.

பிறவிச் சேற்றில் வீழ்ந்த எனக்கு வாழும் வழியைக் அருள்க என்றவாறு.

5—7—10

ஆறெனக்குநின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய் உனக்கோர்கைம்
மாறுநானொன்றிலேன் எனதாவியுமுனதே
சேறுகொள்கரும்பும்பெருஞ்செந்நெல்லும் மலிதண்சிரீவரமங்கை
நாறுபூந்தண்டுழாய்முடியாய் தெய்வநாயகனே 10

ஆறு எனக்கு—எனக்கு வழியாக (உபாயமாக), நின் பாதமே சரணாகத் தந்து ஒழிந்தாய்—எனக்குச் சரண் அடையுமாறு உன் திருவடிகளையே தந்து ஒழிந்தாய், உனக்கு ஓர் கைம்மாறு நான் ஒன்று இலேன்—உனக்குப் பிரதி உபகாரமாகச் செய்வதற்கு ஒன்றும் இல்லை, எனது ஆவியும் உனதே—என்னுடைய உயிரும் உன்னுடையதாய் இருப்பதால், சேறுகொள் கரும்பும் பெருஞ் செந் நெல்லும் மலி—சேற்றில் கரும்பும் பெரிய செந்நெல்லும் நிறைந்த, தண் சிரீவரமங்கை—குளிர்ச்சி மிக்க சிரீவர மங்கையைச் சேர்ந்த, நாறு பூந்தண் துழாய் முடியாய்—மணம் கமழ்கின்ற பூவும் தண் துழாயும் அணிந்த முடியுடையவனே! தெய்வநாயகனே—தேவர்களுக்கு எல்லாம் தலைவனே!

5—7—11

தெய்வநாயகன்நாரணன் திரிவிக்கிரமனடியிணைமிசை
கொய்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்
செய்தவாயிரத்துள்ளிவை தண்சிரீவரமங்கைமேயபத்துடன்
வைகல்பாடவல்லார் வானோர்க்காராவமுதே, 11

தெய்வநாயகன் நாராயணன் திரிவிக்கிரமன் அடிஇணை மிசை—தேவர்களுக்குத் தலைவனும் ஸ்ரீமன் நாராயணனும் திரிவிக்கிரமனுமாகிய பெருமானின் திருவடிகளின்மீது, கொய் கொள் பூம்பொழில் சூழ் குருகூர்ச் சடகோபன்—கொய்து பெறும்படியான பூக்கள் மிக்க சோலைகளால் சூழப்பெற்ற, குருகூர்ச் சடகோபன் செய்த ஆயிரத்துள்—குருகூர்ச்சடகோபன் செய்த ஆயிரம் பாசுரங்களில், இவை தண்சிரீவரமங்கை மேயபத்துடன்—இனிய சிரீவர மங்கைநகர் பொருந்திய இந்த பத்துப் பாசுரங்கள், வைகல்பாட வல்லார்—நாள்தோறும் பாடவல்லவர்கள், வானோர்க்கு ஆரா அமுதே—தேவர்களுக்குத் தெவிட்டாத அமிர்தமாகும்.

ஆரா—அமையாத, மேய—பொருந்திய.

ஆராவமுதே

5—8—1

ஆராவமுதேயடியேனுடலம் நின்பாலன்பாயே
நீராயலைந்துகரையவுருக்குகின்ற நெடுமாலே
சீரார்செந்நெல்கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை
ஏரார்கோலம்திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே. 1

ஆரா அமுதே—தெவிட்டாத அமிர்தமே! அடியேன் உடலம் நின்பால் அன்பாய்ஏ—அடியவனுகிய என்னுடைய உடல் உன்னிடத்தில் அன்புடையதாய், நீராய் அலைந்து—தண்ணீர் ஆக அலைந்து, கரைய உருக்குகின்ற நெடுமாலே! கரைந்து (என் உள்ளத்தை) நெகிழும்படியாகச் செய்கின்ற நெடுமாலே! (மகா விஷ்ணுவே!), சீரார் செந்நெல் கவரிவீசும்—சிறப்புமிக்க செந்நெல் சாமரைபோல் அசைகின்ற, செழுநீர்த் திருக்குடந்தை—வளம்மிக்க நீரையுடைய திருக்குடந்தையில், ஏரார் கோலம் திகழக்கிடந்தாய்—அழகுமிகுந்த (நின்) வடிவம் பொலிவுறப் பள்ளி கொண்டிருந்தாய், கண்டேன் எம்மானே—பார்த்தேன் நான் என் பெருமானே.

ஏர்—அழகு, ஆர்—நிறைந்த, கோலம்—வடிவம், சீர்—சிறப்பு.

ஆழ்வார் பெருமானுர்க்குத் திருக்குடந்தை ஆராவமுதப் பெருமான் காட்சி தந்தருள்கின்ருர். ஆழ்வார் கூறுகின்ருர், நெடுநாள் உன்னை அன்புகொண்டு காண விரும்பினேன். விரும்பி விரும்பி என் உடல் உன்னிடத்திலுள்ள அன்பால் தண்ணீர்போல் அலையாய் அலைந்து அலைந்து கரைந்து சிறிதுசிறிதாக உருகிப் போகுமாறு செய்துவிட்டாய். நீ நெடுநாள் மயங்கவைக்கின்ற நெடுமால்தான். செழுமைமிக்க நெற்பயிர்கள் சாமரை வீசப்பெறுவதுபோல் காற்றில் அசைந்தாடும் நீர்வளம் பொருந்திய திவ்யதேசமான குடந்தையில் நீ மிக்க அழகோடுகூடிய வடிவங்கொண்டு பிரகாசமாக நீண்டு படுத்திருப்பதைக் கண்டேன். என் உள்ளம்கொள்ள எனக்கு ஒத்தவனைக் கண்டேன் என்கிருர்.

இது நாத முனிகளைக் கவர்ந்த பாசுரம். ஆராவமுதன் என்ற அதிமதுரமான நாமம் அவருடைய உள்ளத்தைக் கவர

அதுவே ஆதாரமாக மறைந்துபோன திருவாய்மொழிப் பாசுரங்கள் எல்லாம் அவர் யோக நிஷ்டையால் ஆழ்வார் பெருமானின் அருள்கொண்டு அருளப்பெற்று உலகுக்கு ஈந்தார். இப்பாசுரம் பக்தர்கள் சிலர் பாட அது அவர் செவியில் படுதலோடும் உடல் மெய்சிலிர்க்கக் உள்ளம் கவரப்பெற்று மற்ற பாசுரங்களை எல்லாம் காணவேண்டும் என்று ஆர்வம் உந்த அதற்காகவே அரும்பாடுபட்டு ஆழ்வாரின் திவ்ய தேசமான ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளி ஆங்குத் தங்கி பாசுரங்கள் பெற்று இராகதாளத்துடன் பாடி அருளினார். இன்றும் அக்கோவிலில் அவர் பயன்படுத்திய கஞ்சரா இருப்பதாகக் கூறப்படுகின்றது. வைகுண்ட ஏகாதசியன்று எம்பெருமான் முன்னிலையில் பாசுரங்கள் ஜால்ரா இசையுடன் பாடப்பெற்று வருகின்றன.

ஆராவமுதன் பக்தர்களின் உள்ளம் கவர்ந்த பெருமான். திருமழிசையாழ்வார் நடந்த கால்கள் நொந்தவோ ....கிடந்தவாறு எழுந்திருந்து பேசு வாழி கேசனே' என்று பாசுரம் பாட ஆராவமுதப் பெருமான் சற்றே எழுந்தவாறு அமரந்திருப்பதாகவும் அவர் வேண்டுதலுக்காகவே என்பர்.

பாசுரம் பாடிப்பாடி ஆராவமுதனைப் பருகத்தகும்.

5—8—2

எம்மானேயென்வெள்ளைமூர்த்தி என்னையாள்வானே
எம்மாவுருவும்வேண்டுமாற்றல் ஆவாயெழிலேறே
செம்மாகமலம்செழுநீர்மிசைகண்மலரும் திருக்குடந்தை
அம்மாமலர்க்கண்வளர்கின்றானே என்னான்செய்கேனே. 2

எம்மானே! என் வெள்ளை மூர்த்தி! என்னை ஆள்வானே!—எம்பெருமானே! என் வெண்ணிற வடிவமே! என்னை நடத்துகின்றவனே! எம்மா உருவும் வேண்டும் ஆற்றல் ஆவாய் எழில் ஏறே—எந்தப் பெரிய வடிவமும் வேண்டிய வல்லமைகொண்டு ஆவாய் அழகிய தலைவனே! செம்மா கமலம்—சிவந்த பெரிய தாமரை மலர்கள், செழுநீர் மிசை கண் மலரும்—நிறைந்த நீரின்மீது மலரும்படியான, திருக்குடந்தை—திருக்குடந்தையில் அம்மா மலர்க்கண் வளர்கின்றானே—அம்மா! துயில்கொண்டுள்ளானே! என் செய்கேன் ஏ—என்னசெய்வேன். ஏ—அசை, அம்மா—அந்தோ.

எம்பெருமானே! என் வெள்ளை அப்பனே! என்னை நடத்துகின்றவனே! நீ எந்த உருவத்தையும் எடுத்துக்கொள்ளும் வல்லமை யுடையவன். செந்தாமரைகள் செழித்து ஓங்கும் நீர்வளமுடைய திருக்குடந்தையில் என்னைக் கவனியாது இருக்கின்றான் ஆகையால் நான் உன்னை அணுக முடியாதவாறு இருக்கிறேன். நான் என்ன செய்வது ஒன்றும் தோன்ற வில்லையே என்றவாறு.

ஒருக்கால் ஹயக்கிரீவனாக வெள்ளைக் குதிரைவடிவம் கொண்டாய். நீ எந்த வடிவில் வருவாய் என்று சொல்ல முடியாது. இங்கே குடந்தையில் நான் எப்படி உன்னை அணுகுவன். நான் என்ன செய்வேன் என்கிறார் ஆழ்வார் பெருமானார்.

5—8—3

என்னான்செய்கேன்யாரேகளைகண் என்னையென்செய்கின்றாய்
உன்னாலல்லால்யாவராலும் ஒன்றும்குறைவேண்டேன்
கன்னார்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தாய் அடியேனருவாணாள்
சென்னாளெந்நாளந்நாள் உனதாள்பிடிதேசெலக்காணே. 3

என் நான் செய்கேன்—நான் என்ன செய்வேன், யாரே களைகண்—எனக்கு எவரே துணையாவார், என்னை என் செய்கின்றாய்—நீ என்னை என்ன பாடுபடுத்துகின்றாய், உன்னால் அல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்—எம்பெருமானாகிய உன்னால்தான் எனக்கு எல்லாம் ஆகவேண்டும். மற்று எவரிடத்தும் எனக்கு ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. கன்னார் மதிள்சூழ் குடந்தைக் கிடந்தாய்—மதிள் சுவரால் சூழப்பெற்ற குடந்தையில் படுத்து இருப்பவனே! அடியேன் அருவாழ்நாள் செல்நாள் எந்நாள் அந்நாள் உனதாள்பிடித்தே செலக்காண்ஏ—அடியவனாகிய என்னுடைய அருமைமிக்க வாழ்நாட்கள் (ஆயுள்) கழியும் நாள் எந்த நாளோ அந்தநாள் உன்னுடைய திருவடிகளைபற்றிக் கொண்டுபோகும்படியாகக் காண்பாயாக.

கன்னார்—கல் நார் வாணாள்—வாழ்+நாள், இப்பாசுரத்தால் ஆழ்வார் பெருமானார் எம்பெருமானிடம் தன் செயலற்ற தன்மையையும் கதியற்ற நிலையையும் எடுத்துக் கூறித் தன்னைத் திருவடிகளில் ஏற்றுக்கொள்ளுமாறு இறைஞ்சுகிறார்.

நான் என்ன செய்வேன், எனக்குத் துணையார் என்னை ஏன் இவ்வளவு பாடுபடுத்துகின்றாய், உன்னால்தான் எனக்கு ஆகவேண்டியது உள்ளது வேறு எவராலும் முடியாது நான் வேறு யாரிடமும் குறைவேண்டவில்லை. மதிள் சுவரால் சூழப் பெற்று நல்ல காவலுடைய குடந்தையில் பள்ளிகொண்டிருக் கிறாயே! எனக்கு நீ துணையாகவேண்டும். என்னுடைய வாழ் நாள் முடிந்து ஆவி பிரியும்போது அன்றைக்கு நான் உன்தாள் களைப் பிடித்துச் செல்லுமாறு செய்க என்கிறார். அதாவது என்னை உன் திருவடிகளில் அணைத்துக்கொள்வாயாக. இது யாராலும் முடியாது நீயேதான் செய்யவேண்டும் என்றபடி.

அவன் தாள்களைப்பற்ற நமக்கு இப்பாசுரத்தால் கை பிடித்துக்கொடுக்கிறார் ஆழ்வார் பெருமானார்.

5—8—4

செலக்காண்கிற்பார்காணுமளவும் செல்லும்கீர்த்தியாய்
உலப்பிலானே யெல்லாவுலகுமுடையவொருமூர்த்தி
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தாய் உன்னைக்காண்பான்நான்
அலப்பாய் ஆகாசத்தைநோக்கி அழுவன்தொழுவனே 4

செலக்காண்கிற்பார் காணுமளவும் செல்லும் கீர்த்தி யாய்—செல்வதைக் காணும் ஆற்றல் உடையார் பார்க்கின்ற தூரம் அளவும் செல்லும்படியான புகழையுடையவனே! உலப்பு இலானே—முடிவு இல்லாதவனே! எல்லா உலகும் உடைய ஒரு மூர்த்தி—எல்லா உலகங்களையும் உடைய ஒப் பற்ற தேவனே! நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்— நன்மைமிக்க பெரியோர்களையுடைய குடந்தையில் படுக்கை கொண்டவனே! உன்னைக் காண்பான்—உன்னைக் காண்பதற்கு, நான் அலப்பாய் ஆகாசத்தை நோக்கி அழுவன் தொழுவனே —நான் அலைக்கப்பட்டவனாய் ஆகாசத்தைப் பார்த்துஅழு வேன். ஏ—அசை, கிற்பார்—ஆற்றல் உடையார்

காண்பதற்குச் சக்தியுள்ளவர்கள் எவ்வளவு தூரம் காண்பார்களோ அவ்வளவு தூரம் கீர்த்தியும் செல்லும்படி யான பெருமானே! ஏழுலகங்களுக்கும் அதிபதியே! உன்னைக் காண்பதற்காக நான் தளர்ந்தவனாய் ஆகாசத்தைப் பார்க் கின்றேன், தொழுகின்றேன் இவ்வாறெல்லாம் நான் செய் கின்றேன். உன்னைப் பார்க்கவேண்டுமென்று அவ்வளவு ஆவல் எ—று.

5—8—5

அழுவன்தொழுவனடிக்காண்பன் பாடியலற்றுவன்
தழுவல்வினையால்பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்
செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய்
செந்தாமரைக்கண்ணா
தொழுவனேனையுனதாள் சேரும்வகையேசூழ்கண்டாய் 5

செழுஒண் பழனக் குடந்தைக் கிடந்தாய்—வளம்மிக்க சிறந்த வயல்களால் சூழப்பெற்ற குடந்தையுள் கிடந்தவண்ணம் உள்ள பெருமானே! செந்தாமரைக் கண்ணனே! அழுவன்—நான் அழுவேன், தொழுவன்—நான் தொழுவேன், ஆடிக் காண்பன்—(அன்பினால் குதித்து) ஆடிக் காண்பேன், பாடி அலற்றுவன்—உன்னை பாடல்கள் கொண்டு பாடிக் கதறுவன், தழுவல் வினையால் பக்கம் நோக்கி நாணிக் கவிழ்ந்திருப்பன்—உன்னைக்காணலாம் என்று கைகளால் தடவிப்பார்த்த செயலால் வெட்கமடைந்து பக்கம் நோக்கித்தலையைக் கவிழ்த்துக் கொள்வேன். தொழுவனேனை—தொழுகின்ற என்னை, உன தாள் சேரும் வகையே சூழ் கண்டாய்—உன்னுடைய திருவடிகளை அடையும் வழியில் சூழ்ச்சி செய்கிறாய் உ—று.

இவ்வாறெல்லாம் நான் உன்னை அடையுமாறு முயல்கின்றேன் எ—று.

பக்தனுக்கு பக்தி முற்றிய நிலை. அவனை அடைய வேண்டும் என்ற தணியாத தாகம்.

5—8—6

சூழ்கண்டாயென்தொல்லைவினையையறுத்து உன்னடிசேரு
மூழ்கண்டிருந்தே தூராக்குழிதூர்த்து எனைநாளகன்றிருப்பன்
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய் வானோர்கோமானே
யாழினிசையேஅமுதே அறிவின்பயனே அரியேறே. 6

சூழ்கண்டாய்—எனக்குச் சதி செய்தாய், என் தொல்லை வினையை அறுத்து—என் முன்னைப் பாவங்களை ஒழித்து, உன் அடிசேரும் ஊழ்கண்டிருந்தே—உன் திருவடிகளை அடையும் விதி இருக்கிறது என்று தெரிந்தே. தூராக் குழி தூர்த்து—நிரம்பாத (கருக்)குழியை நிரப்பி (வேண்டாது இருந்த பிறவியை எடுத்து), எனை நாள்—எத்தனை நாள், அகன்றிருப்பன்—உன் திருவடிகளை அடையாமல் விலகி இருப்பன், வாழ்

தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்—பழமையான புகழுடன் வாழ்கின்றவர்களை உடைய குடந்தையில் கிடக்கும் கோலத்தில் உள்ள பெருமானே! வானோர் கோமானே!—தேவர்களுக்கு ஈசனே! யாழின் இசையே அமுதே அறிவின் பயனே அரிஏறே—யாழ் என்னும் நரம்புக் கருவியின் இசைபோன்று இனியவனே! அமுதே—அமிர்தம் போன்று சுவைமிக்கவனே! அறிவின் பயனே—ஞானத்தின் பலனாகத் திகழ்கிறவனே! அரி ஏறே—நெடுமால் பெருமானே.

என்னுடைய பாவங்களைப் போக்கி உன்னுடைய திருவடிகளை அடையும் விதி இருந்தும் எனக்குச் சதி செய்தாய். வேண்டாத பிறவி எடுத்து எத்தனைநாள் உன்னை அடையாது விலகி இருப்பேன் குடந்தைக்கிடந்த பெருமானே! என்று நெஞ்சுருகி அப்பெருமானை அழைத்தவாறு. நீ யாழின் இசைபோல இனியன் அமிர்தம் போன்று சுவைமிக்கவன் அறிவின் பலனாகத் திகழ்கிறவன் மகா விஷ்ணுவாகிய தலைவன் நீ இப்படிச் செய்யலாமா என்றபடி..

5—8—7

அரியேறேயென்னம்பொற்சுடரே செங்கண்கருமுகிலே
எரியேபவளக்குன்றே நால்தோளெந்தாயுனதருளே
பிரியாவடிமையென்னைக்கொண்டாய் குடந்தைத்திருமாலே
தரியேனினியுன்சரணம்தந்து என்சன்மங்களையாயே. 7

அரிஏறே என் அம் பொற்சுடரே செங்கண் கருமுகிலே எரியே பவளக்குன்றே நால்தோள் எந்தாய்!—என் சிங்கஏறே! என் அழகிய பொன் ஒளியே! சிவந்த கண்களையுடையவனும் மேகம் போன்ற நிறமும் உடையவனே! எரிபோலத் திகழ்கிறவனே! செந்நிறமுடைய பவளக்குன்று போன்ற தோற்றமுடையவனே! சதுர்புஜப் பெருமானே! உனது அருளே பிரியா அடிமை என்னைக் கொண்டாய்—உன்னுடைய அருள் நீங்காதவாறான அடிமையாக என்னைக் கொண்டாய்! குடந்தைத் திருமாலே!—குடந்தையில் கிடக்கைகொண்ட திருமாலே! தரியேன்—பொறுத்திருக்க என்னால் முடியாது, இனி உன் சரணம் தந்து என் சன்மம் களையாயே—என்னை உன் திருவடிகளில் ஏற்றுஎன்னுடைய பிறவியைக் களைந்து நீக்குவாயாக.

இப்பாசுரத்தால் எம்பெருமான் தனக்கு குற்றேவல் புரியுமாறு அடிமைகொண்ட பக்தன் வேண்டுவது ஈண்டு உணர்த்தப் பெறுகிறது. பிரியாது இருக்கும்படி அருள்பெற்ற

அடியான் என்ருலும் நான் உன் திருவடிகளில் ஐக்யமாகாமல் இருக்கமுடியாது. உன்னுடைய திருவடிகளை எனக்குத் தந்து என் பிறவியை அறவே ஒழித்துவிடுக. களை எடுப்பதுபோல் எடுத்திடுக என்கின்ருன் பரம பக்தன்.

நம் இக சுகத்திற்கே எம்பெருமானைச் சிறுசிறு தேவைகளைப் பூர்த்திசெய்ய இறைவனை வேண்டுருேம். கோவில்களுக்குச் சென்று அர்ச்சா மூர்த்திகளை தரிசிக்க நமக்குத் தோன்றுவதும் பெரும்பாலும் இதுவே.

பக்தி முற்றிய அடியார்கள் வயது ஆகஆக ஞான தசையில் உள்ளவர்கள் என்ன வேண்டுவது என்பதை ஆழ்வார் பெருமாளுர் ஈண்டு காட்டுகிருர் வழிநடத்திக் காட்டுகிருர். அடுத்த பாசுரமும் காண்க.

5—8—8

களைவாய்துன்பங்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்
வளைவாய்நேமிப்படையாய் குடந்தைக்கிடந்தமாமாயா
தளராவுடலமெனதாவி சரிந்துபோம்போது
இளையாதுனதாளொருங்கப்பிடித்துப் போதவிசைநீயே. 8

களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்று இலேன்—இவ்வுலகத் துன்பங்களை நீ நீக்கிஞலும்சரி அல்லது நீக்காவிட்டாலும்சரி. உன்னைவிட்டு எனக்குப் பற்றுக்கோடு வேருருவரும் இல்லை (என்பதை நிச்சயமாகக் கூறுகிறேன்). வளைவாய் நேமிப் படையாய்—வட்டவடிவமான முகப்பையுடை சக்கராயுதத்தை உடையவனே! குடந்தைக்கிடந்த மாமாயா—குடந்தையில் கிடந்த கோலத்தில் இருக்கும் பெரிய மாயவனே! தளரா—தளர்ந்து, உடலம் எனது ஆவி சரிந்து போம்போது—உடலில் இருந்து என்னுடைய பிராணன் நீங்கிப் போகும்போது, இளையாது—சோர்வில்லாது, உனதாள் ஒருங்கப் பிடித்து போத இசையே—உன்னுடைய திருவடிகளை உறுதியாகப் பிடித்துப் போகும்படி அருள்வாயாக.

என்னுடைய துயரத்தைத் தீர்த்தாலும் தீர்க்காவிட்டாலும் நீயே எனக்குப் பற்றுக்கோடு. சக்கரம் ஏந்திய குடந்தைப் பெருமானே! தளர்ந்துபோய் எனது உடலிலிருந்து ஆவி பிரிந்து போகும்போது நான் சற்றும் இளைக்காதவாறு உன்னுடைய திருவடிகளை உறுதியாகப் பிடித்துப் போகுமாறு அருள வேண்டும். இதுவே என் வேண்டுதல் எ—று.

5—8—9

இசைவித்தென்னையுன்தாளிணைக்கீழ் இருத்துமம்மானே
அசைவிலமரர்தலைவர்தலைவா ஆதிப்பெருமூர்த்தி
திசைவில்வீசும்செழுமாமணிகள்சேரும் திருக்குடந்தை
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய் காணவாராயே 9

இசைவித்து—அருள்புரிந்து, என்னை உன் தாளிணைக் கீழ் இருத்தும் அம்மானே—என்னை உன்னுடைய திருவடிகளின் கீழே இருக்கும்படி செய்வாய் எம்தந்தையாகிய பெருமானே, அசைவில்—சோர்வு இல்லாத, அமரர் தலைவர்—தேவர்களின் தலைவனான தேவேந்திரன் முதலியவர்களுக்கும், தலைவா!—தலைவனான மகாவிஷ்ணுவே! ஆதிப்பெருமூர்த்தி—படைப்புக்கே ஆதிப் பெருமானே! திசை வில் வீசும்—சுற்றிலும் ஒளி வீசும், செழுமா மணிகள் சேரும் திருக்குடந்தை—நன்கு முதிர்ந்த சிறந்த தானியமணிகள் குவியும் திருக்குடந்தை, அசைவில்—நிலைபெற்று, உலகம் பரவக் கிடந்தாய்—உலகம் துதிக்குமாறு கிடந்த பெருமானே! காணவாராய்—உன் சுயரூபத்தில் காண வருவாயாக.

அசைவு—சோர்வு, அசைவுஇல்—நகர்தல் இல்லாத.

5—8—10

வாராவருவாய்வருமென்மாயா மாயாமூர்த்தியாய்
ஆரவமுதாயடியேனுவி அகமேதித்திப்பாய்
தீராவினைகள்தீரவென்னையாண்டாய் திருக்குடந்தை
யூரா உனக்காட்பட்டும் அடியேனின்னமுழல்வேனே. 10

வாரா அருவாய் வரும் என் மாயா—அறிவுக்கு எட்டாத உருவமற்றவனாய் வருகின்ற என் மாயவனே! மாயா மூர்த்தியாய்—அழியாத வடிவுடையவனாய், ஆரா அமுதாய்—தெவிட்டாத அமிர்தமாய், அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்—என்னுடைய ஆன்மாவின் உள்ளத்தை இனிக்கும்படி செய்கின்றவன், தீராவினைகள் தீர—தீர்க்கமுடியாத பாவங்கள் தீரும்படியாக, என்னை ஆண்டாய்—என்னைத் திருத்திச் சரி செய்தாய், திருக்குடந்தை யூரா—திருக்குடந்தை ஊரா! உனக்காட்பட்டும் அடியேன் இன்னம் உழல்வேனே—அடியேனாகிய நான் உனக்கு அடியவனாகியும் (தொண்டனாகியும்) இன்னும் இப்பிறவியில் அவதிப்பட்டுக்கொண்டிருப்பேனோ?

திருக் குடந்தை ஊரில் குடிகொண்டாய் ஆராஅமுதனாய். நீ அருவும் உருவும் கொண்டு பல மாயங்கள் புரிகின்றவன். என் பிராணனுக்குப் பிராணனும் தித்திக்கும்படியாக செய்கிறவன், தீர்க்கமுடியாத கொடிய பாவங்களை எல்லாம் தீரும்படியாக என்னைத் திருத்திப் பணிகொண்டாய் நான் உனக்குக் குற்றேவல் புரிகின்ற அடியவனாகியும் இன்னும் வாழ்வில் புறம்கின்றவனாய் இருப்பேனோ! இருக்கவேமாட்டேன் நீ என்னை ஏற்றுக் கொள்க என்று சக நிலையில் கேட்கும்படி பக்திகொண்ட அடியான் சொன்னது இது.

5—8—11

உழலையென்பின்பேய்ச்சிமுலையூடு அவளையுயிருண்டான்
கழல்களவையேசரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன்
குழலின்மலியச்சொனன ஓராயிரத்துளிப்பத்தும்
மழலைதீரவல்லார் காமர்மானேய்நோக்கியர்க்கே. 11

உழலை என்பின் பேய்ச்சி—மான்போன்றவள் என்றால் அவள் பேய் போன்றவள், முலை ஊடு அவளை உயிர் உண்டான்—அவளை முலை வழியாக உயிர் உண்டான். கழல்கள் அவையே சரணாகக்கொண்ட குருகூர்ச் சடகோபன்—அவனுடைய திருவடிகளையே புகலாக (தஞ்சமாக)க்கொண்ட குருகூர்ச்சடகோபன், குழலின் மலியச் சொன்ன—குழலைக் காட்டிலும் இனிமையாகச் சொன்ன, ஓராயிரத்துள் இப்பத்தும்—ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்துப் பாசுரங்களாலும், மழலைதீர வல்லார்—மழலைப்பேச்சு இல்லாத வல்லவர்களாவர், காமர் மானேய் நோக்கியர்க்கே—அழகிய மான்போன்ற பார்வையுடைய மகளிர்க்கு.'

இப் பத்துப் பாசுரங்களும் வல்லவர்கள் ஆராவமுதனை அமிர்தமாகக்கொண்டு மாதர்களிடம் மழலைமொழியில் பேசும் மையல் மொழியைவிட்டு அவனிடமே அன்புகொள்வர் எ—று.

ஐந்தாம்பத்து—ஒன்பதாம் திருவாய்மொழி

மானேய்நோக்குநல்லீர்

5—9—1

மானேய்நோக்குநல்லீர் வைகலும்வினையேன்மெலிய
வானார்வண்கமுகும் மதுமல்லிகைகமழும்
தேனார்சோலைகள்சூழ் திருவல்லவாழுறையும்
கோனாரை அடியேன்அடிகூடுவதென்றுகொலோ. 1

மான் ஏய் நோக்கு நல்லீர்!—மான் போன்ற பார்வை யுடைய நங்கைமீர்! வைகலும் வினையேன் மெலிய—நாள்தோறும் பாவியாகிய நான் இளைக்க, வான் ஆர்வண் கமுகும்—ஆகாசத்தை அளாவும்படியான் சிறந்த கமுக மரங்களும், மது மல்லிகை கமழும்—தேனையுடைய மல்லிகை வாசனை வீசுகின்ற, தேனார் சோலைகள் சூழ்—அழகிய சோலைகளால் சூழப்பெற்ற, திருவல்லவாழ் உறையும் கோனாரை—திருவல்லவாழ்தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசனின், அடியேன்—தொண்டனாகிய நான், அடி கூடுவது என்று கொலோ—திருவடிகளை அடைவது என்றோ! (எந்த நாளோ) தெரியவில்லை.

திருவல்லவாழில் உள்ள ஈசனை என்று அடைவதோ என்று ஏக்கம் உடையவளாய் இருக்கிறேன் என்று அப்பெருமானிடம் காதல் கொண்ட பக்தை ஒருவள் மற்ற மகளிரைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

5—9—2

என்றுகொல்தோழிமீர்காள் எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ
பொன்திகழ்புன்னைமகிழ் புதுமாதவிமீதணவி
தென்றல்மணங்கமழும் திருவல்லவாழ்நகருள்
நின்றபிரான் அடிநீறு அடியோங்கொண்டுசூடுவதே. 2

தோழிமீர்காள்—தோழிகளே, எம்மை நீர் நலிந்து என் செய்திரோ—என்னை நீங்கள் நொந்து கொண்டு என்ன பயனடைந்தீர்கள். பொன் திகழ் புன்னை—பொன் போல் மலர்கள்விளங்கும் புன்னை மரம், மகிழ்—இனிய, புது மாதவி மீது அணவி—புதிய குருக்கத்தி மரத்தின் மீது பொருந்தி, தென்றல் மணம் கமழும் திருவல்லவாழ் நகருள்—தென்றல் காற்று வாசனை பரப்பும் திருவல்லவாழ் நகரில்,

நின்றபிரான் அடி நீறு அடியோம் கொண்டு சூடுவதே—நின்று கொண்டிருக்கும் தேவனின் பாத தூளி அடியவர்களாகிய நாங்கள் அணிந்து கொள்வது, என்று கொல்!—எந்த நாளோ!

தோழிமார்களே! நீங்கள் என்னை என்னென்னமோ பேசாத பழி எல்லாம் பேசி நீங்கள் அடைந்த பயன் என்ன? திருவல்லவாழ் நகரில் நிற்கின்ற தேவபெருமானின் பாத தூளியை அடியவர்களாகிய நாம் அணிந்து கொள்வது எந் நாளோ. ஆவலாயிருக்கிறது என்று அப்பெருமானிடம் காதல் கொண்ட அவள் தோழிகளிடம் கூறுகிறாள்.

5—9—3

சூடுமலர்க்குழலீர் துயராட்டியேனைமெலிய
பாடுநல்வேதவொலி பரவைத்திரைபோல்முழங்க
மாடுயர்ந்தோமப்புகைகமழும் தண்திருவல்லவாழ்
நீடுறைகின்றபிரான் கழல்காண்டுங்கொல்நிச்சலுமே. 3

சூடும் மலர்க்குழலீர்—பூக்களைக் கொண்டு சூடுகின்ற கூந்தலையுடைய தோழிகளே! துயர் ஆட்டியேன்—துன்பமுடைய நான், மெலிய—வருந்தும் படியாக, பாடுநல் வேதஒலி—ஓதப்படுகின்ற வேத மந்திரங்களின் ஒலி, பரவைத்திரைபோல்—கடல் அலைகள் போல், முழங்க—இரைந்து எழ, மாடு உயர்ந்து—பக்கத்தில் மேலே கிளம்பி, ஓமப் புகை கமழும் ஓமாக்கனிப்புகை மணக்கும் படியான, திருவல்லவாழ் நீடு உறைகின்ற பிரான்—திருவல்லவாழ் நகரில் நெடுங்காலமாக வாசம் செய்யும் தேவனுடைய, கழல் காண்டும் கொல் நிச்சலுமே—கழல்கள் அணிந்த திருவடிகளை நாள் தோறும் பார்க்க முடியுமோ.

திருவல்லவாழ் நகர் தேவபிரானிடம் காதல் அதிகமாகி அப்பெருமானை நாள்தோறும் காண முடியுமா என்று தோழிகளைக் கேட்கிறாள். ஏனெனில் அங்கு நடைபெறுகின்ற வேத பாராயண ஒலி கடல் அலைகள் போல் ஒலிக்கும் சப்தமும் அருகே ஓமாக்னியின் நறும் புகை உயர்ந்து மேலே செல்வதும் அவளுடைய உள்ளத்தை வருத்துகிறது.

அருகே கோவிலில் நடைபெறும் விழ ஒலி அவள் உள்ளத்தை இவ்வாறு ஈர்க்கிறது.

5—9—4

நிச்சலும்தோழிமீர்காள் எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ
பச்சிலைநீள்கமுகும் பலவும்தெங்கும்வாழைகளும்
மச்சணிமாடங்கள்மீதணவும் தண்திருவல்லவாழ்
நச்சரவினணைமேல் நம்பிரானதுநன்னலமே. 4

தோழிமீர்காள்! எம்மை நீர் நலிந்து என் செய்தீர்ஓ—என்னை நீங்கள் வருத்தி என்ன நன்மை அடைந்தீர்கள். பச்சிலை நீள் கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும் மச்சணி மாடங்கள் மீது அணவும்—பசிய இலைகள் மிக்க உயர்ந்த கமுக மரங்களும் பலாமரங்களும் தெங்கு மரங்களும் வாழையும் மச்சுகள் உடைய உப்பரிகைகள் மீது பொருந்துகின்ற, தண் திருவல்லவாழ் நச்சு அரவின் அணைமேல் நம்பிரானது—குளிர்ச்சியுடைய திருவல்லவாழ் தலத்தில் விஷமுள்ள பாம்பாகிய படுக்கையின் மீது பள்ளி கொண்ட நம்முடைய பெருமானின், நலமே நம் நலம் நிச்சலும் எ—சேவையே கடமையாகும் நாள் தோறும் நமக்கு நன்மை தருவதாகும்.

தோழிமார்களே! நீங்கள் என்ன செய்தீர்கள். நாள் தோறும் என் மீது குறைகள் கூறி வருத்தினீர்கள். என்ன நன்மை அடைந்தீர்கள்?

கொடிய பாம்பணையான் மீது பள்ளி கொண்டுள்ள பெருமானின் நலமே நம்முடைய நலமாகும் அதனால் நாள் தோறும் அவனுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றவாறு.

5—9—5

நன்னலத்தோழிமீர்காள் நல்லவந்தணர்வேள்விப்புகை
மைந்நலங்கொண்டுஉயர்விண்மறைக்கும் தண்திருவல்லவாழ்
கன்னலங்கட்டிதன்னைக் கனியையின்னமுதந்தன்னை
என்னலங்கொள்சுடரை என்றுகொல்கண்கள்காண்பதுவே. 5

நம் நலத் தோழிமீர்காள்! நம்முடைய நலத்தை விரும்பும் தோழிகளே! நல்ல அந்தணர் வேள்விப்புகை—வாக்குமனம் காயம் தூய்மை கொண்ட வேதம்வல்ல அந்தணர்களுடைய யாகங்களின் புகை, மைந்நலங் கொண்டு உயர்விண் மறைக்கும்—கார்முகில் வண்ணன் நன்மை பெற்று உயரச் சென்று ஆகாசத்தை மூடும், தண் திருவல்லவாழ் கன்னலங் கட்டி தன்னை—தண்மையுடைய திருவல்லவாழ் கரும்பின் அழகிய

கட்டி போல் இனியவனை, கனியை இன்னமுதம் தன்னை என் நலம் கொள் சுடரை—என்னுடைய நன்மையை விரும்பும் ஒளி மூர்த்தியை, என்று கொல் கண்கள் காண்பதுவே—என் கண்களால் காண்பது என்றோ. மை—மேகம்,

திருவல்லவாழ் பெருமானைக் காண்பதற்கான ஆர்வம் மிக உள்ளத்தை அமிர்தமாக நிரப்பும் மதுரமான நாமங்கள் சொல்லி நயக்கிறாள். அப்பெருமானின் நலம் விரும்பும் அவள் தோழிகளையும் நல்லவர்களாக இணைத்துக் கொள்கிறாள்.

5—9—6

காண்பதெஞ்ஞான்றுகொலோ வினையேன்கனிவாய்மடவீர்
பாண்குரல்வண்டினொடு பசுந்தென்றலுமாகியெங்கும்
சேண்சினையோங்கு மரச்செழுங்கானல்திருவல்லவாழ்
மாண்குறள்கோலப்பிரான் மலர்த்தாமரைப்பாதங்களே. 6

கனிவாய் மடவீர்—சிறந்த வாயையுடைய தோழிமார் களே! பாண் குரல் வண்டினொடு பசும் தென்றலுமாகி—பாடும் குரலையுடைய வண்டுகளோடு இளம் தென்றல் காற்று வீச, எங்கும் சேண்சினை ஓங்கி மரச் செழுங்கானல் திருவல்லவாழ் —எல்லாப் பக்கங்களிலும் உயரமாக கொம்புகள் வளரும் மரங்கள் அடர்ந்த காடுகளையுடைய திருவல்லவாழ், மாண் குறள் கோலப் பிரான் மலர்த் தாமரைப் பாதங்களே—மாட்சிமை மிக்க வாமன வடிவப் பெருமானின் அழகிய தாமரைத் திருவடிகளை, காண்பது எஞ்ஞான்று கொலோ வினையேன்—காண்பது எந் நாளோ பாவியாகிய நான்.

திருவல்லவாழ் நகரம் முழுவதுமே கோலாகலமாகத் திகழ்கிறது. வண்டுகள் ரீங்காரம் செய்வது என்ன! தென்றல் அடிப்பது என்ன! கொம்புகள் ஆகாயத்தை அளாவ மரங்கள் அடர்ந்திருப்பது என்ன! போதாமைக்கு மாட்சிமைமிக்க வாமன வடிவங்கொண்டுள்ள தேவனை நினைத்தால் என் உள்ளம் பொங்குகிறது. அவன் அழகிய தாமரை அடிகளைக் காண்பது எந்நாளோ எ-று.

5—9—7

பாதங்கள் மேலணிபூந்தொழக்கூடுங்கொல் பாவைநல்லீர்
ஓதநெடுந்தடத்துள் உயர்தாமரைசெங்கழுநீர்
மாதர்கள்வாண்முகமும் கண்ணுமேந்தும்திருவல்லவாழ்
நாதனிஞ்ஞாலமுண்ட நம்பிரான்தன்னைநாடொறுமே. 7

பாவை நல்லீர்!—சித்திரப் பிரதிமைகள் போன்ற உத்தமிகளே! ஓத நெடுந்தடத்துள்—நீர் மிக்க பெரிய தடாகத்தில், உயர் தாமரைச் செங்கழு நீர்—உயர்ந்த தாமரை மலர்களும் நீலோற்பல மலர்களும், மாதர்கள் வாள் முகமும் கண்ணும் ஏந்தும்—மங்கையரின் முகங்கள் போலவும் அவர்களுடைய கண்கள் போலவும் காட்சி அளிக்கும், திருவல்லவாழ் நாதன் இஞ்ஞால முண்ட நம்பிரான் தன்னை—திருவல்லவாழ் நகர் தேவனும் இந்த உலகம் உண்டவனுமான நம் பெருமானின், பாதங்கள் மேல் அணி பூந்தொழக் கூடுங்கொல் நாள் தோறும்—திருவடிகள் மேல் அணியப் பெற்ற பூக்களை நாள் தோறும் வணங்கும் படியான பேறு நமக்குக் கிட்டுமோ எ-று.

திருவல்லவாழ் நகரின் சிறப்பும் அப்பேர்ப்பட்ட நகரில் உறையும் பெருமானின் சிறப்பும் கூறப்பெற்று அத்தகைய பெருமானின் திருவடிகளின் மேலுள்ள மலர்களைக் கண்டு வணங்கும் பேறு கிடைத்தால் போதுமாம் என்றபடி.

5—6—8

நாடொறும்வீடின்றியே தொழக்கூடுங்கொல்நன்னுதலீர்
ஆடுறுதீங்கரும்பும் விளைசெந்நெலுமாகியெங்கும்
மாடுறுபூந்தடம்சேர் வயல்சூழ்தண்திருவல்லவாழ்
சுழலின்மலிசக்கரப்பெருமானது தொல்லருளே. 9

நன்னுதலீர்—நல்ல நெற்றியையுடைய நங்கைமீர்! ஆடுறு செங்கரும்பும்—அசைந்து ஆடுகின்ற செங்கரும்பும், விளைச் செந்நெலுமாகி எங்கும்—எங்கும் செந்நெல் விளையும் மாடுறு பூம் தடம் சேர் வயல் சூழ்—பக்கங்களில் அழகிய நீர் நிலைகளுள்ள வயல்களால் சூழப்பெற்ற, திருவல்லவாழ்நகரில் நீண்ட காலமாக உறைகின்ற பிரானின், நிலம் தாவிய நீள் கழலே—உலகம் அளந்த நீண்ட திருவடிகளை, நாள் தோறும் வீடின்றியே தொழக்கூடுங்கொல்—நாள் தோறும் இடைவிடாமல் தொழக் கூடுமோ.

திருவல்லவாழ் அர்ச்சா மூர்த்தியின் மீது பக்தி கொண்டவள் நாளும் நாளும் அப்பக்தி முற்றி அப்பெருமானை இடைவிடாது தொழக் கூடுங்கொலோ என்று நைகின்றாள்.

5—9—9

கழல்வளைபூரிப்பயாமகண்டு கைதொழக்கூடுங்கொலோ
குழலென்னயாழுமென்னக் குளிர்சோலையுள்தேனருந்தி
மழலைவரிவண்டுகளிசைபாடும் திருவல்லவாழ் .
சுழலின்மலிசக்கரப்பெருமானது தொல்லருளே 9

கழல்வளை பூரிப்ப யாம் கண்டு கைதொழக்—கைகள் பூரிப்ப திருவல்லவாழ் பெருமானின் கழல்களைக் கண்டு நாம் கைக்கூப்பித் தொழுதால், குளிர் சோலையுள் தேன் அருந்தி மழலை வரிவண்டுகள் குழல் என்ன யாழும் என்ன இசைபாடும் திருவல்லவாழ்—குளிர்ந்த சோலைகளில் தேனை உண்டு வரி வண்டுகள் குழலின் இசைதானோ என்னும் படியாக ரீங்காரம் செய்யும் படியான திருவல்லவாழிலுள்ள வேகமாகச் சுழலும் படியான சக்கரத்தையுடைய பெருமானது, தொல்லருள் கூடுங் கொலோ—பழமையாகக் காட்டி வருகின்ற அருள் நமக்கும் கிடைக்காதா என்றபடி.

வளை பூரிப்ப—வளையையுடைய கை மகிழ்ச்சியினால் வீங்க,

திருவல்லவாழ் நகரம் மிக்க இனிமையானது. வண்டுகள் பாடும் இசை குழலினும் யாழினும் இனியது. அப்படிப் பட்ட இனிய நகரத்தில் உள்ள பெருமானும் இனியன். அவன் ஆதியிலிருந்து அருள் சுரக்கிறவன். அத்தைய பெருமானை உள்ளம் பொங்க உடல் பூரிக்கத் தொழுதால் அவன் அருள் கிட்டாதா என்றபடி.

5—9—10

தொல்லருள்நல்வினையால் சொலக்கூடுங்கொல்தோழிமீர்காள்
தொல்லருள்மண்ணும்விண்ணும் தொழநின்றதிருநகரம்
நல்லருளாயிரவர் நலனேந்தும்திருவல்லவாழ்
நல்லருள்நம்பெருமான் நாராயணன் நாமங்களே. 10

தொல் அருள் மண்ணும் விண்ணும் தொழ நின்ற திருநகரம்—தொன்மையான அருளால் மண் உலகத்தவரும் வானுலகத்தவரும் தொழும்படியாக அமைந்தது திருநகரம், திருவல்லவாழ் நல்லருள் நம்பெருமான் நாராயணன் நாமங்கள்—திருவல்லவாழ் நகரத்து நல்ல அருளுடைய நம்பெருமான் ஸ்ரீமன் நாராயணனின் நாமங்கள், நல்லருள் ஆயிரவர் நலன் ஏந்தும்—நல்ல அருளுடைய ஆயிரம் பேர்களுடைய நன்மை கொண்டது. தொல் அருள் நல்வினையால் சொலக்கூடும் கொல் தோழிமீர்காள்—பூர்வ அருளால் செய்யப்பட்ட புண்யத்தால் (அந்நாமங்களைச்) சொல்லக் கூடுமோ என்றபடி.

திருவல்லவாழ் நகரத்துச் சிறப்பும் அந்நகரத்துப் பெருமானின் சிறப்பும் கூறப் பெறுகிறது.

ஆதியில் எம்பெருமானின் அருள் கொண்டது இந்நகரம். மண்ணுலகமும் விண்ணுலகமும் தொழும் நல்லருள் உடையது. நல்லருளுடைய அப்பெருமான் ஸ்ரீமன் நாராயணனின் நல்ல அருளுடைய ஆயிரம் பேர்களின் நன்மையைத் தாங்கியவை. அந்த திவ்விய நாமங்களை நாம் சொல்லக் கூடுமோ என்று பக்தையானவள் கேட்கிறாள். பக்தையின் பக்தி சிறிது சிறிதாக வளர்ந்து அவனுடைய ஆயிரம் நாமங்களைச் சொல்ல விரும்புகிறாள் என்பது இதனால் உணரப் பெறுகிறது. அந்த ஆயிரம் நாமங்கள் ஒவ்வொன்றும் மிகுந்த நன்மையைத் தாங்கியுள்ளது என்பதும் உணரப் பெறுகிறது,

தர்மங்களில் மிக உயர்ந்த தர்மம் எது என்று தர்மபுத்திரர் பீஷ்மரைக் கேட்க, விஷ்ணுசகஸ்ர நாமங்களைச் சொல்லுவது தான் மனித சன்மத்தில் தலையாய தர்மம் என்று உரைத்தார்,

இவ்வளவு நாமங்களைச்சொல்லக்கூடுமா என்பதும் இப்பாசுரத்தில் வினவப் பெறுகிறது. அவற்றின் நன்மையைக் கருதிப் பார்க்கும் அளவில் சொல்லக் கூடும் என்பதும் துணிபு.

5—9—11

நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல்
சேமங்கொள்தென்குருகூர்ச் சடகோபன்தெரிந்துரைத்த
நாமங்களாயிரத்துள் இவைபத்தும்திருவல்லவாழ்
சேமங்கொள்தென்னகர்மேல் செப்புவார்சிறந்தார்பிறந்தே. 11

நாமங்கள் ஆயிரம் உடைய நம்பெருமான் அடிமேல்—ஆயிரம் பெயர்களையுடைய நம் பெருமானின் திருவடிகள் மேல், சேமம் கொள்—நன்மைகளைக் கொண்ட, தென்குருகூர்ச் சடகோபன் தெரிந்து உரைத்த பாண்டிய நாட்டு குருகூர்ச்சடகோபன் ஆராய்ந்து சொன்ன, நாமங்கள் ஆயிரத்துள்—பாசுரங்கள் ஆயிரத்துள், இவை பத்தும்—இந்தப் பத்துப் பாசுரங்களும். திருவல்லவாழ் சேமங்கொள் தென்னகர் மேல், செப்புவார் சிறந்தார் பிறந்தே—சொல்லுகின்றவர்கள் பிறவி எடுத்ததனால் அடைய வேண்டிய சிறப்பைப் பெற்றவர்கள் ஆவார்கள்.

ஆழ்வார் பெருமானார் பாடிய ஒவ்வொரு பாசுரமும் ஒவ்வொரு நாமமாகக் கூறியது ஒவ்வொரு நாமம் சொல்வதில் அடங்கிய நன்மையைக்கருதியே.

ஐந்தாம்பத்து—பத்தாந்திருவாய்மொழி

பிறந்தவாறும்

5—10—1

பிறந்தவாறும்வளர்ந்தவாறும் பெரியபாரதம்கைசெய்து ஐவர்க்குத்
திறங்கள்காட்டியிட்டுச் செய்துபோனமாயங்களும்
நிறந்தனூடுபுக்கெனதாவியை நின்றுநின்றுருக்கியுண்கின்ற இச்
சிறந்தவான்சுடரே உன்னையென்றுகொல்சேர்வதுவே. 1

பிறந்தவாறும் வளர்ந்தவாறும்—ஸ்ரீகிருஷ்ண பகவான் பிறந்த தன்மையும் வளர்ந்த தன்மையும், பெரிய பாரதம் கை செய்து—மகாபாரதத்தை (பாரதயுத்தத்தை) நடக்கும்படி ஒழுங்கு படுத்தி, ஐவர்க்குத் திறங்கள் காட்டி இட்டு—ஐவராகிய பாண்டவர்களுக்குத் தம் வல்லமைகளைக் காட்டி, இட்டு செய்து போன மாயங்களும்—அவர்களை முன்னிட்டுச் செய்த அற்புத செயல்களும், நிறந்தன் ஊடுபுக்கு—என் மார்புக்குள்ளே புகுந்து, எனது ஆவியை நின்று உருக்கி உண்கின்ற—என்னுடைய பிராணனை விடாது வாட்டி வதைக்கின்ற, இச்சிறந்த வான்சுடரே—இத்துணை பெருமையையுடைய பரஞ்சோதியே! உன்னை என்றுகொல் சேர்வதுஏ—உன்னை நான் அடைவது என்றோ! ஏ—அசை.

ஸ்ரீகிருஷ்ணன் பிறந்த தன்மையாவது, தந்தையாகிய வாசுதேவனும் தாயாகிய தேவகியும் கம்சனுடைய சிறையில் இருந்த போது எட்டாவது குழந்தையாக யாருக்கும் தெரியாமல் பிறந்தான். கம்சனுக்குத் தெரிந்தால் கம்சன் கொன்று விடுவான் என்பதால்.

ஸ்ரீகிருஷ்ணன் வளர்ந்தவாருவது, பிறந்த அந்த இரவே அப்பொழுதே யாருக்கும் தெரியாமல் கோகுலத்தில் யசோதை வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போகப் பெற்று யாருக்கும் தெரியாமல் யசோதை பெற்றெடுத்த குழந்தையாகவே வளர்ந்தது.

பாரதம் கைசெய்தது—பாண்டவர்களுக்காக இரண்டு தடவை கௌரவர்களிடம் தூது சென்று யுத்தமே நிகழும் படியாகச் செய்தது.

ஐவர்க்குத் திறங்கள் காட்டியது; மாண்டவர்களுக்குப் படைபலம் இல்லை. அவர்கள் போர் வேண்டும் என்றும் விரும்ப

வில்லே; அதற்கு தருமர் சம்மதிக்கவில்லே. இருந்தும் ஸ்ரீ கண்ண பிரான் திரௌபதியின் சபதத்திற்காக 'நல்லாய் நின் கூந்தலே நானே முடிப்பன்' என்று திறம் காட்டி, போரில் சூரியனே மறைத்து ஜயத்ரதனே மாய்த்ததுவும் 'அசுவத்தாமா அதம் குஞ்சரம்' என்று தருமர் சொல்லும்படி செய்து துரோணுச் சாரியாரை மாயும்படி செய்ததும், தர்மரை உயிரோடு தேர்க் காலில் கட்டிக் கொண்டு வந்து தருகிறேன் என்று துரியோத னனுக்குச் சபதம் செய்து நடு இரவில் பீஷ்மர் யாகம் செய்யும்போது திரௌபதியை சாஷ்டாங்க நமஸ்காரம்செய்ய வைத்து தீர்க்க சுமங்கலீபவ என்று சபதத்திற்கு மாருக ஆசி பெறச்செய்ததுவும் தன்னுடைய திறங்களுள் சிலவாகும்.

எல்லாம் வல்ல சர்வேஸ்வரனுக்கு ஏற்பட்ட இந்த நிலேயை ஆழ்வார் பெருமாளுரால் நினேக்க முடியவில்லே. அவை அவருடைய உள்ளத்திற்குத் தாங்க ஒண்ணுத துயரை உண்டாக்கி உருக்கியது. அதனுல் அவர் மயக்கம் மேலிட்டு செயலற்ற நிலே அடைந்தார் ஆறுமாதகாலம் என்று கூறப் பெறுகிறது.

5—10—2

வதுவைவார்த்தையுளேறுபாய்ந்ததும் மாயமாவினே
வாய்பிளந்ததும்
மதுவைவார்குழலார் குரவைபிணேத்தகுழகும்
அதுவிதுவுதுவென்னலாவனவல்ல என்னேயுன்செய்கை
நைவிக்கும்
முதுவையமுதல்வா உன்னேயென்று தலேப்பெய்வனே 2

வதுவை வார்த்தையுள் ஏறு பாய்ந்ததுவும்—நப்பின்னேயை மணக்க ஏழு எருதுகளே அடக்க வேண்டும் என்ற வார்த்தைக்காக எருதுகளே அடக்கியதுவும், மாய மாவினே வாய் பிளந்ததுவும்—குதிரையாக மாற்றுருவம் கொண்டு வந்த அசுரனே வாய் பிளந்து கொன்றதுவும், மது வைவார் குழலார்—வாசனே பொருந்திய நீண்ட கூந்தலேயுடைய ஆய்ச்சியர், குரவை பிணேந்த—கூத்து ஆட கைகோத்த, குழகும்—நெகிழ்வும், அது இது உது என்னலாவன அல்ல—இன்னது இத் தன்மையது என்று வர்ணிக்க வல்லன அல்ல, என்னே உன் செய்கை நைவிக்கும்—உன் செயல்கள் என்னே வருந்தச் செய்யும், முதுவைய முதல்வா—முதுமையான உலகத்திற்குத் தலேவனே! உன்னே என்று தலேப்பெய்வனே—உன்னே எப்பொழுது கூடுவனே.

ஓர் பெண்ணின் திருமணத்திற்கான நிபந்தனைக்காக ஏழு முரட்டு எருதுகள் மீது பாய்ந்தது எனக்குப் புரியவே இல்லை. குதிரையின் வாயில் போய் வலிந்து கைவைத்ததும் எனக்குப் புரியவில்லை. அடுத்து நீண்ட கூந்தலையுடைய ஆய்ச்சியரோடு கூத்தாட எளிமை கொண்டு அவர்களோடு கைகோத்ததும் எனக்குப் புரியவில்லை இவை எல்லாம் இத்தன்மையன என்று சொல்ல முடியாது. மிகப்பழமையான இவ்வுலகிற்கு ஆதி முதல்வன் நீ இப்படிச் செய்வது என்னை வருந்தச் செய்யும். நான் உன்னைக் கூடுவது என்றோ!

அவனுடைய லீலைகள் அறிய முடியாத ஆழ்ந்த கருத்துடையவை என்பதாக ஆழ்தார் பெருமானுர் உணர்த்துகிறார்.

5—10—3

பெய்யும்பூங்குழல்பேய்முலையுண்ட பிள்ளைத்தேற்றமும் பேர்ந்தோர்சாடிறச்
செய்யபாதமொன்றால் செய்தநின்சிறுச்சேவகமும்
நெய்யுண்வார்த்தையுளன்னைகோல்கொள்ள நீயுன் தாமரைக்கண்கள்நீர்மல்க
பையவேநிலையும்வந்து என்னெஞ்சையுருக்குங்களே. 3

பெய்யும் பூங்குழல்—வேஷமாக பூங்குழலையுடையவளான, பேய் முலையுண்ட பிள்ளைத் தேற்றமும்—பேய்த்தன்மையுடைய பூதகியின் முலைப்பால் உண்ட குழந்தை ஸ்ரீகண்ணனின் தேர்ந்த அறிவும், பேர்ந்து ஓர் சாடு இற—பெயர்ந்து ஒரு சக்கரம் முறிய, செய்ய பாதம் ஒன்றால் செய்த சிறுச்சேவகமும்—அழகிய சிறிய ஒரு திருவடியால் ஆற்றிய உன்னுடைய வீரச் செயலும், நெய்யுண் வார்த்தையுள்—உனக்கு உறியில் வைத்திருந்த வெண்ணெய்யைத் திருடி உண்டாயா என்று, அன்னை கோல் கொள்ள—யசோதை கையில் கோலால் மிரட்ட, நீ உன் தாமரைக்கண்கள் நீர் மல்க—உன்னுடைய அழகிய கண்களில் நீர் பெருக நீ, பைய—மெதுவாக, ஏ நிலையும் வந்து—மேல் நோக்கும் நிலையும் பெற, என்நெஞ்சை உருக்குங்களே—என்னுடைய உள்ளத்தை வருத்தி உருகும்படி செய்கின்றன.

இப்பாசுரத்திலும் எம்பெருமான் ஸ்ரீகண்ணனாக விபவ மூர்த்தியாய் பச்சிளங்குழந்தையாக கருவிலே ஞானம் பெற்ற தாய் அதிசூக்கும உணர்வு கொண்டு பூதகி பூக்கொண்டு அலங்கரித்த கூந்தலையுடையவளாய் நல்ல தாய் போல வந்தவள் பேய் தான் என்று உணர்ந்து அவளை உயிர் குடித்ததையும், தன்னைக் கொல்லும்படியாக உருண்டு வந்த ஓர் சக்கரத்தை

உடையும்படியாகத் தன் சிறுகாலால் உதைத்த வீரச்செயலும், உறியிலிருந்து வெண்ணெயை உண்டு விட்டாயா என்று மிரட்டி யசோதை கையில் கோல்கொள்ள தன் கண்களில் நீர் பெருக நின்று பின் மெதுவாக கள்ள நோக்குக் கொண்டதுவும் ஆழ்வார் பெருமானுர் தம் உள்ளத்தை உருக்கின என்கின்ருர்.

5—10—4

கள்ளவேடத்தைக்கொண்டுபோய்ப் புரம்புக்கவாறும்
கலந்தசுரரை
உள்ளம்பேதம்செய்திட்டு உயிருண்டவுபாயங்களும்
வெள்ளநீர்ச்சடையானும் நின்னிடைவேறலாமை விளங்க
நின்றதும்
உள்ளமுள்குடைந்து என்னுயிரையுருக்கியுண்ணுமே. 4

கள்ள வேடத்தைக் கொண்டுபோய்—பொய்வேடங் கொண்டு தூதுவனுகச் சென்று, புரம் புக்கவாறும்—அஸ்தினு புரம் புகுந்த விதமும், கலந்து அசுரரை பேதம் செய்திட்டு—துரியோதனு தியர்களுடன் கலந்து ஓர் வேற்றுமையை உண்டாக்கி அவர்களை பாண்டவர்களுடன் பகைவராகும்படி செய்து, உயிர் உண்ட உபாயங்களும்—அவர்களை மாய்த்த தந்திரங்களும், வெள்ள நீர்ச் சடையானும்—கங்கையைச் சடையிலே தாங்கிய சிவபிரானும், நின்னிடை வேறு அலாமை விளங்க நின்றதுவும்—உன்னை விட்ட வேறு கூறுடையவன் அல்லன் என்பது விளங்க வைத்தமையும், உள்ளம் உள் குடைந்து என்னுயிரை உருக்கி உண்ணுமே—உள்ளத்தின் உள்ளே துளைத்து என்னுடைய ஆவியை உருக்கி உயிரை வாங்குகின்றது.

பேதம் செய்திட்டு—நான் பாண்டவர்களுடைய தூதன் என்று வேற்றுமைகாட்டி, உயிருண்ட உபாயங்களும்—பாரதப் போர் நடத்தி அவர்களைக் கொன்று தீர்த்ததும், வேறு அல்லாமை—எனக்கிடும் பூசை சிவனுக்குச்சேரும் என்று காட்டியதும்

5—10—5

உண்ணவானவர்கோனுக்கு ஆயரொருப்படுத்த
வடிசிலுண்டதும்
வண்ணமால்வரையையெடுத்து மழைகாத்தும்
மண்ணைமுன்படைத்துண்டுமிழ்ந்து கடந்திடந்துமணந்த
மாயங்கள்
எண்ணுந்தோறுமென்னெஞ்சு எரிவாய்மெழுகொக்கும்நின்றே 5

உண்ண வானவர்கோனுக்கு ஆயர் ஒருப்படுத்த அடி சில் உண்டதும்—தேவர்களுக்கு அரசனுன இத்திரன் உண்ணும் படியாகத் தயார் செய்த உணவை ஸ்ரீகண்ணனே உண்டதும், வண்ணமால் வரையை எடுத்து மழை காத்ததும்—அழகிய பெருமைமிக்க (கோவர்தன) மலையை எடுத்து மழையி னின்றும் (பசுக்களைக்) காத்தும், மண்ணை முன்படைத்து—உலகத்தை முதலில் உண்டாக்கி, உண்டு உமிழ்ந்து கடந்து இடந்து மணந்த மாயங்கள்—அதை விழுங்கி வெளிப்படுத்தி அளந்து பெயர்த்து உருக்குமணி நப்பின்னை சத்யபாமா முதலியவர்களை மணந்து கொண்ட மாயச்செயல்களும், எண்ணும்தோறும் என் நெஞ்சு எரிவாய் மெழுகு ஒக்கு நின்றே—நினைக்கும் பொழுது எல்லாம் என் உள்ளம் நெருப்பில் இட்ட மெழுகுபோல வருந்தி உருகும் தணியாது.

ஆயர்கள் இந்திரனுக்காக எடுத்த இந்திரவிழாவில் இந்திரனுக்காகப் படைத்தஉணவை ஸ்ரீகண்ணனே முழுவதும் உண்டதுவும் கோவர்த்தன மலையை எடுத்து மழையைத் தடுத்ததுவும் உலகத்தைப்படைத்து அதை உண்டு உள்அடக்கி வெளிப்படுத்தி அது நீரில் மூழ்கிப் போனபோது பெயர்த் தெடுத்ததும் அதை திருவடியால் அளந்ததுவும் பிராட்டி மார்களை மணந்ததுவும் நினைத்து உருகுகின்முர் ஆழ்வார் பெருமாஞர்.

5—10—6

நின்றவாறும்மிருந்தவாறும் கிடந்தவாறும்நினைப்பரியன
ஒன்றலாவுருவாய் அருவாயநின்மாயங்கள்
நின்றுநின்றுநினைகின்றேன் 'உன்னையெங்ஙனம்நினைகிற்பேன்
பாவியேற்கு
ஒன்றுநன்குரையாய் உலகமுண்டவொண்சுடரே. 6

உலகம் உண்ட ஒண்சுடரே!—உலகத்தை உண்ட பரஞ்சுடரே! நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் நினைப்பரியன—நீ நின்றகோலமும் நீ உட்கார்ந்திருந்த கோலமும் நீ படுத்திருந்த கோலமும் ஆகிய இக்கோலங்களின் தன்மை நினைத்துப் பார்க்க முடியாதன. ஒன்று அலா உருவாய் அருவாய நின் மாயங்கள்—ஓர் உருவம் அல்லாது பல உருவங்களாய் உருவம் இல்லாதவனும் ஆகிய, நின்மாயங்கள் —உன்னுடைய அதிசயமான தன்மைகளை, நின்றுநின்று நினைக்கின்றேன்—நினைத்துநினைத்துப் பார்க்கிறேன், உன்னை எங்ஙனம் நினைக்கிற்பேன்—உன்னை எவ்வாறு நினைக்கவல்லேன்

பாவியேற்கு—பாவியாகிய எனக்கு, ஒன்று நன்கு உரையாய்—எவ்விதம் நினைப்பது என்ற இந்த ஒன்றையாகிலும் எனக்கு தெளிவாகச் சொல்லி அருள்க.

உலகமுண்ட பரஞ்சோதியே! நீ சில இடங்களில் நின்ற தன்மையும் சில இடங்களில் அமர்ந்த தன்மையும் சில இடங்களில் படுத்த தன்மையும் நீ கொண்ட கோலங்களின் தன்மையைப்பற்றி நான் ஒன்றும் அறியாதவனுய் இருக்கிறேன். உருவங்களும் பலவாய்க்கொண்டாய் உருவம் இல்லாதவனுய் இருக்கிருய். இவற்றையெல்லாம் நான் நினைத்து நினைத்துப் பார்க்கிறேன் எனக்கு விளங்கவில்லை. இந்த விஷயத்தைப் பற்றியாவது எனக்கு நன்கு தெரிவித்தருள்வாயாக எ—று.

5—10—7

ஒண்சுடரோடிருளுமாய்நின்றவாறும் உண்மையோடின்மை
யாய்வந்து என்
கண்கொளாவகை நீகரந்தென்னைச்செய்கின்றன
எண்கொள்சிந்தையுள்நைகின்றேன் என்கரியமாணிக்கமே
என்கண்கட்குத்
திண்கொள்ளவொருநாள் அருளாயுனதிருவுருவே. 7

ஒண்சுடரோடு இருளுமாய் நின்றவாறும்—ஒளியுடைய பகலோடு இருளுமாய் நின்ற வகையும், உண்மையோடு இன்மையாய் வந்து—இருப்பவனுகவும் இல்லாதவனுயும் வந்து, என் கண் கொளாவகை—என் கண்ணுக்குத் தெரியாமல், நீ கரந்து என்னைச் செய்கின்றன—நீ மறைவாக வருத்துவனவும் எனக்குப் புரிகின்றவை, எண் கொள் சிந்தையுள் நைகின்றேன்—மனத்துக் கொண்டு உள்ளத்தில் வருந்துகிறேன், என் கரிய மாணிக்கமே!—கருமை நிறமுடைய என்னுடைய இரத்தினமே! என் கண்கட்கு திண் கொள்ள ஒருநாள் அருளாய் உன் திருவுருவமே—என்னுடைய கண்களால் உறுதியாகக் காணுமாறு ஒருநாளாவது உன் திருஉருவத்தைக் காட்டுவாயாக.

இன்மை—இல்லாதிருத்தல், கரந்து—மறைந்து,

ஒளியில் இருள் சேர்ந்திருப்பதுபோல உண்மையில் இல்லாதவன் (வராதவன்) போல வந்து என் கண்களுக்கு தெரியாதவாறு நீ மறைந்து என்னைப் படுத்துகின்றனவற்றை எண்ணி உள்ளத்தில் வருந்துகின்றேன். என்னுடைய கரிய இரத்தினமே! என் கண்களுக்கு உறுதியாகத் தெரியுமாறு உன் உருவு கொண்டு ஒருநாள் வருவாயாக.

5—10—8

திருவுருவுகிடந்தவாறு கொப்பூழ்ச்செந்தாமரைமேல்திசைமுகன்
கருவுள்வீற்றிருந்து படைத்திட்டகருமங்களும்
பொருவிலுன் தனிநாயகமவை கேட்குந்தோறுமென்
னெஞ்சம்நின்றுநெக்கு
அருவிசோரும்கண்ணீர் என்செய்கேனடியேனே. 8

திருவுருவு கிடந்தவாறு—உன் திருமேனி கிடந்திருந்த தன்மையில், கொப்பூழ்ச் செந்தாமரைமேல்—நாபி கமலத்தின்மேல், திசைமுகன்—பிரமன், கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும்—திருவயிற்றில் இருந்து (சிந்தித்துப்) படைப்புச் செய்த கருமங்களும், பொருவில் உன் தனி நாயகம் அவை—ஒப்பு இல்லாத உன் தனிப்பட்ட ஆளுகைக்கு உட்பட்டவை அவை, கேட்கும் தோறும் என் நெஞ்சம் நின்று நெக்கு அருவிசோரும் கண்ணீர்—அவற்றை செவிகளால் கேள்விப்படும்போது என் உள்ளம் விடாது உருகி கண்ணீரை வாய்க்கால் நீராக வடிக்கும், என் செய்கேன் அடியேனே—தொண்டனாகிய நான் என்ன செய்வேன்.

நீ கிடந்த கோலத்தில் இருக்கும்போது உன் நாபிகமலத்தில் வீற்றிருக்கிற பிரமன் உன் உதரத்திற்குள் சென்று படைக்க வேண்டியவற்றை எல்லாம் அங்கு பார்த்துத் தெரிந்து கொண்டு படைத்திட்ட கருமங்கள் என்று நான் கேள்விப்படும் பொழுது என் நெஞ்சம் பாகாய்க்கரைந்து என் கண்களில் நீர் தாரைதாரையாக அருவிபோல் வடிகிறது நான் உன் அடியவன். நான் என்ன செய்வது என்று தெரியவில்லை.

உன்படைப்பைப்பற்றி என்ன சொல்வது!

5—10—9

அடியைமுன்றையிரந்தவாறும் அங்கேநின்றுழ்கடலும்
மண்ணும்விண்ணும்
முடிய ஈரடியால்முடித்துக்கொண்ட முக்கியமும்
நொடியுமாறவைகேட்குந்தேரறும் என்நெஞ்சம்
நின்தனக்கேகரைந்துகும்
கொடியவல்வினையேன் உன்னையென்றுகொல்கூடுவதே. 9

அடியை மூன்றை இரந்தவாறும்—மாவலி சக்கரவர்த் தியிடம் மூன்று அடி நிலம்வேண்டும் என்று யாசித்தவிதமும், அங்கே நின்று ஆழ்கடலும் மண்ணும் விண்ணும் முடிய ஈரடி யால் முடித்துக்கொண்ட முக்கியமும்—அந்த இடத்திலேயே நின்று மண்விண் பாதலம் ஆகிய மூன்று உலகங்களையும் இரண்டே அடிகளால் அளந்து வேறு இடம் மீதியில்லாமல் செய்துகொண்ட சிறப்பும், நொடியுமாறு—மாவலி நொடிந்து போகும் தன்மைகளாகிய, அவை கேட்கும் தோறும்—அவற் றைப்பற்றி கேள்விப்படும்பொழுது எல்லாம், என் நெஞ்சம் நின்தனக்கே கரைந்து உகும்—என்னுடைய உள்ளம் உனக் காகவே வருந்தி அழுந்தும், கொடிய வல்வினையேன் உன்னை என்று கொல் கூடுவது ஏ—மிகக்கொடிய பாவியாகிய நான் உன்னை அடைவது என்றோ!

மூன்று அடி நிலம் வேண்டும் என்று மூன்று உலகங் களையும் இரண்டு அடிகளால் அளந்துகொண்டாய் வேறு இட மின்றி இது என்ன உன் செயல். மாவலி நொடிந்தேபோனான் இந்த மாயச் செயல்களைக் கேள்விப்படும்பொழுது என் நெஞ் சம் வருந்திவருந்தி உடைகின்றது. உனக்காகவே வருந்துகின் றது இப்படி எல்லாம் செய்யவேண்டியிருக்கிறதே சர்வேஸ் வரனான உனக்கு என்று, கொடிய பாவங்கள் புரிந்தவனாகிய நான் உன்னை என்று அடைவதுவோ!

5—10—10

கூடிநீரைக்கடைந்தவாறும் அமுதம்தேவருண்ண அசுரரை
வீடும்வண்ணங்களே செய்துபோனவித்தகமும்
ஊடுபுக்கெனதாவியை உருக்கியுண்டிடுகின்ற நின்தன்னை
நாடும்வண்ணம்சொல்லாய் நச்சுநாகணையானே. 10

கூடி நீரைக் கடைந்தவாறும்—தேவர்களும் அசுரர் களும் ஒன்றாகச்சேர்ந்து திருப்பாற்கடலைக் கடைந்த விதமும், அமுதம் தேவர் உண்ண அசுரரை வீடும் வண்ணங்களேசெய்து போன வித்தகமும்—தேவர்கள் அமிர்தம் உண்ணும்படியாக அசுரர்களை வீழ்த்தும்படியான வழிகளே கையாண்ட யுக்தி களும், ஊடுபுக்கு எனது ஆவியை உருக்கி உண்டிடுகுன்ற நின் தன்னை—என்னுடைய பிராணனுக்குள் நுழைந்து பிராணனை உருக்கி விழுங்குகின்ற உன்னை, நாடும் வண்ணம் சொல்லாய் நச்சு நாகணையானே—நான் அடையும் வகை சொல்லியருள்க விடப் பாம்பைப் படுக்கையாகக் கொண்டவனே.

திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்று அதை தேவர்கள் உண்ணுமாறும் அசுரர்களுக்குக் கிடைக்காதவாறும் நீ என்னென்ன மாயமயக்குகள் எல்லாம் செய்தாய். அவை உன் யுக்தித் திறமைதான், அவை எல்லாம் நினைக்க என் பிராணனுக்குள் புகுந்து படாதபாடு படுத்துகிறது. உயிரையே உண்டு விடும்போல் இருக்கிறது. நான் உன்னை அடையும் வழி கூறுவாயாக பாம்பணையிற் பள்ளிகொண்ட பெருமானே!

5—2—11

நாகணைமிசை நம்பிரான் சரணேசரண்நமக்கென்று நாடொறும்
ஏகசிந்தையனாய்க் குருகூர்ச்சடகோபன்மாறன்
ஆகநூற்றவந்தாதி ஆயிரத்துள்ளிவையுமோர் பத்தும்வல்லார்
மாகவைகுந்தத்து மகிழ்வெய்துவர்வைகலுமே. 11

நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்று —ஆதிஷேஷனாகிய படுக்கைமீது பள்ளிகொண்டுள்ள நம்முடைய தேவனுடைய திருவடிகளே நமக்குத் தஞ்சம் என்று, நாள் தொறும்—ஒவ்வொரு நாளும், ஏக சிந்தையனாய்—ஒருமுக மான மனதுடன், குருகூர்ச் சடகோபன் மாறன் ஆகம் நூற்ற அந்தாதி—குருகூர்ச் சடகோபன் மாறனுடைய ஆத்மா இயற்றிய அந்தாதிப் பாசுரங்கள், ஆயிரத்துள் இவையும் ஓர் பத்தும் வல்லார்—ஆயிரத்தில் இந்தப் பத்துப் பாசுரங்களும் படித்து உணர்வு பொங்க எம்பெருமானை நினைக்க வல்லவர்கள், மாக வைகுந்தத்து மகிழ்வு எய்துவர் வைகலுமே—உயர்ந்த வைகுந்தத்தில் பெறும்படியான இன்பத்தைப் பெறுவர் நாள் தோறும்.

மாகம்—மஹாகம், கம்—ஆகாசம்,

குருகூர்ச்சடகோபன் மாறன் ஆகம் நூற்ற என்றதனால் சடகோபமுனியின் ஆவியே இவ்வாறு பாடிற்று என்றவாறு.

ஆறும்பத்து—முதல்திருவாய்மொழி

வைகல்பூங்கழிவாய்

6—1—1

வைகல்பூங்கழிவாய் வந்துமேயுங்குருகினங்காள்
செய்கொள்செந்நெலுயர் திருவண்வண்டூருறையும்
கைகொள்சக்கரத்து என்கனிவாய்ப்பெருமானைக்கண்டு
கைகள்கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன்காதன்மையே. 1

வைகல்—நாள்தோறும், பூங்கழிவாய்—பூக்கள் நிறைந்த நீர்க்கால்களில், வந்து மேயும் குருகினங்காள்—வந்து இரை தேடும் குருகுக்கூட்டங்களே! செய்கொள்—கழனிகளில், செந்நெல் உயர் திருவண்வண்டூர் உறையும்—நல்ல நெற்பயிர்கள் ஓங்கி வளரும் திருவண்வண்டூரில் குடிகொண்டுள்ள, கை கொள் சக்கரத்து என் கனிவாய்ப் பெருமானைக்கண்டு—கையில் சுதர்சன சக்கரத்தையுடைய சிவந்த வாயையுடையவனை என்னுடைய பெருமானைக் கண்டு, கைகள் கூப்பிச் சொல்லீர்—கைகள்கூப்பி வணங்கிச்சொல்லுங்கள், வினையாட்டியேன் காதன்மையே—பாவம் செய்தவளாகிய என்னுடைய அன்பை.

திருவண்வண்டூரில் உறையும் பெருமானிடம் காதல் கொண்ட ஒருவள் அப்பெருமானிடம் அவள் அன்பு கொண்டிருப்பதாகச் சொல்லும்படி குருகுகளைப் பார்த்துச் சொல்லுகிறாள், அப்பெருமானை அடையாளம் சொல்லித் தூது விடுகிறாள், சக்கரக்கையன் என்றும் செங்கனிவாயன் என்றும் சொல்லுகிறாள் அவனைக் கைகளால் வணங்கிச் சொல்லுமாறு கூறுகிறாள்.

6—1—2

காதல்மென்பெடையோடு உடன்மேயுங்கருநாராய்
வேதவேள்வியொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர்
நாதன்ஞாலமெல்லாமுண்ட நம்பெருமானைக்கண்டு
பாதங்கைதொழுதுபணியீர் அடியேன்திறமே. 2

காதல்மென் பெடையோடு உடன்மேயும் கருநாராய்!—உன் அன்புக்குரிய பெடையுடன் இரைதேடும் கருநிறமுள்ள கொக்கே! வேதவேள்வி ஒலி முழங்கும் திருவண் வண்டூர்

நாதன் ஞாலமுண்ட நம்பெருமானைக்கண்டு—வேதவிதிப்படி யான யாகங்கள் இயற்றும் ஒலி எழும்படியான திருவண் வண்டூர் தேவனும் உலகம் உண்டவனுமான திருமால் பெருமானைப் பார்த்து, பாதம் கைதொழுது பணியீர் அடியேன் திறமே—திருவடிகளை வணங்கிச் சொல்லுங்கள் அடியவளாகிய என்னுடைய நிலையை.

திருவண் வண்டூர் நாதனாகிய உலகம் உண்டவனிடம் அவளுடைய நிலையைப்பற்றி சொல்லும்படி நாரையைத் தூது விடுகிறாள்.

6—1—3

திறங்களாகியெங்கும் செய்களூடுழல்புள்ளினங்காள்
சிறந்தசெல்வம்மல்கு திருவண்வண்டூருறையும்
கறங்குசக்கரக்கைக் கனிவாய்ப்பெருமானைக்கண்டு
இறங்கிநீர்தொழுதுபணியீர் அடியேனிடரே. 3

திறங்களாகி—கூட்டம் கூட்டமாக, எங்கும் செய்கள் ஊடு உழல் புள் இனங்காள்—கழனிகளில் சுற்றிப்பாடுபடுகின்ற பறவை இனங்களே! திருவண் வண்டூர் உறையும் கறங்கு சக்கரக் கை கனிவாய்ப் பெருமானைக்கண்டு, இறங்கி—தாழ்ந்து, நீர் தொழுது பணியீர் அடியேன் இடரே—நீங்கள் வணங்கிச் சொல்லுங்கள் என்னுடை துன்பத்தைப்பற்றி.

கறங்கு—சுழலும்

திருவண் வண்டூர் பெருமானிடம் உதயமான காதல் அது நாளுக்கு நாள் வளர்ந்து அது மனதிற்குத் துயர் விளைவிக்கிறது. ஆக புள்ளினங்களைப் பார்த்து அவளுடைய ஆவலைப்பற்றிச் சொல்லும்படி தூதுவிடுகிறாள்.

6—1—4

இடரில்போகம்மூழ்கி இணைந்தாடும்மடவன்னங்காள்
விடலில்வேதவொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர்
கடலின்மேனிப்பிரான் கண்ணனைநெடுமாலைக்கண்டு
உடலம்நைந்தொருத்தி உருகுமென்றுணர்த்துமினே. 4

இடர்இல் போகம் மூழ்கி—இடையூறு இல்லாத இன்பத்தில் ஆழ்ந்து, இணைந்து ஆடும் மடவன்னங்காள்—ஆணும் பெண்ணுமாகக் கூடி விளையாடும் அழகிய அன்னப்பறவைகளே!

விடல் இல் வேதஒலி முழங்கும் திருவண்வண்டூர்—விடுதல் இல்லாத (இடைவிடாத) வேதங்கள்ஓதும் ஒலி கேட்கும் திரு வண்வண்டூரில் உள்ள, கடலின் மேனிப் பிரான்—கடல் நிற மன்ன மேனியையுடைய தேவன் (கரியபிரான்), கண்ணனை நெடுமாலேக்கண்டு, உடலம்—உடல், நைந்து—வருந்தி, ஒருத்தி உருகும் என்று உணர்த்துமின்ஏ—ஒருவள் வருந்துகிருள் என்று அறிவியுங்சள். ஏ—அசை.

நெஞ்சிடருற்றவள் மேலும் அப்பெருமானிடம் செல் வது நிகழாததால் அதுவே துயராகமாறிவருந்துகிருள். உடல் மெலிய வருந்துகிருள் என்று ஸ்ரீகண்ணனுக நிற்கும் நெடுமா லிடம் உணர்த்தும்படி அன்னங்களைத் தூது விடுகிருள்.

துணைப் பறவையோடு இருக்கிற அன்னத்திற்கு பிரிவுத் துன்பம் தெரியுமாதலால் இணைந்தாடும் அன்னங்களைத் தூது விடுகிருள்.

6—1—5

உணர்த்தலூடலுணர்ந்து உடன்மேயும்மடவன்னங்காள்
திணர்த்தவண்டல்கள்மேல் சங்குசேருந்திருவண்வண்டூர்
புணர்த்தபூந்தண்டுழாய்முடி நம்பெருமானைக்கண்டு
புணர்த்தகையினராய் அடியேனுக்கும்போற்றுமினே. 5

உணர்த்தல் ஊடல் உணர்ந்து—கூடலையும் பிணக் கையும் அறிந்து, உடன்மேயும் மட அன்னங்காள்—சேர்ந்து இரைதேடும் அழகிய அன்னங்களே! திணர்த்த வண்டல்கள் மேல்—ஒதுக்கித்தள்ளப்பட்ட வண்டல்கள்மேல், சங்கு—சிப்பி, சேரும், திருவண்வண்டூர்—திருவண்வண்டூரில் உள்ள, புணர்த்த பூந்தண் துழாய்முடி நம் பெருமானைக்கண்டு—மாலையாகக் கட்டப் பெற்ற பூவும் துழாயுமுள்ள முடியையுடைய நம் ஸ்ரீகண்ணனைக் கண்டு, புணர்த்த கையினராய்—கூப்பிய கை களுடன், அடியேனுக்கும் போற்றுமின்—எனக்கும் சேர்த்து வணக்கம் செலுத்துங்கள்.

துழபமுடியுடையவனுகிய ஸ்ரீகண்ணனை நீங்கள் தரி சித்து வணங்கும்பொழுது எனக்கும் சேர்த்து வணங்குங்கள் எ—று.

இதனுல் அப்பெருமானிடம் மிக்க காதல்கொண்டிருக் கிருள் என்பது தெரிகிறது. இவளுடைய நிலையை விளக்கா

மலே இவ்வாறு சொல்லுகிருள் என்ருல் பாட்டின் முதல் அடியில் கூறியிருப்பதுபோல் கூடலையும் ஊடலையும் அறிந்த துணை அன்னங்களாதலால் அவை குறிப்பால் அறிந்து சொல் லும் எ—று.

6—1—6

போற்றியானிரந்தேன் புன்னைமேலுறைபூங்குயில்காள்
சேற்றில்வாளைதுள்ளும் திருவண்வண்டூருறையும்
ஆற்றலாழியங்கை அமரர்பெருமானைக்கண்டு
மாற்றம்கொண்டருளீர் மையல்தீர்வதொருவண்ணமே. 6

போற்றி யான் இரந்தேன்—வணங்கி நான் கேட்கிறேன் (யாசிக்கிறேன்), புன்னைமேல் உறை பூங்குயில்காள்—புன்னை மரங்களின்மேல் வசிக்கும் அழகியகுயில்களே! சேற்றில் துள்ளும்—சேற்றில்வாளை மீன்கள் துள்ளிக்குதிக்கும், திருவண் வண்டூர் உறையும் ஆற்றல் ஆழிஅம்கை அமரர் பெருமானைக் கண்டு—திருவண் வண்டூர் குடிகொண்டுள்ள வல்லமைமிக்க சக்கரத்தை அழகிய கையில்கொண்டுள்ள தேவர்கள் பெருமானுகிய ஸ்ரீமன் நாராயணனைக் கண்டு, மாற்றம்கொண்டு—என்னுடைய வார்த்தையைச்சொல்லி, அருள்புரிவீர்களாக, மையல் தீர்வது ஒரு வண்ணமே—அப்பெருமானிடம்கொண்ட காதல் வேட்கை தீருகின்ற விதத்தில்.

எம்பெருமானிடம் காமுற்ற காரிகை (பெண்) திருவண் வண்டூரில் உறையும் அமரர் பெருமானுகிய ஸ்ரீமன் நாராயண னிடம் தன்னுடைய காதல்தாபம் தீரும்படியாக ஒரு வார்த்தை சொல்லுமாறு குயில்களை இரைஞ்சிக் கேட்கிருள்.

எம்பெருமானிடம் கருணைபெற ஆச்சாரியனிடம் பணிந்து வணங்கி குறையை எடுத்துச்சொல்லி அதை நிவர்த்திக்குமாறு யாசித்தால் அதை ஆச்சாரியன் செய்ய மனங் கொள்வான் என்பது இதனுல் உணரப்பெறுகிறது. குயில்கள் ஆச்சாரியனைக் குறிக்கிறது.

6—1—7

ஒருவண்ணஞ்சென்றுபுக்கு எனக்கொன்றுரையொண்கிளியே
செருவொண்பூம்பொழில்சூழ் செக்கர்வேலைத்திருவண்வண்டூர்
கருவண்ணஞ்செய்யவாய் செய்யகண்செய்யகைசெய்யகால்
செருவொண்சக்கரஞ்சங்கு அடையாளம்திருந்தக்கண்டே. 7

செரு ஒண் பூம்பொழில் சூழ்—நெருங்கிய அழகிய பூக்களையுடைய சோலைகளால் சூழப்பெற்ற, செக்கர் வேலை—சிவந்த பொய்கையை உடைய திருவண்வண்டூர், ஒருவண்ணம் சென்று புக்கு—ஏதாவது ஒரு வகையில் சென்று புகுந்து, எனக்கு ஒன்று உரை கிளியே—எனக்காக ஒரு வார்த்தையைச் சொல்வாயாகக்கிளியே! கருவண்ணம்—(மேனி) நிறம் கறுப்பு, செய்யவாய் செய்யகண் செய்யகை செய்யகால்—செந்தாமரை மலர்போல் சிவந்தவாய் சிவந்தகண் சிவந்த கை சிவந்த பாதங்கள், செருஒண் சக்கரம் சங்கு—போர்த்தன்மையுடைய ஒள்ளிய சக்கரமும் சங்கும், அடையாளம் திருந்தக்கண்டே—அடையாளங்களாக நன்ருகப் பார்த்து (உரைப்பாயாக). திருவண் வண்டூர்ப் பெருமானிடம் செல்லமுடியாமல் கிளியைத் தூது செல்லக் கேட்கிருள். அதற்கு முன்பின் தெரியாத இடம் என்ருல் ஏதாவது ஒருவகையில் அப்பெருமானிடம் ஒரு வார்த்தை கூறும்படி வேண்டுகிருள். ஊரையும் சொல்லி அப்பெருமானையும் சொல்லி அடையாளங்கள் கூறுகின்ருர். இதனுல் அவள் ஊரையும் அப்பெருமானையும் உருக்கமாக நினைக்கிருள் என்பது தெரிகிறது.

இவ்வாறு நாளுக்குநாள் நினைக்க எம்பெருமான் நெஞ்சில் இடங்கொள்வான். கோவில் செல்லாவிடினும் செல்ல வேண்டும் செல்லவேண்டும் என்ற இந்த பாரிப்புவேண்டும் என்றபடி.

6—1—8

திருந்தக்கண்டெனக்கொன்றுரையாய் ஒண்சிறுபூவாய்
செருந்திநாழல்மகிழ் புன்னைசூழ்தண் திருவண்வண்டூர்
பெருந்தண்டாமரைக்கண் பெருநீண்முடிநாள்தடந்தோள்
கருத்திண்மாமுகில்போல் திருமேனியடிகளையே. 8

சிறு பூவாய்!—நாகண வாய்ப்புள்ளே! திருந்தக்கண்டு எனக்கு ஒன்று உரையாய்—வண்டூர்ப் பெருமானை நன்ருக அடையாளம் தெரிந்து ஒரு வார்த்தையைச் சொல்வாய், செருந்திநாழல் மகிழ் புன்னை சூழ் திருவண் வண்டூர்—செருந்தி நாழல் மகிழம் புன்னை மரம் முதலியவைகளால் சூழப்பெற்ற திருவண் வண்டூரில் உள்ள, பெருந்தண் தாமரைக் கண் பெரு நீண்முடி நால் தடந்தோள் கருந்திண்மா முகில்போல் மேனி அடிகளையே—பெரிய குளிர்ந்த தாமரைபோன்ற கண்களும் பெரிய நீண்ட கிரீடத்தையும் நான்குகைகளும் கருமை நிற

முள்ள அடர்த்தியான பெரிய மேகம் போன்ற வண்ணமுடைய திரு உடம்பை உடையவனுடைய திருவடிகளை (திருந்தக் கண்டு வணங்கி ஒன்று சொல்வாயாக)

நல்ல மரச் செறிவுகொண்ட திருவண் வண்டூர்ப் பெருமான் பெரியவையும் தாமரை மலர் போன்றவையுமான கண்களையும் உயர்ந்து விளங்கும் கிரீடமும் நான்கு புஜங்களும் மேகம்போல் கறுத்த மேனியும் உடையவன். அவனிடம் சென்று அவன் திருவடிகளை வணங்கி எனக்காக ஒரு வார்த்தை சொல்வாயாக என்று நாகணவாய்ப் பறவையைத் தூது விடுத்தவாறு.

இதற்கு மற்றொரு பொருள்:

அப்பெருமானைப் பார்த்துவிட்டு வந்து உனக்கு எப்படித் தோன்றுகிறது என்பதை எனக்குச் சொல்லுக என்றவாறும் கொள்ளலாம்.

இவ்வாறு இல்லில் இருந்தபடியே ஒரு மாது எம்பெருமானை நினைத்துநினைத்து அவ்வுருவத்தை மனதில்கொண்டாள் திருந்தக்கொண்டாள் என்பது உணரப் பெறுகிறது. இதற்கு மேல் அத்தலத்திற்குச் செல்லுமாறு தூதுவிடுத்து மேலும் மேலும் அதிக ஆர்த்தி பெருகி அவன் கருணைக்குப் பாத்திரமாக்கிக் கொள்கிறாள் என்று தெரிகிறது.

இல்லில் இருக்கிறவர்கள் இப்படியும் அவனை நினைத்து நினைத்து உய்திபெறலாம் என்று அறியக் கிடக்கிறது.

6—1—9

அடிகள்கைதொழுது அலர்மேலசையுமன்னங்காள்
விடிவைசங்கொலிக்கும் திருவண்வண்டூருறையும்
கடியமாயன்தன்னைக் கண்ணனைநெடுமாலைக்கண்டு
கொடியவல்வினையேன் திறம்கூறுமின்வேறுகொண்டே 9

அலர்மேல் அசையும் அன்னங்காள்—மலர்களின்மேல் திரிகின்ற அன்னங்களே! விடிவை சங்கு ஒலிக்கும்—விடியற் காலையை விளிசங்கினால் ஊதிக்காட்டும், திருவண்வண்டூர் உறையும்—திருவண்வண்டூரில் குடியிருக்கும், கடியமாயன் தன்னைக் கண்ணனை நெடுமாலைக்கண்டு—இரக்கமில்லாத மாயனும் கண்ணனும் ஆன திருமாலைப்பார்த்து, அடிகள் கைதொ

ழுது—அவன் திருவடிகளைக் கைகூப்பி வணங்கி, கொடிய வல் வினையேன்—மிகக்கொடிய பாவியாகிய என்னுடைய, திறம் கூறுமின் வேறு கொண்டே—நிலைமையைக் கூறுங்கள் மாறு தலைக்கொண்டே.

திருவண்வண்டூர் பெருமானாகிய ஸ்ரீ கண்ணனிடம் காமுற்ற நங்கை நாள்பட்ட ஆற்றாமையினால் மேனி நிறம் மாறுதல் அடையலானாள். ஆதலால் அன்னங்களிடம்சொல்லி தூதுவிடுகிறாள். நான் மிகப் பாவம் செய்தவள் ஆதலால் அவனை அடைவதற்கு முடியாமல் இருக்கிறேன். அதற்குமேல் அக்கண்ணனோ கடியமாயன். ஆக நீங்களாவது என்னுடை மாற்றமடைந்துள்ள நிலையைப்பற்றிச் சொல்லுங்கள் எ—று.

இதனால் எவ்வளவு நாள் தாமதப்பட்டாலும் அவனை விடாது நினைக்கவேண்டும் என்பதும் அவன் அருள் கூடுவதற் குப் பாவம் தடையாய் இருப்பினும் இருக்கும். ஆகையால் எம்பெருமான் சம்பந்தம் உடையவர்கள் தொடர்பு கொண்டு அவனை அடைய முயலல் வேண்டும் என்பதாகும்.

6—1—10

வேறுகொண்டும்மையானிரந்தேன் வெறிவண்டினங்காள்
தேறுநீர்ப்பம்பை வடபாலைத்திருவண்வண்டூர்
மாறில்போரரக்கன் மதிள்நீறெழச்செற்றுகந்த
ஏறுசேவகனார்க்கு என்னையுமுளளென்மின்களே. 10

வெறி வண்டு இனங்காள்!—(தேனுக்காக) ஆசை கொண்டுள்ள வண்டுக் கூட்டங்களே! வேறுகொண்டு உம்மை நான் இரந்தேன்—என் நிலையில் மாறுதல்கொண்டு உங்களை நான் வேண்டுகிறேன். தேறு நீர் பம்பை வடபால திருவண் வண்டூர்—தெளிந்த நீரையுடைய பெரிய பொய்கையையுடைய வடபால நிலப்பகுதியில் உள்ள திருவண்வண்டூரில் உள்ள, மாறுஇல் போர் அரக்கன்—பகை என்பதே இல்லாத போர் வல்லமைமிக்க அரக்கனான இராவணனின், மதிள்—இலங்கை நகரம், நீறு எழச்செற்று உகந்த—பொடியாகும்படி பாழாக்கி மகிழ்ந்த, ஏறுசேவகனார்க்கு—ஸ்ரீ ராமனுக்கு, என்னையும்—(அவன் அருள் வேண்டிநிற்கும்) நான் ஒரு பெண்ணும், உளன் —இருக்கிறாள், என் மின்களே—என்று சொல்லுங்கள்.

திருவண் வண்டூரில் வாழ்கின்ற நாதன் சாதாரணமான வனல்லன். எதிரி என்பதே இல்லாத அரக்கன் இராவண னுடைய கோட்டையாகிய இலங்கை நகரம் பாழாகும்படி

செய்த மகாவீரனுன ஸ்ரீராமன் ஆவன். அவனைச் சரணடைந்து வாழ்வு பெற்றவர்கள் எண்ணிறந்தவர். அவனுடைய சரணை நாடி இருக்கிறவர்களுள் நானும் ஒருவள் என்று கூறுங்கள் எ—று.

6—1—11

மின்கொள்சேர்புரிநூல்குறளாய் அகன்ஞாலங்கொண்ட
வன்கள்வனடிமேல் குருகூர்சசடகோபன்சொன்ன
பண்கொளாயிரத்துள்ளிவைபத்தும் திருவண்வண்டூர்க்கு
இன்கொள்பாடல்வல்லார் மதனர்மின்னிடையவர்க்கே. 11

மின் கொள்சேர் புரிநூல்—மின்னும்படியான பூணூலை அணிந்த, குறளாய்—குள்ளவடிவம் கொண்டவனுய், அகல் ஞாலம்கொண்ட வன்கள்வன்மேல்—விசாலமான உலகத்தை (அளந்து) கொண்ட கொடிய வஞ்சகன்மேல், குருகூர்ச்சடகோபன் சொன்ன, பண்கொள் ஆயிரத்துள்—இசையோடுகூடிய ஆயிரம் பாசுரங்களில், இவைபத்தும்—இந்த பத்துப் பாசுரங்களும், திருவண் வண்டூர்க்கு இன்கொள் பாடல் வல்லார்—இனிமையாகப் பாடவல்லார்கள், மதனர் மின்னிடையவர்க்கே—மின்னிமறையும் மின்னலைப்போல் இருக்கிறதோ இல்லையோ என்னும்படியான சிறிய இடையை உடைய மடவார்களுக்கு அழகுடையவர் ஆவர்.

மதனர்—மன்மதன்போல் அழகுடையவர்.

மின்னிடைமடவார்கள்

6—2—1

மின்னிடைமடவார்கள் நின்னருள்சூடுவார் முன்புநானதஞ்சுவன்
மன்னுடையிலங்கை அரண்காய்ந்தமாயவனே
உன்னுடையசுண்டாயம்நானறிவேன் இனியதுகொண்டு
செய்வதென்
என்னுடையபந்துங்கழலும் தந்துபோகுநம்பீ. 1

மின் இடை மடவார்கள்—நுண்ணிய இடையையுடைய ஸ்ரீதேவியும் பூதேவியும் நீளாதேவியும், நின் அருள் சூடுவார் முன்பு—உன்னை மதனனாக அருள் கொண்டவர்கள் முன்னிலை யில், நான் அது அஞ்சுவன்—நான் உன்னை மதனனாகக் காண பயப்படுகிறேன், மன்னுடை இலங்கை அரண் காய்ந்த மாய அம்மானே!—உறுதியான இலங்கையின் பாதுகாவலைத் தகர்த்து எறிந்த மாயங்களையுடைய என் பெருமானே! உன்னுடைய சுண்டாயம் நான் அறிவன்—உன்னுடைய மயக்குகளை நான் அறிவேன். இனி அதுகொண்டு செய்வது என்—இனி அந்த மாயம் கொண்டு செய்வதற்கு என்ன இருக்கிறது. என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ!—என்னுடைய விளையாட்டுப் பொருள்களாகிய பந்தும் கழலும் கொடுத்து விட்டுப்போ நல்லகுணம் மிக்கவனே!

விளையாடும் பொழுது விளையாட்டுப் பொருள்களைக் கண்ணன் கவர்ந்துகொள்ள ஆயர் சிறுமி ஒருவள் கண்ணனைப் பார்த்து இவ்வாறு கூறுகிறாள்.

உன் அருள்பெற்ற தேவிமார்களுக்கு நீ மன்மதன் (அழகுடையவன்) தான். அவர்கள் இருக்க நான் உன்னை அவ்வாறு நினைக்கவும் பயப்படுகிறேன். இலங்கா நகரத்தின் வலிமை மிக்க காவலைத்தகர்த்து எறிந்த மாயவன் நீ. உன்னுடைய வீரத்தை நான் அறிவேன். அந்த வீரத்தைக்கொண்டு இங்கே செய்வது என்ன? என்னுடைய விளையாட்டுப் பொருள்களாகிய பந்தையும் கழலையும் கொடுத்துவிட்டுப் போவாயாக. நீ மிகவும் நல்லவனே.

6—2—2

போகுநம்பியுன்தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய்முறுவலும்
ஆகுலங்கள்செய்ய அறிதற்கேநோற்றேமேயாம்
தோகைமாமயிலார்கள்நின்னருள்சூடுவார்
செவியோசைவைத்தெழ
ஆகள்போகவிட்டுக் குழலூதுபோயிருந்தே. 2

போகுநம்பீ—போகின்ற நம்பீ! உன் தாமரை புரை கண் இணையும் செவ்வாய் முறுவலும்—தாமரை மலர் போன்ற உன் இரு கண்களும் சிவந்த வாயால் புரியும் உன் புன்சிரிப்பும், ஆகுலங்கள்செய்ய அழிதற்கே நோற்றேமே யாம்—எங்களுக்கு வருத்தங்கள் உண்டாக்க நாங்கள் வருத்தத்தால் அழிந்து போகவே விரதமிருந்தோமே (என்ன துர்பாக்கியம்). தோகை மாமயிலார்கள்—நீண்ட கூந்தலையுடைய பெரிய மயில்கள் போன்ற கோபிகைமார்கள், செவியோசை வைத்து எழ (ஓசை எழ செவிவைத்து)—குழலின் ஓசை எழ அதைச் செவிமடுத்து, நின் அருள் சூடுவார்—உன்னுடைய அருளைப் பெறுவார்கள் ஆ கள்—பசுக்களை, போகவிட்டுக் குழலூது போயிருந்தே—மேயும்படி ஓட்டி விட்டுப் போய் குழல் ஊதும்போது.

ஆயர் சிறுமி ஒருவளின் பந்தும் கழலும் ஸ்ரீ கண்ணன் எடுத்துக்கொள்ள அவள் அவற்றைக் கொடுத்துவிட்டுப்போ என்றாள்,

கொடுத்துவிட்டுப் புறப்படவும் அவளால் உயிர்தரிக்க முடியவில்லை. அவன் கண்களால் கவரப்பெற்று உள்ளம் குடையப்பெற்றாள் அத்துடன் அவனுடைய கனிவாயின் முறுவல் உள்ளத்தைக் கலைக்கச் செய்தது. என்ன நிகழ்ந்தது அவை இரண்டும் உள்ளத்தில் ஊடுருவிக் கலக்க நாங்கள் விரதமிருந்து நோற்றதெல்லாம் இவற்றால் அழிந்துபோவதற்காகத்தானோ என்று வருந்தக் கேட்கிறாள்.

ஸ்ரீகண்ணன் கண்களே வாயே அழகுடையன. அதிலும் அவன் கண்களால் காட்டும் சைகைகளை யாரே அறியவல்லார். அவன் குழைவுடைய முறுவல்கள் உயிரையே வாங்கிவிடும் திறத்தன, ஆதலால் அவள் நாங்கள் இவற்றால் அழிதற்கே நோற்றேமோ என்கிறாள். கோபிகைமார்களோ என்றால் குழல்ஓசையைச் செவியில் பட்டவுடன் உன் அருளைப் பெறுகிறார்கள்.

போயிருந்துநின்புள்ளுவமறியாதவர்க்கு உரைநம்பீ நின்செய்ய
வாயிருங்கனியும்கண்களும் விபரீதமிந்நாள்
வேயிருந்தடந்தோளினர் இத்திருவருள் பெறுவார்யவர்கொல்
மாயிருங்கடலைக்கடைத்த பெருமானாலே. 3

போயிருந்து நின் புள்ளுவம் அறியாதவர்க்கு உரை நம்பீ!—நீ போகவேண்டிய இடத்திற்குப் போய் உன்னுடைய வஞ்சகம் அறியாதவர்களுக்குச் சொல், நின் செய்யவாய் இரு கனியும் கண்களும் விபரீதம் இந்நாள்—உன்னுடைய அழகிய வாயின் மிகுந்த சிவப்பும் உன்னுடைய கண்களும் குழப்பங்களை உண்டாக்குகின்றன இப்பொழுது எல்லாம், வேய் இருந்தடந்தோளினர்—மூங்கலின் நுண்மையை உடைய பெரிய தோள்களையுடைய மாதர்கள் இத் திருவருள்கள் பெறுவார் யவர் கொல்—இப்படிப்பட்ட பாக்கியங்களை (விருப்பங்களை)ப் பெறுகிறவர்கள் எவர்களோ! மா இருங்கடலைக் கடைந்த பெருமானால்ஏ—திருப்பாற்கடலைக்கடைந்த பெருமானால்,

புள்ளுவம்—வஞ்சகம், இரும்—பெரிய, தடம்—பருத்த,

பெரிய பாவைகளைக் கொண்டு ஆடுகின்ற சிறுமியாகிய ஆயர் மகள் ஸ்ரீ கண்ணனுடைய கண்களின் சிமட்டல்களையும் அழகிய புன்சிரிப்பும் தரிக்காதவளாய் இந்த உன்னுடைய வேஷங்களை எல்லாம் உன்னை அறியாதவர்களிடம் காட்டு என்னிடம் வேண்டாம் என்கிறாள். கொவ்வைப்பழம் போன்ற உன் சிவந்தவாயும் கண்களும் உயிரைக் கலக்கிக் குழப்பத்தை உண்டாக்குவன நமக்கு என்கிறாள். திருப்பாற்கடலைக் கடைந்த திருமாலால் இப்படிப்பட்ட பிரசாதம் (விருப்பம்) கிடைக்கப் பெறுகிற தேவிமார்கள் யாவரோ என்று வியக்கிறாள் அவள்.

அப்படிப்பட்ட பெருமானால் புன்னகை முகம் காட்டப் பெற்றால் ஏழு உலகமும் ஈடாகுமோ. அதைப் பெறுகிற தேவிமார்கள்தான் யாவரோ! கிடைக்கவேண்டுமே அந்த பாக்கியம்! என்று அந்தப் பெருமானின் புன்சிரிப்பில் அடங்கியுள்ளவை தத்வார்த்தங்கள் முதலாக எத்தனை எத்தனையோ! அந்த வைபவம் நாம் பெறவேண்டும் என்று நம்மை முன்னே நிறுத்தி நம்மை அனுபவிக்கவைக்கிறார் ஆழ்வார் பெருமானார்.

ஆலினீளிலையேழுலகுமுண்டு அன்றுநீகிடந்தாய் உன்மாயங்கள்
மேலைவானவருமறியார் இனியெம்பரமே
வேலினேர்தடங்கண்ணினார் விளையாடுசூழலைச் சூழவேநின்று
காலிமேய்க்கவல்லாய் எம்மைநீகழறேலே. 4

ஆலின் நீள் இலை ஏழு உலகுண்டு அன்று நீ கிடந்தாய்—பிரளய காலத்தில் ஏழு உலகங்களையும் உண்டு ஓர் நீண்ட ஆலமரத்து இலைமேல் கிடந்தாய், உன் மாயங்கள் மேலை வான வரும் அறியார்—உன் ஆச்சரியகரமான லீலைகளை விண்ணுலக தேவர்களும் அறியார், இனி எம்பரமே—இனி என்னுடைய தலைவனே,

வேலின் நேர் தடங்கண்ணினார்—வேல் போன்று (தகைக்கும்படியான) பெரிய கண்களையுடைய சிறுமிகளின், விளையாடு சூழலைச் சூழவே நின்று—விளையாட்டு இடத்தைச் முற்றுகை இடுவதுபோல் வளைத்து நின்று, காலிமேய்க்க வல்லாய்—பசுக்களை மேய்க்கும் வல்லமையுடையவனே! எம்மை நீ கழறேல்—நீ என்னுடன் பேசவேண்டாம், காலி—பசு, சூழல்—இடம்,

பிரளயகாலத்தில் நீ ஏழு உலகங்களையும் உண்டு ஓர் சிறு குழந்தை வடிவம் கொண்டு உனது வலதுகாலின் பெரு விரலை வாயில் வைத்து சுவைத்தவண்ணம் ஓர் ஆல் இலையில் கிடந்தாய். உன்னுடைய மாயங்களை யார் அறிவார்! தேவர்கள் தான் அறிவாரா? அறியார். என்னுடைய மதிப்பிற்குரியவனே! வேல் போன்ற பார்வையுடைய சிறுமிகளின் விளையாட்டு இடத்தை வளைத்து நின்று இனிமேல் நீ என்னுடன் பேசவேண்டாம் எ—று,

மாடுகளை மேய்ப்பதில் வல்லவன் நீ. அதுபோல நீ எங்களை வளைக்கவேண்டாம் என்றபடி.

ஏழு உலகங்களையும் உண்டு ஒரு குழந்தையாய் அதுவும் ஒருசிறிய ஆல் இலையில் படுத்துக்கிடக்கிற மாயம் வல்லவனுக்கு உலகத்தில் நம்முடைய பெரிய காரியங்கள் எல்லாம் மிக அற்பமானவை துரும்புபோல, குழந்தை விளையாட்டைச் சிரித்தே கெடுத்துவிடுவான் அல்லது காலால் தகைத்திடுவான். அத்தன்மையன நம்முடைய பெருமிதமான செயல்கள். நாம் சாதிப்பன எல்லாம் அவன் அருளுக்கு உட்பட்டுத்தான். அவனைத் தள்ளிவைத்தல் கூடாது அவனை இணங்கவைக்க வேண்டும் என்பது இதனால் உணரப்பெறுகிறது. கண்ணனிடத்தில் அவ்வளவு இன்பம் இருக்க அவனைவிட்டு இந்த விளையாட்டில் என்ன இருக்கிறது.

கழறேல்நம்பீ உன்கைதவம்மண்ணும்விண்ணும்
நன்கறியும் திண்சக்கர
நிழறுதொல்படையாய் உனக்கொன்றுணர்த்துவன்நான்
மழறுதேன்மொழியார்கள்நின்னருள்சூடுவார்
மனம்வாடிநிற்க எம்
குழறுபூவையொடும் கிளியோடும்குழகேலே. 5

கழறேல் நம்பீ—மாண்புடையாய்! நீ பேசவேண்டாம், உன்கைதவம்—உன் வஞ்சனைகள் மண்ணும் விண்ணும் நன்கு அறியும்—பூவுலகத்தவர்களும் வானுலகத் தேவர்களும் நன்றாக அறிவார்கள். நிழறு—ஒளி வீசுகின்ற, தொல் படையாய் பழைமைமிக்க சக்கராயுதத்தை உடையவனே! உனக்கு ஒன்று உணர்த்துவன் நான்—நான் உனக்கு ஒரு புத்தி சொல்கிறேன் (கேள்), மழறு—தெளிவு நிரம்பப்பெறாத, தேன்மொழியார்கள்—தேன் போன்று இனிக்கும்படியாகப் பேசுகிறவர்களும் உன் அருளை விரும்புகிறவர்களும் உன்னை எதிர்பார்த்து இருக்க, எம் குழறு பூவையொடும் கிளியொடும் குழகேல்ஏ—குழறிப் பேசும் என்னுடைய பூவைப் புள்ளோடும் கிளியோடும் கொஞ்சி விளையாடவேண்டாம்,

பூவையும் கிளியும்—பாவைகள்

என்னுடன் பேசவேண்டாம் உன் மாயங்களை மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் நன்கு அறிவர். என்னிடம் அவை வேண்டாம். உனக்கு நெடுநாளாக இருந்து வருகிற சக்கரம் உனக்கு இருக்கிறது, தவிர உன்னை உன் இனிய தேவிமார்கள் உன்னுடைய அருள்வேண்டி உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீ அங்கே போ என்னோடும் என்னுடைய பூவையோடும் கிளியோடும் விளையாடவேண்டாம் என்றபடி.

இவ்வாறுதான் உலகம் செல்கிறது. நாமும் இது நம்முடைய மாளிகை இது நம்முடைய நிலம் இது நம்முடைய சொத்து நம்முடையவை என்று விளையாட்டுச் சாமான்களை தன்னுடையவையாக நினைக்கின்றசிறுமிபோல நினைக்கின்றோம் உயிருள்ள பூவையும் கிளியும் அவன் படைத்தவை. அவற்றையும் விட்டு அவற்றின் பாவைகளை அவள் தன்னுடையவை என்று நிற்கிறாள். ஆண்டாளும் சிறிய நாச்சியாரும் கண்ணனையே அடைந்தார்கள். கண்ணனின் சாளக் கிராமங்களை கொண்டு விளையாடினார்கள் அவர்கள்.

6—2—6

குழகியெங்கள்குழமணன்கொண்டு கோயின்மைசெய்து கன்மமொன்றில்லை
பழகியாமிருப்போம் பரமேயித்திருவருள்கள்
அழகியாரிவ்வுலகுமூன்றுக்கும் தேவிமைதகுவார்பலருளர்
கழகமேறேல்நம்பீ உனக்குமிளைதேகன்மமே. 6

குழகி எங்கள் குழமணன்கொண்டு கோயின்மைசெய்து கன்மம் ஒன்றில்லை—கொஞ்சி விளையாடி எங்கள் மரப்பாவை கொண்டு செருக்குக் கொள்வது, ஒரு பயனும் இல்லை, பழகி யாம் இருப்போம்—நாங்கள் இங்கு ஆடிப் பழகிக் கொண்டு இருக்கிறோம், பரமே இத்திருவருள்கள்—உன்னுடைய இந்த மாதிரியான கருணைக் கடாட்சங்கள் மிக உயர்ந்தவைதாம், அழகியார் இவ்வுலகு மூன்றுக்கும் தேவிமை தருவார் பலர் உளர்—உன்னுடைய மூன்று உலகங்களுக்கும் தேவிகளாக இருக்கும் தகுதியுடைய சுந்தரிகள் அநேகர் உள்ளனர், கழகம் ஏறேல் நம்பீ—நாங்கள் விளையாட்டுப் பழகும் இடத்திற்கு வரவேண்டாம், உனக்கும் இளைதே கன்மம்—உன்னைவிட இளையது கர்மம் உன்னை ஆட்டிவைக்கவில்லை.

எங்களுடைய மரப்பாவையைக்கொண்டு கொஞ்சி விளையாடி பெருமிதம் கொள்வதால் ஆகவேண்டிய பயன் ஒன்றும் இல்லை. நாங்கள் இங்கு ஆடிப் பழகுகிறோம். நீ வந்து புரியும் இந்த மாதிரியான கருணைக் கடாட்சங்கள் மிக உயர்ந் தவைதாம் பாராட்டக்கூடியவையே. ஆனால் உனக்கு மூன்று உலகுக்கும் பிராட்டியராக இருக்கத்தக்கத் தகுதியுள்ள அழகு படைத்த தேவிகள் அநேகர் உள்ளனர். அப்படி இருக்க நீ ஏன் இங்கே வரவேண்டும். போர்க்களம் செய்யவேண்டாம் கர்மம் உன்னை ஆட்டிவைக்கவில்லை.

6—2—7

கன்மமன்றெங்கள்கையில்பாவைபறிப்பது கடல்ஞாலமுண்டிட்ட
நின்மலாநெடியாய் உனக்கேலும்பிழைபிழையே
வன்மமேசொல்லியெம்மைநீவிளையாடுதி அதுகேட்கிலென்னைமார்
தன்மபாவமென்னார் ஒருநான்றுதடிபிணக்கே. 7

கன்மம் அன்று எங்கள் கையில் பாவை பறிப்பது—எங் களுடைய கைகளில் இருக்கின்ற பாவைகளை வெடுக்கென்று பிடுங்குவது செய்யக்கூடிய தொழில் அன்று, கடல்ஞாலம் உண்டிட்ட நின்மலா—கடலால் சூழப்பெற்ற உலகத்தை விழுங்கிய களங்கமற்றவனே! நெடியாய்!—நெடுமாலே!

உனக்குஏலும்—உனக்கு என்ருலும் (நீ தேவனே ஆனாலும்), பிழைபிழையே—குற்றம்குற்றமே! வன்மமேசொல்லிஎம்மை நீ விளையாடுதி—குறும்புத்தனமாகப்பேசி என்னோடு நீ விளையாடுகிறாய், அது கேட்கில் என்னைமார் தன்மபாவம் என்னுர்—இது எங்கள் பெற்றோர்கள் செவிகளில் விழுந்தால், தன்ம பாவம் என்னுர்—தருமநெறியாகக் (நியாயத்திற்கு உட்பட்டதாகக்) கொள்ளமாட்டார்கள், ஒரு நான்று தடிபிணக்கே—ஒரு சமயம் (சண்டை) ரகளைதான்.

தோழிகளோடு விளையாட்டில் ஈடுபட்டிருந்த இடைச் சிறுமியின் பாவைகளைப் பறித்துக்கொண்ட கண்ணனைப் பார்த்துச் சொல்லுகிறாள் அவள்.

இப்படி விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது நீ வந்து எங்களுடைய பாவைகளை பறித்துக்கொள்ளல் உனக்குப் பொருந்தாது. இது நீதிக்கு ஒவ்வாதது. நீ ஏழு உலகங்களை உண்டவனாய் இருந்தாலும் உனக்கும் அது குற்றம் குற்றம் தான். நீ வேண்டுமென்றே குறும்பு செய்கின்றாய். எங்களுடைய பெற்றோர்களுக்கு தெரிந்தால் இதை தருமமாக நினைக்க மாட்டார்கள். இது ஒரு சமயம் பெரிய சண்டையாக முடியும் எ—று.

இப்படித்தான் உலகம் கருதுகிறது. இழப்பு நேரிடும் பொழுது இதை ஆண்டவன் பிடுங்கிக்கொண்டான் இது அநியாயம் அவனுக்குக் கண்ணில்லை என்கிறோம். நீ கொடுத்தாய் நீ எடுத்துக்கொண்டாய் என்றும் நினைப்பது இல்லை. இல்லை இது எடுத்துக்கொண்டான் அதற்குப் பதிலாக பன்மடங்கு அளிப்பான் அளிக்கக்கூடிய சக்தி அவனுக்கு இருக்கிறது என்றும் நினைப்பது இல்லை. ஆயர் சிறுமிக்குத் தன்னுடைய பாவைகளே பெரிதாகத் தோன்றின. கண்ணன் தேவன் அவனைப் பிடிப்போம் என்ற ஞானம் அவளுக்கு இல்லை.

6—2—8

பிணக்கியாவையும்யாவரும் பிழையாமல்பேதித்தும்
பேதியாததோர்
கணக்கில்கீர்த்திவெள்ளக் கதிர்ஞானமூர்த்தியினாய்
இணக்கியெம்மையெந்தோழிமார் விளையாடப்போதுமி
னென்னபோந்தோமை
உணக்கிநீவளைத்தால் என்சொல்லாருகவாதவரே. 8

பிணக்கி—வேற்றுமையை உண்டாக்கி, யாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாததோர்—எல்லா ஜீவராசிகளும் எல்லா மக்களும் குற்றமில்லாமல் வித்தியாச

மாக இருக்கும்படி செய்தும் வித்தியாசமில்லாது (சமமாக) இருக்கின்ற ஓர், கணக்கில் கீர்த்திவெள்ளக்கதிர் ஞானமூர்த்தி யினாய்—அளவுகடந்த புகழ் வெள்ளமாகிய ஒளி பொருந்திய ஞான வடிவினனே, இணக்கி எம்மை எம் தோழிமார் விளை யாடப் போதுமின் என்னப் போந்தோமை—எங்களுடைய தோழிகள் எங்களை விளையாடப் போவோம்வா என்று இணங் கும்படி செய்து விளையாடவந்த எங்களை, உணக்கி நீ வளைத் தால்—வருத்தி நீ வளைத்தால், என் சொல்லார் உகவாதவரே —விரும்பாதவர்கள் என்ன சொல்லமாட்டார்கள் (இல்லாத பழியைச் சுமத்துவார்களே).

ஆயர் சிறுமி தொடர்ந்து ஸ்ரீ கண்ணனிடம் இவ்வாறு கூறுகின்றாள்.

பல்வேறு சீவராசிகளை ஒவ்வொன்றும் மற்றதினின்றும் மாறுபட்டதாய்ப் படைத்திட்டு இருந்தாலும் அவை மாறாத வையாக வேற்றுமையில் ஒற்றுமைகண்ட எல்லையில் புகழ் மிக்க ஞான வடிவினனே! தோழிகள் அழைக்க நாங்கள் இணங்கி விளையாடவந்தோம். விரும்பாத தோழிகளோ மற்ற வர்களோ நம்முடைய உறவு என்ன உறவோ என்று பழி சுமத்தமாட்டார்களா? நம்முடைய பெருமைக்கு இழுக்கு அன்றோ!

ஸ்ரீ கண்ணன் எம் பெருமான் என்று அறிந்தபிறகு அதில் கௌரவமும் மானமும் எங்கே! அவன் எல்லாம் வல்ல வன். விளையாட வைப்பதும் அவன் கூட்டி வைப்பதும் அவனன்றோ! அதை அறியாதவளாய் அவள் கூறுகிறாள், அவள் பேதைப் பருவம் உடையவள்தானே! ஞானம் ஏது?

உலகில் மக்களாகிய நாமும் கௌரவமே பார்க்கிறோம். எம்பெருமானிடம் ஆயர் சிறுமியைப்போல் அல்லாது நாம் நாணும் பெருமையும் தவிர்ந்து உறவுகொள்ள வேண்டும் என்றவாறு.

6—2—9

உகவையால்நெஞ்சமுள்ளுருகி உன்தாமரைத்தடங்கண் விழிகளின்
அகவலைப்படுப்பான் அழித்தாயுன்திருவடியால்
தகவுசெய்திலையெங்கள்சிற்றிலும் யாமடுசிறுசோறுங் கண்டு நின்
முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே. 9

உகவையால்—விருப்பத்தால், நெஞ்சம் உள் உருகி—உள்ளூர உள்ளம் கனிந்து, உன் தாமரைத் தடங்கண் விழிகளின் அகவலைப்படுப்பான்—உன் தாமரை போன்ற பெரிய கண்களால் விழித்து உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பொருட்டு, அழித்தாய் உன் திருவடியால்—உன்னுடைய திருவடிகளால் சிதைத்துவிட்டாய். தகவுசெய்திலை எங்கள் சிற்றிலும் யாம் அடு சிறு சோறும் கண்டு—நாங்கள் நிருமித்த சிறிய வீடும் நாங்கள் சமைத்த சிறிய சோறும் (மணலால் ஆகிய சோறும்) பார்த்து நீ மதிக்கவில்லை, நின்முகஒளி திகழ முறுவல் செய்து நின்றிலையே—உன் முகத்தில் மகிழ்ச்சிக்குறிதோன்ற புன்முறுவல் பூத்து நிற்கவில்லையே.

ஆயர் சிறுமி கூறுகின்ருள். கண்ணு! நீ எங்களிடத்து உள்ள அன்பினுல் உள்ளூர உள்ளம் கனிந்து உன் கண்களின் பார்வையால் எங்களுடைய உள்ளத்தை கொள்ளைகொள்ளலாம் என்று உன் திருவடிகளால் எங்களுடைய மணல் வீட்டையும் மணற் சோற்றையும் சிதைத்துவிட்டாய். நாங்கள் எவ்வளவு பாடுபட்டு எவ்வளவு நன்ருகக் கட்டியிருக்கிருேம் சமையல் செய்திருக்கிருேம் என்று நீ பார்க்கவில்லை மதிக்கவில்லை. நீ பார்த்து முகத்தில் மகிழ்ச்சிதோன்ற நீ ஒரு புன்சிரிப்பு சிரித்திருக்கலாமே. அது நீ செய்யவில்லையே என்கிருள் ஆயச்சிறுமி;

இறைவன் இவ்வுலகங்களை எல்லாம் படைத்தவன். அவன் சிருஷ்டி அதிஅற்புதமானது. அதில் அவன் நமக்கு உயிர் கொடுத்து ஞானம் என்னும் தீபத்தை ஏற்றி வைத்திருக்கிருன், வேண்டிய உணவும் படைத்தான். அவனுடைய அறிவு கொண்டு உயிர்வாழ முயற்சி என்னும் சக்தியும் அளித்துள்ளான்.

ஆனல் மனிதன் நாங்கள் கப்பல்கள் கட்டிவிட்டோம் விமானங்கள் செய்துவிட்டோம் யந்திரங்கள்கொண்டு யாவற்றையும் சாதித்துவிட்டோம். எங்களுக்கு நிகர் யாவரே என்னும்படி ஆய்விட்டான் மனிதன், இதைத்தான் ஆண்டவன் மனிதனை ஆயர் சிறுமியாகவும் அவனுடைய சாதனைகளை சிற்றில்லாகவும் சிறு சோருகவும் காண்கிருன், 300 அடிக்கு குழாய்க் கிணறு தோண்ட தண்ணீர் 400 அடிக்கு கீழ்நோக்கிச் சென்று விடுகிறதே! சிதைக்கப்பட்டுவிடுகிறதோ சிதைந்து விடுகிறதோ! பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது,

ஆழ்வார் பெருமானுர் அறியச் சொல்கிருர் நம்மை. ஆயர் சிறுமியாவது நீ அன்பினுல் சிதைத்தாய் என்று அறிந்

தாள். சிதைவும் நம்முடைய நன்மைக்காகத்தான் என்று அவளை நினைக்கவேண்டுமாம்படி. ஆழ்வார் பெருமாளுர் எண்ணம் போலும்.

6—2—10

நின்றிலங்குமுடியினுய் இருபத்தோர்காலரசுகளைகட்ட
வென்றிநீண்மழுவா வியன்ஞாலமுன்படைத்தாய்
இன்றிவ்வாயர்குலத்தைவீடுய்யத்தோன்றிய கருமாணிக்கச் சுடர்
நின்றன்னுல்நலிவேபடுவோம் என்றுமாய்ச்சியோமே. 10

நின்று இலங்கு முடியினுய்!—உயர்ந்து விளங்கும் கிரீடம் உடையவனே! இருப்பத்தோர்கால் அரசுகளைகட்ட—இருபத்தி ஒரு தலைமுறை வேந்தர்களின் பகைகளைந்த, வென்றி நீண் மழுவா! வெற்றியையுடைய மழுவாயுதத்தை (கோடாலியை) உடையவனே! வியன்ஞாலம் முன் படைத்தாய்—விசாலமான இந்த உலகத்தை முதலில் உண்டாக்கினுய். இன்று இவ்வாயர் குலத்தை வீடு உய்யத் தோன்றிய கருமாணிக்கச்சுடர்—இப்பொழுது இந்த கோவலர்களின் வம்சத்தை விடுதலை பெறுமாறு செய்யத்தோன்றிய கரிய இரத்தினத்தின் ஒளியாக இருக்கின்ருய், நின்தன்னுல் நலிவே படுவோம்—உன்னுல் துன்பமே படுவோமாக, நாங்கள் என்றும் ஆய்ச்சியோம்—நாங்கள் அதற்காக எப்பொழுதும் ஆயர் மகளிராகவே இருப்போம்.

உயர்ந்து விளங்கும் கிரீடம் தரித்த பெருமானே! (ஸ்ரீ ராமச்சந்திர பிரபுவே) இருபத்திஒரு தலைமுறை வேந்தர்களின் பகை களைந்த நீண்ட குந்தாலிப் படையை உடைய பரசுராமனே! முதலில் உலகம் படைத்தாய், அதன்பின் இப்பொழுது இந்த இடையர் குலத்தை வாழவைக்க வந்த கரியமாணிக்கச் சோதியாய் நின்ருய். ஆகையால் நீ என்ன செய்தால் என்ன; உன்னுடைய தொல்லைகளுக்கு ஆட்பட்டே இருப்போமாக. நாங்கள் எப்பொழுதும் இடைக்குலப் பெண்கள்தானே.

நீ இராமனுக அவதாரம் செய்து சக்கரவர்த்தியாக ஆண்டாய். அதற்கு முன் வேண்டாத பகை அரசர்களை எல்லாம் நலியும் பரசுராமனுகச் சக்திகொண்டு திரிந்தாய் அதற்கு முன் உலகத்தைப் படைத்தாய். இன்று நீ எங்கள் குலத்தைக் காக்க வந்தாய். உன்னுடைய அவதாரத் தன்மைகளைப் பார்த்தால் நீ எங்களை துன்பத்திற்கு ஆட்படுத்துவதும் சரியே. நீ எங்களுக்கு விடுதலை அளிக்க வந்துள்ளாய் ஆகையால் நாங்கள் உங்களுக்குக் ஆட்பட்டே நடக்கிரேும் எ—று.

6—2—11

ஆய்ச்சியாகியவன்னையால் அன்றுவெண்ணைவார்த்தையுள
சீற்றமுண்டழு
கூத்தவப்பன்தன்னைக் குருகூர்ச்சடகோபன்
ஏத்தியதமிழ்மாலை ஆயிரத்துள்ளிவையுமோர்பத்திசையொடும்
நாத்தன்னால்நவிலவுரைப்பார்க்கு இல்லைநல்குரவே. 11

ஆய்ச்சியாகிய அன்னையால்—யசோதையால், அன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்ட—உறி வெண்ணெய் களவாடியதனால் கோல்கொண்டு அதட்டிய அதட்டினால் அழு கூத்தவப்பன் தன்னைக் குருகூர்ச்சடகோபன் ஏத்திய தமிழ்மாலை—அழுத ஸ்ரீ கண்ணனைக் குருகூர்ச் சடகோபன் புகழ்ந்துபாடிய தமிழ்ப்பாமாலையாகிய, ஆயிரத்துள் இவையும் ஓர் பத்து—ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்தும், இசையொடும் நாத்தன்னால் நவில உரைப்பார்க்கு—இராகத்துடன் நாவினால் பாடிச் சொல்லுகிறவர்களுக்கு, இல்லை நல்குரவே—வறுமை இருக்காது.

ஸ்ரீ கண்ணனுடைய அனுக்கிரகம் என்றும் இருக்கும் என்றவாறு.

நல்குரவுஞ்செல்வும்

6—3—1

நல்குரவும்செல்வும் நரகும்சுவர்க்கமுமாய்
வெல்பகையும்நட்பும் விடமுமமுதமுமாய்
பல்வகையும்பரந்தபெருமான் என்னையாள்வானை
செல்வம்மல்குகுடித் திருவிண்ணகர்க்கண்டேனே. 1

நல்குரவும் செல்வும்—வறுமையும் செல்வமுடைமையும் நரகும் சுவர்க்கமுமாய்—துன்பமும் இன்பமுமாய், வெல் பகையும்—வெல்லும் பகையும், நட்பும்—சிநேகமும், விடமும் அமுதமுமாய்—விஷமும் அமிர்தமுமாய், பல்வகையும் பரந்த பெருமான்—இவ்வாறு முகண்பட்ட இருமைகளாய் பலபல வகைகளிலே வியாபித்து நிற்கின்ற பெருமானை, என்னை ஆள் வானை—என்னை அடிமை (தொண்டனைக்) கொண்டவனை, செல்வம் மல்கு குடித் திருவிண்ணர்க் கண்டேனே—செல்வம் மிகுந்த குடிகளையுடைய திருவிண்ணகரில் பார்த்தேன். ஏ—அசை.

இன்பமும் துன்பமும் போல மாறுபட்ட இரண்டு இரண்டு தன்மைகளாய் பலவகைகளில் பரவி நிற்கின்ற பெருமானை செல்வம் மிகுந்த குடிமக்களையுடைய ஊராகிய திருவிண்ணகரத்தில் பார்த்தேன் நான் என்கிருர் ஆழ்வார் பெருமானுர்.

ஆகையால் அங்கு அப்பெருமானைக் கண்டு சேவிக்கலாம் என்றவாறு. வறுமையும் துன்பமும் பகையும் விஷமும் உலகத்தில் இருக்கின்றனவே அதனுல் இறைவன் இல்லை என்று நினைக்கவேண்டாம். அவனேதான் உலகம் முழுவதும் இருமைகளாய் இருக்கிருன். இன்பம் இருக்கிறது என்ருல் துன்பமும் கூடவே அமைந்திருக்கிறது. இது சக்கரத்தைப்போல மேலும்கீழுமாக சுழன்றுகொண்டு இருக்கிறது. சக்கரத்தின் மேலிருந்தும் பார்க்கவேண்டாம் கீழ் இருந்தும் பார்க்கவேண்டாம். வெளியே இருந்து சக்கரத்தை முழு வடிவில் பார். உலகம் தெரியும். இப்படிச் சுழற்றுகிறவன் எம்பெருமானே அவன் பலவகைகளில் இப்படி வியாபித்து இருக்கிருன். அப்பெருமான்தான் திருவிண்ணகரத்தில் இருப்பவனும். நான் அவனைக் கண்டேன். நீங்களும் காணலாம் என்கின்ருர்.

6—3—2

கண்டவின்பம்துன்பம் கலக்கங்களும்தேற்றமுமாய்
தண்டமும்தண்மையும் தழலும்நிழலுமாய்
கண்டுகோடற்கரியபெருமான் என்னையாள்வனூர்
தெண்டிரைப்புனல்சூழ் திருவிண்ணகர்நன்னகரே. 2

கண்ட இன்பதுன்பம்—நமக்குத் தெரிந்த மகிழ்ச்சியும் தொல்லையும், கலக்கங்களும் தேற்றமும் ஆய்—உள்ளம் கலங்குதலும் தெளிவு பெறுவதும் ஆய், தண்டமும் தண்மையும்—தண்டனையும் பரிவும், தழலும் நிழலுமாய்—வெய்யிலும் நிழலுமாய், கண்டு கோடற்கரிய பெருமான்—பிரத்தியட்சமாகப் பார்த்துத் தெரிந்துகொள்வதற்கு முடியாத பெருமான் என்னை ஆள்வான் ஊர்—என்னை ஆளுகின்ற தேவப்பெருமானுடைய ஊர், தெண்திரைப் புனல் சூழ் திருவிண்ணகர்—தெள்ளிய அலைகளையுடைய நீரால் சூழப் பெற்ற திருவிண்ணகர், நல்நகரே—சிறந்த நகரம் ஆகும்.

திருவிண்ணகரம் சிறந்த நகரம். அது நீரால் சூழப் பெற்றது. நம்மை நடத்துகிற தேவப்பெருமான் அங்கே இருக்கிறான். அவனேதான் இன்பமும் துன்பமுமாய் கலக்கமும் தெளிவுமாய் தண்டனையாகவும் கருணையாகவும் வெய்யிலும் நிழலுமாய் இருக்கிறவன். அவனை நிஜ ரூபத்தில் பார்ப்பதற்குக் கடினமானவன்.

இவ்வாறு இருமைகளாய் இருப்பவன் எம்பெருமானே என்றவாறு.

6—3—3

நகரமும்நாடுகளும் ஞானமும்மூடமுமாய்
நிகரில்சூழ்சுடராயிருளாய் நிலனாய்விசும்பாய்
சிகரமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
புகர்கொள்கீர்த்தியல்லாலில்லை யாவர்க்கும்புண்ணியமே. 3

நகரமாயும் நாடாயும் அறிவும் அறிவு இல்லாமையுமாயும் ஒப்பில்லாத மிக்க ஒளியாயும் இருளாயும் நிலனாகவும் ஆகாசமாகவும் இருக்கிற பெருமான் குன்றுகள்போல் உயர்ந்த மாடங்களையுடைய வீடுகளால் சூழப்பெற்ற திருவிண்ணகரில் எழுந்தருளி இருக்கிறான். அவனுடைய சிறந்த புகழே புகழல்லால் மற்று எவர்க்கும் அந்த புண்யம் இல்லை.

புகர்—ஒளி, நிகரில்—ஒப்பில்லாத, சிகர—குன்றுபோல்

ஒரு இடம் நகரமாய்த் திகழ்வதும் நாடாய்த் திகழ்வதும் அவன் அருளே. ஒளியும் இருளும் நிலமும் வெளியும் அவன் வடிவமே. அவனுடைய ஒளிமிக்க கீர்த்தியே பெருங் கீர்த்தியாகும் என்றபடி.

6—3—4

புண்ணியம்பாவம் புணர்ச்சிபிரிவென்றிவையாய்
எண்ணமாய்மறப்பாய் உண்மையாயின்மையாயல்லனாய்
திண்ணமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
கண்ணனின்னருளே கண்டுகொள்மின்கள்கைதவமே. 4

புண்ணியமும் பாவமும் இணைந்திருப்பதுவும் பிரிந்து இருப்பதுவும் நினைவுச் சக்தியாயும் மறதியாயும் நித்யப்பொருளாயும் அழியும் பொருளாயும் இந்த இரண்டும் அல்லாதவனாயும் உறுதியான உயர்ந்த மாளிகைகள் உள்ள திருவிண்ணகரில் தேவனைச் சேர்ந்திருப்பது ஸ்ரீகண்ணபிரானின் இனிய அருளாலேதான். பார்த்துக்கொள்ளுங்கள் அவன் மாயங்களே.

இவ்வாறு இரு தன்மைகளாய் இருப்பவன் எம்பெருமானே. அவன் ஸ்ரீகண்ணபிரானைத் திருவிண்ணகரில் காட்சி அளிக்கிறான் கண்டுகொள்ளுங்கள் எ—று.

6—3—5

கைதவம்செம்மை கருமைவெளுமையுமாய்
மெய்பொயியிளமைமுதுமை புதுமைபழமையுமாய்
செய்ததிண்மதிள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
பெய்தகாவுகண்டீர் பெருந்தேவுடைமூவுலகே. 5

கைதவம்—வஞ்சனை, செம்மை—நேர்மை, செய்த திண் மதிள்—கட்டப்பெற்ற உறுதியான மதிள்சுவர்கள், பெருந்தேவுடை மூவுலகு ஏ—ஸ்ரீமன் நாராயணனுடைய மூன்று உலகங்களிலும், பெய்தகாவு கண்டீர்—பரவி இருக்கின்ற தன்மையை (தகுதியுடைமை)க்காணுங்கள் என்றவாறு.

திருவிண்ணகர்ப் பெருமான் வியாபித்திருக்கின்ற தன்மையைப் பாருங்கள்.

அவன் எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணனே எ—று.

6—3—6

மூவுலகங்களுமாயல்லனாய் உகப்பாய்முனிவாய்
பூவில்வாழ்மகளாய்த் தௌவையாய்ப்புகழாய்ப்பழியாய்
தேவர்மேவித்தொழும் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
பாவியேன்மனத்தே உறைக்கின்றபரஞ்சுடரே.

பாவியேன் மனத்தே உறைகின்ற பரஞ்சுடர் ஏ—பாவியாகிய என்னுடைய மனதில் குடியிருக்கிற பரஞ்சோதிப் பெருமான், மூன்று உலகங்களாய் இருக்கிறான். *அல்லனாய்*—அவை அல்லாதவனாயும் இருக்கிறான், *உகப்பாய்*—விருப்பம் ஆய், *முனிவு ஆய்*—கோபம் ஆய், *பூவில் வாழ்மகளாய்*—இலக்குமியாய், *தௌவையாய்*—மூதேவியாய். *புகழாய்ப்பழியாய்*—புகழாகவும் பழியாகவும் (வடிவுகொண்டு), *தேவர் மேவித் தொழும்*—தேவர்கள் விரும்பித் தொழும்படியானவன், *திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்*—திருவிண்ணகரில் உள்ள பெருமான்.

இவையாகவும் இத்தன்மையனாகவும் உள்ளவன் திருவிண்ணகர்ப் பெருமான். அவனை வணங்குக என்றவாறு.

6—3—7

பரஞ்சுடருடம்பாய் அழுக்குப்பதித்தவுடம்பாய்
கரந்தும்தோன்றியும்நின்றும் கைதவங்கள் செய்தும் விண்ணோர்
சிரங்களால்வணங்கும் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
வரங்கொள்பாதமல்லாலில்லை யாவர்க்கும்வன்சரணே. 7

பரஞ்சுடர் உடம்பாய்—உயர்ந்த சோதிவடிவினனாய், *அழுக்குப் பதித்த உடம்பாய்*—அழுக்குபடிந்த உடம்பு உடையவனாயும், *கரந்தும்*—மறைந்தும், *தோன்றியும்*—கண்ணுக்குப் புலப்பட்டும், *நின்றும்*—நேராகக் காட்சிகொடுத்தும், *கைதவங்கள் செய்தும்*—மாயங்கள் புரிந்தும், *விண்ணோர் சிரங்களால் வணங்கும்*—தேவர்கள் தங்கள் தலைகளைத் தாழ்த்தி வணங்கும்படியான, *திருவிண்ணகர் சேர்ந்த பிரான்*—திருவிண்ணகரைச் சேர்ந்த தேவனுடைய, *வரங்கொள் பாதம் அல்லால்*—விருப்பங்களைப் பெறக்கூடிய திருவடிகளை அல்லாமல், *இல்லை*—வேறு இல்லை, *யாவர்க்கும் அவன் சரணே*—எல்லோருக்கும் அவனே தஞ்சம் ஆவன்.

பரஞ்சுடர் உடம்பாய்—அர்ச்சுனனுக்கு விஸ்வரூபத்தில் தேஜோமயமான வடிவம் காட்டினன் ஸ்ரீகிருஷ்ண பகவான்,

அழுக்குப் பதித்த உடம்பாய்—ஸ்ரீ கண்ணன் குழந்தையாய் மாடுமேய்த்து வரும்போது புழுதி படிந்தமேனியனாய் இருந்தான்.

கரந்தும்—தூணில் மறைந்திருந்து நரசிம்மனாய்த் தோன்றினன்.

தோன்றியும்—கஜேந்திரனுக்குத் தோன்றியும், துருவனுக்குத் தோன்றியும்.

நின்றும்—திருவேங்கடத்தில் நின்றும்.

மற்றொரு பொருள்:

ஸ்ரீ கண்ணனாகப் பிறக்கும்போது பரஞ்சுடர் உடம்பான சதுர் புஜனாயும் பசுக்களை மேய்க்கும்போது அழுக்குப் படிந்த மேனியனாயும் மறைவாக யசோதையின் மைந்தனாகவே வளர்ந்தும் பின்னர் கம்சனுக்கு எதிராகத் தோன்றியும் பார்த்தனுக்காகத் தேர் முன் நின்றும் பாரதப் போரில் மாயங்கள் புரிந்தும் தேவர்கள் தங்களுடைய சென்னி தாழ்த்தி வணங்கிய பெருமான் திருவிண்ணகர்ப் பெருமான். அவன் பாதங்களால் வரம் பெறலாகும். யாவருக்கும் அவன் திருவடிகளே உயர்ந்த புகலிடமாகும்.

6—3—8

வன்சரண்சுரர்க்காய் அசுரர்க்குவெங்கூற்றமுமாய்
தன்சரண்ணிழற்கீழ் உலகம்வைத்தும்வையாதும்
தென்சரண்திசைக்குத் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
என்சரணென்கண்ணன் என்னையாளுடையென்னப்பனே. 8

வன் சரண்சுரர்க்காய்—தேவர்களுக்கு உறுதியானபுகல் இடமாய், அசுரர்க்கு வெங்கூற்றமுமாய்—அரக்கர்களுக்கு கொடியவனாயும், தன் சரண் நிழல் கீழ்—தன்னுடைய திருவடிகளின் பாதுகாப்பின்கீழ், உலகம் வைத்தும்—அடியார்கள் உலகை வைத்தும், வையாது—அடியவர் அல்லாதவர்களை வையாதும், தென் சரண்திசைக்கு—தென் திசைக்குக் சரணயனாக, திருவிண்ணகர் சேர்ந்தபிரான்—திருவிண்ணகரில் எழுந்

தருளிய பிரான், என் சரண்—எனக்குப் புகலிடம் அவன், என் கண்ணன், என்னை ஆளுடை என் அப்பனே—என்னை அடிமையாகக் கொண்ட என் தந்தை. ஏ—அசை,

எம்பெருமான் தன்னைப் புகலாக அடைகிறவர்களைத் தன் திருவடிகளின் பாதுகாப்பின்கீழ் வைத்து உலகைக் காப்பாற்றுகிறான். அவ்வாறு அடையாதவர்களை தன்னுடைய பொறுப்பில் கொள்ளாது தென் திசையில் உள்ளவர்களுக்குச் சரண்யனாகத் திருவிண்ணகரில் எழுந்தருளி இருக்கிறான். அவன் என் கண்ணன் எனக்குச் சரண்யனும் அப்பனுமாவன்.

6—3—9

என்னப்பனெனக்காயிகுளாய் என்னைப்பெற்றவளாய்
பொன்னப்பன்மணியப்பன் முத்தப்பனென்னப்பனுமாய்
மின்னப்பொன்மதிள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தவப்பன்
தன்னொப்பாரிலப்பன் தந்தனன்தனதாள்நிழலே. 9

மின்னப் பொன் மதிள் சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்த அப்பன்—சுற்றிலும் விளங்கும் அழகிய மதிள் சுவரையுடைய திருவிண்ணகர்ப் பெருமான், என் அப்பன் எனக்கு ஆய் இகளாய் என்னைப்பெற்றவளாய்—என் தந்தையாவன் எனக்குத் தாயும் தோழியுமாய் என்னைப்பெற்ற அன்னையுமாய், பொன் அப்பன் மணி அப்பன் முத்தப்பன் என் அப்பனுமாய்—பொன்னும் மணியும் முத்தும் போன்று உயர்ந்த என் தந்தையாய், தன் ஒப்பாரில் அப்பன்—தனக்கு சமமானவர் இல்லாத பெருமான், தந்தனன் தனதாள் நிழலே—எனக்குத் தன்னுடைய திருவடிப் பாதுகாப்பு அளித்தான்.

திருவிண்ணகர்ப் பெருமான் எனக்குத் தந்தை மாத்திரம் அல்லன் எனக்கு வளர்ப்புத் தாயும் தோழியும் பெற்றெடுத்த தாயும் ஆய் பொன்போன்றவனும் மாணிக்கம் போன்றவனும் முத்துப்போன்றவனுமான அப்பன் என்பதோ அவன் எனக்கு தனக்கே நிகரில்லாத அப்பனாக தன் திருவடி நிழலில் என்னை உய்யக்கொண்டான் எ—று.

எனக்கு இத்தகையன் என்றால் அவன் உங்களுக்கும் அத்தகையவன்தான். தாயாய்த் தந்தையாய் ஒப்பில்லாத அப்பனைக் கொள்ளுங்கள். அவன் அப்பனாகவே உன்னைத் திருவடிகளில் ஏற்றுக்கொள்வான் என்றபடி.

6—3—10

நிழல்வெய்யில்சிறுமைபெருமை குறுமைநெடுமையுமாய்
சுழல்வனநிற்பன மற்றுமாயவையல்லனுமாய்
மழலைவாய்வண்டுவாழ் திருவிண்ணகர்மன்னுபிரான்
கழல்களன்றி மற்றோர்களைகணிலம்காண்மின்களே. 10

நிழல் வெய்யில் சிறுமை பெருமை—நிழலும் வெய்யிலும் சிறியதாக பெரியதாக அமைவதும், குறுமை நெடுமையும் ஆய்—குட்டையாகக் குறுகியிருப்பதும் உயர்ந்திருப்பதும் எல்லாம் அவனாலேதான், சுழல்வன நிற்பன—திரிகின்ற வர்க்கமும் அசையாது நிற்பனவும் அவனாலேதான், மற்றுமாய்—மற்றவைகளுமாய் அவை அல்லாதவனாயும், மழலைவாய் வண்டுவாழ் திருவிண்ணகர் மன்னுபிரான்—இனிமையாக ரீங்காரம் செய்யும் வண்டுகள் உள்ள திருவிண்ணகரில் நிலைத்துள்ள தேவனுடைய, கழல்கள் அன்றி மற்றோர் களைகண் இலம்—திருவடிகளே பற்று அல்லாமல் வேறோர் துணை இல்லாதவர்கள் நாம். காண்மின்கள்—காணுங்கள். நிழல் வெயில்போல இருமைகளாய்த் திகழ்வது எம்பெருமானாலேதான். வண்டுகளும் கீதம் பாடி அவனுடைய பெருமையைப் பாடும் திருவிண்ணகர்ப் பெருமானின் திருவடிகளே நமக்குப் பற்றாவான். வேறு பற்றில்லாதவர்கள் நாம்.

6—3—11

காண்மின்களுலகீரென்று கண்முகப்பேநிமிர்ந்த
தாளிணையன்தன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
ஆணையாயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும்வல்லார்
கோணையின்றி விண்ணோர்க்கு என்றுமாவர்குரவர்களே. 11

காண்மின்கள் உலகீர் என்று கண்முகப்பே நிமிர்ந்த தாள் இணையன்—உலகத்தவர்களே! காணுங்கள் என்று நம் முன்னால் பிரத்யட்சமாகப் பெருமையுடன் விளங்கும் திருவடிகளை உடையவன், தன்னை—அவனை, குருகூர்ச் சடகோபன் சொன்ன, ஆணை ஆயிரத்து—கட்டளை ஆயிரம் பாசுரங்களில், திருவிண்ணகர்ப் பத்தும் வல்லார்—திருவிண்ணகரைப்பற்றிய பத்தும் வல்லவர்கள், கோணை இன்றி—கடினமின்றி, விண்ணோர்க்கு—தேவர்களுக்கு, என்றும் ஆவர் குரவர்களே—எப்பொழுதும் தாய்தந்தையரைப்போல் பெரியோர்களாவர்.

குரவையாச்சியரோடு

6—4—1

குரவையாச்சியரோடுகோத்ததும் குன்றமொன்றேந்தியதும்
உரவுநீர்ப்பொய்கைநாகம்காய்ந்ததும் உட்படமற்றும்பல
அரவிற்பள்ளிப்பிரான்தன் மாயவினைகளையேயலற்றி
இரவுநன்பகலும்தவிர்கிலம் என்னகுறைநமக்கே 1

குரவை—கைகோத்து ஆடுவதற்கு, ஆய்ச்சியரோடு கோத்ததும்—கோபியருடன் கைகோத்ததும், குன்றம் ஒன்று ஏந்தியதும்—கோவர்தன மலை ஒன்றை எடுத்துப்பிடித்ததும், உரவு நீர்ப்பொய்கை நாகம் காய்ந்ததும்—உலாவுகின்ற நீரையுடைய மடுவில் காளிங்கன் என்னும் சர்ப்பத்தை அடக்கியதும், உட்பட மற்றும் பல—ஆகியவையுடன் வேறு பல, அரவிற்பள்ளிப்பிரான்தன் மாய வினைகளையே அலற்றி—ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டுள்ள எம்பெருமானின் மாயச் செயல்களையே சொல்லிப்பிதற்றி, இரவு நன்பகலும்—இரவிலும் பகல் முழுவதும், தவிர்கிலம்—ஈடுபட்டிருந்தோம், என்ன குறை நமக்கே—அதனால் நமக்கு ஏதாவது குறையோ?

இரவிலும் பகல் முழுவதும் நான் பாற்கடலில் அரவணையிற் பள்ளிகொண்ட ஸ்ரீமன் நாராயணன் ஸ்ரீ கண்ணனாய் அவதாரங்கொண்டு பிருந்தாவனத்தில் கோபிகைமாருடன் கைகோத்து குரவைக் கூத்தாடியதைப்பற்றியும் அவன் கோவர்தன மலையை எடுத்து ஒரு கையில் தாங்கிப்பிடித்து இந்திரன் பெய்யும்படி செய்த கன மழையைத் தடுத்து பசுக் கூட்டங்களைக் காத்ததைப்பற்றியும், யமுனைக்கரையில் ஓர் மடுவில் காளிங்கன் என்னும் பாம்பு விஷம் கக்கி தண்ணீரைக் கெடுத்து கோவலர்களும் மாடுகளும் அங்கு வாரதபடி செய்ததினால் ஸ்ரீ கண்ணன் கடம்ப மரம்மீது ஏறி அந்தப்பொய்கையில் காளிங்கன்மீது குதித்து சீறி எழுந்த தலைகள்மீது தன் பாதங்களை வைத்து நர்த்தனம் செய்வதுபோல் அவற்றை அடக்கியதும் நினைத்து அவற்றைப்பற்றிப் பாடுவதுமாக இருந்தேன். இப்படியாக நாள் முழுவதும் எம்பெருமானைப் பற்றி பக்தி செய்ததினால் நமக்கு எந்தக் கவலையும் ஏற்படவில்லை. அதனால் எனக்கு இலாபமடைந்ததாகவே தோன்றுகிறது எ—று.

கேயத்தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததும்கெண்டை
யொண்கண்
வாசப்பூங்குழல்பின்னைதோள்கள்மணந்ததும் மற்றும்பல
மாயக்கோப்பிரான்தன் செய்கைநினைத்துமனங்குழைந்து
நேயத்தோடுகழித்தபோது எனக்கெவ்வுலகம்நிகரே. 2

கேயத்தீங்குழல் ஊதிற்றும்—இனிய இசையுடைய குழல் ஊதியதும், நிரை மேய்த்ததும்—பசுக்களை மேய்த்ததும், கெண்டை ஒண் கண் வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும்—கெண்டை மீன் போன்று ஒள்ளிய கண்களை உடையவளும் வாசனை பொருந்திய அழகிய கூந்தலை உடையவளுமான நப்பின்னையை தோள்வலிமையால் மணம் புரிந்து கொண்டதுவும், மற்றும் பல—வேறு பலவற்றையும், மாயக் கோலப்பிரான் தன் செய்கை நினைந்து மனங்குழைந்து—மாய வேஷத்தை உடைய ஸ்ரீ கண்ணனின் செயல்களை நினைத்து மனம் உருகி, நேயத்தோடு கழிந்தபோது—பிரேமையுடன் கழித்த போது, எனக்கு எவ்வுலகம் நிகரே—எனக்கு எந்த உலகமும் அதற்கு ஈடாகத் தோன்றவில்லை.

மாயவனான ஸ்ரீ கண்ணனின் செயல்களை அன்போடு எண்ணிப் பார்த்தேன். அவனுடைய இனிமையான புல்லாங் குழலை எடுத்து தன் அழகிய உதடுகளில் வைத்து தன் மெல்லிய விரல்களால் தடவி ஊதும் காட்சி என் முன்னே நின்று என்னை உள்ளம் உருக்கியது. பசுக்களை மேய்த்து ஒவ்வொரு சமயம் கன்றுகளைத் தடவிக்கொடுப்பதும் அவற் றின் காதுகளோடு சேர்த்து கழுத்தை அணைத்துக்கொள்வதும் என் உள்ளத்தைப் பாகாய்க் கரைத்தது அவன் மணந்த நம்பின்னையை நினைத்தாலே மீன்போன்று துவளுகின்ற அவளு டைய கண்கள் என் முன்னே தோன்றுகின்றன. அவளுடைய நீண்ட அழகிய கூந்தல் கமகமவென்று இயற்கை மணம் கொண்டு என் உள்ளத்தைத் துளைக்கிறது. அவன் ஏழு எருதுகளை அடக்கினான் என்பர் அவற்றை உண்மையில் அடக்கினானா அவையே பணிந்து வந்திருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. இவ்வாறெல்லாம் அவனுடைய செய்கைகளை நினைக்கும்போது என் பிரேமை பொங்கி எனக்கு இனிமையாக இருந்தது. அதற்கு ஈடு எந்த உலகத்தைச் சொல்வேன் நான் என்கிறார் அனுபவித்த ஆழ்வார் பெருமானார்.

**நிகரில்மல்லரைச்செற்றதும்நிரைமேய்த்ததும்நீள்நெடுங்கை
சிகரமாகளிறட்டதும் இவைபோல்வனவும்பிறவும்
புகர்கொள்சோதிப்பிரான்தன் செய்கைநினைந்துபுலம்பிஎன்றும்
நுகரவைகல்வைகபபெற்றேன் எனக்கென்னினிநோவதுவே. 3**

நிகரில் மல்லரைச் செற்றதும்—மல்யுத்தத்தில் ஒப்பில்லாத மல்லர்களாகிய சாணூர முஷ்டிகர்களை ஒழித்தும், *நிரை மேய்த்ததும்*—பசுக்களை மேய்த்ததும், *நீள்நெடுங்கை*—நீண்ட பெரிய துதிக்கையையுடைய, *சிகர மா களிறு அட்டதும்*—குன்றுபோன்ற பெரிய யானையைக் கொன்றதும், *இவைபோல்வனவும் பிறவும்*—இவற்றை ஒத்தனவும் வேறுபலவும், *புகர் கொள் சோதிப்பிரான் தன்*—ஒளி மூர்த்தியான ஸ்ரீகண்ணனின், *செய்கை நினைந்து புலம்பி*—செயல்களை நினைத்து வருந்தி, *என்றும் நுகர வைகல் வைக்கப்பெற்றேன்*—நாள் தவறாமல் எப்பொழுதும் இன்புறுமாறு நான் அமையப்பெற்றுள்ளேன், *எனக்கு என் இனி நோவது ஏ*—நான் இனி நொந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது.

ஸ்ரீ கண்ணனைக் கொல்வதற்காக கம்சனால் நியமிக்கப் பெற்றிருந்த சாணூர முஷ்டிகர்கள் மகா மல்லர்கள் வெல்லவே முடியாதவர்கள். அவர்களை ஒப்பிடும்பொழுது ஸ்ரீ கண்ணன் சுமார் 12 வயதுச் சிறுவன் அவர்களோடு சண்டையிடும்போது தேவர்களும் காப்பாற்ற வேண்டுமென்று அஞ்சித் தொழுதார்கள். யாருக்கும் இதை நினைக்கும்போது மனம் நோகாமல் இருக்காது. மாடுகளை மேய்க்கும்போது ஒருசமயம் மாடுகளே காணாமல் போய்விட்டன. மாடுடையார்க்கு ஸ்ரீ கண்ணன் என்ன பதில் சொல்வான். யாருக்குமே கண்கள் கலங்கும். மலைபோல் மிகப் பெரியதான குவலயாபீட யானையைக் கண்ணனைக் கொல்லுமாறு வைத்திருந்தான். அதன் நீண்ட மிகப் பெரிய துதிக்கை எங்கே! ஸ்ரீ கண்ணன் எங்கே! இதைப் பார்க்கின்றவர்கள் அழுதே விடுவார்கள். கண்ணன் இவற்றோடு எல்லாம் போராடவேண்டிய நிலை வந்ததே என்ற வருத்தம் ஒருபுறம் அவற்றில் ஆபத்துவருமோ என்ற பயம் இவ்வாறெல்லாம் நினைத்து அழுதவண்ணம் பொழுதுபோக எனக்கு ஏற்பட்டது. இவற்றைவிட வருந்தவேண்டிய விஷயங்கள் எனக்கு என்ன இருக்கின்றன என்கின்றார் ஆழ்வார் பெருமானார். இவை நம்மையும் நெஞ்சம் நெகிழும்படி செய்கின்றன.

6—4—4

நோவவாய்ச்சியுரலோடார்க்க இரங்கிற்றும்வஞ்சப்பெண்ணை
சாவப்பாலுண்டதும் ஊர்சகடமிறச்சாடியதும்
தேவக்கோலப்பிரான் தன்செய்கைநினைந்துமனங்குழைந்து
மேவக்காலங்கள்கூடினேன் எனக்கென்னினிவேண்டுவதே 4

நோவ ஆய்ச்சி உரலோடு ஆர்க்க இரங்கிற்றும்—இடைச்சியாகிய யசோதை ஸ்ரீ கண்ணனை நோகும்படியாக உரலுடன் கயிற்றால் கட்ட ஸ்ரீ கண்ணன் அழுகைகொண்டதும், வஞ்சப் பெண்ணை—பூதகியை, சாவப் பாலுண்டதும்—சாகும்படி பால் உண்டதும், ஊர் சகடம் இறச் சாடியதும்—உருண்டு வந்த வண்டிச் சக்கரம் முறியும்படியாகக் (காலால்) உதைத்ததும், தேவக்கோலப்பிரான் தன்—தெய்வ வடிவினனான ஸ்ரீ கண்ணனின், செய்கை நினைந்து மனம் குழைந்து—லீலைகளை நினைத்து மனம் உருகப் பொருந்துமாறு கூடின எனக்குப் பொழுதுகள். எனக்கு இனி வேண்டுவது என்ன இருக்கிறது.

இவ்வாறு குழந்தைப் பருவ லீலைகளை நினைக்கவும் மனம் உருகி அவற்றில் மூழ்கிவிடுகிறேன். இவ்வாறு எம்பெருமான் நினைவாகவே நான் இருக்கிறேன். எனக்கு இனி வேண்டியது என்ன இருக்கிறது என்கிறார் ஆழ்வார் பெருமானார்.

6—4—5

வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும் வீங்கிருள்வாய்
பூண்டன்றன்னைபுலம்பப்போய் அங்கோராய்க்குலம்புக்கதும்
காண்டலின்றிவளர்ந்து கஞ்சனைத்துஞ்சவஞ்சம்செய்ததும்
ஈண்டுநானலற்றப்பெற்றேன் எனக்கென்னவிகலுளதே. 5

வேண்டித்தேவர் இரக்க வந்து பிறந்ததும்—அசுரர்களின் கொடுங்கோன்மைக்கு அஞ்சி தேவர்கள் திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட ஸ்ரீமன் நாராயணனை அணுகி அசுரர்களை ஒடுக்குமாறு தொழ எம்பெருமான் நான் பிறக்கிறேன் என்று கிருஷ்ண அவதாரம் எடுத்ததும், வீங்கு இருள்வாய்—நள்ளிரவில், பூண்ட அன்று அன்னையும் புலம்பப்போய்—விலங்கு இடப்பெற்றிருந்த (பிறந்த அன்று) தாய் தேவகியும் அழும்படியாக வசுதேவனால் எடுத்துக்கொண்டுபோகப்பெற்று அங்கோர் ஆய்க்குலம் புக்கதும்—ஆயர்பாடியில் இடையர் குலமாகிய நந்தகோபன் இல்லம் புகுந்ததும், காண்டல் இன்றி வளர்ந்து—எவருக்கும் இன்னான் என்று அறியாதவாறு

வளர்ந்து, கஞ்சனைத் துஞ்ச வஞ்சம் செய்ததும்—கம்சன் ஒழியுமாறு மாயம் செய்ததும், ஈண்டு நான் அலற்றப்பெற்றேன்—இங்கே நான் பிதற்றும் நிலை பெற்றேன், எனக்கு என்ன இகல் உளதே—எனக்குப் பகை என்பது ஏது, எந்த விதமான பகையும் கிடையாது என்றபடி.

6—4—6

இகல்கொள்புள்ளைப்பிளந்ததும் இமிலேறுகள்செற்றதுவும்
உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததும் உட்படமற்றும்பல
அகலகொள்வையமளந்தமாயன் என்னப்பன்தன்மாயங்களே
பகலிராப்பரவப்பெற்றேன் எனக்கென்னமனப்பரிப்பே. 6

இகல் கொள் புள்ளை பிளந்ததும்—வஞ்சகம்கொண்டு வந்த அசுரக் கொக்கின் வாய் பிளந்து கொன்றதும், இமில் ஏறுகள் செற்றதும்—பிடரியுள்ள காளை மாடுகள் ஏழை அடக்கியதும், உயர்கொள் சோலை குருந்து ஒசித்ததும்—உயர்ந்த சோலையில் குருந்த மரமாக நின்ற அசுரனை மரத்தை முறித்து அவனைக் கொன்றதும், உட்பட மற்றும் பல—இவையும் இன்னும் பலவற்றை, அகல் கொள்வையம் அளந்த மாயன்—விசாலமான உலகத்தை இரு அடிகளால் அளந்த மாயவன், என் அப்பன் மாயங்களே—என் அப்பன் ஸ்ரீ கண்ணனின் மாயச் செயல்களையே, பகல் இராப் பரவப்பெற்றென்—நாள் முழுவதும் புகழ்ந்து ஏத்தியவாறு இருந்தேன், எனக்கு என்ன மனப்பரிப்பே—எனக்கு என்ன மனக்கவலை.

கொக்கு வடிவத்தில் தன்னைக் கொல்லவந்த பகன் என்னும் அசுரனை வாய்பிளந்து கொன்றதுவும், நப்பின்னையை மணப்பதற்காக பெருமிதம்கொண்ட ஏழு எருதுகளை அடக்கியதும், மரத்தின்மீது ஏறியபிறகு முறிந்து விழுந்து ஸ்ரீ கண்ணனைக் கொன்றுவிடலாம் என்று குருந்த மரமாக நின்ற அசுரனை முறித்துக்கொன்றதும் இவை போன்ற இன்னும்பல ஸ்ரீ கண்ணனுடைய மாயங்களையே இரவும் பகலும் பேசவும் ஏத்தவும் செய்தேன், எனக்கு என்ன மனக்கவலை இருக்கக்கூடும்.

ஸ்ரீ கண்ணனுடைய இப்படிப்பட்ட மாயச் செயல்களைச் சொல்லிப் பரவி இடைவிடாது நினைக்கின்றவர்களுக்கு மனக்கவலை இராது என்றபடி.

மனப்பரிப்போடு அழுக்குமானிடசாதியில்தான்பிறந்து
தனக்குவேண்டுருக்கொண்டு தான்தனசீற்றத்தினைமுடிக்கும்
புனத்துழாய்முடிமாலைமார்பன் என்னப்பன்தன்மாயங்களே
நினைக்கும்நெஞ்சுடையேன் எனக்கினியார்நிகர்நீணிலத்தே. 7

மனப்பரிப்போடு—மனவருத்தத்தோடு, அழுக்கு மானிட சாதியில்தான் பிறந்து—அழுக்கு உடம்பையுடைய மனித இனத்தில் மனிதனாகப் பிறந்து, தனக்கு வேண்டு உருக்கொண்டு—தனக்கு விருப்பமான வடிவங்கொண்டு, தான் தன சீற்றத்தினை முடிக்கும்—ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன்னுடைய கோபாவேசத்தை, முடிக்கும்—தீர்த்துக்கொள்ளும் படியான, புனத்துழாய் முடிமாலை மார்பன்—அழகிய திருத்துழாய் கொண்டு அலங்கரிக்கப் பெற்ற குஞ்சியும் மார்பில் வனமாலை அணிய பெற்றவனுமான, என் அப்பன் தன் மாயங்களே—என் தந்தையாகிய பெருமானின் மாயங்களையே, நினைக்கும் நெஞ்சுடையேன்—எண்ணும் உள்ளம் உடையவன் நான், எனக்கு இனி யார் நிகர் நீள் நிலத்தே—இந்த பெரிய உலகத்தில் எனக்கு இனிச் சமமானவர் யார் உளர். (நிச்சயமாக ஒருவரும் இல்லை).

மனம் அறுபட்ட உணர்வுடன் அழுக்குக்கே இடமான இந்த மனிதஇனத்தில் சதுர்புஜனாகவே பிறந்து பின்தனக்கு வேண்டிய உருவத்தைக் கொண்டு, அதர்மத்தை ஒடுக்கி தர்மத்தை நிலைநாட்டும் கோபம் மிகுந்த குறிக்கோளை முடிக்கின்றவன், தன் தலையில் இனிய துழாயால் அலங்கரிக்கப்பெற்ற குஞ்சியும் மார்பில் வனமாலையும் உடைய தந்தையாகிய என் பெருமானின் மாயங்களையே நினைக்கும் உள்ளம் உடையவன் நான். எனக்கு இனியார் சமமானவர்கள் இருக்கிறார்கள் இந்த பரந்த உலகத்தில், எவருமே இல்லை எ—று.

இவ்வாறு எம்பெருமானின் மாயங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இந்த உலகத்தில் எதுவுமே பெரியதாகத் தோன்றாது. இது உண்மையிலும் உண்மையே.

ஆழ்வார்கள் என்ன, உயர்ந்த ஆச்சாரியர்கள் என்ன, முனிவர்கள் என்ன, ரிஷிகள் என்ன, அநேக பாகவதர்கள் என்ன, எம்பெருமானிடமே பற்றுக்கொண்டு இவ்வுலகம் மறந்தவர்களே ஆவர்.

6—4—8

நீணிலத்தொடுவான்வியப்ப நிறைபெரும்போர்கள்செய்து
வாணனாயிரந்தோள்துணித்ததும் உட்படமற்றும்பல
மாணியாய் நிலங்கொண்டமாயன் என்னப்பன்தன்மாயங்களே
காணும்நெஞ்சுடையேன் எனக்கினியென்னகலக்கமுண்டே 8

நீள் நிலத்தொடு வான்வியப்ப நிறைபெரும் போர்கள் செய்து—இப்பரந்த மண்ணுலகும் விண்ணுலகும் அதிசயிக்கும் படியாக போதுமான அளவு பெரிய யுத்தங்களை நடத்தி, வாணன் ஆயிரம் தோள் துணித்ததும்—வாணாசுரனின் ஆயிரம் கைகளை வெட்டியதும், உட்பட—சேர்த்து, மற்றும் பல—இன்னும் அநேகம், மாணியாய் நிலங்கொண்ட மாயன் என்னப்பன் மாயங்களே—பிரம்மச்சாரியாய் (வாமனனாய்) பூமியை அளந்துகொண்ட மாயனாகிய ஸ்ரீ கண்ணனும் என் அப்பனுமாகிய பெருமானின் மாயங்களையே, காணும் நெஞ்சுடையேன்—பார்க்கும் நெஞ்சுடையவன் நான், இனி எனக்கு என்ன கலக்கமுண்டே—இவ்வளவும் பார்த்த எனக்கு இனி கலக்கம் என்பது இல்லை.

காணும் நெஞ்சுடையேன்—பார்க்கும் அகக்கண்ணுடையேன்.

ஸ்ரீகண்ணபிரான் நடத்திய மா பாரதப் போர்களை எல்லாம் கண்டேன். ஒன்றிரண்டு தோள் அல்ல ஆயிரம் தோளுடைய வாணாசுரனின் தோள்கள் அவ்வளவையும் வெட்டி வீழ்த்தியதையும் இன்னும் அதிசயமான பலவற்றைக் கண்டேன். பிரம்மச்சாரியாக குறுகிய வடிவங்கொண்டு இந்த பூமி முழுவதுமே அளந்துகொண்ட மாயவன் ஆன என் அப்பன் ஸ்ரீ கிருஷ்ணனையே நினைக்கும் நெஞ்சம் உடையவனானேன். இவ்வளவும் எம்பெருமானுடையவை கண்ட எனக்கு இனி என்ன கலக்கமுண்டு? எந்தக் கலக்கமும் இல்லை என்றபடி.

நான் அவனோடு சேர்ந்தே இருந்ததால் எந்தக் கலக்கமும் இல்லை எ—று.

6—4—9

கலக்கவேழ்கடலேழ்மலை உலகேழும்கழியக்கடாய்
உலகத்தேர்கொடுசென்றமாயமும் உட்படமற்றும்பல
வலக்கையாழியிடக்கைச்சங்கம் இவையுடைமால்வண்ணனை
மலக்குநாவுடையேற்கு மாறுளதோவிம்மண்ணின்மிசையே. 9

கலக்க—மனம் கலங்கும்படியாக, ஏழ்கடல் ஏழ்மலை உலகு ஏழும் கழியக்கடாய்—கடல்கள் ஏழையும் மலைகள் ஏழையும் உலகங்கள் ஏழையும் கடந்து செல்லும்படி ஓட்டி, உலக்கத்தேர் கொடு சென்ற மாயமும்—ஒழிந்துபோய்விடும் போல இரதத்தைச் செலுத்திச்சென்ற அற்புதச் செயலும். உட்பட மற்றும் பல—இவற்றுடன் இன்னும் பல மாயச் செயல்களும், வலக்கை ஆழி இடக்கைச் சங்கம் இவையுடை மால் வண்ணனை—வலக்கையில் சக்கரத்தையும் இடக்கையில் சங்கும் கொண்ட பெருமைமிக்க தன்மைகளையுடையவனை, மலக்கு நாவுடையேற்கு கலக்கும் நாவுடைய எனக்கு மாறுள தோ இம்மண்ணின் மிசை—எனக்குப் பகை ஏது இந்நில வுலகில்,

ஒரு பிராமணனுடைய குழந்தைகளை உயிரோடு கொண்டு வருவதற்காக அர்ச்சுனனையும் பிராமணனையும் இரதத்தில் ஏற்றிக்கொண்டு ஏழுலகும் தாண்டிச் சென்றதும் தேரோடு ஒழிந்துபோகத்தானோ என்னும்படி மாயாவேகத்தில் சென்றதும் இன்னும் பல மாயங்களையுடைய சங்குசக்கரம் ஏந்திய பெருமையுடையானைப் பலபடியாகப் பாடிக்கலக்கும் எனக்கு இந்த பூமியில் பகையோ பூசலோ இருக்குமா? இருக் காது என்றபடி.

இவ்வாறு அப்பெருமானின் அற்புதச் செயல்களைப் பற்றிப் பாடுவார்க்கும் பரவுவார்க்கும் இம்மண்ணுலகில் பகை உளதாமோ எ—று.

6—4—10

மண்மிசைப்பெரும்பாரம்நீங்க ஓர்பாரதமாபெரும்போர்
பண்ணி மாயங்கள்செய்து சேனையைப்பாழ்படநூற்றிட்டுப்போய்
விண்மிசைத்தனதாமமேபுக மேவியசோதிதன்தாள்
நண்ணிநான்வணங்கப்பெற்றேன் எனக்கார்பிறர்நாயகரே. 10

மண்மிசைப் பெரும் பாரம் நீங்க—இப்பூமியில் அதர்மமாகிய பெரிய பாரம் ஒழியும்படியாக, ஓர் பாரத மாபெரும் போர் பண்ணி—கௌரவர்களுக்கும் பாண்டவர் களுக்குமான ஒரு மிகப்பெரிய பாரதப் போரை நிகழும்படி செய்து, மாயங்கள்செய்து சேனையைப் பாழ்பட நூற்றிட்டுப் போய்—அதி ஆச்சரியமான செயல்களைச்செய்து கௌரவப் படை முழுவதும் அழிந்துபோகுமாறு சுக்குசுக்காகத் துக ளாக்கி விட்டுப்போய், விண்மிசை—விண்ணுலகில், தனதாமமே

புக—தன்னுடைய இடமாகிய வைகுந்த லோகமே செல்ல, மேவிய சோதிதன்தாள் நண்ணி—பொருந்திய பரஞ்சோதியின் திருவடிகளை அடைந்து, நான் வணங்கப் பெற்றேன்—நான் வணங்கும் பேறு பெற்றேன், எனக்கு யார் பிறர் நாயகரே—எனக்கு இனி அவரைத் தவிர வேறு யார் தலைவராவர், அவரே எனக்கு ஒப்பற்ற தனித் தலைவர் ஆவர்.

பூவுலகில் அதர்மத்தை நீக்குவதற்காக ஓர் பெரிய பாரதப் போரே நிகழும்படிசெய்து அப்போரில் அறத்தின் வழி நின்ற பாண்டவர்களுக்காக அநேக லீலைகள் புரிந்து கௌரவ சேனை முழுவதும் அழிந்துபோகுமாறு பொடிபொடியாக்கி வைகுந்த லோகமாகிய தன் இருப்பிடமே செல்ல அவ்வாறு சென்ற பரஞ்சுடரான எம்பெருமானின் திருவடிகளை அடைந்து நான் வணங்கும் பேறு பெற்றேன். எனக்கு இனி அவரைவிட வேறு தலைவர் யார் இருக்கமுடியும். அவரே நமக்கு ஒப்பற்ற தலைவர் ஆவர்.

வைகுந்த லோகத்தில் உள்ள சர்வேஸ்வரனான ஸ்ரீமன் நாராயணனே இவ்வுலகத்தில் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலை நாட்டுகிறவன். அவனே ஒப்பற்ற தலைவன் எ—று.

6—4—11

நாயகன்முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகும் தன்
வாயகம்புகவைத்துமிழ்ந்தவையாய் அவையல்லனுமாம்
கேசவனடியிணைமிசைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
தூயவாயிரத்திப்பத்தால் பத்தராவர் துவளின்றியே. 11

நாயகன் முழு ஏழுலகுக்குமாய்—ஏழுலகங்களுக்கும் முழுவதுமாக தலைவனாய், முழு ஏழுலகும் தன் வாய் அகம் புக வைத்து உமிழ்ந்து—அந்த ஏழுலகங்களும் முழுவதுமாக விழுங்கி உள்அடக்கிவைத்து வெளிப்படுத்தி, அவையாய் அவை அல்லனுமாய்—அந்த உலகங்களேயாக வடிவுகொண்டு அமைந்து அவைகள் அல்லாது அவற்றிற்கு அப்பாற்பட்டு தனித்தும் உள்ளவனும், கேசவனாகிய அப்பெருமானின் அடிகளின்மேல் குருகூர்ச் சடகோபன் சொன்ன, தூய ஆயிரத்து இப்பத்தால்—புனிதமான ஆயிரம் பாசுரங்களில் இந்தப்பத்தால், பத்தர் ஆவர் துவள் இன்றியே—குற்றம் இல்லாத பக்தர்கள் ஆவர்.

துவளில்மாமணிமாடம்

6—5—1

துவளில்மாமணிமாடமோங்கு தொலைவில்லிமங்கலம்தொழு
மிவளை நீரினியன்னைமீர் உமக்காசையில்லைவிடுமினோ
தவளவொண்சங்குசக்கரமென்றும் தாமரைத்தடங்கணென்றும்
குவளையொண்மலர்க்கண்கள்நீர்மல்க நின்றுநின்றுகு(மி)முறுமே

துவளில் மா மணிமாடம் ஓங்கு தொலைவில்லி மங்கலம் —குற்றமில்லாத பெரிய மணிகளால் அலங்கரிக்கப்பெற்ற மாடம் உயர்ந்து விளங்குகின்ற தொலைவில்லி மங்கலம், தொழும் இவளை—தொழுகின்ற இப்பெண்ணை, அன்னைமீர் நீர்—தாய்மார்களாகிய நீங்கள், உமக்கு ஆசை இல்லை விடுமினோ—விட்டுவிடுங்கள் உங்களிடத்தில் பற்று இல்லை, தவள ஒண் சங்கு சக்கரம் என்றும் தாமரைத்தடங்கண் என்றும்—ஒள்ளிய வெள்ளைச் சங்கு என்றும் சக்கரம் என்றும் விசாலமான தாமரைக் கண்கள் என்றும், குவளை ஒண் மலர்க் கண்கள்—குவளை மலர் போன்று ஒளிபொருந்திய கண்களில், நீர்மல்க—நீர் பெருக, நின்றுநின்று—இருந்துஇருந்து, குமுறும் —கொதிப்புக்கொள்வாள், ஏ—அசை.

குற்றமற்ற பெரிய மணிகள் பதிக்கப்பெற்ற கோவில் மாடம் உயர்ந்து விளங்கும் தொலைவில்லிமங்கலம் நோக்கித் தொழுகின்ற இப்பெண்ணை வருத்தவேண்டாம் இவளை விட்டு விடுங்கள் தாய்மார்களே! உங்களிடத்தில் இவளுக்கு ஆசை (பற்று) இல்லை. இவள் வெள்ளைவெளேரென்ற சங்கு என்பாள் சக்கரம் என்பாள் தாமரைத்தடங்கண் என்பாள். இவளுடைய குவளைமலர் போன்ற கண்களில் கண்ணீர் பெருக இருந்து இருந்து தேம்புவாள் பின் கொதிப்புக்கொள்வாள். என்று தோழி ஒருத்தி தாயைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

அதாவது இவள் தொலைவில்லிமங்கலம் கோபுரத்தைப் பார்க்கிறாள் சங்குசக்கரம் என்கிறாள் தாமரைக்கண் என்கிறாள். அதைப்பார்த்தே கண்ணீர் விடுகிறாள். இவளுக்கு அந்தப் பெருமான் மீதுள்ளது மனமெல்லாம். இவளுக்கு உங்களிடத்தில் பற்று இல்லை. ஆகையால் இவளை ஒன்றும் வருந்தவேண்டாம் விட்டுவிடுங்கள் என்கிறாள்.

6—5—2

குமிறுமோசைவிழவொலித் தொலைவில்லிமங்கலம்கொண்டுபுக்கு
அமுதமென்மொழியாளை நீருமக்காசையின்றியகற்றினீர்
திமிர்கொண்டாலொத்துநிற்கும்மற்றிவள்தேவதேவபிரானென்றே
நிமியும்வாயொடுகண்கள்நீர்மல்க நெக்கொசிந்துகரையுமே. 2

குமிறும் ஓசை விழஒலித்தொலைவில்லிமங்கலம் புகுந்து—கிளர்ந்து எழும் ஆரவாரமும் விழா எடுக்கும் பேர் இரைச்சலும் மிக்க தொலைவில்லிமங்கலம் புகுந்து, அமுதமென் மொழியாளை நீர் உமக்கு ஆசை இன்றி அகற்றினீர்—அமிர்தம் போன்று இனிமையாகப் பேசுகின்ற இவளிடத்தில் உங்களுக்கு ஆசையில்லாமல் செய்துவிட்டீர்கள், திமிர் கொண்டால் ஒத்து நிற்கும் மற்று இவள்—திமிர் பிடித்தவள்போல் பிடிவாதமாக இருக்கும் இவள், தேவ தேவ பிரான் என்றே—தேவர்களுக்கெல்லாம் தேவன் என்றே, நிமியும் வாயொடு—முனகும் வாயொடு, கண்கள் நீர் மல்க—கண்களில் நீர் நிரம்ப, நெக்கு—வருந்தி, ஒசிந்து கரையுமே—விம்மி அழுவாள். மற்று—அசை.

கோவில் விழா எடுக்கிறார்கள் என்று தொலைவில்லிமங்கலப்பெருமான் விழாவிற்காக அழைத்துச் செல்லலாம் என்று இவளை அழைத்து வந்தீர்கள். உங்களிடத்தில் இவளுக்குப் பற்றே இல்லாமல் செய்து விட்டீர்கள். இப்பொழுது இவள் பிடிவாதமாக பெருமானே! பெருமானே! தேவர்களுக்கெல்லாம் பெருமானே! என்று முனங்குகிறாள். அத்துடன் கண்களில் நீர் பெருக வருந்துகிறாள். பிறகு தேம்பி அழுகிறாள் என்று அறிவறிந்த மூத்தவள் ஒருவள் தாயிடம் கூறுகின்றாள்.

கோவில் விழா ஒலியும் மக்கள் ஆரவாரமும் அவளுடைய மனநிலையை அதிகப்படுத்த அப்பெருமானிடமே மனம் பறிகொடுத்துவிட்டாள்.

6—5—3

கரைகொள்பைம்பொழில்தண்பணைத் தொலைவில்லிமங்கலம்
கொண்டுபுக்கு
உரைகொளின்மொழியாளை நீருமக்காசையின்றியகற்றினீர்
திரைகொள்பௌவத்துச்சேர்ந்ததும் திசைஞாலம்தாவியளந்ததும்
நிரைகள்மேய்த்ததுமேபிதற்றி நெடுங்கண்ணீர்மல்கநிற்குமே. 3

குரைகொள் பைம்பொழில் தண்பணைத் தொலைவில்லிமங்கலம் கொண்டு புக்கு—பசுமையான சோலைகளும் குளிர்ந்த வயல்களும் உடைய பொருநைக் கரையில் உள்ள தொலைவில்லிமங்கலம் அழைத்துக்கொண்டுபோய், உரைகொள் இன்மொழியாளை—வினவிக்கேட்கும் இனிய மொழியுடையவளை, நீர் உமக்கு ஆசை இன்றி அகற்றினீர்—நீங்கள் உங்களிடத்தில் பற்று இல்லாமல் (மனம் மாறும்படி) செய்துவிட்டீர்கள், திரைகொள் பௌவத்துச் சேர்ந்ததும்—பள்ளிக்கொள்ளத் திருப்பாற்கடல் அடைந்ததும், திசை ஞாலம் தாவி அளந்ததும் —திக்கெட்டும் அடங்க உலகம் ஓங்கி அளந்ததும், நிரைகள் மேய்த்ததுமே பிதற்றி—ஸ்ரீகண்ணனாக பசுக்களை மேய்த்ததுமே சொல்லிச்சொல்லி, நெடுங் கண்ணீர் மல்க நிற்குமே—நெடுநேரம் கண்களில் நீர்பெருக நிற்பாள்.

சந்தோஷமாகப் பேசுகின்ற இவளைத் தொலைவில்லிமங்கலம் அழைத்துப்போய் உங்களிடத்தில் பற்று இல்லாமல் மனம் மாற்றிவிட்டீர்கள். இவள் எம்பெருமான் பள்ளிகொள்ளத் திருப்பாற்கடலை அடைந்ததும், வாமனனாக அவதாரம் கொண்டு உலகங்களை அளந்ததும் ஸ்ரீ கண்ணனாக பசுக்களை மேய்த்ததும் ஆகிய இவைகளைப்பற்றியே கதறுகிறாள் நெடு நேரம் அழுதவண்ணமாக இருக்கிறாள் என்றவாறு.

6—5—4

நிற்கும்நான்மறைவாணர்வாழ் தொலைவில்லிமங்கலம்கண்டபின்
அற்கமொன்றுமறவுறாள் மலிந்தாள்கண்டீரிவளன்னைமீர்
கற்குங்கல்வியெல்லாம் கருங்கடல்வண்ணன்கண்ண பிரானென்றே
ஒற்கமொன்றுமிலள் உகந்துகந்துள்மகிழ்ந்துகுழையுமே. 4

நிற்கும்—நின்றபடியே நிற்பாள், நான்மறைவாணர் வாழ்—நான்கு வேதங்களையும் அறிந்த வித்தகர்கள் வாழும், தொலைவில்லிமங்கலம் பெருமானைக்கண்டபின், அற்கம் ஒன்றும் அற உறாள்—அடக்கம் இல்லாமையை சிறிதும் உணராள், மலிந்தாள் கண்டீர் இவள் அன்னைமீர்—பருத்துவிட்டாள் தாய்மார்களே! கற்கும் கல்வி எல்லாம் கருங்கடல் வண்ணன் கண்ணபிரான் என்றே—படிக்கவேண்டிய படிப்பு எல்லாம் கருங்கடல்போல் நிறமுடைய கண்ணபிரானே என்று, ஒற்கம் ஒன்றும் இலள்—சோர்வு ஏதும் இல்லாதவளாய் இருக்கிறாள்; உகந்து உகந்து உள் மகிழ்ந்து குழையுமே—சந்தோஷத்தால் பூரித்து பூரித்து உள்ளம் மகிழ்ந்து உருகும்.

6—5—5

குழையும்வாண்முகத்தேழையைத் தொலைவில்லிமங்கலம்
கொண்டுபுக்கு
இழைகொள்சோதிச்செந்தாமரைக்கண்பிரான் இருந்தமை
காட்டினீர்
மழைபெய்தாலொக்கும்கண்ணநீரினொடு அன்றுதொட்டும்
மையாந்துஇவள்
நுழையும்சிந்தையளன்னைமீர் தொழுமத்திசையுற்றுநோக்கியே. 5

குழையும் வாள்முகத்து ஏழையைத் தொலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு—மனம் உருகும் ஒளிபொருந்திய முகமுடைய பெண்ணைத் தொலைவில்லிமங்கலம் அழைத்துப் போய், இழைகொள்சோதிச் செந்தாமரைக்கண் பிரான்—ஆபரணங்கள் அணியப்பெற்ற ஒளிபொருந்திய செந்தாமரை மலர் போன்ற கண்களையுடைய தேவன், இருந்தமை காட்டினீர்—அழகோடு இருந்தகோலம் காட்டினீர், மழைபெய்தால் ஒக்கும் கண்ண நீரினொடு அன்று தொட்டும் மையாந்து—மழை பெய்வதைப்போல கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வார்த்தவளாய் அன்று முதல் மயங்கி, இவள் நுழையும் சிந்தையள்—எப்படியாவது அவனிடத்தில் போகவேண்டும் என்ற எண்ணமுடையவள், அன்னைமீர்—தாயே! தொழும் அத்திசை உற்று நோக்கியே—தொலைவில்லி மங்கலம் உள்ள திசையையே உற்றுப்பார்த்துத் தொழுவாள்.

எப்பொழுது இப்பெண்ணை அழைத்துக்கொண்டுபோய் தொலை வில்லி மங்கலப் பெருமானை ஆபரணங்களுடன் அலங்கரிக்கப்பெற்ற கோலத்துடன் இருந்ததைக் காட்டினீர்களோ அன்று முதலாக இவள் அழுதவண்ணமாக இருக்கிறாள். அங்கே எப்படியாவது செல்லவேண்டும் என்று துருவிக் கொண்டு இருக்கிறாள் என்பதே.

இதனால் கோவில் திருவிழாவில் கலந்துகொள்வதும் எம்பெருமான் தன் திவ்யமான கோலத்தில் வீற்றிருக்கும் பொழுது அவனைக் காண்பதும் பக்தியை உண்டாக்கும், ஞானமும் உண்டாகும். பெற்றோர்கள் விழா கொண்டாடுவதால் குழந்தைகளும் ஈடுபாடுகொண்டு நன்மைபெறுவார்கள் எ-று.

6—5—6

நோக்கும்பக்கமெல்லாம் கரும்பொடுசெந்நெலோங்கு
செந்தாமரை
வாய்க்கும்தண்பொருநல் வடகரைவண்தொலைவில்லிமங்கலம்
நோக்குமேலத்திசையல்லால் மறுநோக்கிலள்வைகல்நாடொறும்
வாய்க்கொள்வாசகமும் மணிவண்ணன்நாமமேயிவளன்னைமீர் 6

நோக்கும் பக்கம் எல்லாம் கரும்பொடு செந்நெல் ஓங்கு செந்தாமரை வாய்க்கும் தண்பொருநல்வடகரை தொலை வில்லிமங்கலம்—எங்கு பார்த்தாலும் செந்நெல்லும் கரும்பும் ஓங்கி வளர்வதுடன் தாமரையும் கிடைக்கும்படி யான செழிப்புமிக்க பொருநை ஆற்றின் வடகரையில் உள்ள தொலை வில்லி மங்கலம், நோக்குமேல் அத்திசை அல்லால் மறு நோக்கு இலள்—திசையல்லால் வேறு திசை நோக்காதவள். நாள்தொறும் வாய்க்கொள்வாசகமும் மணிவண்ணன் நாமமே, இவள் அன்னைமீர்—இவள் நாள் தவருது எம்பெருமானின் பெயர்களையே சொன்ன வண்ணமாக இருக்கின்ருள்.

தொலை வில்லி மங்கலமும் அப்பெருமானுமே அவள் நினைவாக இருந்தாள் என்றவாறு.

6—5—7

அன்னைமீர் அணிமாமயில் சிறுமானிவள்நம்மைக்கைவலிந்து
என்னவார்த்தையும்கேட்குருள் தொலைவில்லிமங்கல
மென்றல்லால்
முன்னம்நோற்றவிதிகொலோ முகில்வண்ணன்மாயங்கலோ
அவன்
சின்னமும்திருநாமமும் இவள்வாயனகள்திருந்தவே. 7

அன்னைமீர்—தாயே! அணிமா மயில் சிறுமான் இவள்—மயில்போல் மிக்க அழகும் மான்போன்ற பார்வையும்கொண்ட சிறு வயதினள் இவள், நம்மை கைவலிந்து என்ன வார்த்தையும் கேட்குருள் தொலை வில்லி மங்கலம் என்றல்லால்—தொலை வில்லி மங்கலம் என்னலால் (என்று சொல்வதால்) கையை வலியப் பிடித்துக் கேளாத கேள்வி எல்லாம் கேட்கிருள், முன்னம் நோற்ற விதிகொலோ—முன்பு நோற்ற நோன்பின் காரணமோ (அல்லது) முகில் வண்ணன் மாயம்கொலோ—திருமால் தன் மாயம்தானே, அவன் சின்னமும் திருநாமமும் இவள் வாயனகள் திருந்தவே—அப்பெருமானின் அடையாளங்கள் கூறுவதுவும் இவள் வாயில் இருந்து வருவனவும் எல்லாம் தவருமல் அவன் திருப்பெயர்களாகவே இருக்கின்றன,

தொலை வில்லி மங்கலம் என்ருல் இவளுக்கு வெகு ஆசை. வலியக் கைபிடித்துக் கேளாத கேள்வி எல்லாம் கேட்கிருள். இன்னும் சின்னஞ் சிறிசு, மயில்போல் அழகுடையவள், மான்போல் விழி யுள்ளவள். மேகவண்ணனை எம்

பெருமாளின் பெயர்களையே சொல்லுகிறாள், அவைவிட்டால் அவனுடைய அடையாளப் பூவும் துளசியும் திருமண்ணுமே யாகும். இது யாருடைய செயலோ முன்னையவிட்ட குறையோ அல்லது எம்பெருமான் புரிகின்ற மாயமோ தெரியவில்லை.

இதனால் காமகுரோத லோபமதமோக மாற்சரியம் முதலான குணங்கள் உள்ளத்தில் புகுந்து கூறையாடுவதற்கு முன்பே பெரிய கோயில் வைபவங்களில் ஈடுபட்டு விழாக்கள் கொண்டாட பெருமாளிடம் தூய பக்தி உண்டாகும் என்பது உணரப்பெறுகிறது.

அதுவும் கைவரப் பெறுவதற்கு நோற்றிருக்கவேண்டும் அவன் கிருபைவேண்டும்.

6—5—8

திருந்துவேதமும்வேள்வியும் திருமாமகளிரும்தாம் மலிந்
திருந்துவாழ்பொருநல் வடகரைவண்தொலைவில்லிமங்கலம்
கருநதடங்கண்ணிகைதொழுத அந்நாள்தொடங்கியிந்நாள்தொறும்
இருந்திருந்தரவிந்தலோசன என்றென்றேநைந்திரங்குமே. 8

திருந்துவேதமும் வேள்வியும்—வேதம் வல்லார்களைக் கொண்டு திருத்தமாக வேதங்களை ஓதுதலும் வேள்விகள் நடைபெறுவதும், திருமா மகளிரும் தாம் மலிந்திருந்து வாழ்—சீதேவி பூதேவி நீளாதேவிகளும் ஆகிய பெரிய தேவிமார்களும் தாங்களாகவே அங்கு செல்வமுற வீற்றிருக்க அமைந்த, பொருநல் வடகரை வண் தொலைவில்லி மங்கலம்—பொருநை நதிக்கு வடகரையில் உள்ள வளம்மிக்க தொலைவில்லி மங்கலம் கோவில் பெருமானை, கருந்தடங்கண்ணி கைதொழுது அந்நாள் தொடங்கி இந்நாள்தொறும்—கறுத்த விசாலமான கண்களையுடைய இப்பெண் பார்த்துத் தொழுத அன்று முதல் இன்றுவரை, இருந்து அரவிந்தலோசன என்று என்றே நைந்து இரங்குமே—இடைவிடாது அரவிந்த லோசனன் என்று அப்பெருமானின் பெயரையே சொல்லி வருந்தி உருகுவாள்.

தொலைவில்லி மங்கலப் பெருமான் அரவிந்தலோசனன் தேவிமார்களோடு செல்வமுற வீற்றிருக்கிறவன். அவனை வணங்குகிறவர்கள் இலட்சுமிதேவிகளின் கடாட்சமும் கிடைக்கப்பெற்று அவனை மறவாதவர்கள் ஆவார்கள் எ—று.

6—5—9

இரங்கிநாடொறும்வாய்வெரீஇ இவள்கண்ணநீர்களலமர
மரக்களுமிரங்கும்வகை மணிவண்ணவோவென்றுகூவுமால்
துரங்கம்வாய்பிளந்தானுறை தொலைவில்லிமங்கலமென்று தன்
கரங்கள்கூப்பித்தொழும் அவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னையே

இரங்கி நாள்தொறும் வாய் வெரீஇ—மனம் கசிந்து நாள்தோறும் அவனுடைய நாமங்களை வாயால் கதறி, இவள் கண்ண நீர்கள் அலமர—இவள்கண்களில் நீர் கலங்க, மரங் களும் இரங்கும் வகை மணிவண்ணவோ என்று கூவுமால்—மரங்களும் உருகும்படியாக ஓ மணிவண்ணா! என்று உரக்கக் கூவுவாள் ஆதலால், துரங்கம் வாய் பிளந்தான் உறை தொலை வில்லி மங்கலம் என்று—குதிரையின் வாய் பிளந்தவனான ஸ்ரீ கண்ணன் குடிகொண்டிருக்கிற தொலை வில்லி மங்கலம் என்று சொல்லி, தன் கரங்கள் கூப்பித் தொழும்—தன் கைகளால் அஞ்சலிசெய்து தொழுகின்றாள், அவ்வூர்த்திருநாமம் கற்றதற் பின்னையே—அந்த ஊரின் திவ்யமான பெயரைத் தெரிந்து கொண்ட பிற்பாடேதான்.

அந்த பெண் சிறுமி நாள்தோறும் கண்கள் கலங்க வாய் விட்டுக் கதறி மரங்களும் நெகிழுமாறு மணிவண்ணா ஓ மணி வண்ணா! என்று உரக்கக் கூவுவாள். கேசி என்னும் அரக்கனை குதிரை வடிவத்தில் வந்த அவனை வாய்பிளந்த ஸ்ரீ கண்ணன் வாழுகின்ற அந்தத் தொலைவில்லி மங்கலம் நோக்கி இவள் கை கூப்பித் தொழுவாள். இந்தத் தொலைவில்லி மங்கலம் பெயரையும் அப்பெருமானின் பெருமையையும் இவள் தெரிந்துகொண்டபிறகுதான் இவள் அவ்வாறு செய்கிறாள்.

அப்பெருமானை வணங்கினால் மரங்களும் பரிதாபப் படுமாறு கூச்சலிட்டுக் கூப்பிடும்படி பக்தி பெருகும் எ—று.

6—5—10

பின்னைகொல்நிலமாமகள்கொல் திருமகள்கொல்பிறந்திட்டாள்
என்னமாயங்கொலோ இவள்நெடுமாலென்றேநின்றுகூவுமால்
முன்னிவந்தவன்நின்றிருந்துறையும் தொலைவில்லிமங்கலம்
சென்னியால்வணங்கும் அவ்வூர்த்திருநாமம்கேட்பதுசிந்தையே

இவள் நெடுமால் என்றே நின்று கூவுமால்—இவள் நெடுமால் என்றே விடாது உரக்கக் கூப்பிடுகிறாள், பின்னை கொல்—நப்பின்னைதான், நிலமாமகள்கொல்—பூதேவிதான், திருமகள் கொல்—(அல்லது) இலக்குமிதான், பிறந்திட்டாள்—இவளாக வந்து பிறந்துவிட்டார்களோ, என்ன மாயங்

கொலோ—இது என்ன மாயமோ தெரியவில்லை, முன்னிவந்தவன் நின்று இருந்து உறையும் தொலைவில்லி மங்கலம்—இங்கு இருக்கவேண்டுமென்று நினைத்துவந்து நின்றகோலமும் இருந்த கோலமும்கொண்டு வாழ்கின்ற தொலைவில்லி மங்கலத்தை, சென்னியால் வணங்கும்—தலையால் வணங்குவாள், அவ்வூர்த் திருநாமம் கேட்பது சிந்தையே—அவள் மனதாரக் கேட்பது அவ்வூரின் திருப்பெயரே.

நப்பின்னைதான் இவளாகப் பிறந்திருக்கிருளோ அல்லது பூதேவியே இலக்குமியே இவள் வடிவில்வந்து பிறந்திருக்கிருர்களோ இது என்ன மாயமோ தெரியவில்லை. இவள் ஓயாது நெடுமாலே! நெடுமாலே! என்று கூவிக்கொண்டே இருக்கிருள். திருமால் விரும்பிவந்து நின்ற கோலத்திலும் இருந்த கோலத்திலும் வாழ்கின்ற இத் தொலைவில்லி மங்கலத்தை இவள் தலையால் வணங்குகிருள். மனதார அவ்வூர்ப் பெயரைக் கேட்க விரும்புகிருள் எ—று.

இவ்வாறு அவள் எம்பெருமானிடத்தில் கொண்ட ஆர்த்தி எம்பெருமானின் தேவிமார்கள் கொள்ளும் அளவுக்கு ஓங்கி வளர்ந்தது தொலைவில்லி மங்கலம் தொழுது.

ஆதலால் சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் எம்பெருமானிடம் ஈடுபாடு கொண்டு அவனை வழிபட வேண்டும். இளம் வயதிலேயே அவ்வாய்ப்பை உண்டாக்கிக் கொள்ளவேண்டும் எ—று.

6—5—11

சிந்தையாலும்சொல்லாலும்செய்கையினுலும் தேவபிரானையே
தந்தைதாயென்றடைந்த வண்குருகூரவர்சடகோபன்
முந்தையாயிரத்துள்ளிவை தொலைவில்லிமங்கலத்தைச்சொன்ன
செந்தமிழ்ப்பத்தும்வல்லார் அடிமைசெய்வார் திருமாலுக்கே. 11

சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினுலும் தேவபிரானையே தந்தை தாய் என்றடைந்த—மனதாலும் வாயாலும் எம்பெருமானையே தந்தை தாய் என்று அடைக்கலம் புகுந்த, வண்குருகூர்ச் சடகோபன், முந்தை ஆயிரத்துள்—எம்பெருமானின் ஆயிரம் பாடல்களில் இவை தொலைவில்லி மங்கலத்தைச் சொன்ன—தொலைவில்லி மங்கலத்தைப்பற்றிக் கூறிய இவை, செந்தமிழ் பத்தும்—நல்ல தமிழ்ப் பாடல்கள் பத்தும், வல்லார் அடிமை செய்வார் திருமாலுக்கே—உணர்ந்து பாடுகிறவர்கள் திருமாலுக்குக் கைங்கர்யம் புரிந்தவர்களாவர்.

மாலுக்கு

6—6—1

மாலுக்கு வையமளந்தமணாளற்கு
நீலக்கருநிற மேகநியாயற்கு
கோலச்செந்தாமரைக்கண்ணற்கு என்கொங்கல
ரேலேக்குழலி இழந்ததுசங்கே. 1

மாலுக்கு—திருமாலுக்கு, வையம் அளந்த மணாளற்கு—உலகம் அளந்த வாமன மூர்த்தியாகிய என் நாயகனுக்கு, நீலக் கருநிற மேக நியாயற்கு—கறுத்த நீலமேகம் போன்ற நிறமுடைய அறத்தின் நாயகனுக்கு, கோலச் செந்தாமரைக் கண்ணற்கு—அழகிய செந்தாமரை மலர் போன்ற கண்களை யுடைய என் கண்ணனுக்கு, என் கொங்கு அலர்—வாசனை மிக்க மலர்கள், ஏல்—பொருந்திய, ஏக்குழலி—உயர்ந்த கூந்தலை யுடைய மகள், இழந்தது சங்கே—இழந்தது வளையலே.

திருமாலும் வையம் அளந்தவாமன மூர்த்தியும் நீலக் கரு நிறமுடைய மேகம்போன்ற அறத்தின் மூர்த்தியும் அழகிய செந்தாமரைக் கண்களையுடையவனுமான நாயகனால் வாசனை மிக்க மலர்களைச் சூடிய உயர்ந்த கூந்தலையுடைய என் மகள் வளையல்களை இழந்தாள். அவன் தன் அழகைக் காட்டி மையல் ஊட்டிக் கவர்ந்து சென்றுவிட்டான் என்றவாறு. இல்லை அவள் மையலால் மயங்கி அவள் உடம்பு மெலிய வளையல்கள் கைகளில் நிற்காமல் கழன்று போயின எ—று.

6—6—2

சங்குவில்வாள்தண்டு சக்கரக்கையற்கு
செங்கனிவாய்ச் செய்யதாமரைக்கண்ணற்கு
கொங்கலர்தண்ணந்துழாய் முடியானுக்கு என்
மங்கையிழந்தது மாமைநிறமே. 2

சங்கு வில் வாள் தண்டு சக்கரக்கையற்கு—சங்கும் வில்லும் வாளும் தண்டும் சக்கரமும் கைகளால் ஏந்தியவனும் செங்கனிவாய் செய்ய தாமரை கண்ணற்கு—சிவந்த வாயும் அழகிய தாமரைக் கண்களும் உடையவனும், கொங்கு அலர் தண் அம்துழாய் முடியானுக்கு—மணம் கமழும் இனிய திருத்

துழாய் முடியுடைய திருமாலுக்கு, என் மங்கை இழந்தது மாமை நிறமே—என் மகள் அவளுடைய மாந்தளிர் போன்ற மேனி நிறத்தை இழந்துவிட்டாள்.

பஞ்சாயுதங்களை உடையவனும் அழகிய சிவந்த வாயும் அழகிய தாமரைக் கண்களும் முடியில் துழபத்தையுடையவனு மான திருமாலின் அழகிலே மயக்கம் கொண்ட என் மகள் அவனை நினைத்து நினைத்து வருந்த மேனியின் இயற்கை நிறம் இழந்து தேமல் உரப்பெற்ருள்.

6—6—3

நிறங்கரியானுக்கு நீடுலகுண்ட
திறங்கிளர்வாய்ச் சிறுக்கள்வனவற்கு
கறங்கியசக்கரக் கையவனுக்கு என்
பிறங்கிருங்கூந்தல் இழந்ததுபீடே. 3

நிறம் கரியானுக்கு நீடுலகுண்ட திறம் கிளர்வாய்ச்சிறு கள்வன் அவற்கு—கரிய நிறமுடையவனும் ஏழுலகங்களையுண்ட திறம் விளங்கும் வாயையுடைய சிறிய திருடனும் ஆகிய ஸ்ரீ கண்ணனுக்கு, கறங்கிய சக்கரக் கையவனுக்கு—சுழலும் சக்கரத்தை எந்திய கையவனுக்கு, என் பிறங்கு இருங்கூந்தல் —விளங்கும் பெரிய கூந்தலையுடைய என் மகள், இழந்தது பீடே—பெருமை இழந்தவளானுள்.

இரும்—கரிய, பெரிய, பீடு—பெருமை.

கரிய மேனியையுடையவனும் உலகமுண்ட பெருவா யனும் சிறிய கள்வனும் சக்கரத்தைக் கையில் ஏந்தியவனு மான ஸ்ரீ கண்ணனுக்கு பெரிய கூந்தலையுடைய என்மகள் தன்னுடைய பெருமையை இழந்தாள்.

என் மகள் ஸ்ரீ கண்ணனுக்கு இழக்க நேர்ந்தது அவளு டைய பெருமை, ஆனுல் அந்தப் பெருமையைப் பொருட் படுத்தாதது போல இழந்தது வெகு அற்பமானது என்று தோன்ற இழந்தது பீடே என்கிருள் தாய். பெண்களுக்குப் பெருந்தகைமைதான் பெரியது. ஆனுல் எல்லையில்லாத பெரு மையுடைய உலகமுண்ட பெருவாயனுக்கு இழந்தனுல் இதை அற்பமாகச் சொல்லுகிருள்.

பெருமை இழந்ததாவது அவள் ஸ்ரீ கண்ணன்பால் மனம் பறிகொடுத்துவிட்டதே.

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்புஎனும் திண்மை உண்டாகப் பெறின்—என்பது திருவள்ளுவர் வாய்மொழி.

6—6—4

பீடுடைநான்முகனைப் படைத்தானுக்கு
மாடுடைவையம் அளந்தமணாளற்கு
நாடுடைமன்னர்க்குத் தூதுசெல்நம்பிக்கு என்
பாடுடையல்குல் இழந்ததுபண்பே. 4

பீடுடை நான்முகனைப் படைத்தானுக்கு—பெருமையுடைய பிரமனைப் படைத்தவனும், மாடுடைய வையம் அளந்த மணாளற்கு—விசாலமான உலகத்தை அளந்துகொண்ட வாமன மூர்த்தியான மணாளனுக்கு, நாடுடை மன்னர்க்குத் தூது செல் நம்பிக்கு—இந்திரப் பிரஸ்த நாட்டை ஆண்ட துரியோதனர்களுக்கு பாண்டவர்களுக்காக தூது சென்ற ஸ்ரீ கண்ணபிரானுக்கு, பாடுடைய அல்குல்—ஒளியுடைய இடை, இழந்தது பண்பே—இழந்தது குணமே.

பிரமனைப் படைத்த திருமாலும் உலகம் அளந்தவாமனனும் கௌரவர்களிடம் தூது சென்ற ஸ்ரீ கண்ணனும் ஆகிய பெருமானுக்கு ஒளியுடைய இடை குணம் இழந்தது.

என் மகள் எம்பெருமானிடம் கொண்ட காதலால் அவள் இடையழகு குன்றினாள்.

6—6—5

பண்புடைவேதம் பயந்தபரனுக்கு
மண்புரைவையம் இடந்தவராகற்கு
தெண்புனற்பள்ளி எம்தேவபிரானுக்கு என்
கண்புனைகோதை இழந்ததுகற்பே. 5

பண்புடை வேதம் பயந்த பரனுக்கு—சன்மார்க்கம் போதிக்கும் வேதம் அருளிய பெருமானுக்கு, மண்புரை வையம் இடந்த வராகற்கு—மண்ணுடை பூமியை நீரிலிருந்து பெயர்த்தெடுத்த வராகப் பெருமானுக்கு, தெண்புனல் பள்ளி எம்தேவ பிரானுக்கு—தெள்ளிய கடல் பள்ளிப் பிரானாகிய தேவதேவனுக்கு, என் கண்புனைகோதை—கண்களில் நீரையுடை என்னுடைய மகள், இழந்தது கற்பே—இழந்தது நிறைவே.

நல்நெறிகளை அடங்கக்கொண்ட வேதத்தை உலகுக்கருளிய சர்வேஸ்வரனும் பூமியைப் பெயர்த்தெடுத்தவராக மூர்த்திப் பெருமானும் கடல்பள்ளிப் பிரானாகிய எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணனுக்கு அழுத கண்ணளாய என்மகள் தன்னுடைய கற்பையே பறிகொடுத்தாள்.

6—6—6

கற்பகக்காவன நற்பலதோளற்கு
பொற்சுடர்க்குன்றன்ன பூந்தண்முடியற்கு
நற்பலதாமரை நாள்மலர்க்கையற்கு என்
விற்புருவக்கொடி தோற்றது மெய்யே. 6

கற்பகக் காவன நற்பல தோளற்கு—கற்பகச் சோலை போன்று நன்மைதரும் பல தோள்களையுடைய எம்பெருமானுக்கு, பொற்சுடர் குன்றன்ன—பொன் வண்ணமானசோதியே குன்றாகத் தோன்றினால் எப்படியிருக்குமோ அதுபோன்று, பூந்தண்முடியற்கு—அழகிய இனிய கிரீடம் தரித்த திருமானுக்கு நற்பல தாமரை நாள்மலர்க் கையற்கு, என் வில் புருவக்கொடி—வில்லைப்போன்று வளைந்த புருவங்களையுடைய என் மகள், தோற்றது உடம்பே.

எம்பெருமானின் அழகிய முடியும் தோள்களும் தாமரை மலர்கள் போன்ற கைகளும் திருவடிகளும் கண்ட என் மகள் உடலையே இழந்துவிட்டாள். மெய்மறந்து மயங்கிவிட்டாள். அவ்வளவு அழகுடையவன் என் பெருமான். அதனால் என் மகள் தோற்றது ஒரு அதிசயம் அன்று எ—று.

கற்பக மரம் ஒன்றே வேண்டியதை எல்லாம் தரும் என்றால் கற்பகச் சோலை எவ்வளவு நன்மையைத் தரக்கூடியது என்று எண்ணிப் பார்க்கவும் முடியாது. அந்த கற்பக மரங்களைப் போல அநேக தோள்களையுடைய பெருமானால் பெறக்கூடிய நன்மையை எண்ணவும் பெறுமோ! அப்பேர்ப்பட்ட பெருமானிடம் என்மகள் காதல்கொண்டு உடம்பு இளைத்தாள் என்றால் அதில் ஆச்சரியமே இல்லை.

6—6—7

மெய்யமர்பல்கலன் நன்கணிந்தானுக்கு
பையரவினணைப் பள்ளியினானுக்கு
கையொடுகால்செய்ய கண்ணபிரானுக்கு என்
தையல் இழந்ததுதன்னுடைச் சாயே 7

மெய் அமர் பல்கலன் நன்கு அணிந்தானுக்கு—திருமேனியில் பொருந்தும்படியான பலபல ஆபரணங்கள் அழகுற அணியப்பெற்றவனுக்கு, பை அரவின் அணைப் பள்ளியினானுக்கு—படமுடைய பாம்பைப் படுக்கையாகக்கொண்டு துயில்

கொள்கின்றவனுக்கு, கையொடு கால்செய்ய கண்ணபிரா னுக்கு—கைகளுடன் கால்களும் அழகு கொண்டுள்ள ஸ்ரீ கண்ணபிரானுக்கு, என் தையல் இழந்தது தன்னுடைச்சாயே —என் மகள் இழந்தது அவளுடைய மேனி வண்ணமே (நிறம்)

எம்பெருமானின் பலவாகிய அழகிய ஆபரணங்களின் அழகும் அவன் அங்க அழகும் அவன் படம்கொண்ட பாம்பின் மீது படுத்திருக்கும் கோலமும் கண்ட இவள் தன் சோபை யையே இழந்துவிட்டாள் (உடம்பின் சாயலை இழந்துவிட்டாள்) மகள் தன்னுடைய அழகை இழந்தாலும் பரவாயில்லை. எம் பெருமானிடம் இந்த அற்புதமானவை எல்லாம் கண்டாளே என்ற மன நிறைவு கொள்கிறாள் தாய்.

6—6—8

சாயக்குருந்தம் ஒசித்ததமியற்கு
மாயச்சகடம் உதைத்தமணாளற்கு
பேயைப்பிணம்படப் பாலுண்பிரானுக்கு என்
வாசக்குழலி இழந்ததுமாண்பே 8

சாயக்குருந்தம் ஒசித்த தமியற்கு—குருந்தமரம் சாயும்படியாக முறித்த ஸ்ரீ கண்ணனுக்கு, மாயச் சகடம் உதைத்த மணாளற்கு—வஞ்சனையோடு உருண்டுவந்த சக்க ரத்தை காலால் உதைத்த அழகனுக்கு, பேயைப் பிணம்படப் பாலுண் பிரானுக்கு—பேய்போன்ற பூதகியைப் பிணமாகும் படி அவளுடைய பாலுண்ட ஸ்ரீ கண்ணனுக்கு, என் வாசச் குழலி—வாசனை பொருந்திய குழலையுடைய என் மகள், இழந் தது மாண்பு—பெருமை இழந்தாள்.

குருந்த மரம் மலர்கள் குலுங்க மாண்புடன் நின்றது. கண்ணனைக் கொல்ல ஓர் அசுரனே அப்படி நின்றான். அதனால் ஸ்ரீ கண்ணன் அதை ஒசிக்க நேர்ந்தது, சக்கரம் அதன் இயற் கைக் குணத்திற்கு ஒட்ட அழகாக உருண்டு வந்தது. ஆனால் அது ஓர் அசுரனே. ஸ்ரீ கண்ணன் காலால் உதைத்து அவனை மாய்த்தான். பூதகி நல்ல இளம் வயதுடைய மங்கையைப் போல தாய் வடிவில் மாண்புடன் வந்தாள். ஆனால் அவள் ஸ்ரீ கண்ணனைக் கொல்லவந்தாள். அதனால் அவளைக் கொன்றான். ஸ்ரீ கண்ணனிடம் காட்டப்பெற்ற மாண்புகள் இவ்வாறாயின,

என் மகளும் ஒரு வகையில் ஒசிந்தவள் ஆனுள். ஸ்ரீ கண்ண னிடம் காதல்கொண்டு இவள் அவனை அடையமுடியாமல் தன் னுடைய மாட்சிமையை இழந்தவளானுள் என்கிருள் தாய்.

6—6—9

மாண்பமைகோலத்து எம்மாயக்குறளற்கு
சேண்சுடர்க்குன்றன்ன செஞ்சுடர்மூர்த்திக்கு
காண்பெருந்தோற்றத்து எம்காகுத்தநம்பிக்கு என்
பூண்புனைமென்முலை தோற்றது பொற்பே. 9

மாண்பு அமை கோலத்து—பெருமை பொருந்திய அழகுடைய, எம் மாயக் குறளற்கு—எங்கள் மாயமூர்த்தி யான வாமனனும், சேண் சுடர்க்குன்றன்ன செஞ்சுடர் மூர்த் திக்கு—தூரத்தில் இருக்கும் ஒளிக் குன்றுபோல் விளங்கும் செஞ்சோதி வடிவினனும், காண்பெரும் தோற்றதது எம் காகுத்த நம்பிக்கு—காண்பதற்கு கம்பீரமான தோற்றமுடைய எங்களுடைய ஸ்ரீராமப் பெருந்தகையுமான பெருமானுக்கு, என் பூண்புனை மென்முலை தோற்றது பொற்பு—ஆபரணங்கள் அணியப்பெற்ற மெல்லிய மார்புடைய என் மகள் பொலிவு இழந்தாள். ஏ—அசை.

வாமனன் மாவலிச் சக்கரவர்த்தியிடம் நிலம் யாசிக் கச் சென்றபோது கொண்டிருந்த மாட்சிமையும், தூரத்தில் விளங்கும் ஒளிக்குன்று போன்ற செவ்விய ஒளிமூர்த்தியும், காண்பதற்கு கம்பீரமான தோற்றமுமுடைய ஸ்ரீராமப் பெருந் தகையின் முன் என் மகளுடைய மார்பழகு இருந்த இடம் தெரியாமல்போய்விட்டது. அப்பெருமானின் அழகுக்கு உல கமே அடிபணியுமே. அவனுடைய அழகிலே இவள் மயங்கி இவள் அழகு இழந்தவள் ஆனுள் எ—று.

காதலித்த நாயகனை அடையமுடியாமல் வருந்துதலால் மேனி வாடி சோபை இழந்தது எ—று.

6—6—10

பொற்பமைநீண்முடிப் பூந்தண்டுழாயற்கு
மற்பொருதோளுடை மாயப்பிரானுக்கு
நிற்பனபல்லுருவாய் நிற்குமாயற்கு என்
கற்புடையாட்டி இழந்ததுகட்டே. 10

பொற்பு அமை நீண்முடி—பொலிவுமிக்க உயர்ந்த கிரீடத்தையுடையவனும், பூம்தண் துழாயற்கு—அழகிய தண்மையுடைய திருத்துழாய் அணியப்பெற்றவனுகிய ஸ்ரீராகவப் பெருமானும், மல்பொரு தோளுடை மாயப்பிரானுக்கு—மற்போரில் வல்லமையுடைய புயங்களையுடைய மாயவனுன ஸ்ரீ கண்ண பெருமானும், நிற்பன பல் உருவாய் நிற்கும் மாயற்கு—நிற்கின்ற சராசரங்கள் எல்லாம் தானே அவற்றின் வடிவமாய் நிற்கின்ற மாயவனுன எம்பெருமானுக்கு, என் கற்புடையாட்டி இழந்தது கட்டே—கற்பெனும் திண்மையுடைய என் மகள் தன்னுடைய திண்மையை இழந்துவிட்டாள்.

அவனுடைய பெருமையிலே மயங்கி அவனுக்கே சரணுகதியாய் விட்டாள்.

6—6—11

கட்டெழில்சோலை நல்வேங்கடவாணனை
கட்டெழில்தென்குருகூர்ச் சடகோபன்சொல்
கட்டெழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர்
கட்டெழில்வானவர் போகமுண்பாரே. 11

கட்டு எழில் சோலை நல் வேங்கட வாணனை—மிக்க அழகுடைய சோலைகள் நிரம்பிய அருள் மிகுந்த திருவேங்கடப் பெருமானை, கட்டு எழில் தென்குருகூர்ச் சடகோபன் சொல்—அழகு மிக்க தென்பாண்டிநாட்டு குருகூரைச் சேர்ந்த சடகோபன் சொன்ன, கட்டு எழில் ஆயிரத்து இப்பத்தும் வல்லவர்—உறுதியான அழகுடைய ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்தும் வல்லவர்கள், கட்டு எழில் வானவர் போகம் உண்பாரே—நிரந்தரமான அழகுடைய தேவர்கள் அனுபவிக்கின்ற தேவலோக இன்பமே பெறுவர்.

உண்ணுஞ்சோறுபருகுநீர்

6—7—1

உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாம்
கண்ணன எம்பெருமானென்றென்றே கண்கள்நீர்மல்கி
மண்ணினுளவன்சீர் வளம்மிக்கவனூர் வினவி
திண்ணமென்னிளமான்புகுமூர் திருக்கோளூரே. 1

உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்று என்றே—உண்ணுகின்ற சோற்றையும் குடிக்கின்ற நீரையும் தின்னுகின்ற வெற்றிலையையும் கண்ணன் என்பாள் எம்பெருமான் என்பாள் என்று சொல்லி கண்களில் நீர் நிறைய, மண்ணினுள் அவன்சீர்—இத்தரையில் அப்பெருமானுடைய சிறப்பையும், வளம் மிக்கவன் ஊர்—செழிப்புமிக்கவனாகிய அவனுடைய ஊரையும், வினவி—கேட்டு, திண்ணம்—நிச்சயமாக, என் இளமான் புகும் ஊர்—மான்போன்றவளும் இளமையுடையவளுமான என் மகள் செல்லும் ஊர், திருக்கோளூரே—(ஆழ்வார் திருநகரிக்கு அருகே உள்ள) திருக்கோளூரே ஆகும்.

என் மகள் இன்னும் அறிவு வரப்பெறாதவள். இளையவள். அழகுடையவள். அவள் உண்ணும் சோற்றைப்பார்க்கும்போது இது கண்ணன் என்பாள். குடிக்கின்ற நீரை இது கண்ணன் என்பாள். அவ்வாறே வெற்றிலையையும் சொல்வாள். சொல்லிக்கொண்டே இருந்தவள் கண்ணீர் வடித்துக்கொண்டு எங்கோ போய்விட்டாள். நிச்சயமாக அவள் திருக்கோளூரைத் தேடிக்கொண்டுதான் போயிருப்பாள். போகும்போது எம்பெருமானின் பெயர் சொல்லி ஐஸ்வர்ய தேவன் எங்கே என்று கேட்டும் அவன் பள்ளிகொண்டிருக்கும் ஊர் எது என்றும் விசாரித்துக்கொண்டே போயிருப்பாள் என்று தாய் தன் மகளைப்பற்றிக் கூறுகின்றாள்.

6—7—2

ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல் அவனுடைய
பேரும்தார்களுமேபிதற்றக் கற்புவானிடறி
சேருநல்வளஞ்சேர் பழனத்திருக்கோளூர்க்கே
போருங்கொலுரையீர் கொடியேன்கொடிபூவைகளே. 2

ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல்—ஊரும் நாடும் உலகமும் தன் கணவனைப்போல (நினைத்து), அவனுடைய பேரும் தார்களுமே பிதற்ற—எம்பெருமானுடைய திருநாமங் களையும் மார்பிலணியப்படுகின்ற மலர்களைப்பற்றியுமே சொல் லிக் கதற, கற்பு வான்இடரி—அக் கற்பின் ஒழுக்கத்தால் வானம் மழை பெய்து, சேரும் நல் வளஞ்சேர் பழனத்திருக் கோளூர்க்கே—அடைகின்ற சிறந்த வளமுடைய மருத நிலங் களையுடைய திருக்கோளூர்க்குத்தான், போருங்கொல்— போகின்றாளோ, உரையீர்—சொல்வீர்களாக, கொடியேன்— நான் பாவம் செய்தவள். கொடி பூவைகளே—அழகிய நாகண வாய்ப் பறவைகளே!

ஊரும் நாடும் உலகமும் எம்பெருமானையே கணவனா கப் பாவித்து அவனுடைய திருநாமங்களையும் அவன் மார்பில் அணிகின்ற மாலைகளையும் பற்றியே சொல்வதால் அக்கற்பின் திண்மையால் வானம் பொழிவதலாகிய வளத்தையுடைய திருக்கோளூர்க்குதான் என் மகள் போனாளோ சொல்லுங்கள் நீங்கள் என்று நாகணவாய்ப் பறவைகளை கேட்கிறாள் தாயானவள்.

தார்—புகழையும் குறிக்கும். தன்+ஐ—தன் தலைவனை

'தெய்வந் தொழாள் கொழு நற்றொழு தெழுவாள் பெய் யெனப் பெய்யும் மழை' என்றார் வள்ளுவர், ஊரும் நாடும் உலகும் எம்பெருமானையே நாயகனாக நினைத்து அவ னையே வழிபடுவதால் மழை பெய்கிறது என்று ஆழ்வார் பெரு மானார் அருமைபடக் கூறுகிறார். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என்ற நால டிப் பொருளையும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

எம்பெருமானிடம் பக்திப்பித்தேறியதால் தரிக்கமுடி யாமல் வீட்டைவிட்டு எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் கோவிலுக்கே தாயாரிடம் சொல்லாமல் கேளாமல் போய்விட் டாள். எப்படி கற்புடைய உலகிற்கு மழை பெய்கிறதோ அது போல எம்பெருமானிடம் கற்புகொண்ட இப்பெண்ணையும் அவனுடைய கருணையால் நல்வளஞ்சேர் திருக்கோளூரையே அடையும்படி செய்துவிட்டான் என்க.

6—7—3

பூவைபைங்கிளிகள் பந்துதூதைபூம்புட்டில்கள்
யாவையும்திருமால் திருநாமங்களே கூவியெழும் என்
பாவைபோயினித் தண்பழனத்திருக்கோளூர்க்கே
கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணொடென்செய்யுங்கொலோ 3

பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால் திரு நாமங்களே கூவிஎழும்—என் மகள் பூவை பைங்கிளிகள் முதலாய பாவைப் பொருளையும் திருமாலின் பெயர்களாலேயே அழைத்து எழுவாள். என் பாவை போய் இனித் தண் பழனத் திருக்கோளூர்க்கே—தண்மையான வயல்களையுடைய திருக்கோளூர்க்கு (இப்படிப்பட்ட) என் மகள் போய், கோவை வாய் துடிப்ப—கொவ்வைப் பழம் போன்று சிவந்த வாய் நடுங்க, மழைக் கண்ணொடும்—அழுத கண்களுடன், என் செய்யுங் கொலோ—என்ன செய்வாளோ.

என் மகள் அவள் விளையாட்டுப் பொருள்களுக்கெல்லாம் எம்பெருமான் பெயர்களையே இட்டுக் கூப்பிடுவாள். கிளியை கிளி என்று சொல்லமாட்டாள். பூவையை பூவை என்று சொல்லாள் நாராயணா என்பாள் அல்லது மாதவா என்பாள் அல்லது கோவிந்தா என்று சொல்வாள். இவ்வாறாக நாமங்கள் சொல்லத்தான் தெரியும் சரியாகப் பேசத்தெரியாது. இவள் அந்த திருக்கோளூர்ப் பெருமானைக் கண்டு கண்களில் நீர்கொண்டு வாய்துடிக்க எப்படிப் பேசுவாளோ என்ன செய்வாளோ தெரியவில்லை என்று வருத்தமுற ஐயப்படுகிறாள். யாவற்றையும் திருமால் என்று காண்கிறவள் நினைக்கிறவள். இனி அவனடி சேர்வதல்லால் வேறு வழி இல்லை எ—று.

6—7—4

கொல்லையென்பர்கொலோ குணம்மிக்கனளென்பர்கொலோ
சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாருமெல்லே
செல்வம்மல்கியவன்கிடந்த திருக்கோளூர்க்கே
மெல்லிடைநுடங்க இளமான்செல்லமேவினளே. 4

கொல்லை என்பர் கொலோ குணம் மிக்கனள் என்பர் கொலோ—வரம்புமீறி ஒழுகும் தன்மை என்பார்களோ அல்லது தெய்வத் தன்மை மிகுந்துவிட்டாள் என்பார்களோ, சில்லை வாய்ப் பெண்டுகள் அயற்சேரியுள்ளாரும்—இழிவாகப் பேசும் பெண்களும் ஊருக்குப் புறத்தே சேரியிலுள்ளவர்களும், எல்லே—ஐயோ! செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே மெல்இடை நுடங்க இளமான் செல்ல மேவினளே—செல்வத்தால் மிக்கு அப்பெருமான் பள்ளிகொண்டிருக்கும் திருக்கோளூர்க்கே மென்மையான அவளுடைய இடை தளர என் பெண் செல்வதற்கு விரும்பினளே!

மகளால் வரும் பழியைப் பற்றியும் மகளின் துன்பத்தையும் நினைத்து வருந்துகிருள் தாய்.

இழிவாகப் பேசும் பெண்களும் ஊர்ப்புறத்தே சேரியில் உள்ளவர்களும் என்ன பேசுவார்களோ கட்டுக்கடங்காது போய்விட்டாள் என்பார்களோ கடவுள் பக்திமேல் இட்டுப் போய்விட்டாள் என்பார்களோ தெரியவில்லை என்றும் ஐஸ்வர்ய தேவனுகப் படுத்துக்கொண்டிருக்கும் திருக்கோளூர்ப் பெருமானிடமே அவள் இடுப்பு வலிக்கச் செல்ல விரும்பினளே என்றும் வருந்துகிருள்.

பெற்றதாய்தான் வருந்துகிருள். பக்தியில் முழுக்க முழுக்க மூழ்கியவர்களுக்கு உலகம் என்ன பேசுகிறது உடலுக்கு என்ன நிகழ்கிறது என்று பார்ப்பதில்லை. அவர்களுக்கு அந்த எம்பெருமானின் நினைவு ஒன்றேதான் என்பது இதனுல் தெரிகிறது.

போனதும் போனுள் செல்வம்மிக்க அந்த பெருந்தேவனிடமே சென்ருள் என்று ஒரு மன நிறைவு பெறுகிருள் தாய்.

6—7—5

மேவிநைந்துநைந்துவிளையாடலுருள் என்சிறுத்
தேவிபோய் இனித்தன்திருமால்திருக்கோளூரில்
பூவியல்பொழிலும் தடமுமவன்கோயிலுங்கண்டு
ஆவியுள்குளிர எங்ஙனேயுகக்குங்கொலின்றே. 5

மேவி நைந்து நைந்து விளையாடல் உருள் என் சிறுத்தேவி போய் இனித்தன் திருமால் திருக்கோளூரில்—தேவி போன்ற என் இளம் மகள் போய் அவள் விரும்பிய திருமால் திருக்கோளூரை அடைந்து இங்கு அவன் நினைவில் வருந்தி விளையாடியதைப்போல் அங்கு விளையாடமாட்டாள். அவள் அங்குள்ள நந்தவனமும் தடாகமும் அவனுடைய கோவிலையும் கண்டு அவள் உள்ளமும் உயிரும் நிம்மதியடைந்து எப்படி சந்தோஷப்படுகின்ருளோ இன்றைக்கே என்று தாயானவள் மகிழ்வு கொள்கிருள்.

ஊரார் பேசுவதைத் தாயானவள் மறந்துவிட்டாள். மகளுக்கு விளையாட்டுப் புத்தி எல்லாம் போய் எம்பெருமானைக் கண்டு மகிழ்ச்சி கொண்டிருப்பாள் என்ற குதுகுலம்.

ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாவது படைத்த அப்பெருமானுக்கு அளவு கடந்த மகிழ்ச்சியாகும். அதுபோல ஈண்டு பெற்றெடுத்த தாயானவள் தன்னையும் மீறி அவள் போகவேண்டிய இடத்திற்குப் போகிறாளே என்ற மகிழ்ச்சி. இவளே நற்றாய்.

6—7—6

இன்றெனக்குதவாதகன்ற இளமானினிப்போய்
தென்திசைத்திலதமனைய திருக்கோளூர்க்கே
சென்று தன்திருமால்திருக்கண்ணும் செவ்வாயும்கண்டு
நின்றுநின்றுநையும் நெடுங்கண்கள்பனிமல்கவே. 6

எனக்கு உதவாது அகன்ற இளமான்—எனக்கு உதவியாக இருப்பதை விட்டுப்போன அழகிய மகள், இனிப் போய்—வீடு வாசல் துறந்தவளாய், தென்திசைத் திலதம் அனைய திருக்கோளூர்க்கு சென்று—பரத கண்டத்தின் தென் கோடிப் பகுதிக்கு, நெற்றிக்குத் திலதம் எப்படி சிறப்புடையதோ அதுபோல சிறப்புடைய திருக்கோளூருக்குச் சென்று, தன் திருமால் திருக்கண்ணும் செவ்வாயும் கண்டு—அவளுக்குப் பிரியமான திருமால் பெருமானின் அழகிய கண்களும் சிவந்த வாயும் கண்டு, நின்று நின்று நையும் நெடுங்கண் பனிமல்கவே —அவளுடைய நீண்ட கண்களில் நீர் பெருக நின்று உள்ளம் வருந்தி உருகுவாள்.

தன் கை விட்டுப்போன மகளைப் பற்றிய சிந்தனையாகவே இருக்கிறாள் தாய். மகள் திருக்கோளூர்ப் பெருமானை இந்நேரம் காண்பாள், அவன் தாமரைக் கண்களைக் காண்பாள் அவன் சிவந்த வாயைக் காண்பாள். கண்டு கண்களில் நீர் பெருக நினைப்பாள், இத்தனைநாள் உன்னைப் பார்க்கமுடியவில்லையே இன்று எனக்குக்காணக் கருணைபுரிந்தாய் என்று நினைத்துநினைத்து உருகுவாள் என்று தாய் நினைக்கிறாள்.

6—7—7

மல்குநீர்க்கண்ணொடு மையலுற்றமனத்தனளாய்
அல்லும்நன்பகலும் நெடுமாலென்றழைத்தினிப்போய்
செல்வம்மல்கியவன்கிடந்த திருக்கோளூர்க்கே
ஒல்கியொல்கிநடந்து எங்ஙனேபுகுங்கொலாசிந்தே 7

மல்கு நீர்க் கண்ணொடு மையலுற்ற மனத்தனளாய் அல்லும் நன்பகலும் நெடுமால் என்று அழைத்து—பெருகு கின்ற நீரையுடைய கண்களோடு எம்பெருமானிடம் காதல் மயக்கம்கொண்ட மனத்தோடு இரவும் பகல் முழுவதும் நெடு மாலே! என்றுகூவி அழைத்து, இனிப்போய் செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே ஒல்கிஒல்கி நடந்து எங்ஙனே புகும் கொல் ஒசிந்தே—ஓய்வில்லாதவளாய் இனிச் சென்று செல்வம்மிக்க திருமாலாகிய பெருமான் படுத்தவண்ணம் இருக்கிற திருக்கோளூருக்கே அசைந்தும் துவண்டும் நடந்து எப்படிப்போய்ச் சேர்வாளோ தளர்ந்தவளாய் எ—று.

மகள் எங்ஙனம் எம்பெருமானிடம் நாளெல்லாம் இர வெல்லாம் பக்தி கொண்டிருந்தாள் என்பதும் அவனுடைய நினைவாக இருந்து அவன் நாமங்களை உரக்கக் கூவி அழைத்து விட்டு ஓய்வில்லாதவளாய் திருக்கோளூர்க்கு எப்படி அவ்வளவு தூரம் நடப்பாளோ, இடுப்பு அசைந்து துவள அவள் தளர்ந்து தான் போய்ச் சேர்வாளோ என்று தாய் உள்ளம் ஏங்கி அவள் எப்படியாவது போய்ச் சேரவேண்டும் என்று நினைக்கிறாள். இதனால் மகளை நினைத்தவாறு தாயும் எம்பெருமானை நினைக்க அமைந்தாள்.

இவ்வாறு கோவிலுக்குச் செல்கிறவர்களை நினைப்பதா லும் நம் மனம் யாத்திரை செய்தவாறாகும்.

6—7—8

ஒசிந்தநுண்ணிடைமேல் கையைவைத்துநொந்துநொந்து
கசிந்தநெஞ்சினளாய்க் கண்ணநீர்துளும்பச்செல்லுங்கொல்
ஒசிந்தவொண்மலராள்கொழுநன் திருக்கோளூர்க்கே
கசிந்தநெஞ்சினளாய் எம்மைநீத்தவெம்காரிகையே. 8

ஒசிந்த நுண் இடைமேல்—தளர்ந்துபோன இடுப்பின் மேல், கையைவைத்து நொந்து நொந்து கசிந்த நெஞ்சின ளாய்க் கண்ண நீர் துளும்பச் செல்லுங்கொல்—கையைவைத்து இடுப்பு வலிக்க வலிக்க உருகிய உள்ளத்தவளாய் கண்ணீர் அரும்பச் செல்வாளோ, ஒசிந்த ஒண் மலராள் கொழுநன் திருக்கோளூர்க்கே—தளர்ந்துபோய் படுத்துக்கொண்டிருக்கிற அந்த லட்சுமி நாராயணனுடைய திருக்கோளூருக்கு, கசிந்த நெஞ்சினளாய் எம்மை நீத்த காரிகையே—வருந்திய உள்ளத் தோடு என்னைவிட்டுச் சென்ற என் மகள்.

மகள் செல்லுகின்ற கோலத்தைத் தாய் மனதால் காண்பதை ஆழ்வார் பெருமானுர் வெகு அழகாக வர்ணிக்கிருர். எம்பெருமானை நாடிச் செல்வார்க்குத் தளர்வு என்பது ஏது என்றவாறு.

படுத்துக்கொண்டிருக்கிற பெருமான் என்பதைக் குறிக்க ஒசிந்த ஒண்மலராள் கொழுநன் என்று கூறுவது அருமையினும் அருமை.

6—7—9

காரியம்நல்லனகளவைகாணில் என்கண்ணனுக்கென்று
ஈரியாயிருப்பாள் இதெல்லாம்கிடக்க இனிப்போய்
சேரிபல்பழிதூவியிரைப்பத் திருக்கோளூர்க்கே
நேரிழைநடந்தாள் எம்மையொன்றும்நினைத்திலளே. 9

காரியம் நல்லனகள் அவை காணில் என் கண்ணனுக்கு என்று ஈரியாய் இருப்பள்—செய்யவேண்டிய நல்லவை எவையாயும் இருந்தால் அவை ஸ்ரீ கண்ணனுக்காக என்று அன்பு கொள்வாள். இதெல்லாம் கிடக்க—இப்படிச் சிந்தனையாய் இருப்பதை விட்டுவிட்டு, சேரி பல்பழி தூவி இரைப்ப—சேரியில் உள்ளவர்கள் பலவிதமாக இழிவுபடுத்திப் பேசும்படியாக, திருக்கோளூர்க்கே நேரிழை நடந்தாள்—திருக்கோளூருக்கே பெண் புறப்பட்டுவிட்டாள், எம்மை ஒன்றும் நினைத்திலளே—என்னிடத்தில் சொல்லிவிட்டுப் போகலாம் என்று நினைக்கவில்லை.

உண்பன சுவைமிக்கனவாய் எவையாவது இருந்தால் அவை கண்ணனுக்கு என்பாள். பழமோ இனிப்போ இது நன்ருக இருக்கிறது இது கண்ணனுக்கு இருக்கட்டும் என்பாள். விளக்குவதும் கூட்டுவதும் கண்ணனுக்கு என்றே செய்வாள், அதுவே அவளுக்குப் போதும். அப்படியிருக்க ஊரார் என்ன சொல்வார்கள் என்று நினைக்காமல் நான் இருக்கிறேன் என்றும் நினைக்காமல் பழிக்கு அஞ்சாமல் எம்பெருமானை நாடிச் சென்றுவிட்டாளே என்று தாய் கூறுகிருள்,

இவ்வாறு நல்லன எல்லாம் எம்பெருமானுக்கு என்று நினைக்கிற மனநிலை சபரிக்கு இருந்தது.

6—7—10

நினைக்கிலேன்தெய்வங்காள் நெடுங்கணிளமானினிப்போய்
அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனை
தினைத்தனையும்விடாள் அவன்சேர்திருக்கோளூர்க்கே
மனைக்குவான்பழியும்நினையாள செல்லவைத்தனளே. 10

நெடுங்கண் இளமான்—நீண்ட பெரிய கண்களையுடைய என் மகள், இனிப்போய்—இவ்வாறு போய், அனைத்து உலகுமுடைய அரவிந்த லோசனனை—எல்லா உலகங்களுக்கும் நாயகனான தாமரைக் கண்ணனை, தினைத்தனையும் விடாள்—சிறிதளவும் விடமாட்டாள், (அவனை அப்படியே விழுங்கிவிடுவாள் போன்ற அவ்வளவு பக்திகொண்டவள்) அவனை அடைந்தே தீர்வாள், மனைக்கு வான்பழியும் நினையாள்—குடும்பத்திற்குப் பெரிய பழி இது என்றும் நினைக்கவில்லை. அவன் சேர் திருக்கோளூர்க்கே செல்ல வைத்தனளே—அரவிந்த லோசனனான அப்பெருமானுள்ள திருக்கோளூர்க்கே செல்லும்படியாகச் செய்துகொண்டனளே. நினைக்கிலேன் தெய்வங்காள்—தெய்வங்களே! இவ்வாறு நடக்கும் என்று நான் நினைக்கவேயில்லை.

இவ்வாறு தாய் தன் மகளைப்பற்றிக் கூறுகிறாள்.

என் மகள் வீட்டில் பக்திகொண்ட நிலையைப் பார்த்தால் அவள் வீட்டைவிட்டுப்போவாள் என்று என் மனதிற்குப்படவே இல்லை, நான் ஒரு தவறும் செய்யவில்லை. தெய்வங்களே! அந்த அரவிந்தலோசனன் என்னை என்ன நினைப்பானோ! பெற்றெடுத்த தாய் இவளுக்கு அறிவில்லை என்று கோபிப்பானோ தெரியவில்லை. ஏனெனில் என் மகள் பக்தி வெறி கொண்டவள், அந்த அரவிந்தலோசனனைப் பார்த்தால் தினையளவும் விடாள். அவள் போன போக்கைப் பார்த்தால் அந்தப் பெருமானை அப்படியே விழுங்கி விடுவாள்போல் இருக்கிறது. அணைத்தாலும் இறுகக்கட்டி விடுவாள்போலிருக்கிறது. அங்கே அவள் செல்லும்படியாகச் செய்துகொண்டனளே!

6—7—11

வைத்தமாநிதியாம் மதுசூதனையேயலற்றி
கொத்தலர்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன
பத்துநூற்றுளிப்பத்து அவன்சேர்திருக்கோளூர்க்கே
சித்தம்வைத்துரைப்பார் திகழ்பொன்னுலகாள்வாரே. 11

வைத்த மா நிதியாம் மதுசூதனையே அலற்றி—மனதில்வைத்த பெரிய செல்வமாகிய மதுசூதனனைப் பற்றியே பிதற்றி, அம் மதுசூதனனுடைய திருக்கோளூர்க்கு, கொத்து அலர் பொழில் சூழ் குருகூர்ச் சடகோபன் சொன்ன—கொத்துகொத்தாக மலர்களையுடைய சோலைகளால் சூழப் பெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன, பத்து நூற்றுள் இப் பத்து—ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்தும், சித்தம்வைத்து உரைப்பார் திகழ் பொன்னுலகு ஆள்வாரே—மனம் வைத்து (மனதார) சொல்கிறவர்கள் விளங்கும் பொன்னுலகை ஆள் கின்றவர்கள் ஆவார்கள்.

மதுசூதனனைப் பற்றியே நினைப்பதுவும் பேசுவதும் அலற்றுவதுமாக உள்ளவர்கள் திருக்கோளூரைப் பற்றி சடகோபன் சொன்ன இப்பத்துப் பாசுரங்களையும் மனமாரச் சொல்லுகிறவர்கள் அந்த குபேர பட்டணத்தையே ஆள்கிற வர்கள் ஆவார்கள் எ—று,

திகழ் பொன்னுலகு என்பது பிரசித்திபெற்ற குபேர பட்டணம் ஆகும்.

திருக்கோளூரில் உள்ள தேவன் செல்வம் மல்கும் தேவன், அந்த தேவன் குபேரனுக்கு மரக்காலால் பொன்னை அளந்து அளந்து கொடுத்துத் தளர்ந்துபோய் அந்த மரக் காலையே தலை அணையாகக்கொண்டு அங்கு பள்ளிகொண்டான்.

ஆகையால் அவனை இடைவிடாது நினைப்பதாலும் திருக்கோளூரைப் பற்றிய இப் பாசுரங்கள் பாடுவதாலும் பொன்னுலகமே பெறலாம் எனப்பெற்றது.

ஆறும்பத்து—எட்டாந்திருவாய்மொழி

பொன்னுலகாளீரோ

6—8—1

பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ
நன்னலப்புள்ளினங்காள் வினையாட்டியேன்நானிரந்தேன்
முன்னுலகங்கலெல்லாம்படைத்த முகில்வண்ணனகண்ணன்
என்னலங்கொண்டபிரானதனக்கு என்னிலைமையுரைத்தே 1

நன்னலப் புள்ளினங்காள்—நல்ல நலமுடைய பறவை இனங்களே! நான் இரந்தேன்—நான் பணிவாகக் வணங்கிக் கேட்கிறேன், முன் உலகங்களை எல்லாம் படைத்த முகில் வண்ணன் கண்ணன் —ஆதியில் இவ்வுலகங்களை எல்லாம்உண் டாக்கிய மேகம் போன்ற நிறமுடையவனுகிய ஸ்ரீகண்ண பிரான், என் நலம் கொண்ட பிரான்தனக்கு—என்னுடைய நிறைவைக் கவர்ந்து கொண்டுவிட்ட பெருமானிடம், என் நிலைமை உரைத்து—என்னுடைய வருந்துகின்ற தனிமை நிலை மையைப் பற்றிச் சொல்லி, பொன்னுலகு ஆளீரோ புவனி முழுது ஆளீரோ—சுவர்க்க லோகத்தை ஏன் இந்த வையகம் முழுவதையும் ஆள உங்களுக்கு விருப்பமில்லையா? நீங்கள் இந்த சிறிய சேவையாகிய தூது கொண்டுபோனுல் இவற் றைப்பெற்று அதிபதிகளாகத் திகழலாமே செய்யுங்கள் என்ற வாறு. ஆளீரோ—ஆளமாட்டீர்களோ? ஆளுங்கள் எ—று.

இவ்வாறு ஸ்ரீ கண்ணனிடம் காதல் கொண்ட ஒரு பெண் பறவை இனங்களைப் பார்த்துச்சொல்லுகிருள். நீங்கள் நல்ல நலத்தை விரும்புகிறீர்கள். பெடையுடன் ஆண்பறவைக ளாகக் கூடி இரைதேடும் நலத்தை விரும்புகிறீர்கள். நான் அந்த நலம் இல்லாது வருந்துகிறேன். என் நாயகன் ஸ்ரீ கண் ணன் என்னுடைய மனதை இழுத்துக்கொண்டு போய்விட் டான். அவனிடமே என் மனம் நாடி அலைகிறது. நீங்கள் போய் அவனிடம் சொல்லி எனக்கு அருளும்படி செய்தால் உங்களுக்குச் சுவர்க்கலோகம் என்ன இந்த உலகம் முழுவதும் பெறலாம் என்கிருள்.

8—8—2

மையமர்வாள்நெடுங்கண் மங்கைமார்முன்பென்கையிருந்து
நெய்யமரின்னடிசில் நிச்சல்பாலொடுமேவீரோ
கையமர்சக்கரத்து என்கனிவாய்ப்பெருமானைக்கண்டு
மெய்யமர்காதல்சொல்லிக் கிளிகாள்விரைந்தோடிவந்தே 2

கிளிகாள்! — கிளிகளே! மை அமர் வாள் நெடுங்கண் மங்கைமார் முன்பு என் கை இருந்து —மைபூசப்பெற்ற வையும் ஒளியுடையவையும் விசாலமானவையுமான கண்களையுடைய மாதர்களுக்கு முன்னால் இருந்து நான் கொடுக்க என் கையிலிருந்து, நெய் அமர் இன் அடிசில் நிச்சல்பாலொடு மேவீரோ—நாள்தோறும் இனிய நெய் கலந்த சோற்றைப் பாலுடன் பெற நீங்கள் விரும்பவில்லையா? கை அமர் சக்கரத்து என் கனிவாய்ப் பெருமானைக்கண்டு—கையில் சக்கரம் ஏந்தியவனும் சிவந்த வாயையும் உடைய என்னுடைய பெருமானைக் கண்டு, மெய் அமர்காதல் சொல்லி விரைந்து ஓடி வந்தே—நான் அவனிடம் கொண்ட உண்மையான காதலைப் பற்றிச் சொல்லி திரும்பி வேகமாகப்பறந்து வந்து (என்னிடம் நெய் கலந்த இன் அடிசில் பெறுவீராக) எ—று.

கிளிகளே! நீங்கள் என்னுடைய திருமால் பெருமானிடம் என்னுடைய உடலையும் உள்ளத்தையும் வாட்டுகின்ற காதலைப்பற்றிச் சொல்லி விரைந்து வந்தீர்களானால் நான் உங்களுக்கு நல்ல பால்சோறும் நெய்ச்சோறும் மங்கையர்களுக்கு முன் நின்று சிறப்புப்பெறுமாறு பெறலாமே. நீங்கள் அதை விரும்பவில்லையா என்று காமுற்ற நங்கை ஒருவள் கிளிகளைப் பார்த்துச் சொல்கிறாள்.

6—8—3

ஓடிவந்தென்குழல்மேல் ஒளிமாமலரூதீரோ
கூடியவண்டினங்காள் குருநாடுடையைவர்கட்காய்
ஆடியமாநெடுந்தேர்ப் படைநீறெழச்செற்றபிரான்
சூடியதண்துளவமுண்ட தூமதுவாய்கள்கொண்டே. 3

கூடிய வண்டினங்காள்!—கூட்டமாகக் கூடியிருக்கும் வண்டுகளே! குருநாடுடை ஐவர்கட்காய்—குருநாட்டையுடைய பஞ்சபாண்டவர்களுக்காய், ஆடிய மாநெடுந்தேர்ப்படை—பாரதப்போரில் போர்க்கோலங்கொண்டு எழுந்த கௌரவர்களின் மிகப் பெரிய இரதப்படைகளை, நீறுஎழச் செற்றபிரான்—பொடியாகும்படியாகப் பாழ்படுத்திய ஸ்ரீ கண்ணபிரான், சூடிய தண்துளவம் உண்ட தூமதுகள் வாய் கொண்டுஏ—அணிந்த திருத்துழாயை நுகர்ந்துவந்த புனிதமான தேனைக் கொண்ட உங்களுடைய வாய்களால், ஓடிவந்து என் குழல் மேல் ஒளிமாமலர் ஊதிரோ—பறந்துவந்து என்னுடைய கூந்தலில் உள்ள உயர்ந்த மலர்களில் ''ஊதமாட்டீர்களா?

ஸ்ரீ கண்ணன்பால் காமுற்ற அந்நங்கை வண்டுகளைப் பார்த்து அக்கண்ணன் அணிந்துள்ள துளசியிலுள்ள தேனுண்ட நீங்கள் என் தலையில் உயர்ந்த ஜாதிமலர்களை அணிந்துள்ளேன் அவற்றில் வந்து உங்கள் மதுவுண்ட வாய்களால் ஊதுங்கள், வருந்துகின்ற என் மனமும் வேகின்ற என் உடலும் குளிருமே என்று இரங்கி வேண்டுகிறாள். அந்தக் கண்ணன்பால் கொண்ட ஆர்வம் தான் என்னே! அப்படியாவது அவன் சம்பந்தம் பெறலாமே என்பதுதான். அந்தக்கண்ணன் யார் என்றால் அவன்தான் மகாஇரத வீரர்களையும் இரதப்படைகளையும் கொண்டு பாண்டவர்களை அழிக்கவந்த கௌரவர்களைத் துகள் துகளாகத் துவம்சம் செய்தவன் என்று நாயகியாகிய ஆழ்வார் பெருமானார் அவன் எல்லையற்ற பெருமையையும் அவன்அணிந்துள்ள துளவத்தின் மகிமையையும் நமக்கு உணர்த்துகிறார்.

6—8—4

தூமதுவாய்கள்கொண்டுவந்து என்முல்லைகள்மேல்தும்பிகாள்
பூமதுவுண்ணச்செல்லில் வினையேனைப்பொய்செய்தகன்ற
மாமதுவார்தண்துழாய்முடி வானவர்கோனைக்கண்டு
யாமிதுவோதக்கவாறு என்னவேண்டுங்கண்டீர்நுங்கட்கே. 4

என் முல்லைகள்மேல் தும்பிகாள்!—என்னுடைய முல்லைக்கொடிகள் மேலுள்ள தும்பிகளே! தூமதுவாய்கள் கொண்டுஉவந்து—தூய்மையான தேனையுண்ணும் ஆசையுடன் மகிழ்ச்சி கொள்ள, பூமது உண்ணச் செல்லில்—பூக்களிலுள்ள தேனை உண்பதற்காகச் செல்வீர்களாயின், வினையேனைப் பொய் செய்தகன்ற —பாவியாகிய என்னை வஞ்சித்த, மாமதுவார் தண்துழாய் முடி வானவர்கோனைக்கண்டு—சிறந்த தேன் நிறைந்த இனிய துழபமுடியுடைய வானவர்கோனாகிய திருமாலைக்கண்டு, யாம்—நாங்கள், இதுவோ தக்கவாறு—பெறத் தகுந்த வகை இதுதானோ, என்ன வேண்டும் கண்டீர்—என்று கேட்கவேண்டும்காண், நுங்கட்குஏ—நீங்கள் (வேற்றுமை மயக்கம்), முல்லைக்கொடிகளின் மேலுள்ள தும்பிகளைப் பார்த்து எம்பெருமானிடம் காதல் கொண்ட நங்கை தூது சொல்லி அனுப்புகிறாள்.

வானவர்களுக்குத் தலைவனான ஸ்ரீ கண்ணபிரான் என் மனதைக் கவர்ந்துவிட்டு எனக்கு அருள் புரிகின்றவனாக வருகிறேன் என்று சைகை செய்துவிட்டுப் போனான். அவன்வரவே இல்லை. நிர்கதியாக விட்டுவிட்டுப் போய்விட்டான். நீங்கள் பூக்களில் தேன் எடுக்கப்போவீர்களே அப்பொழுது அவரைப்

பார்த்து இது தான் எங்களுக்குத் தகுதியான வழியோ என்று உங்களுடைய இனிய வாய்களால் கேளுங்கள் என்று தூது விடுகிறாள்.

6—8—5

நுங்கட்குயானுரைக்கேன்வம்மின் யான்வளர்த்தகிளிகாள்
வெங்கண்புளளூர்ந்துவந்து வினையேனைநெஞ்சங்கவர்ந்த
செங்கண்கருமுகிலைச் செய்யவாய்ச்செழுங்கற்பகத்தை
எங்குச்சென்றாகிலும்கண்டு இதுவோதக்கவாறென்மினே. 5

யான் வளர்த்த கிளிகாள்! —என்னால் வளர்க்கப்பட்ட கிளிகளே! நுங்கட்கு யான் உரைக்கேன் வம்மின்—நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் வாருங்கள், வெங்கண்புள்ஊர்ந்து வந்து வினையேனை நெஞ்சம் கவர்ந்த செங்கண்கருமுகிலைச் செய்யவாய்ச் செழும்கற்பகத்தை—பகைவர்கள் அஞ்சத் தகுந்த கண்களையுடைய கருடன் மீது வந்து பாவியாகிய என்னுடைய உள்ளத்தை மயக்கம் செய்து கவர்ந்து போன சிவந்த கண்களும் கரியமேனியும் சிவந்த வாயும் உடைய ஸ்ரீ கண்ணனை செழுமையுடைய கற்பகம் போன்றவனை, எங்குச் சென்றாகிலும் கண்டு—எப்படியாகிலும் கண்டுபிடித்து, இதுவோ தக்கவாறு என்மினே— இதுதான் எங்களுக்குத் தகுதியான வழியோ என்று சொல்லுங்கள்.

இதனால் எம்பெருமான் எங்கிருந்தாலும் அவனைத் தேடி அடைய வேண்டும் என்று பொருள். அவன் தூரமாக இருந்தாலும் அடைய வேண்டிய பெருமானைத் துணைகொண்டாகிலும் சென்று அவனுடைய அருளைப் பெறவேண்டும் என்றவாறு.

6—8—6

என்மின்னுநூல்மார்வன் என்கரும்பெருமானென்கண்ணன்
தன்மன்னுநீள்கழல்மேல்தண்துழாய் நமக்கன்றிநல்கான்
கனமின்களென்றும்மையான் கற்பியாவைத்தமாற்றம்சொல்லி
சென்மின்கள்தீவினையேன் வளர்த்தசிறுபூவைகளே 6

என் மின்னுநூல் மார்வென் என்கரும்பெருமான் என் கண்ணன்—பிரகாசிக்கின்ற பூணூல் பொருந்திய மார்பையுடைய என் பெருமான், கரியநிறமுடையவன் என் பெருமான்

அவன் என் கண்ணன், தன் மன்னுநீள் கழல் மேல் தண் துழாய் நமக்கன்றி நல்கான்—நித்யமான தன்னுடைய நீண்ட திருவடிகளின் மேலுள்ள திருத்துழாய் நமக்கு அல்லாமல் வேறு யாருக்கும் கொடுக்க மாட்டான், கல்மின்கள் என்று உம்மையான் கற்பியா வைத்த மாற்றம் —கற்றுக்கொள்ளுங் கள் என்று உங்களை நான் கற்றுக்கொடுத்த வார்த்தையைச் சொல்லிச் சென்மின்கள்—அவனிடம் சொல்லிவிட்டுப் பிறகு செல்லுங்கள், தீவினையேன் வளர்த்த சிறு பூவைகளே — கொடிய பாவியாகிய என்னால் வளர்க்கப்பெற்ற சிறிய நாகணவாய்ப்பறவைகளே. ஸ்ரீகண்ணபிரானிடம் மையலுற்ற மங்கை அப்பெருமானிடம் பூவைகளைத் தூது விடுகிறாள்.

அவள் எம்பெருமானிடம் வைத்திருக்கும் அசையாத நம்பிக்கையைப் பாருங்கள். பூவைகளுக்கு எவ்வளவு ஆணித் தரமாகச் சொல்லி அனுப்புகிறாள் என்பதைப் பார்த்தாலே அவளுடைய ஆர்த்தியும் அவளுடைய பாதிவிரத்யமும் புலப் படும். எம்பெருமானை நினைத்துநினைத்து இவ்வாறு அசையாத நம்பிக்கை வரவேண்டும்.

6—8—7

பூவைகள்போல்நிறத்தன் புண்டரீகங்கள்போலும்கண்ணன்
யாவையும்யாவருமாய் நின்றமாயனென்னாழிப்பிரான்
மாவைவல்வாய்பிளந்த மதுசூதற்கென்மாற்றம்சொல்லி
பாவைகள்தீர்க்கிற்றிரே வினையாட்டியேன்பாசறவே. 7

பூவைகள்போல் நிறத்தன்—காயாம்பூப்போல் நிற முடையவன், புண்டரீகங்கள் போலும் கண்ணன் —தாமரை மலர்போன்ற கண்களையுடையவன், யாவையும் யாவருமாய் நின்ற மாயன் என் ஆழிப்பிரான்—உயிருள்ளவையும் உயிரில் லாதவையுமான எல்லா அஃறிணைப் பொருள்களாகவும்உயர் திணைப்பொருள்களாகவும் நின்ற மாயமுள்ளவன் என்னுடைய சக்கரப்பெருமான், மாவை—கொக்கின், வல்வாய் பிளந்த மதுசூதற்கு—கொடிய வாயைப் பிளந்த ஸ்ரீ கண்ணனுக்கு, என் மாற்றம் சொல்லி—என் வார்த்தையைச் சொல்லி, பாவைகள்—பாவைப்பறவைகளே! தீர்க்கிற்றிரே வினையாட் டியேன் பாசறவே— பாவியாகிய என்னுடைய துன்பத்தை நீக்குவீராக.

பாசறவு—துன்பம், மா—கொக்கு,

ஸ்ரீ கண்ணனை அடையப்பெருத துன்பத்தில் ஆழ்ந் திருக்கின்ற நாயகி அம்மதுசூதனனிடம் தூது சென்று தன் னுடைய துன்பத்தை நீக்குமாறு இரங்கிவேண்டுகிருள். பிர பஞ்சமே அவன் வடிவமாக உள்ளவன், அவன் நீலநிற மேனி யுடன் தாமரைபோன்ற கண்களைக்கொண்டு ஸ்ரீ கண்ணன் என்ற வடிவில் உள்ளான் என்று சொல்லி அனுப்புகிருள்.

செடிகொடிகள் என்ன மரங்கள் என்ன பட்சிபற வைகள் என்ன மிருகங்கள் மக்கள் என்ன எல்லாம் அவன் வடிவங்களே என்கிருள்.

6—8—8

பாசறவெய்தியின்னே வினையேனெனையூழிநைவேன்
ஆசறுதூவிவெள்ளைக்குருகே அருள்செய்தொருநாள்
மாசறுநீலச்சுடர்முடி வானவர்கோனைக்கண்டு
ஏசறும்நும்மையல்லால் மறுநோக்கிலள்பேர்த்துமற்றே. 8

ஆசு அறு தூவி வெள்ளைக்குருகே—குற்றம் அற்றஇறக் கைகளையுடைய வெண்குருகே! பாசறவு எய்தி இன்னே வினை யேன் எனை ஊழி நைவேன்—துன்பம் கொண்டு இம்மாதிரியாக பாவியாகிய நான் எத்தனை ஊழிக்காலம் வருந்துவேன், அருள் செய்து ஒருநாள் மாசு அறு நீலச்சுடர் வானவர்கோனைக்கண்டு —தயவு செய்து ஏதாவது ஒருநாள் குற்றம் அற்ற நீல ஒளி வண்ணமுடைய தேவதேவன் எம்பெருமானைக் கண்டு, ஏசு அறும்—பழியை நீக்குக, நும்மை அல்லால்—உன்னைத் தவிர மறுநோக்குஇலள்—வேறு எண்ணம் இல்லாதவள், பேர்த்தும் அற்றே—மனம் பிறழ்ந்தாலும் உன்னைத்தவிர வேறு நினைப்பு இல்லாதவள் (என்னுமாறு சொல்லி ஏசு அறுக்க) எ-று.

எம்பெருமான் வருவான் வருவான் என்று எதிர்பார்த் துப்பார்த்து அவன் வராமல் சலித்துப்போன நாயகி வெண் குருகு ஒன்றைப் பார்த்துத் தூதுவிடுகிருள். நான் எத்தனை காலம் பொறுப்பேன். அவன் குற்றமற்ற நீலச்சுடர் வண்ணன் தேவதேவனிடம் என்னுடைய பதிவிரதத்தன்மையை எடுத் துச் சொல்லி என்பால் ஒருவேளை பழி இருந்தால் அது நீங் கட்டும். மனத்தாலும் சிந்தையாலும் வேறு நினைப்பு இல் லாதவள். அவனையே நினைத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிப் பழியை நீக்குக என்கிருள்.

எம்பெருமான் ஒருவனையே வழிபட்டு அவ்வொருவனையே நம்பி இருந்தல் வேண்டுமென்பது இதனால் உணர்த்தியவாறு.

6—8—9

பேர்த்துமற்றோர்களைகண் வினையாட்டியேன்நானொன்றிலேன்
நீர்த்திரைமேலுலவி இரைதேரும்புதாவினங்காள்
கார்த்திரள்மாமுகில்போல்கண்ணன் விண்ணவர்கோனைக்கண்டு
வார்த்தைகள்கொண்டருளியுரையீர் வைகல்வந்திருந்தே. 9

நீர்த்திரைமேல் உலவி இரைதேரும் புதாவினங்காள்! நீர் அலைகளின் மேல் பறந்து உணவுதேடும் நாரைகளே! பேர்த்து மற்றோர்களைகண்வினையாட்டியேன் நான் ஒன்று இலேன்—பெயர்த்தும் (மனம் பிறழ்ந்தாலும்) வேறோர்பற்று எதுவும் இல்லாதவள் பாவியாகிய நான், கார்த்திரள்மாமுகில் போல் கண்ணன்—கார்காலத்துத் திரண்ட பெரிய மேகம் போல் நிறமுடைய கண்ணன், விண்ணவர் கோனைக்கண்டு—தேவர்கள் நாயகனாகிய பெருமானைப்பார்த்து, வார்த்தைகள் கொண்டு அருளி உரையீர்—என் செய்தியைச் சொல்லி அருளுங்கள், வைகல் வந்து இருந்தே—பொழுது இருக்கவே சீக்கிரமாக வந்திருந்து (சொல்லி அருளுங்கள்) எ-று.

களைகண்—பற்றுக்கோடு, துணை.

எம்பெருமானை அடைவதற்கு இவ்வாறு இறுதியாக வேறு கதியற்றவளாக அவனிடம் முறையிடல் வேண்டும் என்றவாறு.

6—8—10

வந்திருந்தும்முடைய மணிச்சேவலும்நீருமெல்லாம்
அந்தரமொன்றுமின்றி அலர்மேலசையுமன்னங்காள்
என்திருமார்வற்கென்னை இன்னவாறிவள்காண்மினென்று
மந்திரத்தொன்றுணர்த்தியுரையீர் மறுமாற்றங்களே.

அந்தரம் ஒன்றும் இன்றி அலர்மேல் அசையும் அன்னங்காள்—மலர்களின்மேல் உவமை என்பது இல்லாமல் திரிகின்ற அன்னப்பறவைகளே! வந்திருந்து உம்முடைய மணிச் சேவலும்நீரும் எல்லாம்—உங்களுடைய அழகிய ஆண்பறவைகளுடன் வந்திருந்து என் திருமார்வற்கு என்னை—என்னுடைய

பெருமான் ஸ்ரீமன்நாராயணனுக்கு என்னை, இன்னவாறுஇவள் காண்மின் என்று—தனிமையாய் இருக்கின்ற இவளைப் பாருங்கள் என்று, மந்திரத்து ஒன்று உணர்த்தி உரையீர் மறுமாற்றங்களே—வேறு வார்த்தைகளைக்கொண்டு சுருக்கமாக ஒன்றைச்சொல்லி அருளுங்கள்.

அந்தரம்—தனிமை/ஒப்பு.

இந்நிலை நானும் சொன்னபடியே சொல்லாமல் எந்த ஒரு பற்றுக்கோடும் இல்லாமல் அந்தரத்தில் இருந்தவாறு இவள் தவிக்கிறாள். இன்னவள் என்று வேறு ஏதாவது சுருக்கமாகச் சொல்லியருளுங்கள். அந்த ஸ்ரீமன் நாராயணனிடம் அவன் என்னுடைய பெருமான் என்று பக்தியில் முற்றிய நங்கை அன்னங்களைத் தூதுவிட்டவாறு.

ஆச்சாரியர்களைக்கொண்டு குறை நிவர்த்தித்தலையும் குறிக்கும். அன்னங்கள் ஆச்சாரியர்களைக் குறிக்கும்.

6—8—11

மாற்றங்களாய்ந்துகொண்டு மதுசூதபிரானடிமேல்
நாற்றங்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன
தோற்றங்களாயிரத்துள் இவையுமொருபத்தும்வல்லார்
ஊற்றின்கண்நுண்மணல்போல் உருகாநிற்பர்நீராயே. 11

மாற்றங்கள் ஆய்ந்துகொண்டு—வார்த்தைகளை நன்றாக ஆராய்ந்தபிறகு, மதுசூதபிரான் அடிமேல்—மதுசூதனப் பெருமானின் திருவடிகள்மேல், நாற்றங்கொள் பூம்பொழில் சூழ்குருகூர்ச்சடகோபன் சொன்ன—மணம்கமழும் சோலைகளால் சூழப்பெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன, தோற்றங்கள் ஆயிரத்துள்—படைப்புக்களாம் பாசுரங்கள் ஆயிரத்தில், இவையும் ஒரு பத்தும் வல்லார்—இந்தப்பத்துப் பாசுரங்களும் உணர்வுறப் பயன்படுத்துவதில் வல்லவர்கள், ஊற்றின்கண் நுண்மணல்போல் உருகா நிற்பார் நீராய்—ஊற்றின் முகப்பில் மணல்துகள்கள் எப்படி கலங்கிக்கரைந்துகொண்டே இருக்குமோ அதுபோல மனம் கரைந்து உருகுவார்.

நீராய்நிலனாய்

6—9—1

நீராய்நிலனாய்த் தீயாய்க்காலாய்நெடுவானாய்
சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனானாய்
கூராராழிவெண்சங்கேந்திக் கொடியேன்பால்வாராய்
ஒருநாள்மண்ணும்விண்ணும்மகிழவே. 1

காலாய்—காற்றாய், கூர் ஆர்—கூர்மை பொருந்திய, ஆழி—சக்கரம், அயன்—பிரமன்,

ஆழ்வார் பெருமானார் எம்பெருமானை நினைத்து இவ்வாறு வேண்டுகிறார். பெருமானே! நீ நிலம் நீர் தீ காற்றுஆகாசமாகிய ஐம்பெரும் பூதங்களாய் நின்றாய். சிறப்புடைய சூரிய சந்திரர்களாகிய சுடர்கள் இரண்டாய் சிவனாய்பிரமன் ஆனாய். கூர்மை பொருந்திய சக்கரத்தையும் வெண்மைநிறச் சங்கையும் ஏந்திக்கொண்டு கொடியவனாகிய என்னிடம் வருவாயாக ஒருநாள் இந்த மண்ணுலகமும் விண்ணுலகமும் மகிழும்படியாக. எ—று.

இந்த பிரபஞ்சமாய் நிற்பது நீதான். ஆனால் அதைப் பார்த்தும் அறிகிறவர்கள் அபூர்வம், அறிந்தவர்களும் மகிழ்வது அபூர்வம். ஆனால் நீ சங்கு சக்கரம் ஏந்தி வந்தால் இந்த உலகம் மகிழும். ஏன் தேவருலகும் மகிழும். இதை நீ ஒருநாள் அருள்புரிவாயாக.

6—9—2

மண்ணும்விண்ணும்மகிழக் குறளாய்வலங்காட்டி
மண்ணும்விண்ணும்கொண்டமாயவம்மானே
நண்ணியுனைநான் கண்டுகந்துகூத்தாட
நண்ணியொருநாள் ஞாலத்தூடேநடவாயே. 2

மண்ணும் விண்ணும் மகிழ—நிலவுலகமும் வானுலகமும் மகிழ்ச்சி அடையும்படியாக, குறளாய்—குட்டையனாய் வடிவங்கொண்டு, வலம்காட்டி—திறமையைக்காட்டி, மண்ணும் விண்ணும் கொண்ட மாய அம்மானே!—பூமியையும் ஆகாசத்தையும் அளந்துகொண்ட மாயம் வல்ல தந்தையாகிய பெருமானே! நண்ணி—பொருந்தி, உனை—உன்னை, நான் கண்டு உகந்து கூத்தாட—நான் பார்த்து மகிழ்ச்சிகொண்டு கூத்தாட, நண்ணி ஒருநாள் ஞாலத்து ஊடே நடவாய்ஏ—பொருந்தி ஒருநாள் இந்த உலகத்தில் திரிவாயாக.

பெருமானே! நீ மண் உலகும் விண்உலகும் மகிழ்வுற வாமன வடிவங்கொண்டு பிறகு திரிவிக்கிரமனுய் மண்ணையும் விண்ணையும் அளந்து உன்னதாக்கிக்கொண்டாய். அப்பேர்ப் பட்ட மாயா சக்தி படைத்தவன் நீ. நான் உன்னைக்கண்டு மகிழ்ச்சி கொண்டு கூத்தாடும் படியாக ஒருநாள் இந்த உலகில் திரிவாயாக. என்று ஆழ்வார் பெருமானுர் வேண்டுகிருர்.

6—9—3

ஞாலத்தூடேநடந்துநின்றும் கிடந்திருந்தும்
சாலப்பலநாள் உகந்தோறுயிர்கள்காப்பானே
கோலத்திருமாமகளோடு உன்னைக்கூடாதே
சாலப்பலநாள் அடியேனின்னும்தளர்வேனே. 3

ஞாலத்து ஊடே—உலகத்தில், நடந்து நின்றும் கிடந்து இருந்தும் சாலப் பலநாள் உகந்தோறு(ம்) உயிர்கள் காப்பானே—நடக்கவேண்டிய இடத்தில் நடந்தும் சில இடங் களில் நின்றும் சிலஇடங்களில் கிடக்கை கொண்டும் சிலஇடங் களில் வீற்றிருந்தும் அநேககாலம் யுகம் யுகமாக உயிர்களைக் காப்பாற்றுகிறவன் நீ. கோலத்திருமாமகளோடு உன்னைக் கூடாதே சாலப் பலநாள் அடியேன் இன்னும் தளர்வேனே —ஸ்ரீ: பதிகோலத்திலே உன்னை அடையாது இன்னும் அநேக நாட்கள் நான் சோர்ந்தவனுய் இருப்பதோ. இது உனக்குப் பொருந்துமா என்றவாறு.

இப்பாசுரத்தால் ஆழ்வார் பெருமானுர் எம்பெருமான் இவ்வுலகைக்காப்பாற்றுகின்ற தன்மையைக் கூறுகின்றுர்.

இராமாவதாரகாலத்தில் எம்பெருமான் ஸ்ரீராமனுய்க் காலால் நடந்து சிஷ்டபரிபாலனம் செய்ய அரக்கர்களைக்கொன்று அழித்தார். ஸ்ரீ கிருஷ்ணுவதாரகாலத்தில் காலால் நடந்து கோகுலத்தில் அநேக லீலைகள் புரிந்தார். அசுரர்களைக்கொன் றுர். அசுரர்களை ஏவிய கம்சனையும் ஒழித்தார். பாண்டவர் களுக்காகத் தூது நடந்து பாரதம் கைசெய்தார். அநேக இடங்களில் அர்ச்சாவதார ரூபத்தில் நின்றும் இருந்தும் கிடந் தும் உயிர்களை உய்யும்படி செய்கின்றுர். பாரதப்போரில் தேர்த்தட்டிலிருந்தும் நின்றும் பின் நடந்தும் அநேகமாயங் கள் புரிந்தும் பூபாரம் தவிர்த்தார். வைகுந்தத்தில் இருந்த வாறும் பாற்கடலில் கிடந்த வாறும் பூவுலகில் நின்றவாறும் உலகைக்காத்து வருகின்றுர். இவ்வாருகக் பலகாலமாய்க் காப்பாற்றி வருகின்ற பெருமானே! நான் இன்னும் உன்னை உன் திருமகளோடு பாராமல் இருப்பதா? எத்தனைகாலம் இப் படிப்பாராமல் நான் தளர்வது. எனக்கு அருள்புரிவாயாக எ—று.

6—9—4

தளர்ந்தும்முறிந்தும் சகடவசுரருடல்வேறு
பிளந்துவீயத் திருக்காலாண்டபெருமானே
கிளர்ந்துபிரமன்சிவன் இந்திரன்விண்ணவர்சூழ
விளங்கவொருநாள் காணவாராய்விண்மீதே. 4

தளர்ந்தும் முறிந்தும் சகட அசுரர் உடல் வேறுகப் பிளந்து வீய —சக்கரம் தள்ளாடி முறிந்து விழ சக்கரவடிவில் இருந்த அசுரனின் உடல் பிளவுபட்டு இறக்க, திருக்கால் ஆண்ட பெருமானே! —திருவடியால் உதைத்த பெருமானே! கிளர்ந்து பிரமன் சிவன் இந்திரன் விண்ணவர் சூழ—கிளர்ந்து —ஆர்வத்துடன் எழுந்து, பிரமனும் சிவனும் இந்திரனும் தேவர்களும் சூழ்ந்து, விளங்க ஒரு நாள் காணவாராய் விண் மீதே—காணும் படியாக உன்னுடைய திவ்வியமான கோலத்தில் ஆகாசத்தில் வருவாயாக.

தேவர்களுக்காக ஒருநாள் ஆகாய மார்க்கமாக வருவாயாக என்கிறுர் ஆழ்வார் பெருமாஞர்.

6—9—5

விண்மீதிருப்பாய்மலைமேல்நிற்பாய் கடல்சேர்ப்பாய்
மண்மீதுழல்வாய் இவற்றுளெங்கும்மறைந்துறைவாய்
எண்மீதியன்றபுறவண்டத்தாய் எனதாவி
உன்மீதாடி உருக்காட்டாதேயொளிப்பாயோ. 5

விண்மீது இருப்பாய் மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய் — வைகுந்தத்தில் வீற்றிருப்பாய் திருவேங்கடமலையில் நிற்பாய் பாற்கடலில் துயில் கொள்ளச் சேர்வாய், மண்மீது உழல்வாய் இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்—பூவுலகில் அவதாரங்கள் கொண்டு மனிதர்க்காகப் படாதபாடு படுவாய், உலகில் எல்லா இடங்களிலும் தெரியாமல் தோய்ந்து இருப்பாய். எண்மீது இயன்ற—மனதால் சிருஷ்டிக்கப்பட்ட, புற அண்டத்தாய்—அப்பாலுக்கப்பாலான அண்டமுடையவன் நீ, எனதுஆவி உன்மீது ஆடி—என்னுடைய பிராணனின் உள்ளும் புறமும் நீ திரிந்துவிட்டு, உருக்காட்டாதே ஒளிப்பாயோ—உன்னுடைய உருவத்தைக்காட்டாமல் மறைப்பாயோ.

ஆழ்வார் பெருமாஞர் இப்பாசுரத்தால் எம்பெருமானின் வியாபகத் தன்மையைக் கூறுகிறுர்.

வானுலகில் வீற்றிருப்பாய், மலைமேல் நிற்பாய் கடலில் பள்ளிகொள்ளச் சேர்வாய், மண்மீது உழல்வாய் இவற்றுள் எங்கும் மறைந்துநிற்பாய். தவிர இவ்வுலகங்களுக்கு அப்பாலான மானசீகமான புற அண்டம் உடையாய், இவற்றிற்கு எல்லாம் மேலாக என் உயிர் உள்ளும் புறமும் உள்ளவனாய் இருக்கின்றாய். இருப்பினும் உன்னுடைய உருவத்தை எனக்குக் காட்டாமலே போவாயோ என்கிறார்.

6—9—6

பாயோரடிவைத்ததன்கீழ்ப் பாவைநிலமெல்லாம்
தாய் ஓரடியால் எல்லாவுலகும்தடவந்த
மாயோன் உன்னைக்காண்பான் வருந்தியெனைநாளும்
தீயோடுடன்சேர்மெழுகாய் உலகில்திரிவேனோ. 6

பாய் ஓர்அடி வைத்து—பாய்ந்து (பரப்பி) ஒரு அடியை வைத்து, அதன்கீழ் பரவை நிலமெல்லாம் தாய்—அந்த அடியின் கீழே கடலும் நிலமும் முழுவதுமாகத் தாவி, ஓர் அடியால் எல்லா உலகும் தடவந்த மாயோன்—மற்றோர் அடியால் எல்லா உலகங்களையும் தாவியமாயவன் நீ, உன்னைக் காண்பான் வருந்தி—உன்னைக்காணும்பொருட்டு வருந்தி, எனைநாளும் தீயோடு உடன்சேர் மெழுகாய் உலகில் திரிவேனோ—எல்லா நாட்களும் தீயிலிட்ட மெழுகுபோல உருகி உலகில் அலைவேனோ.

ஆழ்வார் பெருமானார் எம்பெருமானின் திவ்யமான மாயச் செயலைப்பற்றிக் கூறித் தன்னைக் காண்பதற்காகப்படும் துன்பத்தைப்பற்றிக் கூறுகிறார்.

ஒருஅடியை வேகமாய்ப் பரப்பிவைத்து அதன்கீழ் கடலும் நிலமும் எல்லாம் தாவி மற்றோர் அடியால் எல்லா உலகங்களையும் தடவுமாறு தாவிய மாயவன் நீ. உன்னைக் காண்பதற்காக எத்தனை காலம் தீயிலிட்ட மெழுகுபோல் நான் வருந்தி உலகில் திரிவதோ தெரியவில்லை. நீ அருளக் கூடாதா என்றபடி.

6—9—7

உலகில்திரியும்கருமகதியாய் உலகமாய்
உலகுக்கேயோருயிருமானாய் புறவண்டத்து
அலகில்பொலிந்த திசைபத்தாயவருவேயோ,
அலகில்பொலிந்த அறிவிலேனுக்கருளாயே. 7

உலகில் திரியும் கருமகதியாய்—உலகத்தில் இயங்கும் முறைமையான செயல்களுக்குக்காரணமாய் அமைந்து, உலகமாய்—உலகமாகவும் அமைந்து, உலகுக்கே ஓர் உயிருமானாய்—உலகுக்கு ஒப்பற்றதலைவனாகவும் அமைந்தாய், புற அண்டத்து அலகில் பொலிந்த—உலகிற்கு புறத்தே அப்பாலுள்ள எல்லையில்லாததாய் விளங்குகின்ற, திசை பத்தாய் அருவேயோ—திக்குகள் பத்தாகிய அருவ மோ (உருவமற்ற தன்மையோ) அலகில் பொலிந்த அறிவிலேனுக்கு அருளாயோ—அளவற்று விளங்கும் அறியாமையையுடைய எனக்கு நீ அருள்வாயாக.

உலகத்தில் நடைபெறும் முறையான செயல்களுக்குக் காரணமாய் அமைந்தும் உலகமாகவும் அமைந்து உலகம் நடைபெறுவதற்கு ஓர் தலைவனாயும் அமைந்தாய் இந்த உலகத்திற்கு வெளியே திசைகள் போல உருவமில்லாததாய்த் தோன்றும் தோற்றமும் நீயே ஆனாய், அளவில்லாத அறியாமையை உடைய அற்பனாகிய எனக்கு நீ அருளக்கூடாதா என்று ஆழ்வார் பெருமானார் எம்பெருமானை ஏத்தி இரங்கும்படி நெருக்குகிறார்.

6—9—8

அறிவிலேனுக்கருளாய் அறிவாருயிரானாய்
வெறிகொள்சோதிமூர்த்தி அடியேன்நெடுமாலே
கிறிசெய்தென்னைப்புறத்திட்டு இன்னம்கெடுப்பாயோ
பிறிதொன்றறியாவடியேன் ஆவிதிகைக்கவே. 8

அறிவிலேனுக்கு அருளாய்—அறிவில்லாத எனக்கு நீ அருள்புரிவாயாக, அறிவார் உயிரானாய்—உன்னை அறிகின்றவர்களுக்கும் அறிய முயல்கின்றவர்களுக்கும் உயிர்போலத் துணையாக இருந்து அருள்புரிகின்றவன் நீ, வெறிகொள் சோதி மூர்த்தி—சுடர்மிக்க ஒளிவடிவினனே! அடியேன் நெடுமாலே!—தொண்டனாகிய என்னுடைய பெருமானே! கிறிசெய்து என்னைப் புறத்திட்டு—மாயம் செய்து என்னை அறியாமல் வெளியே உழலும்படி செய்துவிட்டு, இன்னம் கெடுப்பாயோ——இத்தனைகாலம் செய்தது போதாது இனிமேலும் கெடும்படி செய்வாயோ, பிறிது ஒன்று அறியா அடியேன் ஆவி திகைக்கவே—உன்னைத்தவிர வேறு எதுவும் அறியாத என்னுடைய பிராணன் கலங்கும்படியாக.

உன்னை அறிந்தவர்களுக்கே அன்றி உன்னை அறிய முயல்கின்றவர்களுக்கும் நீ உயிராக இருக்கின்றாய். அறிவில்லாது அறிய முயல்கின்ற எனக்கும் நீ அருள்புரிக. செகசெக

வென்று திகழ்கிற சோதிவடிவினன் நீ. எனக்கு நீ பெருமான். இன்னும் மாயம் செய்து என்னைக் கலங்கும்படி வெளியே தள்ளிக் கெடுக்கவேண்டாம், உன்னோடு இணைத்தருள்க எ—று.

6—9—9

ஆவிதிகைக்க ஐவர்குமைக்கும்சிற்றின்பம்
பாவியேனைப் பலநீகாட்டிப்படுப்பாயோ
தாவிவையம்கொண்ட தடந்தாமரைகட்கே
கூவிக்கொள்ளும்காலம் இன்னம்குறுகாதோ. 9

ஆவி திகைக்க ஐவர் குமைக்கும்—பிராணன் கலங்கும்படியாக மெய்வாய் கண் மூக்கு செவி ஐந்து பேர்களும் வதைக்கும், சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப்படுப்பாயோ—அற்ப இன்பங்கள் பலவற்றை எனக்குக் காட்டி தீவினையுடைய என்னைப் படாதபாடு படுத்தி எழுந்திராமல் செய்துவிடுவாயோ? தாவி வையம் கொண்ட தடம்தாமரைகட்கே கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ—பாய்ந்து திருவடிகளைப் பரப்பி உலகத்தை அளந்துகொண்ட அந்தப் பெரிய தாமரைத் திருவடிகளை அடையும்படியாக என்னை அழைத்துக்கொள்ளும் காலம் இன்னும் நெருங்காதோ.

என்னுடைய பிராணன் கலங்கும்படியாக இன்னும் சிற்றின்பங்களிலேயே உழலும்படி செய்து என்னை எழுந்திருக்காமல் படுக்கவைத்து விடுவாயோ, இந்த ஐம்புலன் கட்டுக்களையும் அவிழ்த்து எறிந்துவிட்டு உன்னுடைய உலகமளந்த திருவடிகளில் சேரும்படியாகச் செய்ய இன்னும் காலம் நெருங்கவில்லையா. நீ சீக்கிரம் என்னை அழைத்துக்கொள்வாயாக. எ—று.

6—9—10

குறுகாநீளா இறுதிகூடாவெனையூழி
சிறுகாபெருகா அளவிலின்பம்சேர்ந்தாலும்
மறுகாலின்றிமாயோன் உனக்கேயாளாகும்
சிறுகாலத்தையுறுமோ அந்தோதெரியிலே. 10

குறுகா நீளா இறுதிகூடா எனை ஊழி—குறையும் தன்மையும் நீளும் தன்மையும் முடிந்துபோகும் தன்மையும் இல்லாத எத்தனை ஊழிக்காலம், சிறுகா பெருகா அளவில் இன்பம் சேர்ந்தாலும்—குறையாததும் மிகாததுமான ஒரே நிலையான அளவுகடந்த இன்பம் வந்து அடைந்தாலும், மறுகால் இன்றி—மற்றோர் பற்றுக்கோடு இல்லாமல், மாயோன்—மாயவனே! உனக்கே ஆளாகும்—உனக்கே அடியவனாகும், சிறுகாலத்தை உறுமோ—சமயம் அமையுமோ அந்தோதெரியில் ஏ—ஐயோ பயமாய் இருக்கிறதே யோசித்துப் பார்த்தால். ஒரே மாதிரியான நீண்ட ஊழிக்காலங்கள் மாறாத பேர் இன்பமே பெற்றாலும் உன்னைத்தவிர வேறொருவரும் பற்றுக்கோடில்லாத எனக்கு உன்னை அடியவனாக அடையும் காலம் அமையுமா என்று அஞ்சுகிறேன் ஆராய்ந்து பார்க்கும் அளவில் என்கிறார் ஆழ்வார் பெருமானார்.

எத்தனை இன்பந்தான் பெற்றால் என்ன. நான் தொண்டனாகவே இருக்க விரும்புகிறேன். அந்நாள் எனக்கு வாய்க்குமோ எ—று.

6—9—11

தெரிதல்நினைத்தல் எண்ணலாகாத்திருமாலுக்கு
உரியதொண்டர்தொண்டர் தொண்டன்சடகோபன்
தெரியச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும்
உரியதொண்டராக்கும் உலகமுண்டாற்கே 11

தெரிதல் நினைதல் எண்ணல் ஆகாத் திருமாலுக்கு—ஐம்புலன்களாலும் மனதாலும் அறிய முடியாத எம்பெருமான் திருமாலுக்கு உரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்—சேர்ந்தவனாகிய அடியார்க்கும் அடியார்க்கும் அடியவனாகிய சடகோபன், தெரியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்—எம்பெருமானைப்பற்றித் தெரியுமாறு சொன்ன ஓராயிரம் பாசுரங்களில் இந்தப் பத்துப் பாசுரங்களும், உரிய தொண்டராக்கும் உலகம் உண்டாற்கே—பொருந்திய அடியவர்களாக்கும் உலகம் உண்ட எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணனுக்கே.

உலகமுண்டபெருவாயா

6—10—1

உலகமுண்டபெருவாயா உலப்பில்கீர்த்தியம்மானே
நிலவும்சுடர்சூழொளிமூர்த்தி நெடியாயடியேனுருயிரே
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே
குலதொல்லடியேனுனபாதம் கூடுமாறுகூருயே. 1

உலகம் உண்ட பெருவாயா—(பிரளயகாலத்தில்) உலகம் முழுவதையும் விழுங்கிய பெரிய வாயை யுடையவனே! உலப்பில் கீர்த்தி அம்மானே!—முடிவில்லாத புகழையுடைய பெருமானே! நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி—சுற்றிலும் சோதிபொருந்த சோதியால் சூழப்பெற்ற ஒளி வடிவினனே! நெடியாய்!—ஓங்கி உயர்ந்து நிற்கின்ற பெருமானே! அடியேன் ஆர் உயிரே—அடியவனுகிய எனக்குப் பூரணமான உயிராக இருப்பவனே! திலதம் உலகுக்காய் நின்ற திருவேங்கடத்து எம்பெருமானே!—உலகத்திற்கு திலதம்போன்ற திருவேங்கடமலையில் நிற்கின்றகோலத்தில் இருக்கின்ற எங்கள் பெருமை பொருந்திய தேவனே! குலதொல் அடியேன் உனபாதம் கூடுமாறு கூருய்ஏ—அடியார் கூட்டத்தைச் சேர்ந்த பழைய தொண்டனுகிய நான் உன்னுடைய திருவடிகளை அடையுமாறு எனக்கு அருள்வாய்.

திலதம் உலகுக்காய் நின்ற திருவேங்கடம் என்றது பூமியில் திருவேங்கடமலை உயர்ந்து ஓங்கி சிறப்புற விளங்குவதால் பூமிக்குத் திலதம் போன்றது. ஆழ்வார் பெருமானுர் திருவேங்கடமலையில் நிற்கும் ஸ்ரீனிவாசப்பெருமானை இவ்வாறு தன் திருவடிகளில் ஏற்றுக்கொள்ளுமாறு அருளும்படி வேண்டுகிருர். அந்த பெருமான் உலகம் உண்ட பெருவாயன் அளவில்லாத புகழை உடையவன் தன்னைச் சுற்றிலும் சோதி திகழ சோதியுடையவன், உயர்ந்து ஓங்கி நெடியவனுய் நிற்கிறவன். தனக்கு அரிய உயிர்போன்றவன். தன்னை ஏற்றுக் கொள்ளுவதற்குக் காரணம் தான் அநேககாலம் எம் பெருமானுக்குத் தொண்டனுக அடிமை பூண்டுவந்த தொண்டர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்பதே.

கூருய்நீருய்நிலனுகிக் கொடுவல்லசுரர்குலமெல்லாம்
சீருவெறியுந்திருநேமிவலவா தெய்வக்கோமானே
சேருர்சுனைத்தாமரைசெந்தீமலரும் திருவேங்கடத்தானே
ஆருவன்பினடியேன் உன்னடிசேர்வண்ணமருளாயே. 2

கூருய்—கூறுகூருக (பகுதிபகுதியாக), நீருய்—துகள் துகளாக, நிலனுகி—மண்ணேடு மண்ணுக, கொடுவல் அசுரர் குலமெல்லாம்—குரூரமிக்க வலிமையுடைய அரக்கர் கூட்டங்கள் எல்லாம், சீரு—சீறி (கோபித்து), எறியும்—அறுத்து எறியும்படியான (நாசம் செய்யும்படியான) திருநேமிவலவா திவ்யமான சுதர்சன சக்கரத்தை இயக்குகின்றவனே! தெய்வக் கோமானே!—தேவர்கள் தலைவனே! சேருர் சுனைந்தாமரை செந்திமலரும்—சேறுநிறைந்த சுனைகளில் தாமரைமலர்கள் நெருப்பைப்போல் செந்நிறமாக மலரும் திருவேங்கடத்தில் உள்ள பெருமானே! ஆருஅன்பின் அடியேன்—தீராத அன்பு டைய அடியவனுகிய நான், உன் அடிசேர் வண்ணம் அருளாயே —உன்திருவடிகளை அடையுமாறு கருணைபுரிவாயாக.

தேவர்களுக்குத் தலைவனுன எம்பெருமானே! தொலைக்கமுடியாத வல்லமையுடைய கொடிய அசுரர் கூட்டங்களையெல்லாம் கூறுகூருக வெட்டி வீழ்த்தி பொடிப்பொடியாக மண்ணேடு மண்ணுகும்படியாகச் சீற்றம் கொண்டு பாழ்படுத்தும் திவ்யமான சக்ராயுதத்தைச் செலுத்துகின்றவனே! சேறு நிறைந்த சுனைகளில் தாமரை மலர்கள் செந்தீயைப்போல் ஒளிரும் திருவேங்கட மலைப் பெருமானே! உன்னிடத்தில் தீராத அன்புடையவனுகிய நான் உன் திருவடிகளில் இணையுமாறு எனக்கு அருள்புரிவாயாக.

ஸ்ரீ ராமன் ஜனஸ்தானத்தில் கரன் முதலாய இராட்சதர்களை ஒன்றரை முகூர்த்த நேரத்தில் தன் சாரங்கமாகிய வில்லால் துவம்சம் செய்தான். அஃதேபோல் இலங்கா நகரத்தைப்பாழ்படுத்தினுன். பாரதப்போரில் சக்கரத்தை எடேன் என்று சபதம் செய்திருந்தும் பக்தனுகிய பீஷ்மருடைய சபதம் நிறைவேற சக்கரத்தை எடுத்தான். கையில் கோல் கொண்டு பாரதப்போர் எல்லாச்சேனையும் அவித்து ஒழித்தார். அதனுல் சீருஎறியும் திருநேமிவலவா என்ருர்.

நேமி என்றதனுல் உபலட்சணத்தால் வாள்வில் சங்கம் ஆகிய மற்ற ஆயுதங்களையும் கொண்டு என்றவாறு.

அசுரர்கள் எல்லாம் கொடியவர்கள். அவர்களை அதம் செய்தாய். ஆனால் நான் உனக்கு அளவுகடந்த அன்புடையவன். என்னை நீ உன் திருவடிகளில் ஏற்றுக்கொள்க என்று வேண்டியவாறு.

6—10—3

வண்ணமருள் கொளணிமேகவண்ணா மாயவம்மானே
எண்ணம்புகுந்துதித்திக்குமமுதே இமையோரதிபதியே
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்தானே
அண்ணலேயுன்னடிசேர அடியேற்காவாவென்னாயே. 3

வண்ணம் அருள் அணிமேக வண்ணா!—அழகுதரும் அழகிய மேகத்தின் நிறமுடையவனே! மாய அம்மானே! மாயங்களையுடைய பெருமானே! எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே!—அன்பர்களுடைய எண்ணத்தில் புகுந்து இன்பம் அளிக்கின்ற அமிர்தமே! இமையோர் அதிபதியே!—தேவர்களின் தலைவனே! தெள்நல் அருவி மணிபொன்முத்து அலைக்கும் திருவேங்கடத்தானே!—தெளிந்த நல்ல நீரையுடைய அருவிகள் மணியும் பொன்னும் முத்தும் கொழிக்கும் (அடித்துத்தள்ளும்) திருவேங்கடமலையை உடையவனே! அண்ணலே! உன் அடிசேர் அடியேற்கு ஆ! ஆ!! என்னாயே—உத்தம குணங்களை உடையவனே! உன்னுடைய திருவடிகளை விரும்பும் தொண்டனாகிய எனக்கு ஆ! ஆ!! என்று இரங்க மாட்டாயோ? (கருணைபுரிய மாட்டாயோ?)

அழகிய மேகம் போன்ற நிறமுடையவனே! அழகும் நல்ல தன்மைகளையும் தருகின்றவன் நீ. மாயங்கள் செய்யும் பெருமானே! அன்பர்களுடைய எண்ணங்களில் புகுந்து இன்பம் அளிக்கின்ற அமிர்தமே! தேவர்கள் தலைவனே! மணியும் பொன்னும் முத்தும் அடித்து வரும்படியான நீர்ஓடைகளையுடைய திருவேங்கடமுடைய பெருமானே! அண்ணலே! உன்னுடைய திருவடிகளை அடையும்படியாக ஆ! ஆ!! என்னுடை பக்தனே என்று மனம் இரங்கமாட்டாயோ? என்றவாறு.

இவ்வாறு ஆழ்வார் பெருமானார் திருவேங்கடநாதனுடைய உயர்ந்த கருணையையும் அவன் பெருமையையும் அவன் இருப்பிடத்தின் பெருமையையும் சொல்லித் தன் திருவடிகளில் ஏற்றுக்கொள்ள மனம் இரங்கும்படி வேண்டுகிறார்.

வண்ணம் அருள் வண்ணன் யாவற்றிற்கும் யாவருக்கும் அழகு தருகின்ற அழகுடையவன்.

ஆவாவென்றுதுலகத்தையலைக்கும் அசுரர்வாழுள்மேல்
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையா திருமாமகள்கேள்வா
தேவா சுரர்கள்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே
பூவார்கழல்களருவினையேன் பொருந்துமாறுபுணராயே. 4

ஆ! ஆ!! என்றுது—ஆ! ஆ!! என்று இரங்காது (கருணைகாட்டாது), உலகத்தை அலைக்கும்—உலகத்திற்குத் துன்பத்தை விளைவிக்கும், அசுரர் வாழ்நாள் மேல்—அசுரர்கள் ஆயுளுக்குப் பங்கம் விளைய, தீவாய் வாளி மழைபொழிந்த சிலையா—நெருப்பைக்கக்கும் அம்புமழை பெய்யும்படி செய்த வில்லை உடையவனே! திருமா மகள் கேள்வா! இலக்குமி நாயகனே! தேவா!—பெருமானே! சுரர்கள் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!—தேவர்களும் முனிவர் கூட்டங்களும் விரும்பும் திருவேங்கடம் உடையானே! பூவார் கழல்கள்—உன்னுடைய அழகுமிக்க திருவடிகளை, அருவினையேன் பொருந்து மாறு புணராயே—செய்யத்தகாத அரிய பாவங்களைச் செய்த நான் உன்னை அடையுமாறு அணைத்துக் கொள்வாயாக.

உலகத்திற்கு இரக்கம் காட்டாது இன்னல்கள் இழைத்துத் துன்புறுத்தும் அரக்க குணமுடைய இராட்சதர்கள் மீது அம்புகளால் நெருப்புமழை பெய்து அவர்களை அழித்த கோதண்டபாணியே! இலட்சுமி நாயகனே! என்பெருமானே! தேவர்களும் முனிவர்களும் விரும்பும் திருவேங்கடப் பெருமானே! உன்னுடைய அழகிய திருவடிகளைக்கொடிய பாவம் செய்தவனாகிய நான் அடையுமாறு என்னைப் பொருந்துவாயாக என்றவாறு.

தண்டகாரண்யத்தில் ஸ்ரீ ராமன் ஜானகியுடன் இருந்த சமயத்தில் சூர்ப்பணகை யால் தூண்டப்பெற்று, கரன் மிகப் பெரிய அரக்கர்படையுடன் தன்னை வளைத்துக்கொண்டான். அப்பொழுது ஸ்ரீ ராமன்தான் ஒருவனாகவே நின்று வில்லை வளைத்து நாணேற்றி ஒன்று பத்து நூறு ஆயிரமாக அம்புமழை பொழிந்து அத்தனை அரக்கர்களையும் அழித்து ஒழித்தான். வீர ராகவனாகத் திரும்பி சீதாப்பிராட்டியை சந்தித்தகாட்சியை நினைத்து ஆழ்வார் பெருமானார் அப்பேர்ப்பட்ட வல்லமையை உடைய பெருமானே! சீதாப்பிராட்டியின் கேள்வனே! எனக்கு நீ அருளவேண்டும் என்று எம்பெருமானின் பெருமையை நினைத்து தன்னை ஏற்றுக்கொள்ளும்படி இறைஞ்சுகிறார்.

6—10—5

புணராநின்றமரமேழ் அன்றெய்தஒருவில்வலவாவோ
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோனமுதல்வாவோ
திணரார்மேகமெனக்களிறுசேரும் திருவேங்கடத்தானே
திணரார்சார்ங்கத்துனபாதம் சேர்வதடியேனெந்நாளே. 5

புணரா நின்ற மரம்ஏழ் அன்று எய்த ஒரு வில்வல வாவோ—வரிசையில் பொருந்தியிராத மராமரங்கள் ஏழை ஒரே பாணத்தால் துளைத்த வில் வல்லமையுடையவனே! புணர் ஏய் நின்ற மரம் இரண்டின் நடுவே போன முதல் வாவோ—இரட்டை மரமாகப் பொருந்திநின்ற மருத மரங்களிரண்டின் நடுவே உரலுடன் தவழ்ந்து சென்ற ஆதி நாயகனே! திணர் ஆர் மேகம் எனக்களிறு சேரும் திருவேங் கடத்தானே!—அடர்ந்த மேகம்போல் யானைகள் சூழும் திரு வேங்கடமலையை உடையவனே! திணர் ஆர் சார்ங்கத்துன பாதம் சேர்வது அடியேன் எந்நாளே—கட்டமைந்த வில்லை யுடையவனாகிய உன்னுடைய திருவடிகளை நான் அடைவது எந்த நாளோ?

ஒரு கிரமத்தில் பொருந்தாது பலபடியாக நின்ற மராமரங்கள் ஏழை அன்று ஒரே பாணத்தால் துளைத்துச் செல் லும்படி செய்தாய். இது எவராலும் செய்ய முடியாத செயல். ஒன்றோடு ஒன்று பொருந்தியிருந்த இரண்டு மருத மரங்களின் இடையே இடுப்பில் கட்டப்பெற்ற உரலுடன் தவழ்ந்து சென்று அவைகளைச் சாய்ந்து விழும்படி செய்தாய். குழந்தை யாகிய நீ மரங்களை விழும்படி செய்தாயே! இது என்ன மாயச் செயல்! இவ்வளவு வல்லமை யுடைய திரு வேங்கடப்பெருமானே! கட்டமைந்த சார்ங்கம் உடையவனா கிய உன் பாதங்களை நான் கூடுவது எந்நாளோ. நீர் எனக்கு அருள்புரிய வேண்டும் என்று ஆழ்வார் பெருமானார்இறைஞ் சுகிறார்.

திருவேங்கடத்திலுள்ள பெருமான் எம்பெருமானே என்று நமக்கு உணர்த்தி அப்பெருமானை இவ்வாறெல்லாம் நினைத்து வணங்கவேண்டும் என்று நமக்கு உணர்வு பொங்கத் திருவருள் புரிகிறார் ஆழ்வார் பெருமானார்.

6—10—6

எந்நாளேநாம்மண்ணளந்த இணைத்தாமரைகள்காண்பதற்கென்று
எந்நாளும்நின்றிமையோர்களேத்தி இறைஞ்சியினமினமாய்
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே
மெய்ந்நானெய்தியெந்நாள் உன்னடிக்கணடியேன்மேவுதே. 6

எந்நாள் நாம் மண் அளந்த இணைத்தாமரைகள் காண்பதற்கு என்று—வாமனமூர்த்தியாக மண்ணையும் விண்ணையும் ஒருசேர இரண்டு அடிகளால் அளந்த தாமரை போன்ற திருவடிகளைக் காண்பது எந்நாளோ என்று, எந்நாளும் நின்று, இமையோர்கள் ஏத்தி இறைஞ்சி இனம் இனமாய் மெய்நாமனத்தால் வழிபாடு செய்யும் திருவேங்கடத்தானே!—எப்பொழுதும் நாள் தவறாமல் தேவர்கள் துதித்து வணங்கி இனம் இனமாக உடலாலும் வாக்காலும் மனத்தாலும் வழிபட்டு வரப்படுகின்ற திருவேங்கட நாதனே!

மெய்நான் எய்தி எந்நாள் உன் அடிக்கண் அடியேன் மேவுவதே—பரிபாகம் (பக்குவம்) பெற்று நான் எப்பொழுது உன் திருவடிகளை அடைவது வோ?

வாமனனாக மாவலியிடம் மூன்று அடி மண் வேண்டி மூவுலகத்தையும் ஈரடியால் அளந்து கொண்ட அந்த திவ்யமான திருவடிகளைக்காண தேவர்களும் இனம் இனமாகக் கூடி கீர்த்திகளை எல்லாம் பாடித்துதித்து வணங்கி மனத்தாலும் வாக்காலும் மெய்யாலும் வழிபட்டு வருகின்ற திருவேங்கடமலைப் பெருமானே நான் பரிபக்குவம் பெற்று எந்நாள் உன் திருவடிகளைக் கூடுவனோ என்று இறைஞ்சியவாறு.

எம்பெருமான் வாமனனாக மண்ணளந்த திருவடிகளைக் காண்பதற்காக தேவர்கள் எல்லாவிதத்திலும் இடைவிடாது திருவேங்கடப்பெருமானை வணங்கி வருகிறார்கள் என்று தன் அகக்கண்களால் காண்கின்ற ஆழ்வார் பெருமானும் தானும் வணங்கி நம்மையும் வணங்கும்படி வழிகாட்டுகிறார்.

6—10—7

அடியேன்மேவியமர்கின்றவமுதே இமையோரதிபதியே
கொடியாவடுபுள்ளுடையானே கோலக்கனிவாய்ப்பெருமானே
செடியார்வினைகள்தீர்மருந்தே திருவேங்கடத்தெம்பெருமானே
நொடியார்பொழுதுமுனபாதம் காணநோலாதாற்றேனே. 7

அடியேன் மேவி அமர்கின்ற அமுதே! இமையோர் அதிபதியே—அடியவனாகிய நான் விரும்பிப் பொருந்துகின்ற அமிர்தம் போன்ற பெருமானே! தேவர்களின் உயர்ந்த தலைவனே! கொடியா அடுபுள்ளுடையானே!—பகைவர்களைக் கொல்லும் தன்மையுடைய பறவை அரசனைக் கொடியாக உடையவனே! கோலக் கனிவாய்ப் பெருமானே!—அழகிய சிவந்த

வாயை உடைய பெருமானே! செடியார் வினைகள் தீர் மருந்தே!—நோய்கள் சம்பந்தமான பாவங்கள் தீர்க்கும் மருந்தாக இருப்பவனே! திருவேங்கடத்து எம்பெருமானே! திருவேங்கடத்து நிலைகொண்டுள்ள என்னுடைய தேவதேவனே! நொடியார் பொழுதும் உனபாதம் காணநோலாது ஆற்றேனே!—உன்னுடைய திருவடிகளைக் காண்பதற்காக நான் கொண்டுள்ள விரதத்தை கணப்பொழுதும் விடமுடியாதவனாக இருக்கிறேன்.

திருவேங்கடத்துப் பெருமானே! நீ தேவர்களுடைய உயர்ந்த தலைவன், நீ எனக்கு அமிர்தம் ஆவாய், பகைவர்கள் பார்த்தால் அஞ்சத்தக்க கொல்லும் தன்மையுடைய கருடனைக் கொடியாகக்கொண்டுள்ள சிறப்புடையவன், கனிவாய்ப்பெருமான் நீ. பாவங்களைப் போக்கும் மருந்து நீ. உன்னை நான் காண்பதற்காக இடைவிடாத வைராக்கியமும் விரதமும் கொண்டுள்ளேன். இந்த விரதத்தைக் கணப்பொழுதும் விடமுடியாதவனாக இருக்கிறேன் என்றவாறு.

இதனால் ஆழ்வார் பெருமானார் திருவேங்கடப்பெருமான் நினைவாகவே இருக்கிறார் என்பதும் நாமும் அவர் வழி நின்று அவர் வணங்குமாறு பாடும் பாசுரங்களைக்கொண்டே பாடிப்பரவி அவரைக்காண ஒப்பற்ற விரதம் கொள்ள வேண்டும் என்றவாறு.

6—10—8

நோலாதாற்றேனுனபாதம் காணவென்றுநுண்ணுணர்வின்
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனுமிந்திரனும்
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்பும் திருவேங்கடத்தானே
மாலாய்மயக்கியடியேன்பால் வந்தாய்போலேவாராயே. 8

நோலாது ஆற்றேன் உனபாதம் காண என்று—உன்னுடைய திருவடிகளைக் காண்பதற்காகக்கொள்ளும் விரதத்தை விடமுடியாதவனாய் இருக்கிறேன் என்று, நுண் உணர்வின் நீலார்கண்டத்து அம்மானும்—கூரிய ஞானமுடையவனும் நீலநிறமான மிடறு உடையவனுமான சிவபிரானும், நிறைநான்முகனும்—பூரணமான நான்கு முகங்களையுடைய பிரமனும், இந்திரனும்—தேவராசனும், சேலேய் கண்ணார் பலர்—சேல் மீனை ஒத்த கண்களையுடைய மகளிர் பலரும், சூழ விரும்பும் திருவேங்கடத்தானே!—உன்னைச் சூழ்ந்திருக்க விருப்பம்கொள்ளும்படியான திருவேங்கடப் பெருமானே!

மாலாய் மயக்கி—பெருமை உடையவன்போலக் காட்டி என்னை மயக்கி, வந்தாய்போலே வாராதாய்—எனக்கு அருள்செய்கின்றவன்போல அருளாதிருக்கின்றாய்.

மால் —பெருமை, நோலாது—விரதமில்லாமல், ஆற்றேன்—தரித்திருக்கமாட்டேன், தேவர்களுக்கும் மூத்த தேவர்களான சிவனும் பிரமனும் இந்திரனும் தேவ மகளிரும் உன்னைச் சூழ்ந்திருக்க விரும்பும் திருவேங்கடவன் நீ. நீ பெருமையுடையவன் போல் காட்டி என்னை மயக்கி எனக்கு அருள்புரிந்தவன்போல அருளாதிருக்கிறாய்.

ஆழ்வார்பெருமானார் எம்பெருமானை உணர்ந்தவாறு கூறுகிறார். எம்பெருமான் தன் உள்ளத்தே இருப்பதாகக் காட்டினாலும் நிலையாக இருக்கவில்லை என்பதை உணர்கிறார். எம்பெருமானை உணர்ந்தபோது அவனுடைய பெருமையை உணர்கிறார். அவர் இல்லாதபோது அவர் அருளாதவனாக வருந்துகிறார்.

6—10—9

வந்தாய்போலேவாராதாய் வாராதாய்போல்வருவானே
செந்தாமரைக்கண்செங்கனிவாய் நால்தோளமுதேயெனதுயிரே
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய் திருவேங்கடததானே
அந்தோவடியேனுனபாதம் அகலகில்லேனிறையுமே. 9

வந்தாய்போலே வாராதாய்—அருள்புரிந்தவன் போல அருள்புரியாதிருக்கின்றாய், வாராதாய் போல வருவானே—அருள்புரியாதவன்போல அருள் புரிகின்றவனே! செந்தாமரைக்கண் செங்கனிவாய் நால்தோள் அமுதே—சிவந்த தாமரை மலர்போன்ற கண்களையும் கொவ்வைப்பழம் போன்று சிவந்த வாயையும் நான்கு புஜங்களைக் கொண்டவனுமாகிய என் அமிர்தமே! என் உயிரே!—எனக்கு உயிராக இருக்கின்றவனே! சிந்தாமணிகள்—தெய்வமணிகளின், பகர்—ஒளி, அல்லைப்பகல் செய்—இரவைப் பகலாகப் பிரகாசிக்கச் செய்யும், திருவேங்கடத்தானே!—திருவேங்கடமுடையானே அந்தோ!—ஐயோ! அடியேன் உனபாதம் அகலகில்லேன் இறையுமே— தொண்டனாகிய நான் உன்னுடைய திருவடிகளை விட்டுப் பிரிந்திருக்க முடியாதவனாய் இருக்கின்றேன். இறையுமே—ஒரு சிறுபொழுதும், ஏ—அசை

சிந்தாமணி—தெய்வமணிகளில் ஒன்று, அல்—இரவு, இறை—சிறுபொழுது.

செந்தாமரை மலர்போன்ற கண்கள் என்பதால் செந்தாமரையின் அழகுக்கும் காந்திக்கும் காம்பீர்யத்திற்கும் உவமை கூறப்படுகின்றது. அது தடாகத்தில் விரிந்திருக்க தடாகத்தை எவ்வளவு அழகு படுத்துகிறது. அது இல்லை என்றால் தடாகம் சோபிதமற்றுப் பார்ப்பார் இல்லாமல் போவார், சந்திரனில்லாத வானம்போல் ஆய்விடும். கனிவாய்—அருள்சுரக்கும் இனியவாய், நால்தோள்—இடதுகையில் பாஞ்சன்ய சங்கமும் வலதுகையில் சுதர்சன சக்கரமும் ஏந்திக் கொண்டு வலது கரத்தால் அஞ்சல் என்ற அபயம் தரும் ஹஸ்தமும் இடதுகரம் சம்சார சாகரம் (பிறவிக்கடல்) என்னை அடைந்தார்க்கு முழங்கால் அளவு ஆழம்தான் என்று அருள் புரிந்தவண்ணம் கொண்டகோலம் ஆகும்.

சிந்தாமணிகள் —தெய்வமணிகள் இரவையும் பகலாகத் திகழுமாறு ஒளிர்கின்ற சிறப்பையுடையது என்றதனால் திருவேங்கடமலையை அடைவார்க்கு உள்ளத்திலுள்ள அஞ்ஞானமாகிய இருள் விலகி மனது தெளிவு உண்டாகும் என்பது சொல்லாமல் விளங்குகிறது.

இரவும் பகலாகத் திகழ்கின்ற சிறப்புடைய திருவேங்கடப்பெருமானே நீ அருள் புரிகின்றவன்போல் அருள்புரியவில்லையே என்று நினைத்தேன். நீ அருள்புரியாதவன் போல அருள்புரிகின்றவன். ஆகையினால் நான் உன்னுடைய திருவடிகளைவிட்டு இம்மியளவும் விலகி இருக்கமாட்டேன். என்னால் முடியவும் முடியாது.

6—10—10

அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா
நிகரில்புகழாயுலகம்மூன்றுடையாய என்னையாள்வானே
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே 10

அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறைமார்பா—ஒருசிறுபொழுதும் க்ஷணநேரமும் அகல இயலாதவளாய் இருக்கின்றேன் என்று தாமரைமலரில் வீற்றிருக்கின்ற இலட்சுமி தேவி உறைகின்ற மார்பை உடையவனே! நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய் என்னை ஆள்வானே!

ஈடு இணையற்ற கீர்த்தியையுடையவனே! மேல்கீழ் நடுவாகிய மூன்று உலகங்களை உடையவனே! என்னை அடிமையாகக் கொண்டவனே! நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே—ஒப்பு இல்லாத நித்ய சூரியர்களும் முனிவர்கூட்டங்களும் பிரேமைகொண்டு விரும்புகின்ற திரு வேங்கடத்துப் பெருமானே! புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே!—சரணடைவதற்கு வேறு கதியற்றவனாய் அடியவனாகிய நான் உன் திருவடிகளே சரண் என்று என் உடலும் உள்ளமும் பொருந்தப் புகுந்தேன்.

கணப்பொழுதும் உன்னைவிட்டு என்னால் பிரிந்திருக்க முடியாது என்று தாமரைச்செல்வியான இலட்சுமிதேவி உறை கின்ற மார்பையுடைய பெருமானே! ஈடு இணையற்ற புகழ் உடையவனே மூன்று உலகங்களை உன்னுடையனவாக உடை யவனே! என்னை உன் அடியவனாகக் கொண்டவனே!

ஒப்பில்லாத தேவர்களும் முனிவர்கூட்டங்களும் விரும்பும் திருவேங்கடப்பெருமானே! அடியேன் தஞ்சமடை வதற்குத் தகுந்தவரும் மிக உயர்ந்தவரும் உன்னைத் தவிர வேறு ஒருவரும் இல்லாதவனாய் உன்னையே சரணடைந்தேன். என்னை நீ அருள் புரிந்து ஏற்றுக்கொள்வாயாக.

இவ்வாறு ஆழ்வார் பெருமானார் திருவேங்கடப்பெரு மானிடம் சரணடைந்தார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

குறுகிய வடிவங்கொண்டு எம்பெருமான் மாவலி சக்ர வர்த்தியிடம் நிலம் யாசிக்கச் சென்றகாலையும் இலட்சுமியான வள் தன்னைவிட்டுப் பிரியமாட்டேன் என்று உடன் இருந்தாள். இலட்சுமி இருக்கிற இடத்தில் யாசிக்கவேண்டிய நிலையே இருக்காது. அந்நிலையிலும் பிரியாதிருந்தது ஆழ்வார்பெரு மானார் அகலகில்லேன் என்று கூறியதற்குச் சான்றாகும்.

மூன்று உலகங்களையும் மாவலி தன்னுடையனவே என்று எண்ணியிருந்தான். மாவலியினுடையன அல்ல என்னு மாறு தன் இரு அடிகளால் மூவுலகும் அளந்து கொண்டது எம் பெருமானுடையனவாகவே அளந்துகாட்டியவாறாகும்.

நிகரில் அமரர் என்றது நித்யசூரியர்கள் வைகுந்தத் தில் என்றும் தன் அருகே இருந்து சேவைபுரிவதாலாகும். முனிவர்கள் என்றும் தங்கள் உள்ளங்களில் எம்பெருமானை

நிலையாகக்கொண்டுள்ளனர். ஆதலின் அவர்களும் நிகரில் முனிவர்கள் ஆவர். புகல் ஒன்று இல்லா என்றது ஸ்ரீமன் நாராயணனே திருவேங்கடத்தில் எழுந்தருளியிருப்பதாலாகும்.

இப்பாசுரம் திருவேங்கடவன் எழுந்தருளியிருக்கும் கோவில்களில் எல்லாம் நாள்தோறும் நித்ய பூஜைக்குப் பிறகு பாடி அருளப்பெறுவது ஆகும்.

6—10—11

அடிக்கீழமர்ந்துபுகுந்து அடியீர்வாழ்மினென்றென்றருள் கொடுக்கும்
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன்
முடிப்பான்சொன்னவாயிரத்துத் திருவேங்கடத்துக்கிவைப்பதும்
பிடித்தார்பிடித்தார்வீற்றிருந்து பெரியவானுள்நிலாவுவரே. 11

அடியீர்!—தொண்டர்களே! (பக்தர்களே!) அடிக்கீழ் அமர்ந்து புகுந்து வாழ்மின் என்று—திருவேங்கட நாதனின் திருவடிகளில் சரணாகதராக அடைந்து வாழுங்கள் என்று, அருள்கொடுக்கும் படிக்கேழில்லாப் பெருமானை—அருள் புரியும் ஒப்பு இல்லாத தேவனை, பழனக்குருகூர்ச்சடகோபன் முடிப்பான் சொன்ன—வயல்களையுடைய குருகூரைச் சேர்ந்த சடகோபன் முடியச்சொன்ன, ஆயிரத்துத் திருவேங்கடத்துக்கு இவைபத்தும்—ஆயிரம் பாசுரங்களில் திருவேங்கடத்தைப்பற்றிய இந்தப்பத்தும், பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரிய வானுள் நிலாவுவரே—அந்த திருவேங்கடப் பெருமானை நினைத்து உருகிப்பாடி அவன் திருவடிகளைப்பிடித்தவர்கள் நிச்சயமாகப் பிடித்தவர்களே ஆவர். அவர்கள் உயர்ந்த வானுலகில் சஞ்சரிப்பவர்கள் ஆவர். அவர்கள் எம்பெருமானுடன் வைகுந்தத்தில் இருப்பவர்கள் ஆவார்கள் என்றபடி.

அச்சிட்டோர்
கலைக்கதிர் அச்சகம்
6/48, அவனாசிச்சாலை
கோவை 641037